# மொழியியல் ஆய்வுகள்

CPL 652280

ஏ. ஆதித்தன்
வீ. ரேணுகாதேவி
ஆ. முனியன்

மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
2007

# மொழியியல் ஆய்வுகள்

பதிப்பாசிரியர்கள்

ஏ. ஆதித்தன்

வீ. ரேணுகாதேவி

அ. முனியன்

மொழியியல் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

2007

மொழியியல் ஆய்வுகள்,
மொழியியல் துறை
வெள்ளிவிழா வெளியீடு,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021.

Moliyial aayvukal,
Department of Linguistics
Silver Jubilee Seminar Publication,
Madurai Kamaraj University,
Madurai - 625 021.

முதற்பதிப்பு : 2007 அக்டோபர்
உரிமை : பதிப்பாசிரியர்கள்
நூலின் அளவு : டெமி 1/ 8

First Edition : 2007 October
(c) Editors
Book size : Demi 1/8

வெளியீடு : மொழியியல் துறை
படிகள் : 1000
பக்கங்கள் : 213
விலை : ரூ. 100/ –

Publisher : Department of Linguistics
Number of Copies : 1000
Pages : 213
Price : 100/-

அச்சீடு : ராஜா அச்சகம்,
நாகமலைப் புதுக்கோட்டை,
மதுரை – 625 019.

Printed at : The Rajah Press,
Nagamalai Pudukottai,
Madurai - 625 019.



# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)


பேராசிரியர் **பி. மருதமுத்து**
துணைவேந்தர்
மதுரை காமராசர் பல்கலைக்கழம்
மதுரை – **625 021**

பல்கலைநகர்
மதுரை – **625 021**


## வாழ்த்துரை

நம் ஆற்றல்சால் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறை இருபத்தைந்தாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் வகையில் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்புநூல் ஒன்றினை வெளியிடுகின்றமை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைத்துத் துறைகளிலும் அனைத்து நிலைகளிலும் தமிழின் பயன்பாடு அமையப்பெறும் வகையில் தமிழ் வளர்ச்சிபெற்றிட மொழியியலின் பணி மிகப்பெரிது என்பதனை நன்குணர்ந்து ஆக்கபூர்வமான பணிகளைச் செய்துவரும் மொழியியல் துறையினரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

கலைச்சொல்லாக்கம், அறிவியல்தமிழ், மொழிகற்பித்தல், இலக்கணக்கல்வி, மொழிபெயர்ப்பு, கருத்துப் பரிமாற்ற அறிவியல், நடையியல், மருத்துவமொழியியல், அகராதியியல் போன்ற பிரிவுகளில் முத்திரை பதித்துவரும் மொழியியல்துறை மென்மேலும் சிறந்தோங்கி சாதனைகள் படைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பி. மருதமுத்து

## மொழியியல் துறையிலிருந்து . . .

மொழியியல்துறை தனியொரு துறையாக மலர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுறும் நிலையில் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு ஒன்றினை வெளியிடுவதில் பெருமகிழ்வெய்துகின்றோம்.

பல துறைகளில் மொழியியலின் பயன்பாடு இல்லாமையால் மொழி வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டுள்ளமையினை நன்குணர்ந்து மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல்துறை உரிய திசையில் அடியெடுத்து வைத்துள்ளது.

மொழி கற்பித்தல், கருத்துப் பரிமாற்ற அறிவியல், மொழிபெயர்ப்பு, அகராதி ஆக்கம், கலைச்சொல்லாக்கம், மருத்துவ மொழியியல் போன்ற பிரிவுகளில் பல தொடர் ஆய்வுகளை மேற்கொண்டும், மொழி கற்பித்தல் தொடர்பாக விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டும் நம்பிக்கையோடு செயல்பட்டுவரும் மொழியியல் துறைக்குப் பேராதரவு நல்கிவரும் எங்கள் மாண்புமிகு துணைவேந்தர் பேராசிரியர் பி. மருதமுத்து அவர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் அனைவருக்கும் மாட்சிமை பொருந்திய பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் ஐ. சிங்காரம் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் ஆக்கப்பூர்வமான பணிகளுக்குப் பேராதரவு நல்கிவரும் தமிழ்நாட்டுப் பிற பல்கலைக்கழக மொழியியல்துறை பேராசிரியர்களுக்கும், மைசூர்–இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் பேராசிரியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றோம்.

இந்நூல் வெளிவருவதற்கு ஆய்வுக்கட்டுரை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் நிதியுதவி வழங்கிய அனைத்துப் பெருந்தகையினருக்கும் தமிழியற்புலத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் மு. மணிவேல் அவர்களுக்கும், நூலினைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த ராஜா அச்சகத்தாருக்கும் நெஞ்சுநிறை நன்றியைக் உரித்தாக்குகின்றோம்.

*பதிப்பாசிரியர்கள்*

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ஆதித்தன், ஏ. | இலக்கணக்குறிப்பு | 9–22 |
| 2. | ஆலிஸ், அ. | தொல்காப்பியரின் மொழிநடையில் எதிர்மறை உத்தி | 23–29 |
| 3. | காசிராஜன், இரா. | தமிழில் சொல்லிலக்கணக் கோட்பாடு | 30–47 |
| 4. | குமரேசன், பா. & லெட்சுமி, சி. | இந்தியக் கல்விமுறையில் புதுமைகள் | 48–55 |
| 5. | குளோரி பொன்மொழி, ப. | எண்ணிடைச் சொல் | 56–62 |
| 6. | சங்கர், சி.ஜி. | தினமலரில் விளம்பரங்களும் மொழிநடையும் | 63–71 |
| 7. | சரளா, கே.ஆர். | கால அடிப்படையிலான அகராதி வகைப்பாடு | 72–77 |
| 8. | ஜானகி, து. | மொழிவழி உளவியல் தாக்கம் | 78–82 |
| 9. | ஜெயா, வ. | பாரதி மொழிநடை | 83–97 |
| 10. | சிவசண்முகம், எம். | இந்திய மொழிக்கல்விக் கொள்கை – ஒரு பார்வை | 98–103 |
| 11. | சுதந்திரமணி, த. | இலக்கணம் கற்பித்தலில் சில மாற்றங்கள் | 104–108 |
| 12. | பசும்பொன், க. | வாய்க்கால் மீன்களில் மொழிநடை | 109–118 |
| 13. | பரணி ராணி, அ. | மூன்றாம் வேற்றுமை | 119–129 |
| 14. | பாக்கியம், த. | உருபொலியனியல் | 130–139 |

| | | | |
|---|---|---|---|
| 15. | பாலகுமார், மு. | மொழி நுண்தேர்வு ஆய்வு : ஒரு கண்ணோட்டம் | 140–156 |
| 16. | பெருமாள்சாமி, பெ. | உரையாடலில் உடல்மொழி காட்டும் சமுதாய அந்தஸ்து | 157–167 |
| 17. | மல்லிகா, பா. | இலக்கணம் கற்பித்தலில் மொழியியலின் பங்கு | 168–174 |
| 18. | முருகன், இரா.சு. | இலக்கணப் பாடத்தை எளிமையாக்குவது எப்படி? | 175–188 |
| 19. | முனியன், ஆ. | தொடக்கப்பள்ளி மாணவர்கள் மொழி கற்பதில் ஏற்படுத்தும் எழுத்துத் தவறுகள் | 189–199 |
| 20. | ராஜேந்திரன், பெ. | இணையவழி இலக்கணம் கற்பித்தல் | 200–204 |
| 21. | ரேணுகாதேவி, வீ. | தமிழ்ச் சொற்றொடர்களில் ஆங்கிலத் தாக்கம் | 205–213 |

# இலக்கணக்குறிப்புகள்*

- ஏ. ஆதித்தன்

**1.0** இலக்கணக்குறிப்பினைக் கற்பித்தலின் நோக்கமும் அதனால் ஏற்படும் பயன்களும், இதனைக் கற்பிக்கும் முறைகளும் மாணவர்கள் மத்தியில் இலக்கணக்குறிப்பு பற்றிக் காணப்பெறும் எண்ணங்களும் ஈண்டு விவரிக்கப்படுகின்றன.

1.1 மாணவர்கள் மொழியின்கண் காணப்பெறும் சொல்வகையினையும் (parts of speech) பயன்பாட்டு மொழியில் சொற்களின் செயல்பாட்டினையும் அறிந்துகொள்ளும் வகையில் இலக்கணக்குறிப்பு அறிமுகம் செய்யப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மொழியமைப்பினை முறையாகத் தெரிந்து மொழியினைச் சிறப்பாகக் கையாள முடிகின்றது.

இக்காலத்தில் பெரும்பான்மையான மாணவர்கள் இதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் மனப்பாடம் செய்து இலக்கணக்குறிப்பினை எழுதுவதனைக் காணமுடிகின்றது. மேலும் சில மாணவர்கள் தேர்வில் முழுமையாக இலக்கணக்குறிப்புப் பகுதியினைப் புறக்கணித்து விடுகின்றனர்.

மாணவர்களுக்கு இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி தேவையில்லை எனக் கருதுகின்ற அறிஞர்களும் உண்டு. இன்னமும் மொழியாசிரியர்களாக வரவிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இத்தகைய இலக்கணக் கல்வியைப் புகட்டினால் போதுமெனக் கூறும் அறிஞர்களும் உண்டு.

மருத்துவம், பொறியியல் கல்வி பயிலவிருக்கும் மாணவர்களுக்கு இதன் பயன்பாடு தேவையில்லை என்று சிலர் கருதுகின்றனர். கருத்துப் பரிமாற்றத்திற்கு இதுதான் அடிப்படை என்பதனைக் கற்பவரும் கற்பிப்பவரும் அறிந்துகொள்ளவில்லை.

**1.2** மொழியின் இலக்கண மையக்கூறு (grammatical core), சொற்களஞ்சியம் (lexicon) ஆகியவற்றை உள்ளடக்கிய இலக்கணத்தினைத் (grammar) தெரிந்துகொள்ளும் வகையில்தான் இலக்கணக்குறிப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சொல்வகை (parts of speech), ஒலிமாற்றம் (sound change), உறழ்ச்சி (free variation), வடிவ மாற்றம் (shape change), பொருள் மாற்றம் (semantic change), புதைவடிவினைக் (deep structure) கண்டறிதல், மாத்திரை நீட்சி (lengthening of mora) போன்றவற்றை இலக்கணக்குறிப்பு உள்ளடக்கியுள்ளது.

மொழியின் வழக்காறுகளையும், சொற்களின் பொருள் நுட்பங்களையும் புரிந்து மாணவர்கள் இலக்கியப்பயிற்சி பெறுவதற்கும், மொழிவரலாறு தெரிந்து கொள்வதற்கும், கருத்துப் புலப்பாட்டிற்கும் இலக்கணக்குறிப்பு மிகவும் துணைசெய்கின்றது. இவ்வகை இலக்கணப் பயிற்சி பயன்வகை இலக்கணமாகக் (functional grammar) கருதப்பெறும்.

1.3. இலக்கணக்குறிப்பினை அறிமுகம் செய்யும் நிலையில் இலக்கணக் கலைச்சொற்களிலும் அவற்றின் விளக்கங்களிலும் தெளிவு ஏற்படாமையினால் மாணவர்கள் இதனைப் புறக்கணிப்பதாகத் தெரியவந்துள்ளது.

தமிழ்மொழி வரலாற்றில் பல சொற்கள் வழக்கிழந்து விட்டன; மேலும் பல சொற்கள் அருகிய வழக்குச் சொற்களாக அமைந்துவிட்டன. இவற்றின் வடிவம், அமைப்பு, பொருள், வழக்காறு ஆகியன சிக்கல் நிறைந்து காணப்பெறுவதால் இவற்றில் பயிற்சி அளிப்பதன் பொருட்டும் பாடத்திட்டத்தில் இலக்கணக்குறிப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியினால் மாணவர்கள் பழைய இலக்கியத்தில் ஈடுபடவும், மொழி வரலாற்றினைத் தெரிந்து கொள்ளவும் முடிகின்றது.

மாணவர்கள் இலக்கணக்குறிப்புப் பகுதியில் ஆர்வம் காட்டாமைக்குப் பல காரணங்களைக் குறிப்பிடமுடியும். மாணவர்களுக்குக் கற்பிக்கப் பெறும் இலக்கணக் கலைச்சொற்கள் அனைத்தும் வழக்கிறந்தவைகளாகவோ அன்றி அருகிய வழக்கினவாகவோ அமைந்துள்ளன. மாணவர்களின் பயன்பாட்டு மொழியில் இத்தகைய சொற்கள் காணப்பெறாமையால் இவற்றை மாணவர்களால் எளிதில் புரிந்துகொள்ள இயலாமல் போகின்றது.

அளபெடை, உரிச்சொல் மற்றும் செய்யா, செய்பு வாய்பாட்டு வினையெச்சங்கள், முற்றெச்சம், வழுவமைதி போன்றவற்றை எந்த நிலையிலும் இக்கால மாணவர்களால் புரிந்துகொள்ள இயலாமல் போகின்றது. ஏனெனில் அன்றாட வாழ்வில் இவர்கள் பயன்படுத்தும் மொழியில் இத்தகைய வழக்காறுகள் காணப்பெறுவதில்லை.

முதலில் மாணவர்களுக்குச் சொல்வகை பற்றித் தெளிவாகக் கல்வி புகட்டி அதற்குரிய சான்றுகள் அனைத்தையும் அவர்கள் பயன்படுத்தும் மொழியிலிருந்து கொடுத்து அவற்றைப் புரியவைக்க வேண்டும். அதன் பின்னரே வழக்கிழந்த சொற்கள், அருகிய வழக்குச் சொற்கள் ஆகியவற்றின் இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி புகட்டப்பெறல் வேண்டும். தமிழில் முறையான சொல்வகைப்பாகுபாடு கூட இன்னமும் உருவாக்கப்பெறவில்லை. பெயர், வினை, இடை, உரி என்ற பாகுபாட்டினைக் கற்பிக்கும் நாம் இவற்றில் இடை, உரி ஆகிய இரண்டிற்கும் முறையான விளக்கம் கொடுக்கவில்லை. தொல்காப்பியர் நூற்று இருபது உரிச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் நாம் பிறிதோர் உரிச்சொல்லைக் கண்டறியவில்லை என்றால் உரிச்சொல்லின் விளக்கத்தினை அறிந்து கொள்ளவில்லை என்பதாகவே பொருள்படும்.

இக்கால மொழியமைப்பினைப் புரிந்து கொள்வதற்கும் இலக்கணக்குறிப்பு பயன்படுவதால் இக்கல்வி அனைத்து மாணவர்களுக்கும் புகட்டப்பெறல் வேண்டும். மொழியமைப்பில் ஆளுமை பெற்றவர்களால்தான் கருத்தினை மொழி வாயிலாக முறையாகப் புலப்படுத்த இயலும். முந்தைய கால இலக்கியச் சுவைப்பிற்குத் தேவையானதும் மொழி வரலாற்றைத் தெரிந்து கொள்ளத் தேவையானதுமான வழக்கிறந்த சொற்கள், அருகிய வழக்குச் சொற்கள் போன்றவற்றின் இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி அறிவியல் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தேவையற்றதாகக்கூட கருதலாம்.

எனவே இலக்கணக்குறிப்பு பற்றிய பாடத்திட்டத்தில் நிகழ்காலப் பயன்பாட்டு மொழிக்கும் இடமளித்தல் வேண்டும். அதன் பின்னரே வழக்கிழந்த அன்றி அருகிய வழக்குடைய சொற்களின் இலக்கணக்குறிப்பு பற்றிய செய்திகள் பாடத்திட்டத்தில் இடம்பெறல் வேண்டும். இந்நிலையில்தான் மாணவர்கள் இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வியில் தெளிவு பெறுவார்கள்.

1.4 சான்றாகச் 'செய்யாது' என்ற வினையெச்ச அமைப்பினைத் தெளிவுபடுத்த இக்காலத்தில் பெரிதும் வழங்கப்பெறும் 'செய்யாமல்' என்ற வினையெச்ச அமைப்பினை விவரித்துப் பின்னர் பண்டை இலக்கியங்களில் இவ்வாய்பாடு 'செய்யாது' எனும் அமைப்பில் இருந்தமையினை மாணவர்களுக்கு விவரித்தால் எளிதில் மாணவர்கள்

புரிந்து கொள்வர். எனவே சொல்வகையின் பிரிவுகளைப் பயன்பாட்டு மொழியில் காணப்பெறும் மாணவர்களுக்குத் தெரிந்தவற்றை விவரித்துத் தெரியாதனவற்றைப் புரிய வைத்திடல் வேண்டும்.

இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி முழுமை பெறாமைக்குப் பாடத்திட்டமும் ஆசிரியர்களுமே அடிப்படையாகும். ஆசிரியர்கள் இலக்கணக்குறிப்பினை அறிமுகம் செய்வதன் நோக்கத்தை முற்றிலுமாகத் தெரிந்து கொள்ளாமையும் இதனைக் கற்பிக்கும் நெறிமுறைகளைச் சிக்கல் நிறைந்தவைகளாக அமைத்துக் கொண்டமையும் மாணவர்கள் இலக்கணக்குறிப்பினை முற்றிலுமாய் புறக்கணிப்பதற்குக் காரணமாக அமையப்பெற்றுள்ளன. பாடத்திட்டத்தில் இக்காலக் கவிஞர்களின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் வினையாலணையும்பெயரின் அமைப்பினைக் கொண்ட காலங்காட்டும் தொழிற்பெயர் அமைப்புக்கள் காணப்பெறுகின்றன. ஆனால் பாடத்திட்டத்தில் தொழிற்பெயர் விளக்கத்தில் தொழிற்பெயர்கள் காலம் காட்டுவதில்லை எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. மொழியமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கும் வகையில் இலக்கணக் கலைச்சொற்களின் விளக்கங்கள் அமைந்திடல் வேண்டும். இந்நிலையில்தான் மாணவர்கள் சிக்கலின்றி இலக்கணப் பகுதியைக் கற்க முடியும்.

**1.5** இலக்கணக்குறிப்பு பற்றிய பாடத்திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வகையான பெயரினை அறிமுகம் செய்யும் நிலையில் பெயர் என்றால் என்ன என்பதனையும் அதன் பண்புகளையும் அதன் வகைகளையும் அறிமுகப்படுத்தி ஒவ்வொரு வகை பெயர்களுக்கிடையே காணப்பெறும் முரண்களை (contrast) முறையாக விவரித்துப் பின்னர் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள பெயரின் தனித்தன்மைகள் விவரிக்கப்பெறும் நிலையில்தான் அப்பெயரினை மொழிவழக்காற்றினில் மாணவர்களால் எளிதில் கண்டறிய முடியும்.

சான்றாக வினையாலணையும்பெயரினை அறிமுகம் செய்யும் நிலையில் பெயரின் இலக்கணத்தினை சொல்நிலை, தொடர்நிலை, பொருண்மைநிலை ஆகிய நிலைகளில் விவரித்துப் பின்னர் பெயர்களைச் சொல்நிலையில் வினையடியிலிருந்து தோன்றுவன; பிற அடிகளிலிருந்து தோன்றுவன என வகைப்படுத்தி வினையடியிலிருந்து தோன்றும் இருவகைப் பெயர்களை வினையாலணையும்பெயர் எனவும் தொழிற்பெயர் எனவும் வகைப்படுத்திடல் வேண்டும்.

வினையாலணையும்பெயரும் தொழிற்பெயரும் வினையடியிலிருந்து தோன்றுமென்பதும் வினையெச்சம், வினையடை ஆகியவற்றால் தொடரியல் நிலையில் சிறப்பிக்கப்பெற்றுவரும் என்பதும் இவ்விரண்டின் பொதுப்பண்புகள் என்பதனைக் குறிப்பிடல் வேண்டும்.

வினையாலணையும்பெயரும், தொழிற்பெயரும் இக்காலத் தமிழில் அமைப்பு நிலையில் சில சூழல்களில் ஒரே வடிவத்தினைக் கொண்டமைவதால் இவற்றைச் சொல்நிலையிலோ அன்றித் தொடர் நிலையிலோ வேறுபடுத்த இயலாது என்பதனைச் சுட்டி இவற்றைப் பொருண்மைநிலையில்தான் வேறுபடுத்த இயலும் என்பதனை விவரிக்க வேண்டும்.

அவன் நடந்து வருவதைப் பார்ப்பேன்

நடந்து வருவதைப் பிடித்துக் கட்டினேன்

ஈண்டு முதல் சான்றில் வரும் 'வருவது' என்னும் வடிவம் தொழில்நிகழ்வினைச் சுட்டி நிற்பதால் தொழிற்பெயர் எனவும் இரண்டாவது சான்றில் தொழில்நிகழ்வினைச் செய்கின்ற கருத்தாவினைக் குறிப்பதால் வினையாலணையும்பெயரெனவும் அழைக்கப்பெறுகின்றது என விவரிக்கும் நிலையில் மாணவர்கள் வினையாலணையும்பெயரினை எளிதாகப் புரிந்துகொள்வர்.

எனவே பாடத்திட்டம் வரன்முறைப் படுத்தப்பட்டு (graded) இலக்கணக்குறிப்பு முறையாக அறிமுகம் செய்யப்பெறல் வேண்டும். முந்தைய ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பெற்ற சொல்வகைகளின் பிரிவுகள் ஒவ்வொரு ஆண்டிலும் மாணவர்களுக்கு நினைவுபடுத்தப் பெற்றால்தான் மாணவர்கள் இலக்கணக்குறிப்பு பற்றிய கலைச்சொற்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் இயலும்.

இலக்கணக் கலைச்சொற்களை ஆசிரியர்கள் அறிமுகம் செய்வதற்கு எளிமையான முறைகளைக் கையாளுதல் வேண்டும். வினைத்தொகையினை அறிமுகம் செய்யும் நிலையில் காலங்கரந்த பெயரெச்சமே வினைத்தொகை என இலக்கண நூற்பாவினை மேற்கோள் காட்டிக் கற்பித்தல் கூடாது. இந்நூற்பாவில் வரும் 'கரந்த' என்னும் சொல்லின் பொருளினைப் புரிந்துகொள்ள இயலாத மாணவன் வினைத்தொகையினைப் புரிந்துகொள்ளுதல் இயலாது.

ஈண்டு வினைத்தொகையினையும் பெயரெச்சத்தினையும் ஒப்பிட்டு, காலமும் எச்சவிகுதியும் வினைத்தொகையில் தொக்கு வருவதனை விவரிக்கலாம். இந்நிலையில் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தினைக்கூட எதிர்மறை வினைத்தொகையாகவும் (ஏ. ஆதித்தன், 1979:135) கருத முடியும்.

இலக்கணக் கலைச்சொற்களை அறிமுகம் செய்யும்போது சொல்வகைப் பாகுபாட்டினை ஆசிரியர் முழுமையாக விவரித்து அப்பாகுபாட்டில் அவர் அறிமுகப்படுத்தும் கலைச்சொல்லின் இடத்தை முதலில் விளக்கிடல் வேண்டும். பின்னர் சான்றுகளை விவரிக்கும் நிலையில் இக்கால மொழியமைப்பிலிருந்து பண்டைக்கால மொழியமைப்பிற்கு வருதல் வேண்டும். தாம் அறிந்த முறைகளைக் கையாண்டு எளிமைப்படுத்துவதையே ஆசிரியர்கள் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**1.6** இலக்கணக் கலைச்சொற்களை மொழியியல் அடிப்படையில் விவரித்தால் எளிமையாகப் புரிந்து கொண்டு மாணவர்கள் தெளிவுபெறுவர். இவ்வடிப்படையில் தொழிற்பெயர் ஒன்றினை மட்டும் சான்றாகக் கொண்டு ஈண்டு விளக்கம் தரப்பெறுகின்றது.

முதலில் மாணவர்களுக்குத் தொழிற்பெயரின் விளக்கத்தினைக் கொடுப்பதற்கு முன்னர் பெயரின் விளக்கத்தினைக் கூறி அதில் தொழிற்பெயரின் இடத்தினை விவரித்தல் வேண்டும். பெயர்களைத் தொடரியல் நிலையில் வினையெச்சம், வினையடை ஆகியவற்றால் சிறப்பிக்கப் பெறும் பெயர்கள் எனவும் பெயரடை, பெயரெச்சம் ஆகியவற்றால் சிறப்பிக்கப்பெறும் பெயர்கள் எனவும் இருவகைப்படுத்துதல் இயலும். இவற்றுள் தொழிற்பெயரும், வினையாலணையும்பெயரும், வினையெச்சம், வினையடைகளால் சிறப்பிக்கப் பெற்றுவர, ஏனைய பெயர்கள் அனைத்தும் பெயரெச்சம், பெயரடைகளால் சிறப்பிக்கப் பெற்றுவரும்.

இதனையடுத்து ஆசிரியர் தொழிற்பெயருக்கும் வினையாலணையும்பெயருக்குமிடையே காணப்பெறும் வேறுபாட்டினைப் புலப்படுத்தியாதல் வேண்டும்.

பொருண்மை நிலையில் தொழில்நிகழ்வினைச் (doing of an action) சுட்டும் பெயர் தொழிற்பெயர் எனவும் தொழிலைச் செய்யும்

கருத்தாவினை (doer of the action) சுட்டும் பெயர் வினையாலணையும் பெயர் எனவும் குறிப்பிடலாம். அமைப்பு நிலையில் தொழிற்பெயருக்கும் வினையாலணையும்பெயருக்குமிடையே வேறுபாடுகள் சில காணப்பெற்றாலும் இக்காலத் தமிழில் இவற்றிடையே வேறுபாடு காணப்பெறுவதில்லை. எனவே மாணவர்கள் இவற்றை முறையாக வேறுபடுத்திக் காண ஆசிரியர்கள் துணைபுரிய வேண்டும்.

தொழிற்பெயர்களை அடிப்படை நிலையில் முதனிலைத் தொழிற்பெயர்கள் எனவும், விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் எனவும் பகுத்தல் இயலும். முதனிலைத் தொழிற்பெயர்கள் என்றால் என்ன என்பதனையும் சொல்லின் அமைப்பில் முதனிலை (அடிச்சொல்), இடைநிலை, விகுதி ஆகியவற்றின் இடத்தினையும் புலப்படுத்திடல் வேண்டும். இம்முதனிலையே தனித்துநின்று பெயராகச் செயல்படும் நிலையில் அது முதனிலைத் தொழிற்பெயர் எனவும், இம்முதனிலையில் காணப்பெறும் உயிர் திரிந்தோ அன்றி அதன் மெய்திரிந்தோ இரட்டித்தோ தனித்து நின்று பெயராகச் செயல்படும் நிலையில் அது முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனவும் அழைக்கப்பெறும் என்பதனைச் சுட்டிக் காட்டிடல் வேண்டும்.

முதனிலையும் விகுதியும் இணைந்து விகுதிபெற்ற தொழிற்பெயர் அமையப்பெறும். முதனிலைத் தொழிற்பெயர்களும் விகுதி பெற்ற தொழிற்பெயர்களும் தொழிலின் நிகழ்வினை மட்டும் சுட்டிக் காலப்பொருண்மையின்றி செயல்படும்.

பள்ளி மாணவர்களது பாடநூல்களில் 'வாழ்தல்', 'வாழ்க்கை' எனும் இரண்டு வடிவங்களும் தொழிற்பெயர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் சிலர் இவ்விரு வடிவங்களுக்கிடையே காணப்பெறும் வேறுபாட்டினை அறிய வந்துள்ளனர். 'சிறந்த வாழ்க்கை' என வாழ்க்கை எனும் வடிவம் பெயரெச்சத்தாலும் 'சிறந்து வாழ்தல்' என வாழ்தல் எனும் வடிவம் வினையெச்சத்தாலும் சிறப்பிக்கப் பெற்று வருதலைக் காணமுடிகின்றது. 'வாழ்க்கை'என்பது ஒரு தொழிலது பெயராக (name of an action) அமைந்து தொழிற்பெயரல்லாப் பெயராகவும், 'வாழ்தல்' என்பது தொழிலின் நிகழ்வினைச் (doing of an action) சுட்டும் தொழிற்பெயராகவும் செயல்படுகின்றன.

இடைக்காலத் தமிழிலும் இக்காலத் தமிழிலும் வினையாலணையும்பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர்கள் மொழியில் செயல்படுவதனைக் காணமுடிகின்றது. பள்ளிப் பாடத்திட்டத்தில் இக்காலப் படைப்பிலக்கியங்களும் இடம் பெற்றுள்ளமையால் இத்தகைய தொழிற்பெயரமைப்புக்களையும் தெரிந்து கொள்ளுதல் தேவையாகின்றது.

'கண்களால் பேசுவதைக் காண்பீரோ' என்பதில் பேசுவது எனும் வடிவம் தொழிற்பெயராகச் செயல்படுகின்றது. மேலும் இது காலப் பொருண்மையினையும் சுட்டுகின்றது. இத்தகைய தொழிற்பெயர்களைப் பொருண்மை நிலையில்தான் வினையாலணையும்பெயர்களினின்று வேறுபடுத்திக் காட்டுதல் இயலும்.

மேலும் மொழியில் மையீற்று வடிவங்களும் தொழிற்பெயர்களாகச் செயல்படுவதுண்டு. வருதல், வந்தமை எனும் இருவகைத் தொழிற்பெயர்களை ஒப்பிட்டுக் காணுங்கால் வந்தமை என்ற பெயர் வருதல் தொழிலோடு வருதலின் முறைமையினையும் (manner of the action) இறந்தகாலத்தையும் சுட்டுவதனை அறியமுடிகின்றது. இத்தகைய பெயர்களை வினைப்பண்புப்பெயர்களாகவும் (verbal qualitatives) சிலர் (ஏ. ஆதித்தன், 1979:9) கருதுகின்றனர். ஈண்டுச் சில மாணவர்கள் தொழிற்பெயர்கள் காலங்காட்டுதல் இல்லை என்ற அடிப்படையில் மையீற்று வடிவங்களைத் தொழிற்பெயராகக் கருதுதல் இல்லை.

இக்கால மொழியியலார் முதனிலைத் தொழிற்பெயர்கள், முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள், விகுதிபெற்ற தொழிற்பெயர்கள் ஆகிய மூன்றும் அனைத்துச் சூழல்களிலும் தொழிற்பெயர்களாகச் செயலாற்றுதல் இல்லை என்பதனையும் சிலவிடத்து இவை தொழிலின் நிகழ்வினைச் சுட்டாது தொழிலது பெயரினை மட்டுமே சுட்டித் தொழிற்பெயரல்லாப் பெயர்களாகச் செயல்படும் என்பதனை நிறுவியுள்ளனர்.

அவனுக்கு அடி விழுந்தது
('பிரம்படி' – தொழிற்பெயரல்லாப் பெயர்)

பினிட்டோனை அடி இன்னா
('அடித்தல்' – முதனிலைத் தொழிற்பெயர்)

**பாட்டு மிகவும்** அருமை

('பாடல்' – தொழிற்பெயரல்லாப் பெயர்)

**இரவில் பாட்டு இன்னா**

('பாடுதல்' – முதனிலை திரிந்த தொழிற்பெயர்)

**பிழைத்தல் பொறுத்தல்** பெருமை

('பிழை' – தொழிற்பெயரல்லாப் பெயர்)

பாடிப் **பிழைத்தல்** ('வாழ்தல்' – தொழிற்பெயர்)

மொழியமைப்பினை மொழியியல் அடிப்படையில் விவரிக்கும் நிலையில்தான் மாணவர்களின் ஐயம் முற்றிலுமாக நீக்கப்பெறும். சான்றாகப் 'பொன்குடம்' என்பதனைப் 'பொன்–ஆல் செய்த குடம்' என விவரித்து மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என இலக்கணக்குறிப்பு குறிப்பிடும் நிலையில் 'பொன்மேனி' என்பதனைப் 'பொன்னைப் போன்ற மேனி' என விரித்து இதுவும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை என ஏன் கருதுதல் கூடாது எனக் கூறும் மாணவனுக்குத் தக்க விடையளிக்க மொழியியல் மிகவும் தேவையாகின்றது.

இதனைப் போலவே 'செய்யா' என்பதே காலத்தால் முந்திய வடிவம் எனவும் 'செய்த' என்பதன் ஒப்புமையாக்கத்தால்தான் 'செய்யாத' என்பது பிற்காலத்தில் தோன்றியது எனவும் அறிந்து கொண்ட மாணவன் 'செய்யா' என்பதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனச் சுட்டுவது தவறு என விளக்கம் கேட்கும் நிலையில் ஆசிரியர் சிக்கலான நிலைக்குத் தள்ளப்படுவார். எனவே மொழியமைப்பில் நடைபெற்ற மாற்றங்களை முறையாக விவரிக்கும் வகையில் பாடத்திட்டத்தில் மொழியியல் அடிப்படையில் அமைந்த இலக்கணக் கலைச்சொல் விளக்கம் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது.

தொழிற்பெயரின் விளக்கம், அதன் வகைகள், அதன் அமைப்பு, அதற்கும் பிறவகைப் பெயர்களுக்குமிடையே காணப்பெறும் வேறுபாடு போன்றவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ளும் நிலையில்தான் மாணவர்கள் மொழிப்பயனில் தொழிற்பெயர்களின் வருகையினை அனைத்துச் சூழல்களிலும் கண்டறியும் திறனைப்பெற்று விளங்குவர்.

1.7 பாடநூல்களில் கொடுக்கப்பெற்றுள்ள இலக்கணக்குறிப்புப் பகுதியில் மாணவர்கள் பெரிதும் தவறு செய்வதற்கு மொழிச்சூழல் கொடுக்கப்பெறாமையே ஒரு காரணமாக அமையப்பெற்றுள்ளது. இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர், செயவெனெச்சம், போலி போன்ற சிலவற்றை மட்டுமே மாணவர்கள் சூழலைத் தெரிந்து கொள்ளாமலே கண்டறிய முடியும்.

வினைமுற்று, முற்றெச்சம், வினையாலணையும்பெயர் ஆகியவற்றிடையே வடிவவேறுபாடு இல்லாத நிலையில் சூழலைக் கொண்டுதான் இவற்றை வேறுபடுத்த இயலும்.

'காமுறுவர்' எனும் வடிவம் வினாத்தாளில் இடம்பெற்றுள்ள நிலையில் திருக்குறளில் இடம்பெற்றுள்ள இவ் வடிவம் வினையாலணையும்பெயராகவும், வினைமுற்றாகவும் செயல்படுவதால் மாணவர்களால் சூழலின்றி அமையும் இவ்வடிவத்திற்கு முறையான குறிப்பு எழுத இயலவில்லை.

'விழையான்' எனும் வடிவம் முற்றெச்சமாகச் செயல்படுவதனையும் 'கொள்வான்' எனும் வடிவம் வானீற்று வினையெச்சமாகச் செயல்படுவதனையும் கண்டறியும் பொருட்டு தனி வடிவமாக இவை வினாத்தாளில் இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டினையும் சூழல் கொடுக்கப் பெறாமையால் வினைமுற்று என்றே மாணவர்கள் விடையளித்துள்ளனர்.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தினையும் பலவின்பால் எதிர்மறை வினைமுற்றிணையும் சூழலே வேறுபடுத்துகின்றது.

காதுகள் **கேளா** – பலவின் பால் வினைமுற்று

**கேளா** மக்கள் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

சில சொற்களுக்குத் தனிநிலையில் ஒன்றிற்கு மேற்பட்ட இலக்கணக்குறிப்புக்கள் கொடுக்க முடியும். இவை பயன்பாட்டில் ஒரே ஒரு சொல்வகையாக மட்டுமே செயல்படுவதால் சூழல் கட்டாயமாகக் கொடுக்கப்பெறல் வேண்டும்.

கொல்கை – வினைத்தொகை

கொல்கை – தொழிற்பெயர்

விடல் – வியங்கோள்வினைமுற்று

விடல் – தொழிற்பெயர்

இடைச்சொற்களில் அசைநிலை, இசைநிறை ஆகியவற்றை மொழிப்பயன்பாட்டின் அடிப்படையில்தான் கண்டறிய முடியும். இதுபற்றிய பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பெறாமையாலும் முறையான சூழல் வினாத்தாளில் கொடுக்கப்பெறாமையாலும் பாடநூலில் குறிப்பிட்டபடி அசைநிலை, இசைநிறை என மனப்பாடம் செய்து விடையளிக்கின்றனர் மாணவர்கள்.

அளபெடையினைப் பொறுத்தமட்டிலும் வினாத்தாளில் சூழல் இன்றி வெறும் சொல்மட்டுமே கொடுக்கப்பெற்று அது இன்னிசை அளபெடையா அன்றிச் சொல்லிசை அளபெடையா என்று வினவுவது பொருத்தமானது அன்று.

'நசைஇ' எனும் வடிவம் சொல்லிசை அளபெடையாகச் செயல்படுதவனைக் கண்டறியும் பொருட்டு வினாத்தாளில் தனிச் சொல்லாக இச்சொல் இடம்பெறும் நிலையில் பல மாணவர்கள் வினையெச்சமென விடையளித்துள்ளனர்.

**1.8** இலக்கணக்குறிப்புப் பகுதி பள்ளிப் பாடத்திட்டத்தில் சிறப்புற அமையவில்லை என்பதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகள் கொடுக்கவியலுமெனினும் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் 1997ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள பத்தாம் வகுப்புத் தமிழ் பாடநூலின்கண் காணப்பெறும் இலக்கணக்குறிப்புப் பகுதியில் சில ஈண்டுக் குறிப்பிடப் பெறுகின்றன.

பாடநூலில் பல இடங்களில் தவறான இலக்கணக்குறிப்பு கொடுக்கப்பெற்றுள்ளது.

'வெள்ளையணை' (பக். 109), 'தாய்ப்பால்' (பக். 75) என்பனவற்றிற்கு இருபெயரெட்டுப் பண்புத்தொகை என இலக்கணக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 'பொறிமயிர்' (பக். 58), கொல்கை (பக். 58) என்பன வினைத்தொகையின் பாற்பட்டவைகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. 'பொற்காலம்' (பக். 105), 'திருவாசகம்' (பக். 70) ஆகியனவற்றிற்கு இலக்கணக்குறிப்பாகப் பண்புத்தொகை சுட்டப்பட்டுள்ளது.

'உவப்ப' எனும் சொல் பெயரெச்சமாகக் (நரைமுதுமக்கள் உவப்ப நரைமுடித்து, பக். 32) குறிக்கப்பட்டுள்ளது. 'வினவுதி' (பக். 75) எனும் சொல் இலக்கணக்குறிப்பில் தொழிற்பெயராகவும், பகுபத உறுப்பிலக்கணம்

கூறும் நிலையில் இச்சொல்லிற்கு 'வினவு' என்பதனைப் பகுதி எனவும் 'தி' என்பதனைத் தொழிற்பெயர் விகுதி எனவும், அருஞ்சொற்பொருள் சுட்டும் பகுதியில் 'கேட்பீர்' என முன்னிலை வினைமுற்றுப் பொருளும் சுட்டப்பெற்றுள்ளது.

கூட்டம் எனும் பொருளில் செயல்படும் 'மாநாடு' (பக். 95) எனும் சொல்லிற்கு உரிச்சொற்றொடர் என இலக்கணக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதனைப் போன்றே 'வறுமை எனும் கொடிய நோய்' (பக். 98) எனும் தொடருக்கு உருவகம் என்னும் இலக்கணக்குறிப்பு குறிக்கப்பட்டுள்ளது.

ஒரு சொல்லுக்கு அமைப்பு, பயன் ஆகிய நிலைகளில் இருவகைக் குறிப்பு சுட்டப்பெறும் வாய்ப்பு இருக்கும்போது வினாத்தாளில் சொல்லின் சூழல் தெளிவாகக் கொடுக்கப்பெறல் வேண்டும்.

பற்றல் – தொழிலாகுபெயர் (பக். 64)

இச்சொல்லுக்குத் தொழிற்பெயர் என்ற குறிப்புதான் பெரும்பான்மை மாணவர்களால் சுட்டப்பெறுகின்றது. ஈண்டு ஆகுபெயர் என்னும் குறிப்பினை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமானால் சொல்லின் சூழல் தெளிவாகச் சுட்டப்பெறல் வேண்டும்.

இலக்கணக்குறிப்பு வினாத்தாளில் இடம்பெறும் நிலையில் சீர்மை பின்பற்றப்பெறல் வேண்டும்.

குறைவிலா மடந்தை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரச்சம் (பக். 70)

ஒடுங்கிய எலும்பு – பெயரெச்சத்தொடர் (பக். 90)

ஓரிடத்தில் பெயரெச்சத்தொடர் எனவும் பிறிதோர் இடத்தில் பெயரெச்சம் எனவும் இலக்கணக்குறிப்பு கொடுப்பதனைத் தவிர்த்தால் மாணவர்கள் குழப்பமடையாமல் இருப்பர். மேலும் இலக்கணக்குறிப்பினைத் தெளிவாகப் புரிந்து கண்டறியும் வகையில் தொடர் அன்றி வாக்கியம் கொடுக்கப்பெற்று எந்தச் சொல்லுக்கு இலக்கணக்குறிப்பு சுட்டப்பெற வேண்டுமோ அதனை அடிக்கோடிட்டுக் காணப்பிக்கப்பெறும் நிலையில் மாணவர்கள் இலக்கணக்குறிப்பினை முறையாகக் கண்டறிவர். ஆனால் இத்தகைய நடைமுறை முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. பல இடங்களில்

அடிக்கோடு இடப்பெறாமையால் எந்தச் சொல்லுக்கு இலக்கணக்குறிப்பு எழுத வேண்டும் என்பதனைக் கண்டறிவது சிக்கலைத் தந்துள்ளது.

1.9 மொழி ஆய்வின் வளர்ச்சியினால் கண்டறியப்பெறும் புதிய கோட்பாடுகளுக்கேற்ப இலக்கணக்குறிப்பின் விளக்கங்கள் மறுபரிசீலனை செய்யப்பெற்றாதல் வேண்டும். எளிமைப்படுத்தும் வகையில் மொழியியல் அடிப்படையில் இலக்கணக் கலைச்சொற்களின் விளக்கங்கள் அமையும் நிலையில் மாணவர்கள் மனதில் இலக்கணக்குறிப்பு பற்றிய விளக்கங்கள் எளிமையாக நிலைபெறும். மேலும் சொல்வகைகளிலும் அவற்றின் வகைகளிலும், தொடர் வகைகளிலும் மாணவர்கள் முழுமையான அறிவுபெறும் நிலையில்தான், அவர்கள் மொழிப்புலமை பெற்று மொழியைக் கையாளும் திறன் பெற்றுக் கருத்துப்பரிமாற்றம் சிறப்பாகச் செய்ய முடியும்.

இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி வீழ்ச்சியடைவதற்கு பாடத்திட்டம் மட்டுமின்றி ஆசிரியர்களும் காரணமாக அமைந்துள்ளனர். ஆசிரியர்கள் பலர் இலக்கணக்குறிப்பினை முறையாகக் கற்பிப்பதில் ஆர்வம் காண்பிப்பதில்லை. மேலும் எளிமையான கற்பிக்கும் நெறிமுறைகளையும் பின்பற்றுவதில்லை.

பாடத்திட்டம், ஆசிரியர்களின் அணுகுமுறை, கற்பிக்கப்பெறும் சூழல் ஆகியன இலக்கணக்குறிப்புக்கல்வி வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமையப்பெற்றுள்ளன. பள்ளி, கல்லூரிகளில் மொழிக்கல்வி மிகவும் பின்னடைவு பெற்றுள்ளது என்பதால் மாணவர்கள் மொழிக்கல்வியின் ஒரு கூறாகிய இலக்கணக்குறிப்பில் ஆர்வம் காட்டாமலிருப்பது வியப்பில்லை.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேர்வுமுடிவு தரவகுப்பினை (rank and class) முடிவு செய்ய மொழிக்கல்வி மதிப்பெண்கள் கருத்தில் கொள்ளப்பெறாமையும், அறிவியல் போன்ற பிறதுறைப் பாடக்கல்வியில் பயிற்று மொழித்தவறுகள் கண்டுகொள்ளப்பெறாமையும், தொழிற்கல்விக்குரிய தெரிவுமுறையில் மொழிக்கல்வி மதிப்பெண்கள் எடுத்துக்கொள்ளப் பெறாமையும் மாணவர்கள் மொழிக்கல்வியை முற்றிலுமாகப் புறக்கணிக்கும் சூழலை உருவாக்கிவிட்டது. இந்நிலையில் பாடத்திட்டத்தின் சீர்மையின்மையும், ஆசிரியர்களின் அணுகுமுறையும் ஒட்டு மொத்தமாக இலக்கணக் கல்வியினை வீழ்ச்சியடையச் செய்துள்ளது எனலாம்.

சொற்களைச் சிறப்பாகக் கையாண்டு கருத்துக்களை முறையாகப் பரிமாறிக் கொள்ளவும் சூழலுக்கேற்ப மொழியைக் கையாண்டு படைப்புக்களை உருவாக்கவும் மொழியின் வரலாற்றினைத் தெரிந்து கொள்ளவும் துணைபுரியும் இலக்கணக்குறிப்புப் பகுதிக்கு இலக்கணப் பாடத்திட்டத்தில் முறையான இடமளிக்கப்பெறுதல் வேண்டும். சிறப்பான கருத்துப் பரிமாற்றத்திற்கு இலக்கணக்குறிப்பு பற்றிய கல்வி அடிப்படையானது என்பதனை உணர்த்திடல் வேண்டும்.

## உடனுதவியவை


ஆதித்தன், ஏ., 1999 *இலக்கணக் கொள்கை,* சங்குமுத்து வெளியீடு, மதுரை.

ஆதித்தன், ஏ., 2004 *இலக்கணக்குறிப்பில் மொழிச் சூழல்,* தமிழ்ப்பொழில், துணர் 99, மலர் 4, பக். 594–604.

இசரயேல், மோ., 1985 *உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தல்,* மொழியியல் 8:4, பக். 35–50.

பாலசுப்பிரமணியன், மு.பி., 1997 *தமிழ்ப்பாடநூல் - பத்தாம் வகுப்பு,* தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை.

Palmer, F., 1975 *Grammar*, Penguin Books Ltd., England.



**ஏ. ஆதித்தன்**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
மொழியியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# தொல்காப்பியரின் மொழிநடையில் எதிர்மறை உத்தி

- அ. ஆலிஸ்

நூலாசிரியன் தான் சொல்ல வருகின்ற கருத்தைப் புலப்படுத்தி அதனைக் கேட்போன் அல்லது வாசிப்போனுக்கு முழுமையாக அக்கருத்தைச் சென்று சேர்ப்பதிலேயே வெற்றி பெறுகிறான். மாறாக நூலாசிரியர் சொல்ல வருவது வாசகனுக்குப் புரியவில்லை என்றால் அந்நூலினால் பயன் எதுவும் இல்லை. இவ்வகையில் தான் கூறவரும் கருத்தைப் புலப்படுத்தக் கூறுவோர் சில உத்திமுறைகளைக் கையாளுதல் கருத்தை எளிதில் புலப்படுத்த உதவும். இத்தகைய கருத்துப் புலப்பாடு முறைக்கெனக் கையாளப்படும் உத்திகள் நூல் முழுவதும் விரவி வரலாம். அல்லது நூலின் குறிப்பிட்ட சில இடங்களில் தொடர்ந்து வரலாம். தொல்காப்பியர் தமது நூலில் ஆங்காங்கே நூலின் பல பகுதிகளில் கையாளும் கருத்துப் புலப்பாட்டு நெறிமுறைகள் பலவற்றுள் எதிர்மறை உத்தி முக்கியமான ஒன்றாக அமைகிறது. இவ்வுத்தி எவ்வெவ்விடங்களில் என்ன நோக்கில் அவரால் கையாளப்படுகிறது; இவ்வுத்தியின் பயன்பாடு அவரது நோக்கினை நிறைவு செய்கின்றதா; இவ்வுத்தியின் பயன்பாடு என்ன போன்றவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

மொழி நடை என்பது தனக்கே உரிய முறையில் ஒருவர் கருத்தினை வெளிப்படுத்தும் பாங்கு ஆகும். இத்தகைய தனித்தன்மைகளின் பிரதிபலிப்பும் ஆசிரியரை உணர்த்தும் பாங்கும் இலக்கிய அல்லது இலக்கணப் படைப்பிற்கு அதிகமான திறனைத் தந்து வாசகனை ஈர்க்கின்றன. தொடர்ந்து வாசிக்கச் செய்கின்றன. இத்தகைய மொழிக் கூறுகளாக ஒலியன், சொல், தொடர் போன்றவை அமைக்கப்படும் நெறிமுறைகள் நடையாக அமையும். இலக்கண நூலுக்குரிய பல பொதுவான உத்திகள் தொல்காப்பியத்தில் அமைகின்றன. தொல்காப்பியர் மரபியலில் சுட்டும் 32 வகை உத்திகள் இவ்வகையில் சுட்டத்தக்கன. இவை போன்ற இலக்கண நூலுக்குரிய பொதுவான அமைப்பு முறையும் தொல்காப்பியர் தம் கருத்துப்புலப்பாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை தவிரவும் தொல்காப்பியரின் அவருக்கே உரிய முறையிலான கருத்துப் புலப்பாட்டு முறையும் அதற்கு உதவுகின்ற நடையியற்

கூறுகளும் கருத்தை வெளிப்படுத்தப் பெரிதும் உதவுகின்றன. அவ்வாறு உதவும் நடையியற் கூறுகளுள் எழுத்து, சொல், தொடரமைப்பு, மேலும் சில முக்கிய உத்திகளாகிய மாற்றாற்று உத்தி, வகைப்படுத்தல், வரையறைப்படுத்தல், பட்டியலிடுதல் ஆகியனவும் முக்கிய இடம்பெறுகின்றன.

தொல்காப்பியரின் கருத்துப்புலப்பாட்டில் தொடரமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது. தனிவாக்கியங்கள், கலவை வாக்கியங்கள், எதிர்மறைத் தொடர், நிரல்நிறைப் பொருட்டொடர், உவமத்தொடர், முரண்தொடர் முதலியன அவர் கையாளும் தொடர்களுள் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் எதிர்மறைத் தொடரும் ஒன்று.

உடன்பாட்டுப் பொருளில் தெரிவிக்கும் முறையை போலவே எதிர்மறையாகத் தெரிவிக்கும் முறை தொல்காப்பியரால் விரும்பிக் கையாளப்படுகிறது. அலங்கடை, இயலா, இல்லை, ஆகா, செய்யா, ஆகாது, இன்மை, அன்று, இல, இன்று, அல்ல, இல் போன்ற சொற்களைப் பயன்படுத்தி எதிர்மறைக் கருத்துக்களைத் தெரிவிக்கிறார். எதிர்மறைக் கருத்துப்புலப்பாடு தொல்காப்பியரால் பின்வரும் சூழல்களில் கையாளப்படுகிறது.

1. வகைப்பாட்டைச் சுட்டுதல்
2. தன்மை சுட்டல்
3. உடன்பாட்டுக் கருத்தை எதிர்மறையில் சொல்லுதல்
4. விதிவிலக்கைச் சொல்லுதல்
5. மொழிமரபைச் சுட்டுதலும் வலியுறுத்தலும்

### 1. வகைப்பாட்டைச் சுட்டுதல்

இருவகையாகப் பிரித்துக் காட்ட வேண்டிய செய்திகளைத் தொல்காப்பியர் இரண்டாகப் பிரித்துக் கொண்டு பின்னது அல்லாமல் முன்னது இத்தனை என்று கூறும் முறையைக் கையாளுகிறார். அத்தகைய சூழலில் எதிர்மறை பின்னதைக் குறிக்கப் பயன்படுகிறது.

எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே. (எழுத். நூற். 1)

இங்கு 30 எழுத்துக்கள் முதன்மை என்றும் 3 எழுத்துக்கள் சார்பு என்றும் பிரித்துக் காட்டவும் இப்பிரிப்பை முக்கியப்படுத்தவும் அலங்கடையே என்ற சொற்பயன்பாடு உதவுகிறது.

உயர்திணை யென்மனார் மக்கள் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமென சொல்லே
(சொல். நூற். 1)

2. தன்மை சுட்டல்

ஒன்றன் தன்மையைக் குறிப்பிடும்போது மொழியில் இவ்வாறு இது வருவதில்லை என்று குறிப்பிட இயல்பாக எதிர்மறைச் சொற்கள் பல நூற்பாக்களில் இடம் பெறுகின்றன.

உஊஇஒ என்னும் நான்குயிர்
வாகான் எழுத்தொடு வருதல் இல்லை (எழுத். நூற். 63)

இங்கு வாகான் எழுத்தொடு வரும் உயிர்கள் எவை என்று எட்டு உயிர்களைப் பட்டியலிட்டு உடன்பாடாகச் சொல்லலாம். ஆனால் சுருக்கக் கருதி உடன்பாடாகச் சொல்லாமல் எதிர்மறையாகச் சொல்கிறார். இதே போன்று பின்வரும் நூற்பாவிலும் சுருக்கம் கருதி சகரக் கிளவியும் இன்னின்ன 9 உயிர்களுடன் மொழி முதலில் வரும் என்று உடன்பாடாகச் சொல்லாமல் மூன்று உயிர்கள் தவிர பிறவற்றுடன் வரும் என்று எவற்றுடன் வராது என்று சொல்லும் போக்கைக் காணலாம்.

சகரக்கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே
(எழுத். நூற். 62)

இதேபோன்ற அமைப்பைப் பின்வரும் நூற்பாக்களிலும் காணலாம்.

எஎன வருமுயிர் மெய் யீறாகாது (எழுத். நூற். 71)
ஒவ்வும் அற்றே நவ்வலங்கடையே (எழுத். நூற். 72)
ஒஒ எனும் உயிர் ஞகாரத் தில்லை (எழுத். நூற். 75)
உஊகாரம் நவவொடு நபிலா (எழுத். நூற். 74)

## 3. உடன்பாட்டுக் கருத்தை எதிர்மறையில் சொல்லுதல்

மொழியில் இத்தகைய அமைப்புக்கள் உண்டு என்று உடன்பாடாகச் சொல்லக்கூடிய நிலையில் மொழியில் இத்தகைய அமைப்புக்கள் உண்டு; அது கடியப்படா என்று சொல்லும் போக்குப் பல நூற்பாக்களில் காணப்படுகிறது.

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இன்றே (சொல். நூற். 17)

தகுதி பற்றியும் வழக்குப் பற்றியும் சுட்டப்படும் சொற்கள் கடியப்படா என்பது கருத்தாகும். இங்கு 'வரைநிலை இன்றே' என்று எதிர்மறையில் சுட்டப்பட்டுள்ளது.

செத்தாரைத் துஞ்சினார் எனல் (தகுதி)
வெள்ளாடு (வழக்கு)

பின்வரும் நூற்பாக்களும் இதுபோன்றே உடன்பாட்டில் சொல்லப்படலாம். ஆனால் எதிர்மறையில் சொல்லப்படுகிறது.

இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே (சொல். நூற். 18)

இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை வழக்கில் வராது. செய்யுளில் வரும் என்று வேறுபடுத்திக் காட்ட இங்கு எதிர்மறை உதவுகிறது.

வேறு வினைப் பொதுசொல் ஒருவினை கிளவார்
(சொல். நூற். 46)

பெயரினுத் தெறிலினும் பணிப்பை எல்லாம்
மயங்கக் கூடா வழக்குவழிப் பட்டன (சொல். நூற். 50)

முதலூர் சினையும் பொருள் வேறுபடாக
நுவலுங்காலைசர் சொற்குறிப்பினவே (சொல். நூற். 89)

பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரிஇய மரபே (சொல். நூற். 90)

தடுமாறு தொழிற்பெயர் கிரண்டு மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான (சொல். நூற். 95)

எதிர்மறுத்து மொழியினுந் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே
(சொல். நூற். 107)

அ எனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிய (சொல். நூற். 109)

போன்ற நூற்பாக்களும் எதிர்மறையில் நேரடியாகத் தம் கருத்தைத் தெரிவிப்பவையே. எழுத்ததிகாரம் 132, 175, 172, 236, 283 ஆகிய நூற்பாக்களில் இவ்வமைப்பு உள்ளது.

### 4. விதிவிலக்கைச் சொல்லுதல்

மெய்ம்மயக்கம் பற்றிப் பேசும் தொல்காப்பியர் இதுவரை சொன்னவற்றிலிருந்து மாறி, எல்லா எழுத்தும் தம்மியல் விளக்கும் போது மெய்ம்மயக்க நிலையினின்று மாறிவிடும் என்று விதிவிலக்காச் சொல்லுகிறார்.

தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மான மில்லை (எழுத். நூற். 47)

இதேபோல மொழி முதல் எழுத்துக்களைச் சொல்லும் போதும் உயிரெழுத்துக்கள் எல்லாம் மொழி முதலில் வரும் என்று சொல்லிவிட்டு அடுத்த நூற்பாவில் தனி மெய் இவ்வாறு மொழி முதலாகா என்ற கருத்தைச் சொல்ல விழைந்து,

உயிர்மெய் அல்லன மொழிமுதலாகா (எழுத். நூற். 60)

என்று விதிவிலக்கு போலக் குறிப்பிடுகிறார்.

உயிர் மயங்கியலில் குறிற்கீழ் வரும் ஆகாரம், தனி ஆகாரம். இவற்றின் முன்னர் குறில் அ இடம் பெறும் என்று சொன்னவர் அடுத்த நூற்பாவில் "இராவென் கிளவிக் ககர மில்லை" (எழுத். நூற். 228) என்று சுட்டுவது விதிவிலக்கு ஆகும்.

### 5. மொழி மரபைச் சுட்டலும் வலியுறுத்தலும்

மொழியில் இது இப்புறத்தான் வரும் என்று அழுத்தம் தந்து சுட்ட விழையும் கருத்துக்களைத் தொல்காப்பியர் அதனோடு தொடர்புடைய எதிர்மறைக் கருத்தைச் சுட்டி இவ்வாறு வராது என்று குறிப்பிடும் போக்கைக் காணலாம்.

அவற்றுள்

ஒகார ழகாரங் குற்றொற் றாகா (எழுத். நூற். 49)

ர, ழ நெடிலை அடுத்து மட்டுமே வரும் என்று சொல்லாமல் குறிலின்கீழ் வருவதில்லை என்று சொல்வது மொழி மரபை வலியுறுத்தவே.

“தார், தாழ் என நெடிற் கீழ் ஒற்றாய் நின்றன. கரு, மழு எனக் குறிற்கீழ் உயிர்மெய்யாய் நின்றன” என்று உரையாசிரியர் விளக்குகிறார்.

பின்வரும் நூற்பாக்களிலும் இதே போன்று மொழிமரபை வலியுறுத்தும் போக்கைக் காணலாம்.

ஆறன் உருபினு நான்கன் உருபினு
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகு மொழிமுன் னான (எழுத். நூற். 162)

தாம், தம்மது என வராது. தாம் தமது என வரும் என்ற செய்தியை மேற்சுட்டிய 162 ஆம் நூற்பா விளக்குகிறது.

ஆய்தத்தின் இயல்பைச் சுட்ட வரும் ஆசிரியர் ஆய்தம் சுருங்கும் பண்பை உடையது எனச் சொல்ல விழைகிறார். ஆனால் நேரடியாகச் சொல்லாமல் சில குறிப்பிட்ட சூழல்களில் ஆய்தம் சுருங்கி ஒலிக்க வில்லையெனில் அவை ஆய்த எழுத்தால் எழுதப்பட்டாலும் ஆய்த எழுத்துப்போல் நடவா என எதிர்மறையாக நூற்பா ஆக்குகிறார். எதிர்மறையில் சொல்வது உடன்பாட்டுக் கருத்தை அப்படியே நூற்பாவில் இல்லாமல் ஆக்கி உடன்பாட்டுக் கருத்தை வலியுறுத்தத் துணைபுரிகிறது.

உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக் குறிப்பெல்லாம் எழுத்தி னியலா
ஆய்தம் அஃகாக் காலை யான (எழுத். நூற். 40)

ஆவோ டல்லது யகர முதலாது (எழுத். நூற். 65)

யகரம் ஆவோடு மட்டுமே மொழி முதலில் வரும் என்று வலியுறுத்தப்படுகிறது.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற் காகிடன் கின்றே (சொல். நூற். 12)

ஆண்மை குறைந்த பெயர்நிலைக் கிளவியை ஆண்மை அறிசொற்கு உரிய சொல்லொடு சேர்த்துப் புணர்த்து எழுதற்க என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

ஒருமை யெண்ணின் பொதுப் பிரிபாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுருரை நில்லாது (சொல். நூற். 44)

ஒருவர், இருவர், மூவர் எனச் சொற்களைப் பால் பிரித்து எழுதும் 'ஒருவன், ஒருவள்' என்ற அமைப்பு ஒருமையில் மட்டுமே இடம்பெறும். இருவர், மூவர் போன்றவற்றில் வரவே வராது என்ற கருத்து அடுத்து சான்றுகள் தந்து வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறு தொல்காப்பியரின் மொழிநடையில் எதிர்மறையாகச் சொல்லுதல் ஒரு குறிப்பிடத்தக்க உத்தியாக அமைகிறது. 1) தெளிவான வகைப்பாட்டினைச் சொல்லுதல், 2) மொழியில் சொற்கள் அமையும் இயல்பான போக்கினை இவை இவ்வாறு வருதல் இல்லை எனச் சுட்டுதல், 3) உடன்பாடாகச் சொல்லக் கூடியவற்றையே சற்று மாற்றிச் சொல்லும் போக்கில் எதிர்மறையாகச் சொல்லுதல், 4) விதிவிலக்கைக் குறிப்பிடல், 5) மொழி மரபைச் சுட்டி வலியுறுத்தல் ஆகிய ஐந்து நிலைகளில் எதிர்மறைத் தொடர்கள் தொல்காப்பியரால் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் வகைப்பாடு, விதிவிலக்கு, மொழி மரபை வலியுறுத்தல் ஆகிய மூன்றும் தொல்காப்பியர் குறிப்பிட்ட நோக்கத்துடனும் திட்டப்பாங்குடனும் எதிர்மறைத் தொடரைக் கையாளுவதாகவும் பிற இரண்டும் இயல்பாக அவரது மொழி நடையில் இடம்பெறுவதாகவும் அமைகின்றன.

எ. ஆலிஸ்
பேராசிரியர், தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சி.

# தமிழில் சொல்லிலக்கணக் கோட்பாடு

- இரா. காசிராசன்

தமிழ் இலக்கண நூல்வழி அறியலாகும் சொல்லிலக்கணக் கோட்பாடு பற்றிய ஆய்வே இக்கட்டுரை. தமிழில் தோன்றிய முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். தமிழ் மொழி இலக்கணத்தை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரு அதிகாரங்களில் பேசுகிறார். இதனை மையமாகக் கொண்டு வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், பிரயோக விவேகம் இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்[1] ஆகிய இலக்கண நூல்கள் சொல் இலக்கணம்பற்றிப் பேசுகின்றன. ஏறத்தாழ கி.மு. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட தொல்காப்பியச் சொல்லிலக்கணம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையிலான இலக்கண நூல்களில் ஒருசில மாற்றங்களுடன் பேசப்பட்டு வருகின்றது. இவை காலத்தால் ஏற்பட்டுள்ள மொழி மாற்றங்களை உள்ளடக்கியுள்ளனவா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இவையனைத்தும் தொல்காப்பிய இலக்கணத்தையே மறுபிரதி செய்கின்றன என்ற எண்ணமும் எழுகின்றது. வீரசோழியமும் பிரயோக விவேகமும் தொல்காப்பியத்தை அடியொற்றிப் பேசினாலும் முழுக்க முழுக்க வடமொழி மரபையே பின்பற்றுகின்றன என்று கருத இடமளிக்கின்றன. கால மாற்றம், வடமொழிப்பற்று, சமயச் சார்பு ஆகியன காரணமாகவே இவ்விலக்கணநூல்கள் எழுதப்பட்டுள்ளன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சமண, பௌத்த, கிறித்தவ சமயச் சார்பும், இச்சமயத்தார்களுக்குத் தமிழ் பயிற்றுவிக்க எழுந்த ஒருவகைப்பாட நூல்கள் போன்றே இவற்றின் போக்கு அமைகின்றது.

தொல்காப்பியத்தை அடியொற்றியே நேமிநாதம் சொல்லதிகாரத்தை ஒன்பது இயல்களாகப் பகுக்கின்றது. இங்கு இயல் என்பதற்குப் பதிலாக மரபு என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. நன்னூலைப் பின்பற்றி இலக்கண விளக்க இயல் பகுப்பு அப்படியே எவ்வித மாற்றமும் இன்றி அமைகின்றது. தொன்னூல் விளக்கமும் இதையே பின்பற்றுகிறது. வீரசோழியம் ஆறு இயல்களிலும், பிரயோக

விவேகம் நான்கு படலங்களிலும், இலக்கணக் கொத்து, முத்துவீரியம் முறையே மூன்று இயல்களிலும் சொல்லிலக்கணம் பற்றிப் பேசுகின்றன.[2]

தொல்காப்பியர் சொல்லிலக்கணத்தை வரையறை செய்கிறபோது, சொல்லை மையமாகக் கொள்ளாமல், தொடரையே மையமாகக் கொள்கின்றனர். தொடர், தொடராவதற்கு முக்கிய இணைப்பாக அமையும் வேற்றுமை பற்றிப் பேசியபின் (case for case sentence – ஃபில்மோர்) தொடரின் கூறுகளான சொல்லைப் பெயர்சொல், வினைச்சொல் எனப் பாகுபடுத்துகிறார். பின் பெயர், வினையின் கூறுகளான வேர்ச்சொல்லை உரியியலிலும், வேரல்லாதனவற்றை இடையியலிலும் விளக்கிச் செல்கிறார். இவ்வகையில் மொழியியல் அறிஞர் சாம்சுகி மற்றும் ஃபில்மோர் கோட்பாடு தொல்காப்பியத்தில் முழுமை பெறுவதை உணரமுடிகின்றது. எனவே தொல்காப்பியரின் சொல்லிலக்கணக்கோட்பாடு பேரியல் நிலையிலிருந்து நுண்ணியல் நிலைக்கு (from macro to micro) செல்வதை (தொடர் – வேற்றுமை – சொல் – உருபு என) அறிய முடிகிறது. எனவே தொல்காப்பியரின் சொல்லிலக்கணக் கோட்பாடு என்பது தொடரியல் சார்ந்ததே எனலாம். இப்போக்கு நன்னூலாருக்குப் பின்வந்த காலகட்டங்களில், அது சொல்லிலக்கணத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை உணர முடிகின்றது.

## தொடரியல் கோட்பாடு

தொல்காப்பியரின் தொடரியல் சிந்தனை வேற்றுமைத்தொடர் அல்வழித் தொடர், வழா நிலை, வழுவமைதி, மேல்நிலை வாக்கியம் (அமைப்பியல் மொழியியல்) ஆழ்நிலை வாக்கியம் (மாற்றிலக்கணம்) என்ற நிலையில் அமைகின்றது. பால்வழு அமைதி, திணை வழுவமைதி, இடவழுவமைதி, வினா–விடை வழுவமைதி பற்றிப் பேசினும், அவற்றின் எண்ணிக்கை பற்றித் தொல்காப்பியர் பேசவில்லை. உரையாசிரியர்களே எழுவகை வழுக்காத்தல் பற்றிப் பேசுகின்றனர். இவற்றையே நேமிநாதம், இலக்கணவிளக்கம், நன்னூல், தொன்னூல் விளக்கம் ஆகியன பேசுகின்றன. இதேபோன்று வினாவிடைத் தொடர் வழாநிலை – வழுவமைதி நிலையில் அமையுமாற்றைக் காப்பியர் விளக்கப் பின்னூல்கள் 6 – வகைவினா, 8 – வகை விடை என எண்ணைச் சொல்கின்றன. தகுதி, வழக்கு பற்றிப் பேசும் தொல்காப்பியர் கருத்தும் பின்னூல்களில், இயல்பு வழக்கு, தகுதி வழக்கு எனப்பகுக்கப்பட்டு, அவை இலக்கணம்

உடையது, இலக்கணப்போலி, மரூஉ, மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி என ஆறாகச் சொல்லப்படுகின்றன.

மேல்நிலைவாக்கியம் பற்றிப் பேசும் தொல்காப்பியர் பால்இயைபு (concord), முறைமை (order), அவாய்நிலை (demand), பாகுபாட்டு விதி (sub categorization), பொருள் உணர்வு (semantic representation) முதலியன பற்றிப் பேசுவது பின்னூல்களில் தெளிவுபட இல்லை. தொடரில் சொற்கள் அமையும் முறைமை பற்றிப் பேசும் தொல்காப்பியர் இயற்பெயர் சுட்டுப்பெயர், சிறப்புப்பெயர் எவ்வாறு அமைய வேண்டும் என்கிறார். பின்னூல்களில் சொல்லியல் நோக்கில் இன்னின்ன பெயர்கள் எனச் சிறப்புப் பெயர் வகைப்படுத்தப் பெறுகின்றது. இங்குச் சிறப்புப் பெயரில் சாதிப்பெயர் பற்றிய குறிப்பு பின்னூல்களில் இடம்பெறுவது, இடைக்காலத்தில் சாதியம் வளர்ந்த நிலையைச் சுட்டிக்காட்டும். அவாய்நிலைத் தொடர் பற்றிப் பேசும் காப்பியர் தா, வா என்பன தன்மை, முன்னிலை; செல், கொடு என்பன படர்க்கை என்பர். நன்னூலார் இந்நான்கும் படர்க்கைக்கு வரும் என்கிறார்.

## வேற்றுமை

வேற்றுமை 6, 7, 8 என்ற கருத்து நிலவி வருகின்றது. வேற்றுமை ஏழு என்ற தொல்காப்பியர் விளியோடு எட்டு என்றார். எழுவாய்வேற்றுமை பெயர் தோன்றுநிலை என்பார் காப்பியர். எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே என்பார் நன்னூலார். அது ஆறு பொருளில் அமையும் என்பார் தொல்காப்பியர். மூன்று பொருள் உரைக்கும் நன்னூலும் இலக்கணவிளக்கமும், வீரசோழியம் காரணக்கருத்தா, தான்தெரி கருத்தா, தான் தெரியாக் கருத்தா, கருமக் கருத்தா, தலைமைக் கருத்தா என ஐந்தாக்கும்.

எழுவாய் வேற்றுமைக்கு அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார், உன், என், தன், யா, அ, இ, உ, எ, அவன், (யாவன்), வள் (யாவள்), து, வை (யாது, யாவை) வர், வர்கள் (அவர், அவர்கள்) என உருபுகள் கூறும் வீரசோழியம், இலக்கணக்கொத்து (ன், ள், ர், து, வை) ஆனவன், ஆயவன், ஆவான், ஆகின்றவன் என்பனவற்றை உருபுகளாகக் கொள்ளும். பிற இலக்கண நூல்கள் எழுவாய்க்கு உருபு இல்லை எனக் கொள்ளும்.[3]

## 2ஆம் வேற்றுமை

2ஆம் வேற்றுமை உருபைப் பொறுத்தவரை எல்லா இலக்கண நூல்களும் 'ஐ' என்பதையே குறிப்பிடும். இதனைக் கருமக் காரகம் என வீரசோழியமும், பிரயோக விவேகமும் சுட்டும். செயப்படுபொருள் என்று இலக்கணக் கொத்து உரைக்கும். இதன் சிறப்புப் பொருளில்தான் இலக்கணநூல்கள் வேறுபடுகின்றன. தொல்காப்பியம் 28 பொருளிலும், வீரசோழியம் ஏழு என்றும் நன்னூல் தொன்னூல் விளக்கமும் ஆறு என்றும், பிரயோக விவேகம் ஐந்து என்றும், இலக்கணக்கொத்து உரையாசிரியர் அடிப்படையில் மூன்று என்றும், ஏழு என்றும், இலக்கண விளக்கம் மூன்று என்றும், முத்து வீரியம் எட்டும் என்றும் வகைப்படுத்தும்.[4]

## 3-ஆம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபு, 'ஒடு', 'ஆன்' எனக் குறிப்பர் தொல்காப்பியர். பிறநூல்கள் 'ஒடு', 'ஓடு', 'ஆல்', 'ஆன்' என்ற நான்கினைக் குறிப்பிடும். இதனைக் கரணக் காரகம் எனக்குறிப்பிடும் வீரசோழியமும் பிரயோக விவேகமும், இதன் பொருள் வினைமுதல் (agent) கருவி, (instrument) என விளக்குவர். இதன்விரிந்த பொருளாகத் தொல்காப்பியம் 10 பொருளையும்; வீரசோழியமும் பிரயோகவிவேகமும் முறையே இருபொருளையும்; நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், மற்றும் முத்துவீரியம் முறையே மூன்று பொருளையும் இலக்கணக்கொத்து பன்னிரு பொருளையும் குறிப்பிடும்.[5]

## 4ஆம் வேற்றுமை

இதன் உருபு 'கு'. இதனுடன் 'பொருட்டு' என்பதைச் சேர்க்கும் வீரசோழியமும் பிரயோக விவேகமும்; பொருளை ஏற்பது கோளிக்காரகம் என விளக்கும். பொருளை ஏற்பது, கொடை, கொள்பவன், கொள்வோன் என இதனைப் பின்னூல்கள் விளக்கும், இவ்வேற்றுமையின் சிறப்புப் பொருளாகத் தொல்காப்பியம் பத்தும்; வீரசோழியம் மூன்றும்; நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் முறையே ஆறும், பிரயோக விவேகம் நான்கும், இலக்கணக்கொத்து பத்தும், முத்துவீரியம் ஏழும் என எண்ணிக்கை குறிப்பிடும்.[6]

### 5ஆம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபாக 'இன்' என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். வீரசோழியம் நின்று உருபைக் குறிப்பிடும். நன்னூல் முதலான பிற இலக்கணநூல்கள் இன்னுடன் இல் உருபையும் சேர்க்கும். இது 'இதனின் இற்றிது' எனும் ஒப்புமைப் பொருளில் வரும் என்பர் தொல்காப்பியர். அவதிப் பொருள் என வீரசோழியமும் அபாதானம் என பிரயோக விவேகமும் இதன் பொருளை விளக்கும். பின்னூல்கள் குறிப்பிடும் நீங்கல், என்லை, ஏதுப் பொருள் தொல்காப்பியத்தில் இல்லை. சலம், அசலம் என்பன நீங்கல் பொருளையே சுட்டுகின்றன எனலாம். தொல்காப்பியம், 28 பொருளைக் குறிப்பிட்டாலும், பின்னூல்கள் நன்னூலைப் பின்பற்றி நீங்கல், ஒப்பு, ஏது, எல்லைப் பொருளையே குறிப்பிடுகின்றன. இவற்றுடன் இதனின் இற்று, என்ற நான்குடன் தொல்காப்பியர் கூறும் அச்சம், ஆக்கம், தீர்தல், பற்றுவிடல் என்பதைச் சேர்த்து எட்டு என்கிறது.[7]

### 6ஆம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமை உருபு 'அது' எனத் தொல்காப்பியமும் நேமிநாதமும் குறிப்பிடும். இதனுடன் ஆது, அ உருபுகளை நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் சேர்க்கும். இலக்கணக் கொத்து, பலபொருள் பற்றிப் பேசினும் உருபு இன்னது எனக்குறிப்பிடவில்லை. பின்னூல் ஒருமைக்கு அது, ஆது உருபும், பன்மைக்கு அ வும் வரும் என்கின்றன. வீரசோழியம் உடைய, கு என்ற உருபுகளையும், பிரயோக விவேகம் அது, அ, கு, உடைய என்பனவற்றையும் உருபுகளாகக் கூறுகின்றன. தற்கிழமை, பிறிதின் கிழமை நிலையில், இதனது இது எனும் பொருளில் (possessive) வரும் என்பார் தொல்காப்பியர். தற்கிழமை என்பதை எல்லா நூல்களும் ஏற்கின்றன. சிறப்புப் பொருள்பற்றிய கருத்தில் இவை மாறுபடுகின்றன. தொல்காப்பியம் 16 பொருளிலும், நன்னூல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் முறையே ஐந்து பொருளிலும், இலக்கண விளக்கம், இவற்றுடன் பொருள், இடம், காலம், இதனது இது என்பனவற்றையும், இலக்கணக்கொத்து ஒற்றுமை, வேற்றுமை, ஒன்றாய்த் தோன்றல், உரிமையாய்த் தோன்றல், வேறாய்த் தோன்றல், தொழில், பொருள், இடம், காலம், இருவகைநூல் ஆகியவற்றையும் சேர்க்கின்றன.[8]

## 7ஆம் வேற்றுமை

7 ஆம் வேற்றுமை உருபாகத் தொல்காப்பியம் 'கண்' முதலான 19 உருபுகளையும், நன்னூல் 28 உருபுகளையும் குறிப்பிடும். வீரசோழியம், ஐந்து உருபுகளைக் குறிக்கிறது. பிரயோக விவேகம் மட்டும் இல் உருபைச் சேர்த்துக் கொள்ளும். தொல்காப்பியர் 7 ஆம் வேற்றுமை வினைசெய் இடம், காலம், நிலம் என இடப்பொருள் உணர்த்தும் என்கிறார். வீரசோழியம் ஆதாரம் என இவ்வேற்றுமையைச் சுட்டி அதனைச் சேர்வு, கலப்பு, புலன், அயல் என வகைப்படுத்தும். இலக்கண விளக்கம் முத்துவீரியம் தொல் கூறும் 19 உருபுகளையே கூறும். இலக்கணக்கொத்து, இடம் நான்கு என்றும், காலம், திசை, ஆகாயம், வெயில், இருள், நிலம், அரு, உரு என்ற இடமில்லா இடம் மூவகைப்படும் என்றும் பகுத்துரைக்கிறது. தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றுகிறது.[9]

## 8ஆம் வேற்றுமை விளி

விளி வேற்றுமை படர்க்கையோரைத் தன் முகமாக அழைத்தல் என நன்னூலாரும் 'அழைத்தல்' என இலக்கணக் கொத்தும் படர்க்கைப் பெயரை முன்னிலைப்படுத்துவது என்று நேமிநாதமும் சுட்டும். ஈறுதிரிதல், ஈற்றயல் நீடல், வேறுவருதல் (மிகுதல்) என விளி ஏற்கத் திரிபு பற்றிப் பேசும் நேமிநாதம், இவற்றுடன் இயல்பு, குன்றல் எனும் இரண்டினை நன்னூல்சேர்க்கும். பிரயோக விவேகம் சம்புத்தி, சம்போதனம் என இதனை விளக்கும்.

வீரசோழியம், முன்னிலைக்கு ஆன், ஆய், ஈ, ஏ, அ, ஆ, ஆன், ஒல், ஓய், ஈர், அளபெடை, காள், மா, யா என 14 உருபுகளைச் சுட்டும். உயர்திணைப் பெயர் விளி ஏற்கும் தன்மை குறித்துப் பேசும் தொல்காப்பியர் உயிர் ஈற்றில் இ, உ, ஐ, ஓ ஆகிய நான்கும், மெய் ஈற்றில் ன், ள், ர், ல் ஆகிய நான்கும் மட்டுமே உயர்திணையில் விளி ஏற்கும் என்கிறார். நன்னூலார் இவற்றுடன் ஊ, ய இரண்டையும் சேர்ப்பர். விரவுப் பெயரில் விளி ஏற்கும் ஈறுகளில் ர், ஓ, நீங்கலாக ண், ஆ என்பதைச் சேர்த்து நன்னூலார் 10 என்பார். அதே போன்று அஃறிணைப் பெயரில் எல்லா ஈறும் ஏ காரம் பெற்று விளி ஏற்கும் என்பார் காப்பியர். நன்னூலார் ஞ், ந், எ நீங்கலானவற்றை அஃறிணைப் பெயர் என்கிறார். பெயர் விளி ஏற்கிறபோது அடைகிற மாற்றங்களில் தொல்காப்பிய நெறியே பின்னூல்களில் பின்பற்றப்படுகிறது. திரிபுகளில் அன் >ஆஓ, அஓ

(அப்பாவோ, ஐயாவோ) ஆன் > ஒஏ (வாயிலோயே) என மாற்றம் பெறுவதையும் நன்னூலார் குறிப்பர். இங்ஙனம் வேற்றுமை இலக்கணத்தைப் பொறுத்தவரை நன்னூலைப் பின்பற்றிப் பின்னூல்கள் பேசுகின்றன. முத்துவீரியம் மட்டும் தொல்காப்பியத்தை மிகுதியும் பின்பற்றுகிறது எனலாம்.

## பெயர்ச்சொல்

கிளவி, சொல், உரை என்பன ஒருபொருள் பன்மொழியாக இலக்கணங்களில் பயின்று வருகின்றன. பொருள் தருவது சொல். அது சொன்மை தெரிதல், பொருண்மை தெரிதல் என இருவகைப்படும். இப்பொருண்மை வெளிப்படை, குறிப்பு நிலையில் அமையும் என்பர் தொல்காப்பியர். நேமிநாதமும் முத்துவீரியமும் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகின்றன. தொல்காப்பியர் குறிப்பு பற்றிப் பேசினும் அதன்வகை பற்றிப் பேசவில்லை. நன்னூலார் ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழி, வினைக்குறிப்பு, முதல்குறிப்பு, தொகைக்குறிப்பு என எண்வகைக் குறிப்பு பற்றிப் பேசுவர். முத்துவீரியம் விகாரம் நீங்கலாக ஏழினைக் குறிப்பிடும்.

தொல்காப்பியர் சொல்வகை பெயர், வினை என இரண்டே என்பர். இடை, உரிச்சொற்கள் பெயர், வினையுள் அடங்கும் என்பர். பின்வந்த இலக்கண நூலார் சொல்வகை பெயர், வினை, இடை, உரி என நான்கு என்பர். தவிர இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனச் செய்யுள் ஈட்டச் சொற்கள் பற்றியும் பேசுவர். பின் உயர்திணைப் பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் எனப் பெயரை மூன்றாக வகைப்படுத்துவர். இவை ஐம்பால் மூவிடம் உணர்த்தும் என்பர். இவற்றில் உயர்திணைப் பெயர் 44, அஃறிணைப் பெயர் 24, விரவுப் பெயர் 19, உயர்திணைப் பெயரைப் பால் உணர்த்தும் பெயர் 13, பால் பொதுப்பெயர் 7, முப்பால் ஈறு ஏற்கும் பெயர் 7, சுட்டுப்பெயர் 9, வினாப்பெயர் 3, இடப்பெயர் 3, உளப்பாட்டுப்பன்மைப் பெயர் 2 எனப் பெயர்களை வகைப்படுத்தியுள்ளார்.

அஃறிணைப் பெயரையும் பெயர் பெயர்ப்பதிலி நிலையில் பெயர் 3, சுட்டு 12, வினா 3, பன்மை 4, எண் 1, எதிர்மறை 1 என வகைப்படுத்தியுள்ளார். விரவுப் பெயரைப் படர்க்கை முன்னிலை என வகைப்படுத்தி இயற்பெயர் 4, சினைப்பெயர் 4, சினைமுதற்பெயர் 4, முறைப்பெயர் 2 எனவும், ஆண்மை சுட்டிய விரவுப்பெயர், பெண்மை

சுட்டிய விரவுப்பெயர், ஒருமை சுட்டிய விரவுப் பெயர், பன்மை சுட்டிய விரவுப் பெயர் என வகைப்படுத்துகிறார்.

இங்ஙனம் பெயர்ச்சொல்லை வகைப்படுத்தினாலும் பெயர்ச்சொல் என்றால் என்ன எனக் காப்பியர் விளக்கவில்லை. நன்னூலாரே இடுகுறி, காரணம், மரபு, ஆக்கம் எனும் அடிப்படையில் தோன்றி காலம் காட்டாது திணை, பால் இடம் ஏற்பது பெயர் என்கிறார். நன்னூலாரைப் பின்பற்றி இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும் இக்கருத்தையே முன்மொழிகின்றன. பெயர்வினைச் சொற்கு உருபு (விகுதி) கூறவில்லை தொல்காப்பியர். பின்நூல்கள் ன், ள், ர், கள், மார், என்பனவற்றை உயர்திணை ஈறுகளாகக் கொள்கின்றன. அஃறிணைப் பெயர் உருபுகளாக து, அ, ஐ, அவ் ஆகியவற்றைக் குறிப்பிடும் நேமிநாதம் பெயர் என்பதைப் பேர் என்றே குறிப்பிடுகின்றது. அதோடு பெயர் > பேர், பெயர்த்து > பேர்த்து, ஒடு > ஓடு, நீயிர் > நீர் எவன் > என், என்னை, யானை > ஆனை, பொழுது > போது என மாற்றம் பெற்று வருவதையும் நேமிநாதம் பதிவு செய்கிறது.

தன்மை இடப்பெயரைத் தொல்காப்பியர் உயர்திணைக்குப் பேச, நன்னூலார் பொதுப்பெயராகக் காண்கிறார். முறைப்பெயர் பற்றித் தொல்காப்பியர் இரண்டு கூற (தாய், தந்தை) நேமிநாதம் மகன், மகள் இரண்டையும் விரவுப் பெயரில் இணைக்கிறது.

வினைச்சொல்

வினை காலம் காட்டும்; வேற்றுமை உருபு ஏற்காது என்ற காப்பியச் சிந்தனை பின்நூல்களிலும் இடம்பெறுகின்றது (நேமி, இ.வி.மூ.வீ). நன்னூல் சற்று விளக்கமாகச் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள், ஆறும் தருவது வினை என்கிறது. வினையே, செய்வது, செயப்படுபொருளே, நிலனே, காலம், கருவி, என்றா, இன்னதற்கு இது பயன் எனத் தொழில் முதல்நிலை எட்டு என வேற்றுமை மயங்கியலில் இதனை விளக்குகிறது தொல்காப்பியம். காலம் மூன்று எனவும், அவை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்றும் குறிப்பிடுவர் காப்பியர். அதற்கான இடைநிலைகளையோ விகுதிகளையோ சுட்டவில்லை. வினையைத் தெரிநிலை, குறிப்பு என்று மட்டும் சுட்டிச் செல்கிறார். காலம் குறிப்பொடு தோன்றும் என்கிறார். வினை, குறிப்பு என்ற தொல்காப்பியச் சிந்தனை பின்னர்த் தெரிநிலை வினை, குறிப்பு வினை எனப் பேசப்பட்டது.

நன்னூல் இறந்த கால இடைநிலைகளாக த, ட, ற, இன் என்பவற்றைக் குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் க வைச் சேர்க்கும் வீரசோழியம் த், ன், ய் மூன்றினைக் குறிப்பிடும். நிகழ்கால இடைநிலையாகக் கிறு, கின்று, ஆநின்று என்ற மூன்றினைக் குறிப்பிடும் (நன், இ, வி, தொ.வி) வீரசோழியம் கிறு, ஆநின்று இரண்டை மட்டும் குறிக்கிறது. எதிர்கால உருபாக வீரசோழியம், கும், உம் என்பவற்றைக் குறிப்பிடும். பிறநூல்கள் ப, வ வைக் குறிப்பிடும் (நன், தொ, வி. மு. வீ). இலக்கணக்கொத்து, வினையை முதல்நிலை, தொழில் பெயர், முற்று, எச்சம் என வினைப் பாகுபாடு செய்கிறது.

வீரசோழியமும், பிரயோக விவேகமும் வினை அடியை வடமொழி மரபுப்படி பிரிக்கிறது. இதனைத் தாது என்ற சொல்லால் இரு நூல்களும் குறிப்பிடுகின்றன. சர (செயப்படுபொருள் குன்றியவினை–நட), பச (செயப்படுபொருள் குன்றா வினை–அடு) என வீரசோழியமும், சகன்மகம் (செயப்படுபொருள் குன்றாத வினை) அகன்மகம் (செயப்படுபொருள் குன்றிய வினை), காரிதம் (பிறவினை) எனப் பிரயோக விவேகமும் தாதுவை வகைப்படுத்தும்.

வினை அடியை முன்னிலை, ஏவல் ஒருமை (வீர, பிர, வி) என்றும், செய் என் ஏவல்வினைப் பகாப்பதம் என்றும், தெரிநிலை வினையின் முதல்நிலை (பகுதி) என இலக்கண விளக்கமும் குறிப்பிடும். இவ்வினை பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு அடியாய்ப் பிறக்கும் என்கிறது இலக்கணக் கொத்து.

வினை அடிபற்றி (தாது) வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம், முதலியன ஒரு தொகுப்பைத் தருகின்றன. வீரசோழியம் 33 வினையையும், நன்னூலும், இலக்கண விளக்கமும் 23 வினையையும், தொகுத்துரைக்கின்றன. இவற்றில் வி, பி, வரின் பிறவினையாகும் என்று நன்னூலும் தன்வினை, பிறவினை பற்றிய குறிப்பினைத் தருகின்றன. இலக்கணக்கொத்து, தனித்த நிலையில் தனிவினை (ஏவல் வினைமுதலான) தொடர்வினை (விகுதிமுதலான ஏற்றவை) எனப்பகுத்தும் அவற்றைத் தன்வினை, பிறவினை, இருவினைப்பொது, விதிவினை, மறைவினை, தெரிநிலைவினை, தெரியாநிலைவினை, வினைக்குறிப்பு, தனக்கும் பிறர்க்கும் பயன்படும் வினை, பயன்படாவினை, சிற்றறிவோர்வினை, பேரறிவோர்வினை, நல்வினை, தீவினை,

வெறுவினை, அறிந்து செய்வினை, அறியாது செய்வினை, அசேதனம் செய்வினை, அசேதனம் செய்யாவினை, செய்யாவினை எனப் பலவாறு பகுப்பது புதுமையாக இருக்கிறது.

தொல்காப்பியர் வினையை உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவுவினை எனப் பகுக்கிறார். இவற்றில் தன்மை, படர்க்கை இடம் உணர்த்துவன உயர்திணை, முன்னிலை விரவு வினை என்பர். நன்னூல் முதலான பின்னூல்கள் தன்மை வினையைப் பொதுவினையில் அடக்கும். உயர்திணை, அஃறிணை வினைகளைத் தெரிநிலை குறிப்பு எனப் பாகுபடுத்தித் தொல்காப்பியம் பேசுவது சிறப்புற அமைகிறது.

உயர்திணை வினையைத் தன்மைப்பன்மை, தன்மை ஒருமை, படர்க்கைப் பன்மை, படர்க்கை ஒருமை எனப் பகுக்கும் மரபு அஃறிணைவினை பற்றிப் பேசும்போதும் அமைகின்றது. ஆயின் முன்னிலை பற்றிப் பேசுகிறபோது ஒருமை, பன்மை என முறை மாறி அமைகின்றது. தன்மைப் பன்மையைத் தனித்தன்மைப் பன்மை, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப் பாகுபடுத்தி முன்னிலையாரை உளப்படுத்துவது, படர்க்கையாரை உளப்படுத்துவது, இருவரையும் உளப்படுத்துவது என்ற உரையாசிரியர் கருத்துப் பின்னூல்களில் தனித்துப் பேசப்படுகின்றன. அம், ஆம், முன்னிலையாரை உளப்படுத்துவது எம், ஏம், ஓம், படர்க்கையாரை உளப்படுத்துவது கும், டும், தும், றும், இருபாலரையும் உளப்படுத்துவது. தொல்காப்பியர் ஆ ஒ ஆகும் (ஆம், ஒம்) என்பதை நன்னூல் தனி விகுதியாக்குகிறது.

தன்மை ஒருமை விகுதிகளாக என், ஏன், அல், கு, டு, து, று ஆகியவற்றைத் தொல்காப்பியமும் முத்துவீரியமும் குறிப்பிடும். இவற்றுடன் அன் விகுதியை நன்னூல் முதலான பிற நூல்கள் சேர்க்கும். படர்க்கையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் ஈறுகளாகத் தொல்காப்பியர் கூறும் 8 விகுதிகளே பின்னூல்களிலும் இடம் பெறுகின்றன (நன். இ.வி.இகொ.மு.வீ). நேமிநாதம் மார் உருபை விட்டுவிடுகிறது. வீரசோழியம் மட்டும்தான் ஆள், தாள், ஆள், தார், ஆர், தார்கள், ஆர்கள், நின்றான், கிறான், நின்றாள், கிறாள், நின்றார், கிறார், நின்றார்கள், கிறார்கள், வான், பான், வாள், பாள், வார், பார், வார்கள், பார்கள் ஆகிய உருபுகளை எடுத்துரைக்கும். இவை பிறழ்பிரிப்பால் ஏற்பட்ட மாற்றம் எனலாம். குறிப்புவினையை உயர்திணைக் குறிப்பு, அஃறிணைக்குறிப்பு எனத் தொல்காப்பியர் வகைப்படுத்த வீரசோழியமும்

பிரயோகவிவேகமும் விகுதிகளைக் குறிப்பிடும். அன், இயன், ஈனன், இகன், ஏயன், வான், வதி, அம், இ, வன், ஆ, ஆன், ஆளன், மான், அகன், அச்சி, ஆட்டி, அனி, அத்தி, தி, ஆன், அன், இச்சி, சி (வீர.) பிரயோக விவேகம் ன, ள, ர, டு, று, து என்பவற்றைக் குறிப்பிடும்.

அஃறிணைப் பன்மை அ, ஆ, வ (தொல்), அஃறிணை ஒருமை து, று, டு (தொல்) விகுதிகளில் மாற்றம் இல்லை. நன்னூல் வ விகுதியை நீக்கிவிடுகிறது. அஃறிணைக்குறிப்பு பத்தினைத் தொல்காப்பியம் குறிப்பிடும். பின்னூல்கள் இதுபற்றி விரிவாகப் பேசவில்லை. இலக்கணக் கொத்து, எச்சம், வியங்கோள் முதலானவற்றைக் குறிப்பில் அடக்கும். தொன்னூல் விளக்கம் து, று, டு ஆகிய விகுதிகளைக் கூறும்.

விரவு வினை எட்டுவகை எனத் தொல்காப்பியம் வகைப்படுத்தும். முத்துவீரியம் தவிரப் பிற பின்னூல்கள் தன்மையை இதில் அடக்கும். முன்னிலை ஒருமை, பன்மை ஈறுகளில் தொல்காப்பியத்திற்கும் பின் நூல்களுக்கும் வேறுபாடு இல்லை (ஆய், இ, ஐ, இர், ஈர், மின் – தொல், நன், நேமி, இ.வி, மு.வீ.). இலக்கண விளக்கம் கூடுதலாக அல், ஆல், ஏல் ஆகியவற்றைச் சேர்க்கும். வீரசோழியம் மட்டும் பிறழ் பிரிப்பால் தாய், ஆய், தீர், ஈர், தீர்கள், ஈர்கள், தேன், ஏன், தேம், ஏம், தோம், ஓம், கிறாய், நின்றாய், கிறீர், நின்றீர், கிறீர்கள், நின்றீர்கள், வாய், பாய், வீர், பீர், வீர்கள், பீர்கள், சாய், பாய் என்பனவற்றைத் தொகுத்துரைக்கும்.

வியங்கோள் தன்மை முன்னிலையில் வராது என்பர் காப்பியர். நன்னூலார் மூவிடத்தும் வரும் என்கிறார். முத்துவீரியம் தொல்காப்பியத்தை பின்பற்றும். வியங்கோள் ஈறாக க, ய, ர் என்பன வரும் (நன்). இவற்றுடன் அல், ஆல், உம், மார், ஐ ஆகியவற்றை இலக்கண விளக்கம் ஏற்கும்.

எச்சங்களை வினைக்குறை என்கிறது பிரயோக விவேகம், இதனைப் பெயரடை, வினையடை என்கிறது. இலக்கணக்கொத்து, தொல்காப்பியம் 15 வினை எச்சங்களைக் குறிப்பிடும். இதில் முதல் ஒன்பது பின் நூல்களில் வரும். தொல்காப்பியம் கூறும் முதல் ஒன்பதில் செய்யியர், செய்பு என்பதை நீக்கிச் செய்யா என்பதைச் சேர்க்கும். அதோடு பான், பாக்கு, பின், முன் சேர்த்து 2ஐக் குறிப்பிடும் இலக்கணவிளக்கம். நன்னூல் வான், பான், பாக்கு. சேர்க்கும் வீரசோழியமும் தொன்னூல் விளக்கமும் இதற்கு விகுதிகளை எடுத்துரைக்கும். க, பான், தற்கு, வான், அ, ஆ, இ, து, உ, இய

என்பனவற்றை வீரசோழியம் குறிப்பிடும். தொன்னூல் விளக்கம் இ, உ, என, ஊ, பு, ஆ, இறந்தகால எச்சம்; அ, இரு நிகழ்காலம். இல், இன், இய, இயர், வான், பான், பாக்கு எதிர்காலம். ஆமல், அது, ஆமை, ஆ எதிர்மறை எனப் பாகுபடுத்தும்.

எதிர்மறை பற்றிய சிந்தனை (எதிர்மறுத்து மொழியினும்) தொல்காப்பியருக்கு உண்டு. தடைப்பொருள் என்கிறது வீரசோழியம். இதற்குரிய ஈறுகளாக ஆன், ஆள், ஆர், ஆது, ஆ, இலன், இலள், இலர், இலர்கள், இலது, இலாது என்பதனைக் கூறும். இலக்கணக் கொத்து நிலைமொழிமறை, வருமொழி மறை, இருமொழிமறை என இதனை வகைப்படுத்தும். மேலும் எதிர்மறை முன் ஒட்டுக்களாக அ, அந், ந. நி. கு.வி. (அநங்கன், அரூபம், நிமலன், குதர்க்கம் முதலான) ஆகியவற்றைக் கூறும்.

வினையாலணையும் பெயர் (தொழில்பெயர்), வினைமுற்றுப் பெயர் பற்றிய சிந்தனையும், இலக்கண நூல்களில் சுட்டப்படும். இதற்கு வீரசோழியம் பல விகுதிகளைக் கூறும்; வான, உ, மை, அம், பு, கை, வல், இவு, தல், அல், பான், அலை, கு, தான், வி, தி, வை, சி முதலியன. இங்ஙனம் பார்க்கிறபோது பிறவற்றினும், வினையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

## இடைச்சொல்

தொல்காப்பியர் 7 வகை இடைச்சொற்களைப் பற்றிப் பேசுகின்றார். நேமிநாதம் ஒப்பில் வழியால் பொருள் செய்குந என்பதை நீக்கி 6 வகை என எடுத்துரைக்கும். நன்னூலார் தத்தம் குறிப்பு என்பதைத் தத்தம் பொருள், குறிப்பு என இரண்டாக்கி இடைச்சொல் எட்டுவகைப்படும் என்பர். தொல்காப்பியர் 41 இடைச்சொற்களை எடுத்துரைப்பார். இதில் 12 இடைச்சொற்களை விட்டு விட்டுப் புதிதாக 19 இடைச்சொற்களைச் சேர்த்து 48 இடைச்சொற்களை வகைப்படுத்தும் நன்னூல். இடைச்சொல்லின் பொதுப்பொருள் 14 என்பார் நன்னூலார். காப்பியர் இதுபற்றிப் பேசவில்லை. தில், கொன், உம், எற்று, மன்ற, தஞ்சம், அந்தில், ஆங்க, எல், கொல், ஆர், குறை, மா ஆகிய இடைச்சொற்பொருளில் எவ்வித மாற்றமும் இல்லை. மன்–கழிவு, ஆக்கம், ஒழியிசை (தொல்); அதனுடன் அசைநிலை (இ.வி); இந்நான்குடன் மிகுதி, நிலைபேறு (நன்). ஓகார இடைச்சொல் 6 பொருள் (தொல்); பிரிநிலை நீங்க ஐந்து (நேமி); கழிவு, அசைநிலையைச் சேர்க்கும் (நன்,

இ.வி.தொ.வி). என்று, என 5 பொருள் (தொல்) தொன்னூல் விளக்கம் அசைநிலையைச் சேர்க்கும். ஏகார இடைச்சொல் 6 பொருள் (தொல், நேமி, இ.வி., மு.வீ).

முன்னிலை அசையாக 6 இடைச்சொற்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். நன்னூல் இடும், சின்னை எடுத்துவிட்டு, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ சேர்த்து 10 அசைநிலைகளைக் குறிப்பிடும். நன்னூல் கூறும் இன்று, கின்று, வை நீக்கி என், அல் சேர்க்கும் இலக்கண விளக்கம். மாள, ஈ க்குப் பதில் மான், ஆர் என்பதைச் சேர்க்கும். தொன்னூல் விளக்கம். மூவிடத்திற்கும் பொதுவான அசைநிலை 7 என்றும் (தொல்) 20 என்றும் (நன், இ.வி) 30 என்றும், (தொ.வி) இலக்கண நூல்கள் தொகுத்துக்கூறும். பொதுநிலையில் எண்ணிடைச் சொற்களைத் தொடரியல் நோக்கில் பார்க்கும் பார்வை எல்லா இலக்கண நூல்களிலும் காணப்படுகிறது. இதனால் இடைச்சொல்லில் பின்னை இலக்கண நூலார் பெரிதும் மாறுபடவில்லை எனத் தெரிகிறது.

உரிச்சொல்

இசை, பண்பு, குறிப்பு, பெயர் வினைப்பொது, ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், பயிலாதன என 7 வகை உரிச்சொல் பற்றிப் பேசும் தொல்காப்பியம். இ.வி, மு.வீ நேமிநாதம் பயிலாதனவற்றை நீக்கி 5 வகை எனல். ஒரு சொல் பல பொருள். பல சொல் ஒரு பொருள் தருவன (பிர.வி). நன்னூல் செய்யுட்குரியன என்கும் பொருள் நிலையில் ஒரு சில மாற்றம் காணப்படுகின்றது. மிகுதிப் பொருள் உரிச்சொல் உறு, தவ, நனி (தொல், மு.வீ). நன்னூல், சால, கூர், கழி என்பனவற்றைச் சேர்க்கும். உரிச்சொல் பற்றித் தொல்காப்பியர் விரிவாகப் பேசுவார். ஏனை இலக்கண நூலார் மிகச் சுருக்கமாகவே இதனை விளக்குகின்றனர்.

இங்ஙனம் சொல்லிலக்கணக்கோட்பாடு என்பது தொல்காப்பியரைப் பொறுத்தவரை தொடரை மையமாகக் கொண்டு அமைகின்றது. ஏனை இலக்கண நூல்கள் சொல்லை மையமாகக் கொள்கின்றன. வீரசோழியமும், பிரயோக விவேகமும் வடமொழிச் சார்புடன் பெரிதும் பேசுகின்றன. ஏனை இலக்கண ஆசிரியர்கள் உரையாசிரியர்களைப் பின்பற்றி மாற்றங்களைப் பேசுகின்றனர். பொதுவாகச் சமூகவியல் அடிப்படையில் ஏற்பட்டுள்ள மொழி

மாற்றங்களைப் பதிவு செய்யும் நோக்கம் பிற்கால இலக்கண நூல்களில் இருக்குமா என்பது ஐயமே. உரைச்சார்பு, வடமொழிச் சார்பு, சமய தத்துவச்சார்பு பாடநூல் எழுதும் நோக்கம் இவையே பிற்கால இலக்கண நூல்களின் நோக்கம் எனலாம். வீரசோழியமும், பிரயோக விவேகமும், வடமொழிப் புலமையாளருடன் சேர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவற்றின் நோக்கம், போக்கு முதலானவற்றை அறியமுடியும்.

- தொல்காப்பியம் – கி.மு. முதல் நூற்றாண்டு
- வீரசோழியம் – புத்தமித்திரனார் 11 ஆம் நூற்றாண்டு
- நேமிநாதம் – குணவீரபண்டிதர் 12 ஆம் நூற்றாண்டு
- நன்னூல் – பவணந்திமுனிவர் 13 ஆம் நூற்றாண்டு
- பிரயோக விவேகம் – சுப்பிரமணிய தீட்சிதர் 17 ஆம் நூற்றாண்டு
- இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் 17 ஆம் நூற்றாண்டு
- இலக்கணக் கொத்து – சுவாமிநாததேசிகர் 17 ஆம் நூற்றாண்டு
- தொன்னூல் விளக்கம் – வீரமாமுனிவர் 18 ஆம் நூற்றாண்டு
- முத்துவீரியம் – முத்துவீர உபாத்தியாயர் 19 ஆம் நூற்றாண்டு
- தொல்காப்பியம் – சொல்லதிகாரம் 9 இயல்கள். கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல்.
- நேமிநாதம் – மொழியாக்க மரபு, வேற்றுமை மரபு, உருபு மயங்கியல், விளிமரபு, பெயர்மரபு, வினைமரபு, இடைச்சொல் மரபு, உரிச்சொல் மரபு, எச்சமரபு.
- நன்னூல் & இலக்கணவிளக்கம் – பெயரியல், வினைஇயல், இடையியல், உரியியல், பொதுவியல்.
- தொன்னூல் விளக்கம் – பெயரியல், வினைச்சொல்லியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல், சொற்பொதுவியல்.

- வீரசோழியம் – வேற்றுமைப் படலம், உபாகரப் படலம், தாதுப்படலம், கிரியாபதப் படலம், தத்திதப்படலம், தொகைப்படலம்.

- பிரயோக விவேகம் – காரகப்படலம், திங்ஙுப்படலம், தத்திதப் படலம், சமாசபடலம்.

- இலக்கணக் கொத்து – வேற்றுமை இயல், வினையியல், ஒழிபியல்.

- முத்துவீரியம் – பெயரியல், வினைஇயல், ஒழிபியல்.

- தொல்காப்பியம், முத்துவீரியம் – பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலை உரைத்தல், வினாஏற்றல், பண்புகொள்ள வருதல், பெயர்கொள வருதல்.

- நன், தொ. விளக்கம் – வினை, பெயர், வினாக்கொளல்.

- 2ஆம் வேற்றுமை – ஐ

தொல்காப்பியம் – காப்பு, ஒப்பு, ஊர்தி, இழை, ஒப்பு, புகழ், பழி, பெறல், இழிவு, காதல், வெகுளி, செறல், உவத்தல், கற்பு, அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், நிறுத்தல், அளவு, எண், ஆக்கல், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல், சிதைப்பு.

- வீரசோழியம் – பற்றுக் கருமம், வீட்டுக்கருமம், இருபுறக் கருமம், தான்தெரிகருமம், தான்தெரியாக் கருமம், கருத்தாக் தீபக்கருமம்.

- நன்னூல் & தொன்னூல் விளக்கம் – ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை.

- பிர.வி. – அபிகிதகருமம், அநபிகித கருமம், என இரண்டாக்கி அவற்றின் பிரிவுகளாக, ஈச்சிதகருமம், அநீச்சித கருமம், ஈச்சிதா நீச்சிதச் கருமம், கர்த்திரு கருமம், அகதிதகருமம்.

- இ.கொ. – கருத்துண்டாதல், கருத்தின்றாதல், இருமையும் ஆதல், ஈருரு பிணைதல், கருத்தாவாதல், அகநிலையாதல், தெரிநிலை, இயற்றப்படுதல், எய்தப்படுதல், வேறு படுக்கப்படுதல்.

- இ.வி. – இயற்றல், திரிக்கல், எய்தல்.
- மு.வீ. – காப்பு, ஒப்பு, ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், அஞ்சல், உடைமை, அதன்பயனிலை.
- 3 ஆம் வேற்றுமை – ஒடு, ஓடு, ஆன், ஆல்.

தொல்காப்பியம் அதனின் இயறல், அதற்கு கிளவி, அதன் வினைப்படுதல், அதனின் ஆதல், அதனிற்கோடல், அதனொடு மயங்கல், அதனோடியைந்த ஒருவினைக்கிளவி, அதனோடியைந்த வேறுவினைக்கிளவி, அதனோடியைந்த ஒப்பல், ஒப்புரை, இன்னான் ஏது.

- வீரசோழியம், பிரயோக விவேகம் – புறக்காரணம் அகக்காரணம்.
- நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் முத்துவீரியம் – கருவி, கருத்தா, உடனிகழ்வு.
- இலக்கணக்கொத்து – முதல்துணை, ஞாபகம், காரகம், ஏது, வினை, நிமித்தம், வேற்றுமை, வினைமுதல், காலம், கருவி, கருத்தா, உடனிகழ்வு.
- 4 ஆம் வேற்றுமை – கு, பொருட்டு,

தொல்காப்பியம் அதற்கு வினை உடைமை, அதற்கு உடம்படுதல், அதற்குப்படுபொருள், அதுவாகுகிளவி, அதற்கு யாப்பு உடைமை, அதன் பொருட்டாதல், நட்பு, பகை, காதல், சிறப்பு.

- வீரசோழியம் – ஆர்வக்கோளி, கிடப்புக்கோளி, இரப்புக்கோளி.
- நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் – கொடை, அதுவாதல், பொருட்டு, நேர்ச்சி, பகை, முறை, தகவு.

  பிரயோக விவேகம் – சம்பிரதானம், அநிரா கருத்தா, பிரேரகம் அஜமந்தா.
- இலக்கணக்கொத்து – கேளாது ஏற்றல், கேட்டே ஏற்றல், ஏலாது ஏற்றல், ஈவோன் ஏற்றல், உயர்ந்தோன் ஏற்றல், இழிந்தோன் ஏற்றல், ஒப்போன் ஏற்றல், உணர்வின்று ஏற்றல், விருப்பா ஏற்றல், வெறுப்பா ஏற்றல்.

- முத்துவீரியம் – கொடை, அதுவாதல், பொருட்டு, பகை, முறை, காதல், சிறப்பு, தகுதி.
- 5 ஆம் வேற்றுமை – இன், இல், நின்று.
- தொல். வண்ணம், வடிவு, அளவு, சுவை, தன்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல், இழிதல், புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்றுவிடல்.
- வீரசோழியம் – அவதி, அசலம், சலம்.
- பிரயோக விவேகம் – அபாதனம்; அசலம்; சலம்.
- இ. கொத்து – நீக்கம், நிலைத்திணை, இயங்குதிணை, பண்பு.
- நன்., தொ.வி. – நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது
- இ.வி. – நீக்கல், ஒப்பு, எல்லை, ஏது இதனின் இற்று.
- மு.வீ. – நீக்கல், ஒப்பு, எல்லை, ஏது அச்சம், ஆக்கம், பற்றுவிடல்.
- 6 ஆம் வேற்றுமை –

அது, ஆது, அ, உடைய, கு

பொருள் தொல் – இயற்கை உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒருவழி உறுப்பு, குழு, தெரிந்து மொழிச் செய்தி, நிலை, வாழ்ச்சி.

- நன்., தொ.வி. மு.வீ – பண்பு, குணம், உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம்.
- இ.வி. – பண்பு, குணம், உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் கூட்டம், ஈற்றம், திரியின் அங்கம், பொருள், இடம், காலம், இதனது, இது.
- இ.கொ. – ஒன்றன் கூட்டம், பலவின் கூட்டம், பண்பு (குணம்)

உறுப்பு (சினை), திரிபின் ஆக்கம், ஒற்றுமை, வேற்றுமை, ஒன்றாய்த் தோன்றல், உரிமையாய்த் தோன்றல், வேறாய்த் தோன்றல், தொழில், பொருள், இடம், காலம், இருவகைநூல்.

● 7 ஆம் வேற்றுமை – தொல், கண், கால், இடை, கடை, தலை, முன், சார், வலம், இடம், மேல், கீழ், படை, பின், தேவதை, உமை, உள், அகம், புறம், அயல் – 19.

- நன், தொல் கூறும் முதல் 18 உருபுகள் + வாய், திசை, வயின், முதல், பாடு, அணை, வழி, உழி, உளி, இல் – 10, 18+10 = 28.
- வீர – உழை, உழி, இல், கண், சார், வயின் கே, பக்கல்.இ பின்னை மூன்றும் புதியன.
- வினை அடி (தாது) ஏவல் வினை
- வீர, – நட, அடு, செய், பண்ணு, நண்ணு, போ, சிந்தி, நவில், உண், இரு, கிட, விடு, கூறு, பெறு, மறு, மாறு, கொள், அழை, வாழ், கிளை, வெல், கட, நடு, தங்கு, கசி, பொசி, பூசு, மிகு, புகு, செல், இடு, முடி, ஏந்து, கொல்–33.
- நன் & இ.வி – நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு – 23

**இரா. காசிராஜன்**
தலைவர் (பணி நிறைவு),
தமிழ்த்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# இந்தியக் கல்வி முறையில் புதுமைகள்

- ப.குமரேசன் & சி. லெட்சுமி

புதுமை என்பது ஒரு ஆக்கச் செயல். தெரிந்த இடத்திற்கும் ஒரு புதிய பாதையை காணல். ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்கினை அடைய ஒரு புதிய மார்க்கத்தினைக் காணல் அல்லது குறைந்த பட்சம் பரிட்சயமான சூழலிலும் புதுமையான தொடர்புகளைக் கண்டறிதல் என்பதே அதன் பொருள்.

இயல்பான பாங்கினை மேற்கொண்டு, பாரம்பரிய நடைமுறைகளை மட்டுமே பின்பற்றி, ஆபத்துகள் அற்ற வழிமுறைகளை மேற்கொள்ளும் அடிப்படைவாத (fundamentalist attitudes) மனப்பான்மையைத் துணிவோடு ஒதுக்குதல் புதுமையை ஏற்பதற்கு அறிகுறி. நிலவி வரும் எண்ணங்களை, மாறிய சூழலுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துத் தொடர்வதே புதுமையாகும். சம்மந்தப்பட்டவர்கள் புதிய தன்மையினைக் கண்டுணரும்போது தான் ஒரு கருத்து அல்லது பொருள் புதுமையாக மலர்கிறது.

## கல்வி முறையில் புதுமையின் தேவைகள்

பெருகி வரும் அறிவு, அதை புரிந்து கொள்ளும் வழிமுறைகள் அவைகளின் பயன்பாடு ஆகியவைகளைப் பற்றித் தொடர் விழிப்புணர்வுடன் செயல்பட, புதுமைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. கணிப்பொறி பயின்றவர்கள் வேலைக்குச் சேர்ந்த பின்னும் $C^{++}$, Visual, Oracle . . . போன்ற பட்டய படிப்புகளைப் பணியிடை பயிற்சியாக பெறவேண்டியுள்ளது.

சமுதாய மாறுதல்களுக்கும், மாறி வரும் சூழ்நிலைக்கும் ஏற்ப கல்விச் செயல்களிலும், அணுகுமுறைகளிலும், உள்ளடங்கிய பாடங்களிலும், இலக்குகளிலும் உரிய மாற்றங்களை நிகழ்த்த வேண்டியிருக்கிறது.

அறிவியல் தொழில் நுட்பத் துறைகளை இன்றைய கால அபரிதமான வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் கல்வி முறையில்

மாற்றங்கள் தேவை. தொடக்கப் பள்ளியிலிருந்தே கணிப்பொறிக் கல்வியை இன்று கற்பிக்க வேண்டியுள்ளது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அதிகரித்து வரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுத்து, தரம் குறையாமல் பார்த்துக் கொள்ள . . . கற்பித்தலில் கல்வி தொழில் நுட்பவியலை பயன்படுத்துதல்.

சமுதாய வளங்களைக் கல்விக்குப் பயன்படுத்துதல். தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வணிக மையங்கள், மருத்துவமனைகள், வங்கிகள் ஆகியவை கற்பித்தல் கூடங்களாக விளங்க வகை செய்யப்பட்டிருத்தல்.

## கல்வி முறையில் புதுமைகள் என்பதன் பொருள்

(அ) கல்விச் செயலை மேம்படுத்த ஆராய்ந்து எடுக்கும் ஒரு முயற்சியே கல்விப் புதுமையாகும்.

(ஆ) கல்விக் குறிக்கோள்கள், கற்றல் – கற்பித்தல் முறைகள், பணிகள், பணித் தொடர்புகள், புதிய அமைப்புகளை ஏற்படுத்துதல், பாடத்திட்டங்களை மாற்றியமைத்தல் ஆகியவைகளில் இதுவரை காணப்படாத புதிய அணுகுமுறைகளையும், உத்திகளையும் கடைபிடித்து கல்வியை செம்மையுறச் செய்வதே கல்வி முறையில் புதுமையாகும்.

கல்வி முறையில் புதுமைகள் அனைத்தும் ஒரே கூறினுள் அடங்குவதில்லை. செயல்படுத்தும்போது ஒவ்வொரு புதுமையும், ஒன்றுக்கொன்று தொடர்பான பல்வேறு கல்விச் செயற்கூறுகளைப் பாதிக்கிறது. கற்பித்தல் முறையில் கருத்தரங்கு என்ற புதுமையைப் பயிற்று முறையாக உயர்கல்வியில் ஏற்றுக் கொண்டால் மாணவர்களை மதிப்பிடலில் இப்போதுள்ள புத்தகங்களைப் பாராமல் நினைவை மட்டுமே பயன்படுத்தி எழுதும் மூன்று மணி நேரத் தேர்வுக்கு பதில் தேவையான புத்தகங்களைப் பார்த்து ஆய்வுக் கட்டுரை எழுதும் தேர்வு என்னும் புதுமை, உடன் தோன்றும் சாத்தியம் ஏற்படுகிறது.

## கல்வி முறையில் செயற்படுத்தப்பட்ட சில புதுமைகள்

### பள்ளிக்கல்வியல் புதுமை

அ. இன்றைய கல்வி முறை குருகுலக் கல்வி முறையிலிருந்து மாறி படிப்படியாக பல்வேறு மாற்றங்கள் பெற்று அது கல்வியில் புதுமைக்கு வழிவகுக்கிறது.

அ) ஆசிரியர்களும், மாணவர்களும் வசதியான நேரத்தில் கல்வி பயில மாலைநேரப் பள்ளி / கல்லூரிகள் புதுமையான முறையை ஏற்படுத்தியுள்ளது.

ஆ) குறிப்பிட்ட கல்வி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தன்னாட்சி அதிகாரத்தின்கீழ் அவைகள் பாடத்திட்ட ஏற்பாடு, மாணவர் சேர்க்கை, கற்பித்தல் முறைகள், தேர்வு போன்ற அனைத்து கல்வி நடைமுறைகளையும் தாங்களே நிர்ணயித்துக் கொள்கின்றன.

## மாணவர்களின் செயல்களில் புதுமை

ஆசிரியர் கூறும் கருத்துக்களை மாணவர்கள் கேட்டுப் பாடம் பயிலும் 'ஒரு வழிக் கற்பித்தல்' மாறி மாணவர்களும் கற்றல் முறைகளில் பங்கேற்கும் வண்ணம் புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் மையக் கற்றல் என்பதிலிருந்து மாணவர் மையக் கற்றல் என்று தோன்றியிருப்பதே கல்வி முறையில் புதுமைதான்.

அ) பாடத்திட்டம் தயாரித்தல், ஆசிரியரை மதிப்பிடுதல் ஆகியவற்றில் மாணவர் பங்கேற்பு.

ஆ) பாடச் செயலில் மட்டுமே ஈடுபட்ட மாணவர்கள் இன்று சமுதாய வளர்ச்சிப் பணியில் (social and community service) ஈடுபடுதல்.

## ஆசிரியர் செயல்களில் புதுமை

கற்பித்தலை மட்டும் தொழிலாக கொள்ளாமல் பாடத்திட்டம் தயாரிப்பவராக (curriculum developer) மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்குபவராக (question bank), வழிகாட்டியாக (guide) அறிவுரை பகர்பவராக (counsellor) எனப் பல நிலைகளில் புதுமைகளை உருவாக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

## பாடத்திட்டத்தில் புதுமை

மொழி, கணக்கு, வரலாறு, அறிவியல் போன்ற வழக்கமான பாடங்களைப் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் இன்று சமுதாய தேவைகளுக்கேற்ப கணிப்பொறிக் கல்வி, பாலியல் கல்வி, தொழிற்கல்வி, சுற்றுப்புறச் சூழல்கல்வி, மக்கட் தொகைக் கல்வி ஆகியவைகளை பயின்று வருகின்றனர். இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் போன்ற

வழக்கமான துறைகளுக்கு பதிலாக உயிர்வேதியல் (bio-chemistry), உயிர் நுண்ணுயிரியல் (micro-biology), உணவு தயாரித்துப் பதப்படுத்துதல் (food production and management) மரபியல் (genetics) என்ற புதுமையான துறைகள் மாணவர்களை ஈர்க்கின்றன. பாடநூல்கள் வழியே கற்ற மாணவர்கள் இன்று நிரல் வழிக் கற்றல் நூல்களை (programmed texts) நாடுகின்றனர்.

## கற்பித்தல் முறையில் புதுமைகள்

வகுப்பறையில் மீத்திறன் மிகு, சராசரி, மீத்திறன் குறை மாணவர்கள் தத்தம் வேகத்திற்கேற்ப கற்கும் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அ) நிரல்வழிக் கற்றல் (programmed learning)

ஆ) தானே கண்டறிதல் (self identification)

அனைத்து ஆசிரியர்களின் ஆற்றல்களையும், திறன்களையும் பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ) அணியினர் கற்பித்தல் (team teaching)

ஆ) மாணவர்கள் குழுவாக இயங்கி கற்கும் முறை.

(உ.ம்) குழு விவாதம் (group discussion)

குழு கலந்துரையாடல் (panel discussion)

கருத்தரங்கு (seminar)

செயலரங்கு (work shop) போன்றவை.

## கல்வி மதிப்பீட்டில் புதுமை

கற்றல் நோக்கங்களை மாணவர்கள் அடைந்து விட்டார்களா என ஆசிரியர் கையாளும் பல்வேறு மதிப்பீட்டு முறைகளில் புதிய அணுகுமுறைகள்.

CPL 652280

அ) புறவய சோதனை

ஆ) வினாடி வினா

இ) தொடர் அகவய மதிப்பீடு

ஈ) கருத்தரங்கு பங்கேற்பு

உ) ஒப்படைப்புகளைத் தயாரித்தல்

ஊ) நேர்முகத் தேர்வு போன்றவை.

## கற்பித்தல் ஊடகத்தில் புதுமை

பாட நூல் மட்டுமே ஒரு காலத்தில் மாணவர் கற்றுத் தெளியக் கூடிய கருவியாக இருந்தது. இன்று பாடநூல்களின் கருத்துக்களை காட்சி கேள்வி பொருட்கள், கற்றலுக்குரிய பாடத்தொகுப்புகள் (packages) கணிப்பொறிகள், ஒலி–ஒளி பேழைகள் (audio-video cassettes), தொலைக்காட்சிகள், திரைப்படம் போன்றவற்றின் வாயிலாக கற்பித்தல் நடைபெறுகிறது.

## ஆசிரியர் பயிற்சியில் புதுமை

கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், தரமான திறன்மிகு ஆசிரியர்கள் உருவாக்கப்படல் வேண்டும். எனவே புதுமை வேட்கைக் கொண்ட சமுதாயச் சிற்பிகளான ஆசிரியர்களை உருவாக்க ஆசிரியர் பயிற்சியில் புதுமையான உத்திகள் பின்பற்றப்படுகின்றன.

அ) நுண்திறன் கற்பித்தல்.

ஆ) வகுப்பறை இடைவினைப் பகுப்பாய்வு.

## புதுமையும் மாற்றமும்

புதுமை என்பது மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். புதுமை மாற்றத்திற்கான வழிகோலேயன்றி அதுவே நம் இலக்கு அன்று. மாற்றம் தான் இலக்காக இருக்க முடியும்.

## புதுமை

மாற்றம் + மீண்டும் புதுமை + மீண்டும் முன்னேற்றம் = புதுமை என்று புதுமையும், மாற்றமும் தொடர் நிகழ்வுகளாக அமைகிறது.

## புதுமைகளின் தன்மைகள்

புதுமைகள் IDEAS என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

சமூக உளவியல் பேராசிரியரான கார்ல்ரோஜர்ஸ் (Carl Rogers) (1962) என்பவரும் ஷுமேக்கர் என்பவரும் இணைந்து புதுமையின் பண்புகளை வரிசைப்படுத்தியுள்ளனர்.

புதுமையின் ஏழு பண்புநலன்களில் ஐந்தினை தன் வயப்பட்ட குணங்களாகவும், இரண்டினை புறவயப்பட்ட குணங்களாகவும் சித்தரிக்கின்றார் ஹேவ்லாக் (1973).

## கல்வி முறையில் புதுமைக்கான கோட்பாடுகள்

அறிமுகப்படுத்தப்படும் புதுமையானது கல்வியின் குறிக்கோள்களை ஒட்டியதாக இருத்தல் வேண்டும்.

கல்விக் குறிக்கோள்களை அடைய உதவும் மாற்றாகப் புதுமைகள் திகழ வேண்டும்.

புதுமைகள் சில குறிக்கோள்களை கொண்டிருத்தல் வேண்டும். அக்குறிக்கோள்கள் அளந்தறியக் கூடியவையாக இருத்தல் வேண்டும்.

புதுமைகளை கையாள்வதற்கு ஆசிரியர்களுக்கு தேவையான அறிவு, தகுதி, கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றைக் குறிப்பிட இயலுதல் வேண்டும்.

கற்பித்தலையும், கற்றலையும் புதுமைகள் மேம்படுத்துவதாக அமைய வேண்டும்.

## மாணவர்களிடையே புதுமைப் போக்கினைப் பேணுதல்

மாணவர்களிடையே படைப்பாற்றலை வளர்த்துப் புதுமையைப் பேண டாரன்ஸ் (Torrence, 1962) என்னும் உளவியல் அறிஞர் பின்வருவனவற்றை பரிந்துரைக்கிறார்.

1. படைப்பாற்றலை உருவாக்கும் விரிசிந்தனையை மதித்தல்.

2. சூழ்நிலைத் தூண்டல்களை மாணவர்கள் துடிப்புடன் உணரச் செய்தல்.

3. படைப்பாற்றலுக்கு உதவும் வகுப்பறைச் சூழலை ஏற்படுத்துதல்.

4. சிறந்த படைப்புகளைக் கண்டு அச்சமடையாப் பண்பை உருவாக்குதல். இது நம்மால் முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையை மாற்றுதல்.

5. ஆக்கச் சிந்தனையின் அவசியத்தை உருவாக்குதல்.

6. சுய கற்றலை ஊக்குவித்தல்; நூலகம் சார்ந்த கற்பித்தலுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

7. பல்வேறு துறைகளில் அறிவைத் தேடிப் பெற ஊக்குவித்தல்.

புதுமைச் சிந்தனைகளற்ற, வகுப்பறைக் கட்டுப்பாடு இல்லா ஆசிரியர்களால் மாணவரிடையே படைப்பாற்றலை ஊக்குவித்தல் இயலாத

காரியம். ஹால்மன் (Hallman, 1967) என்பார் படைப்பாற்றலுக்கு தடையானவற்றை பின்வருமாறு கூறுகின்றார்.

1. மற்றவர்களைப் போலவே நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துதல்.

2. சர்வாதிகார மனப்பான்மையும், இறுக்கமான சூழ்நிலையும்.

3. எதிலும் முழுமையான வெற்றி பெற வேண்டும் என்ற அளவுக்கு மீறி வற்புறுத்துவது.

4. வெற்றிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.

மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் பங்கு பற்றி டெமாஸ், கோவன் ஆகியோர் கீழ்க்கண்ட நிலைகளை குறிப்பிடுகின்றார்.

1) உரமூட்டல் : தன்னுடைய கருத்துடன் முரண்படவோ, உடன்படவோ மாணவர்களுக்கு சுதந்திரமளித்தல்.

2) தூண்டுதல் : கிளர்ச்சி மிக்க புதிய அனுபவங்களை மாணவர்கள் பெறச் செய்தல்.

3) வழிகாட்டி கண்டறியச் செய்தல் : மாணவர்கள் தாங்களே தனித்தியங்கி படிக்கவும், செயல் திட்டங்கள் மூலம் புதியனவற்றைக் கண்டறியவும் ஆசிரியர் வழிகாட்டுதல்.

4) உற்சாகமூட்டுதல் : மாணவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்து, வளர்ச்சிக்கு வழிகோலும் திறனாய்வுகள் செய்தும் அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், இதர தேவைகளும் கிடைக்கச் செய்து ஆசிரியர் உற்சாகமூட்ட வேண்டும்.

முடிவுரை : இந்தியக் கல்வி முறையில் நீடித்த அளவில் மாற்றங்கள் மலர்ந்திட நம் மாணாக்கரிடம் உரிய படைப்பாற்றலையும், புதுமை சிந்தனைகளையும் வளர்ப்பது ஆசிரியர்களின் கடமையேயாகும்.

புதுமைகள் தோன்றிப் பரவச் செய்வதில் படைப்பாற்றல் மிக்கவர்களும், எதையும் திறந்த மனப்பான்மையோடு அணுகி பரிசீலிப்பவர்களும், சிந்திப்பதில் நெகிழ்வுத் தன்மை கொடுப்பவர்களும், சுதந்திரப் போக்குடன் செயல்படுபவர்களும் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

எனவே இத்தகைய இயல்புகளை நம் மாணவர்களிடம் உருவாக்கிடுதலே இந்தியக் கல்வியில் புதுமைகள் தோன்றி மலர்வதற்குரிய வழிவகையாகும்.

**நூல்கள்**


1. கி. நாகராஜன், 2000 *கல்வியில் புதுமைகள்,* இராம் பதிப்பகம், சென்னை – 93.
2. Darsha J. Jani, New Approaches Methods in English Language Teaching -
3. A.K. Paliwal, Communicative Language Teaching.



**ப. குமரேசன் & சி. லெட்சுமி**
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

# எண்ணிடைச் சொல்

- ப. குளோரி பொன்மொழி

எண்ணப்படு பொருள்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் பெயர்களை எண்ணுப் பெயர்கள் என்பர். எண்ணப்படும் சொற்களுக்கு எண்ணுதற்கு உதவியாக வரும் இடைச்சொற்களை எண்ணிடைச் சொற்கள் எனலாம். இடைச்சொற்கள் வராமல் எண்ணப்பட்டால் அது செவ்வெண். தொல்காப்பியர் சொல்லதிகார இடையியலில் எண்ணிடைச்சொற்கள் (2:287–291, 293–295) பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றார். உம், என, ஏ, எனா, என்றா, என்று, ஒடு, பெயர்ச்செவ்வெண் என்னும் எட்டும் இடைச்சொற்களாக வரும். அவ்விடைச் சொற்கள் வருமிடங்கள் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

## எண்ணிடைச் சொற்கள் வருமிடங்கள்

தொல்காப்பியர் (2:249) இடைச்சொற்கள் பெயரையும், வினையையும் சார்ந்து வருமென்று இலக்கணம் கூறுவார். சொற்களை எண்ணுவதற்கு உதவியாக வரும் எண்ணிடைச் சொற்களுக்கும் அவ்விலக்கணம் பொருந்தும். அவ்வெண்ணிடைச் சொற்கள் பெரும்பான்மை பெயரைச் சார்ந்தும் சிறுபான்மை வினையைச் சார்ந்தும் (2:293) வரும்.

'நிலனும் நீரும் தீயும் வளியும் ஆகாயமும் எனப் பூதம் ஐந்து'

– 'உம்' பெயரோடு வந்தது.

'நிலனே நீரே . . . . . . . . . . . எனப் பூதம் ஐந்து'

– 'ஏ' காரம் பெயரோடு வந்தது.

'நிலனென நீரென . . . . . . . . . . . . . எனப் பூதம் ஐந்து'

– 'என' பெயரோடு வந்தது.

'நிலனென்று நீரென்று . . . . . . . . . . . . எனப் பூதம் ஐந்து'

– 'என்று' பெயரொடு வந்தது.

'நிலனென்றா நீரென்றா . . . . . . . . . . எனப் பூதம் ஐந்து'

– 'என்றா' பெயரோடு வந்தது.

'நிலனெனா நீரெனா . . . . . . . . . . எனப் பூதம் ஐந்து'

– 'எனா' பெயரோடு வந்தது.

'நிலனொடு நீரொடு . . . . . . . . . . எனப் பூதம் ஐந்து'

– 'ஒடு' பெயரோடு வந்தது.

'நிலம் நீர் தீ வளி ஆகாயம் எனப் பூதம் ஐந்து'

– 'செவ்வெண்' பெயரொடு வந்தது.

'உண்டுந்தின்றும் பாடியும் வந்தான்'

–'உம்' வினையொடு வந்தது.

## எண்ணிடைச் சொற்கள் வரும்தன்மை

தொல்காப்பியர் கூறுகின்ற எண்ணிடைச் சொற்கள் எண்ணப்படும் பெயர்கள் எல்லாவற்றோடும் வருமென்பது அதன் பொதுத்தன்மையாகும். அதே எண்ணிடைச் சொற்கள் எண்ணப்படும் பெயர்களுடன் தொகை பெற்றும். தொகை பெற்றும் பெறாதும், இடையிட்டும், உருபு தொக்கும், எண்ணினுள் பிரிந்து ஒன்றியும் வருவது அதன் சிறப்புத் தன்மையாகும்.

## தொகை பெற்று வருவன

தொல்காப்பியர் (2:289–290) 'ஏ'காரத்தான் வரும் எண்ணினிறுதியும், 'எனா' என்னும் எண்ணினிறுதியும், 'என்றா' என்னும் எண்ணினிறுதியும், பெயர்ச் செவ்வெண்ணும் (எண்ணிடைச் சொற்கள் எதுவுமின்றிப் பெயர்ச்சொற்கள் அடுக்கிநின்று அவைகளே எண்ணுப்பொருளை உணர்த்தும். இவ்வாறு வருவது பெயர்ச்செவ்வெண்) தொகை பெற்றே வருமெனக் கூறுகின்றது.

'நிலனே நீரேயென இரண்டும்'

– 'ஏ'காரம் தொகை பெற்றது.

'நிலனெனா நீரெனா இரண்டும்'

– 'எனா' தொகை பெற்றது.

'நிலனென்றா நீரென்றா இரண்டும்'

– 'என்றா' தொகை பெற்றது.

'நிலன் நீர் இரண்டும்'

– செவ்வெண் தொகை பெற்றது.

## தொகை பெற்றும் பெறாமலும் வருவன

தொல்காப்பியம் (2:287) 'உம்'மையான் வரும் எண்ணும், 'என' என்பதான் வரும் எண்ணும் தொகை பெற்றும், பெறாமலும் வருமெனக் கூறுகின்றது.

'உயர்திணைக் குரிமையும் மஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின'

– 'உம்'மை எண் தொகை பெற்றது.

'இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி'

– 'உம்'மை எண் தொகை பெறவில்லை.

'நிலனென நீரெனத் தீயென வளியென நான்கும்'

– 'என' தொகை பெற்றது.

'உடலென உயிரென இன்றியமையா'

– 'என' தொகை பெறவில்லை.

## இடையிட்டு வருவன

தொல்காப்பியம் (2:288) 'எண்ணுக்குறித்து வரும் ஏகாரம் எண்ணப்படும் பெயர் எல்லாவற்றோடும் வருதல் மரபாயினும் இடையிட்டு வரினும் அமைக வெனக்' கூறுகின்றது. அதாவது சொற்றொறும் வராமல் இடையிட்டு வரினும் எண்ணுதற் பொருளுடையுதே.

'மலைநிலம் பூவே துலாக்கோல்என் நின்னர்'

– 'ஏ'காரம் இடையிட்டு எண்ணுப்பொருளில் வந்தது.

தொல்காப்பியர் (2:289) 'எனா', 'என்றா' என்னும் இரண்டு இடைச்சொற்களும் எண்ணப்படும் சொற்களில் வருமென்று சூத்திரஞ் செய்ய, அதற்கு விளக்கமெழுதும் சேனாவரையர் (2:289) 'எண்ணுவழிப்பட்டன எனவே அவை சொற்றொறும் வருதலேயன்றி இடையிட்டும் வருமென்பதாம்' எனக் கூறி, கீழ்க்கண்டவாறு சான்றும் காட்டுவார்.

'பின்சாரயல் புடைதேவகை யெனா'

– 'எனா' இடையிட்டு வந்தது.

'ஒப்பிற் புகழிற் பழியி னென்றா'

— 'என்றா' இடையிட்டு வந்தது.

நச்சினார்க்கினியர் (2:290) 'உம்மையும் ஏகாரமும், எனவும், என்றும், எனாவும், என்றாவும், செவ்வெண்ணுமாகிய எழுவகை எண்களுள் ஒன்று முதல் நின்று ஏகார எண்ணைத் தன்னிடத்தே அழைத்துக் கொண்டு நிற்பினும் பல எண் வந்தனவென்று குற்றமாகா அப்பலவுங் குறித்து நடக்கும் என்று கூறி கீழ்க்கண்ட சான்றுகளையும் காட்டுவார்.

'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர், உலைவில் உணர்வுடையோர்' — செவ்வெண் 'ஏ'கார எண்ணை இடையிட்டது.

'மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ'

— செவ்வெண் 'எனா' எண்ணை இடையிட்டது.

'வண்ணம் வடிவே அளவே சுவையே என்றாஅ'

— செவ்வெண் 'ஏ'கார எண்ணையும் 'என்றா' எனும் எண்ணையும் இடையிட்டது.

'யாத்த சீரே அடியாப் பெனாஅ'

— 'ஏ'காரஎண் 'செவ்வெண்'ணையும் 'எனா'வையும் இடையிட்டது.

இங்ஙனம் வேறொரு கருத்துப்போல நச்சினார்க்கினியர் விளக்கமும் எடுத்துக்காட்டுகளும் தந்தாராயினும் இவர் கருத்திற்கும் எண்ணிடைச் சொற்கள் இடையிட்டு வருமென்ற கருத்திற்கும் பெரிய வேறுபாடில்லை எனலாம்.

## எண்ணினுள் பிரிந்து ஒன்றுவன

தொல்காப்பியர் (2:294) என்று, என, ஒரு என்னும் எண்ணிடைச் சொற்கள் ஒருவழித் தோன்றினும் எண்ணுதற்கண் பிறவழியும் சென்று பொருந்துமெனக் கூறுகின்றது. இந்நூற்பாவிற்குச் சேனாவரையர் (2:294)

'வினைபகை யென்றிரண்டின் எச்சம்' — எனவும்

'கண்ணிமை நொடியென' — எனவும்

'பொருள் கருவிகாலம் வினையிடனொ டைந்தும்' — எனவும் அவை ஒருவழிநின்று,

'வினையென்று பகையென்று' – எனவும்

'கண்ணிமையென நொடியென' – எனவும்

'பொருளொடு கருவியொடு காலமோடு வினையொடு இடத்தொடு' – எனவும்

நின்றவிடத்துப் பிரிந்து பிறவழிச்சென்று ஒன்றியவாறு கண்டுகொள்க' என எடுத்துக்காட்டுகளுடன் விளக்கமும் தருகின்றார்.

## இடையிட்டு வரும் எண்ணிடைச் சொற்களுக்கும் எண்ணினும் பிரிந்து ஒன்றும் எண்ணிடைச் சொற்களுக்குமுள்ள வேறுபாடு

தொல்காப்பியம் 'ஏ'காரத்தான் வரும் எண்ணினிறுதி (2:288) இடையிட்டு வருமெனவும் என்று, என, ஒரு என்னும் மூன்றும் எண்ணினுள் பிரிந்து ஒன்றும் (2:294) எனவும் கூறுகின்றது. ஏ, என்று, என, ஒடு என்னும் இந்நான்கு இடைச்சொற்களுக்கும் சேனாவரையர் தரும் எடுத்துக்காட்டுகள் ஒரே மாதிரியான இலக்கணமுடையவை போல தோன்றுகின்றன. எனினும் ஏகாரத்தான் வரும் எண்ணினிடையே இடையிட்டு வருவதற்கும் என்று, என, ஒடு என்னும் மூன்று எண்ணிடைச் சொற்கள் இடையிட்டு வருவதற்கும் வேறுபாடு காண சேனாவரையர் முயல்கிறார் எனலாம்.

ஏனைய மூன்று பற்றி விளங்கக் கூற முயலும் சேனாவரையர் (2:294) 'ஒன்றுவழி உடைய' என்றதனான் சொற்றொறும் நிற்பதே பெரும்பான்மை என்று விளக்கமளிக்கிறார்.

எனவே ஏ, என்று, எனா, ஒரு ஆகிய நான்கு இடைச்சொற்களும் இடையிட்டு வருமாயினும் 'ஏ'யென்னும் எண்ணிடைச்சொல் இடையிட்டு வருதல் அதற்கு இயல்பு என்றும் ஏனைய மூன்றும் (என்று, என, ஒரு) இடையிட்டு வரினும் சொற்றொறும் நிற்பதே பெரும்பான்மை எனவும் இவை இடையிட்டுவரினும் சொற்றொறும் வந்ததாகவே கொள்ளப்படும் எனவும் இவற்றிடையே வேறுபாடு அறியலாம்.

## உருபு தொகவரும் எண்ணிடைச்சொல்

தொல்காப்பியம் (2:291) உம்மை எண்ணின்கண் உருபுகள் தொக்கு வருமெனக் கூறுகின்றது. அதாவது உருபுகள் வெளிப்பட்டுத் தெரிய

வேண்டியதில்லை என்பது கருத்து. அவ்வாறு தொக்கு வரும் உருபுகள் இரண்டனுருபாகிய 'ஐ'யும் ஏழனுருபாகிய 'கண்'ணுமாகும். பிற உருபுகள் வாரா. தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் (2:104) கூறும், 'உருபுதொக வருதல்' என்னும் இலக்கணம் இங்கு பொருத்தமுடையதே.

'பாட்டுங் கோட்டியும் அறியாப் பயமில்
தேக்கு மரம்போல் நீடிய வொருவன்'

– 'உம்'மை இடைச்சொல்லோடு இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கது.

'இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றி'

– 'உம்'மை இடைச்சொல்லோடு ஏழாம் வேற்றுமையுருபு தொக்கது.

## பிற செய்திகள்

எண்ணிடைச்சொற்கள் வினையொடும் வருமென்பார் தொல்காப்பியர் (2:293). இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் (2:295) 'எண்ணிடைச்சொற்கள் சிறுபான்மை வினைமுற்றொடும் வருமெனக் கூறி, சான்றும் காட்டுகின்றார்.

'யாங் கண்டபொழுது இம்மாடத்துமேல் நின்றானும்
இருந்தானும் கிடந்தானும் இவன்'

– முற்றுச்சொற்கண் எண்ணும்மை வந்து'

தொல்காப்பியர் உம், என, ஏ, எனா, என்றா, என்று, ஒடு, எனும் ஏழு இடைச்சொற்களுடன் பெயர்ச்செவ்வெண் ஆகிய எட்டும் எண்ணுப் பொருளில் வருமென்கிறார். இவற்றுள் பெயர்ச்செவ்வெண்ணை இடைச்சொற்களுள் ஒன்றாகக் கூறவில்லை. எனினும் எண்ணுப்பொருண்மை இயைபுபட்டமையான் பெயர்ச்செவ்வெண்ணும் ஈண்டு கூறப்பட்டது.

## அறியப்படுகின்ற கருத்துக்கள்

உம், என, ஏ, எனா, என்றா, என்று, ஒடு என்னும் இடைச்சொற்களும் பெயர்ச்செவ்வெண்ணும் எண்ணுப் பொருளில் வரும்.

பெயர்ச்செவ்வெண்ணை இடைச்சொற்களுள் ஒன்றாகக் கூறவில்லை. எனினும் எண்ணுப்பொருண்மை இயைபுபட்டமையான் ஈண்டு கூறியுள்ளார்.

மேற்கூறப்பட்ட எட்டும் எண்ணுப் பொருளில் வருமிடத்து பெரும்பான்மை பெயரையும், சிறுபான்மை வினையையும் சார்ந்து வரும்.

எண்ணிடைச் சொற்கள் எண்ணப்படும் சொற்றொறும் வருமென்பது அதன் பொதுத்தன்மையாகும்.

அதே எண்ணிடைச் சொற்கள் எண்ணப்படும் சொற்களில் தொகை பெற்றும், தொகை பெற்றும் பெறாதும், இடையிட்டும், உருபு தொக்கும், எண்ணினும் பிரிந்து ஒன்றியும் வருவது அதன் சிறப்புத் தன்மையாகும்.

**ப. குளோரி பொன்மொழி**
**விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை,**
**அமெரிக்கன் கல்லூரி,**
**மதுரை.**

# தினமலரில் விளம்பரங்களும் மொழிநடையும்

சி.ஜி. சங்கர்

தினமலர் நாளிதழில் வெளிவந்துள்ள விளம்பரங்களை வகைப்படுத்தி அவற்றின் மொழி நடையினை ஒலி நிலையில் விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## விளம்பரம் - விளக்கம்

உற்பத்தியாகும் பொருட்கள் பற்றிய தகவல்களை அனைத்து மக்களுக்கும் கொடுப்பது தான் விளம்பரம் ஆகும். ஒரு குறிப்பிட்ட அரசோ அல்லது உற்பத்தியாளர்களோ அல்லது விற்பனையாளர்களோ பணம் செலவிட்டுத் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள கையாளப்படும் முறைதான் விளம்பரம் ஆகும்.

நுகர்ச்சியாற்றலை மிகுதிப்படுத்தி வாங்கும் ஆர்வத்தை உண்டாக்கியும், ஊக்கியும் வாழ்க்கைத்தரத்தை மேன்மைப்படுத்த வழிகோலுவதே விளம்பரம் ஆகும்.

நவீன காலத்தில் உற்பத்திப் பொருட்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. நாட்டில் மூலை முடுக்குகளில் வசிக்கும் மக்களைத் தேடி சென்று அவர்களிடம் பொருட்களைப் பற்றிக்கூறி அவற்றின் தரத்தைக் கூறி அவர்களை வாங்கத் தூண்டுவதே விளம்பரம் ஆகும்.

## விளம்பரங்களின் வகைகள்

விளம்பரங்களை ஒன்பது வகைகளாகப் பாகுபாடு செய்ய இயலும்.

### 1. காட்சி விளம்பரம்

செய்தித்தாள்களில் இடம்பெறும் விளம்பரங்களில் அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுப்பது இந்த காட்சி விளம்பரம் ஆகும். செய்தித்தாள்களில் கால் பக்கத்திற்குக் குறையாமல் இருப்பது காட்சி விளம்பரம். சான்றாக லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப்

இந்தியா நிறுவனத்தின் படைப்புகள் காட்சி விளம்பரமாகக் கொடுக்கப்பட்டுள்ளதைக் கூறலாம்.

*எல்ஐசியின் ஜீவன் தரங்*
*ஓர் ஒப்பற்ற முழு ஆயுள் திட்டம்*

27–08–2006 பக். 5.

## 2. வரி விளம்பரம்

வரி விளம்பரம் என்பது அனைத்துச் செய்தித் தாள்களிலும் தனியாக இடம்பெறும். இவற்றில் படங்கள் இடம் பெறாது. நான்கு அல்லது ஐந்து வரிகள் கொண்டதாக இவை அமையும். இவற்றில் சிறு சிறு தகவல்கள் அதிகம் இடம்பெறும்.

*இலவச சர்வீஸ் எக்சேஞ்*
*மிக்ஸி ரூ. 1500 முதல்* 6.11.2006 பக். 13.

## 3. காது விளம்பரம்

செய்தித்தாள்களில் மட்டும் வெளியிடப்படும் ஒருவகை விளம்பரமே காது விளம்பரம் ஆகும். இவை செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் பத்திரிக்கையின் பெயருக்கு மேற்பகுதியில் இருபுறமும் வெளியிடப்படும் விளம்பரமே ஆகும். எல்லாச் செய்தித்தாள்களும் காது விளம்பரத்தினை வெளியிடுவதில்லை. தினமலர், தினசரி நாளிதழ், மாலைமுரசு ஆகிய செய்தித்தாள்கள் மட்டும் நாள்தோறும் காது விளம்பரங்களை வெளியிடுகின்றன.

*தினமலர் விளம்பரதாரர்களுக்கு*
*சலுகை* 6–11–2006, பக். 1

## அரசு விளம்பரம்

அரசு விளம்பரங்கள் உற்பத்தி நிறுவனங்களால் மட்டும் கொடுக்கப்படுவதில்லை. பணிபுரியும் நிறுவனங்களும் தங்களது அரசுத்துறை நிறுவனங்களும் தங்கள் துறையை அபிவிருத்தி செய்வதற்காககவும், மக்கள் நலனுக்காகவும் விளம்பரங்களை வெளியிடுகின்றன. இதுவே அரசு விளம்பரம் எனப்படுகின்றது. சான்றாக இரயில்வே, ஆயுள்காப்பீடு தேச உடைமையாக்கப்பட்ட வங்கிகள், சுற்றுலாத்துறை ஆகியவை கொடுத்துள்ள விளம்பரங்களைக் கூறலாம்.

*ரயில்களில் ரிசர்வேஷன் நிலவரம் 21-11-2006 இரவு 8 மணி*

22–11–2006. பக்கம். 12.

## செய்தி விளம்பரம்

செய்தி விளம்பரங்கள் சாதாரண விளம்பரங்கள் போல இருக்காது. ஆனால் அவை செய்தி போலவே இருக்கும். இவை செய்திகள் இடம்பெறும் பகுதியிலேயே வெளியிடப்பட்டிருக்கும். செய்தி இறுதியில் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் ஒரு நிறுவனத்தைப் பற்றியோ நிறுவனத்தின் பொருளைப் பற்றிய அல்லது அதன் பணியைப் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. ஆனால் இவ்வகை விளம்பரங்களை வெளியிடுவதற்குச் செய்தித்தாள்களுக்கு நிறுவனங்கள் பணம் கொடுப்பதில்லை.

*தகவல் சுரங்கம்*

*1 கோடியே 25 லட்சம் குழந்தை தொழிலாளர் நிலை என்ன?*

22.11.2006, பக்கம் 6.

## வணிக விளம்பரம்

உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை மொத்த விற்பனையாளருக்கு விற்கிறார்கள். மொத்த வியாபாரிகள் அப்பொருட்களைச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். இந்தச் சில்லறை வியாபாரிகளுக்கு அப்பொருட்களின் தரத்தைத் தெரியப்படுத்த உற்பத்தியாளரும் மொத்த வியாபாரியும் செய்யும் விளம்பரம்தான் வணிக விளம்பரம் எனப்படும்.

*மளிகை காய்கறி மார்க்கெட் நிலவரம்*

22.11.2006, பக்கம் 6.

## சில்லறை விளம்பரம்

பொதுவாக உள்ளூர்வாசிகளே சில்லறை விளம்பரம் செய்யலாம். உதாரணமாகச் சென்னையிலுள்ள ஒரு துணி மற்றும் பாத்திரக் கடையின் விளம்பரம் சென்னை நகரவாசிகளுக்கு மட்டுமே விளம்பரம் செய்யப்படும் நிலையில் அது சில்லறை விளம்பரம் எனப்படும். இதற்கான கட்டணமும் குறைவாகவே இருக்கும்.

**e** $^2$ ←——— easy english

*நாங்கள் உங்களை நிச்சயம் இங்கிலீஷ்ல பேச வைக்கிறோம்.*

6.11.2006. பக்கம் 11.

## நிறுவன விளம்பரம்

ஓட்டல்கள், மருத்துவமனைகள், நர்சிங்ஹோம்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற நிறுவனங்கள் வெளியிடும் விளம்பரங்கள் எந்த வடிவில் வெளிவந்தாலும் அவற்றை நிறுவன விளம்பரம் என்று கூறப்படும்.

*ஆசிரியைகள் தேவை*
*திருமங்கலம்* **P.K.N.** *மகளிர் மேல்நிலைப்பள்ளி*

4–6–2006, பக்கம் 7.

## பொதுச்சேவை விளம்பரம்

பொதுவாக அரசுத் துறையினர்தான் இம்மாதிரியான விளம்பரங்களைக் கையாளுகின்றனர். சான்றாகக் கண் சிகிச்சை முகாம், இலவசக் குடும்பக்கட்டுப்பாடு, எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி போன்ற விளம்பரங்கள் செய்தித்தாள்களில் இடம்பெறும் நிலையில் அது பொதுச்சேவை விளம்பரம் எனப்படும்.

*குடும்பக்கட்டுப்பாடு* 22–11–2006, பக்கம். 2.

## மொழிநடை விளக்கம்

நடை என்பது ஒவ்வொரு ஆசிரியருடைய படைப்பு முறையும், அவற்றிற்கு ஏற்றவாறு அவர்கள் சொல், பொருள், தொடர்களை அமைந்திருக்கும் முறையாகும். நடை ஒருவருடைய உணர் திறனையும் உணர்த்தும் திறனையும் உள்ளத்திறனையும் நன்கு புலப்படுத்துகிறது.

கருத்தாடலில் வலிமை சேர்ப்பது நடைதான். குறிப்பிட்டதோர் கருத்திறனை வாசகர்களைக் கவர்ந்திடும் வகையில் மொழியினைக் கையாளும் முறைமையே மொழிநடை எனப்படும்.

## விளம்பரங்களில் மொழி

விளம்பர மொழியமைப்பு தரவுகளின் அடிப்படையிலும் மொழிப் பயன்பாட்டுத் தளங்களில் அடிப்படையிலும் பொருண்மைகளின்

அடிப்படையிலும் அவை இடம்பெறும் ஊடகங்களை ஓரளவுக்கு மையப்படுத்தியும் விளக்கப்படுகிறது. அச்சு விளம்பரங்களில் பொதுவாக எழுத்து வழக்கும் தேவைக்கேற்ப பேச்சு வழக்கும் பயன்படுத்தப்படுகின்றன. மொழி நடையைப் பொறுத்தவரை சொற்பயன்பாடு, தொடர்பயன்பாடு என்று உரைக்கோவையிலும் கவிதை நடையிலும் விளம்பரங்கள் அமைகின்றன. விளம்பரங்களில் ஒலியமைப்பில் பேச்சு மொழி, எழுத்து மொழி, பாடல் போன்றவை இடம்பெறுகின்றன. எழுத்து அமைப்பு, ஒலி அமைப்பு இவற்றோடு படங்கள், குறியீடுகள் என்று காட்சிப்படுத்தும் பண்புகளை இணைத்து விளம்பரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அது மட்டுமின்றி, இன்றைய சூழலில் விளம்பரம் ஏதுமில்லாமல் எந்தவொரு விற்பனையும் கிடையாது என்ற நிலையில் நுகர்வோரின் ஆவலைத் தூண்டிடும் வகையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு ஒருவித எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

## ஒலிக்கோலம்

விளம்பரங்களில் ஒலி நிலையில் கையாளப்பெறும் உத்திகள் இங்கு விரிவாக விளக்கப்பெறுகின்றன. விளம்பரங்களில் ஒலிகள் எவ்வாறு தனித்தும் இணைந்தும் திட்டப்பாங்குகளாக அமைகின்றன என்பதையும் இதனால் வெவ்வேறு விளம்பரங்களுக்கிடையே வேறுபாடு காணப்பெறுவதையும் தெரிந்துகொள்ள முடிகின்றது. விளம்பரங்களில் ஒலி நிலையில் எதுகை, மோனை, வண்ணம், இயைபு, புதிய மெய் மயக்கம் போன்ற நடையில் உத்திகள் கையாளப்படுகின்றன. எதுகையும், மோனையும் விளம்பரங்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பண்டை இலக்கியங்கள் யாவும் வாய்மொழியாகவே வழங்கி வந்தன. அவற்றை மனதில் எளிதில் பதிய வைக்கவும் நினைவாற்றலை எளிதாக்கவும் எதுகையும், மோனையும் அக்காலத்தில் பயன்பட்டன.

### எதுகை

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றித் தொடுப்பது எதுகையாகும். விளம்பரங்களில் எதுகை பெரும்பாலும் கையாளப் பெறுகின்றது.

#### தள்ளுபடி

*தள்ளுபடி (ரத்னா ஸ்டோர் தங்க மாளிகை)*

4.11.2006, பக்கம். 7.

*இது ஃப்ரீ*
*இது இன்னும் அதிகம் 170 டிஜிட்டல் சேனல்கள்*

*ஆடி அமாவாசையை*
*முன்னிட்டு இன்று விற்பனை உண்டு.*
*ஆடி அதிரடி இன்னும் சில தினங்களே.*

*அன்றும்*
*இன்றும்*
*என்றும்*
*உங்கள் நாகப்பா மோட்டார்ஸ்* (பக். 11) 12.8.07.

எதுகை எளிதில் மக்களை கவருகின்றது. இவை விளம்பரங்களில் பெரும்பாலும் கையாளப்பெறுகின்றன.

மோனை

ஒரு சீர் அல்லது ஓர் அடியின் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை எனப்படும். இம்மோனையை விளம்பரங்களில் மிகுதியாகக் காணமுடிகிறது.

*அன்பின் கலவை*
*ஆரோக்கியத்துடன் (த்ரீரோஸஸ்)* பக். 61

*ஆன்மீகம் மணக்கும்*
*ஆனந்த ஆலயம் (சக்திவிகடன்)*
*அழகுக்கு அழகு சேர்க்கும் அற்புதம்*
*அலை அலையாய் ஆர்ப்பரிக்கும் ஆனந்தம்* பக். 62

விளம்பரங்களில் வரும் மோனை மக்களை எளிதில் கவருகின்றன. இவை வாங்க தூண்டும் எண்ணத்தை உண்டுச் செய்கின்றன.

வண்ணம்

விளம்பரங்களில் ஒலி நிலையில் காணப்படும் மற்றோர் உத்தி வண்ணமாகும். ஒரே ஒலி அல்லது அதற்குத் தகுந்தாற்போல் ஒலிகள் ஓர் அடியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளில் பயின்று வருவதே வண்ணமெனப்படும்.

*பலகோடி மக்களின் ஒருமித்த*
*மகிழ்வாய் இனிய இல்லம்* (11–6–2006) (பக். 13)

*டிவிடெண்ட் மழை*
*பொழியும் பங்குகள்*
*கலங்க வைக்கும்*
*கார்ட் கடன்*
*கரைசேர*
*ஏழு வழிகள்* 1–11–2006, பக். 7

## இயைபு

விளம்பரங்களில் இயைபு ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இயைபு ஒலி நிலையில் மற்றொரு திட்டப் பாங்காகும். தொடர்ந்து வரும் அடிகளில் ஈற்றில் உள்ள ஒலியோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு எனப்படும். இவ்வியைபு ஓசை நயத்தினை அதிகப் படுத்துவதற்காகப் பயன்படுகின்றன.

*டிப்ளமா இன் மெடிக்கல் லேப் டெக்னாலஜி*

*டிப்ளமா இன் எக்ஸ்ரே டெக்னாலஜி*

*டிப்ளமா இன் ஆப்ரேசன் தியேட்டர் டெக்னாலஜி*

இவ்வுத்தியை விளம்பரங்களில் நினைவாற்றலின் பொருட்டுப் வலியுறுத்தல் பொருண்மையின் பொருட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறலாம். விளம்பரங்களில் ஓசை நயத்தினை அதிகப்படுத்துவதற்காகவும் இயைபு பயன்படுத்தப்படுகின்றது என்றும் கருதலாம்.

*ஆடிக்குக் கொண்டான்*
*ஆடிக்குத் தந்தான்*
*ஆடிக்குச் சென்றான்*
*ஆடிக்குப் போனான்* 4.6.2006, (பக். 5)

## பிறமொழி ஒலியன்களும் புதிய மெய் மயக்கங்களும்

பிறமொழி ஒலியன்களும் புதிய மெய் மயக்கங்களும் விளம்பரங்களில் கையாளப்படுகின்றன. பிறமொழிச் சொற்களைத் தேவையை கருதி கடன் வாங்கியுள்ளமையால் தமிழுக்குப் பொருந்தாத

சில மெய் மயக்கங்கள் விளம்பரங்களில் காணப்படுகின்றன. இவை நுண்நிலை பொருள் புலப்பாட்டின் அடிப்படையில் கையாளப் பெற்றுள்ளன என்று கருதலாம்.

ப்ளேயர் – ப்ள்
பல்ப் – ல்ப்
பாங்க் – ங்க்

## துணைநூற்பட்டியல்


லேனா தமிழ்வாணன், 1985 *பலன் அடையும் வகையில் விளம்பரம் செய்வது எப்படி?* மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

பட்டாபிராமன், வி.எஸ்., 1981 *மொழிப் பயன்பாடு,* வசந்த செல்வி பதிப்பகம், 74 வெளிப்பேட்டைத் தெரு, தர்மபுரி.

பார்த்தசாரதி, ச., 1989 *தமிழ் விளம்பரங்கள் ஒரு மொழி வகை ஆய்வு,* (பி.எச்.டி. ஆய்வேடு), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

செல்வராஜ், வி.எம்., 2001 *'விளம்பரம்'* பவானி பப்ளிகேஷன், 19, அம்பால தெரு, ஸ்ரீ வைகுண்டம்.

சீனிவாசன், எம்., 1990 *விளம்பர பொருளாதாரம்,* மீனாட்சி பதிப்பகம், சதாசிவ நகர், மதுரை.

| | | |
|---|---|---|
| தங்க மணியன், வி., | 1987 | *பத்திரிகையியல்*<br>Add India # 27011<br>Stage Gayatri Puram,<br>Mysore. |
| விநாயக மூர்த்தி, அ., | 1988 | *விளம்பரக்கலை*<br>பாலமுருகன் பதிப்பகம், மதுரை. |
| விஜயராணி, இரா., | 2007 | 'விளம்பர மொழி'<br>குகன் பதிப்பகம், வடுவூர்,<br>மன்னார்க்குடி வட்டம்,<br>திருவாரூர் மாவட்டம். |
| விஜயலெட்சுமி, க.சி., | 1991 | *ஒரு நாளிதழ் உருவாகிறது*<br>சங்கப் பலகை வெளியீடு,<br>மதுரை. |
| விஜயராணி, இரா., | 2002 | *தொலைக்காட்சி விளம்பரங்கள்*<br>கண்மணி பதிப்பகம், திருச்சி. |

**சி.ஜி. சங்கர்**
ஆய்வு மாணவர்,
மொழியியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# கால அடிப்படையிலான அகராதி வகைப்பாடு

- கே. ஆர். சரளா

அகராதி எனும் சொல்லிற்குச் சொற்களை அவற்றின் முதலிலுள்ள எழுத்துக்கள் வர்ணமாலையின் கிரமப்படி அகரம் முதலாக ஒன்றன் பின்னொன்றாய்த் தொடர்ந்துவர அடுக்கிப் பொருள் விளக்கும் புத்தகம் என தமிழ்ச் சொல்லகராதி விளக்கம் தந்துள்ளது. அகராதியில் இடம்பெறும் மொழிகளின் எண்ணிக்கை. தரவுகளின் காலம் சொற்றொகையின் அளவு, பயன்பாட்டாளர் நோக்கம் போன்றவை அகராதிகளை வகைப்படுத்துவதற்குரிய காரணிகளாக விளங்குகின்றன. கால அடிப்படையிலான அகராதி வகைப்பாட்டினை எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

கால அடிப்படையில் மொழி அகராதிகள் 1. வரலாற்று அகராதி (diachronic dictionary) 2. தற்கால விளக்க அகராதி (synchronic dictionary) என இரண்டாக வகைப்படுத்தப் பெறுகின்றன.

## வரலாற்று அகராதி

வரலாற்று அகராதிகள் சொற்களின் வடிவம் அவற்றின் பொருள் ஆகியவற்றின் வளர்ச்சி வரலாற்றோடு தொடர்புடையன (L. Zgusta, 1971 : 200) எனும் சுகுஸ்தாவின் கருத்து வரலாற்று அகராதிக்குரிய விளக்கத்தினைத் தருகிறது. வரலாற்று அகராதிகள் இரு வகைகளில் உள்ளன. அவை,

1. வரலாற்றுப் பொருள்நிலை அகராதி
2. சொற்பிறப்பியல் அகராதி

என்பனவாகும்.

### 1. வரலாற்றுப் பொருள்நிலை அகராதி

வரலாற்றுப் பொருள்நிலை அகராதி என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துச் சொற்களின் வடிவத்திலும் பொருளிலும் ஏற்பட்டுள்ள

மாறுதல்கள் பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. (L. Zgusta, 1971 : 200) வரலாற்றுப் பொருள்நிலை அகராதிக்கான தரவுகள் குறிப்பிட்ட ஒரு மொழியின் தொடக்க காலத்திலிருந்து தொகுக்கப்படுகின்றன.

தமிழ் ஒருமொழி அகராதிகளில் பெருஞ்சொல்லகராதியில் தொல்காப்பியம் முதலான நூற்களிலிருந்து மேற்கோள்கள் கால வரிசைப்படி வரலாற்று நிலையில் தரப்பெற்றுள்ளன. காலம் தெரியாத நிலையில் தொகை நூல்களின் மேற்கோள்கள் சற்று முன்பின்னாக உள்ளன. எனினும் கூடிய அளவு கால வரிசை முறை பின்பற்றப் பெற்றுள்ளன என்ற செய்தி காணப்பெறுகின்றது.

தமிழ் இருமொழி அகராதிகளில் தமிழ்ப் பேரகராதியில் ஓரளவு வரலாற்று முறையில் பொருளைத் தரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எங்கே காலநிரல் வைப்புமுறை பின்பற்ற முடியுமோ அங்கே கால நிரலில் பொருள்கள் தரப்பட்டுள்ளன (தமிழ்ப்பேரகராதி, முன்னுரை, பக். v-viii) என முன்னுரையில் குறிப்பிடுவதிலிருந்து இதை அறிய முடிகின்றது.

வரலாற்று அகராதியில் சொற்களின் வடிவங்கள் எவ்வளவு முக்கியமானவையாகக் கருதப்படுகின்றனவோ அவ்வளவு முக்கியமாகச் சொற்பொருள் வளர்ச்சி முறைகளும் கருதப்படுகின்றன. வரலாற்று அகராதிகள் மொழி வரலாற்றுக் காலத்தில் பழங்காலத்தில் வழங்கிய சொற்களிலிருந்து என்னென்ன புதிய சொற்கள் உருவாயின என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

## சொற்பிறப்பியல் அகராதி

சொற்களின் தோற்றம் மற்றும் வரலாறு பற்றிக் கூறும் அகராதி சொற்பிறப்பியல் அகராதியாகும். இன்று அறியப்படுகின்ற எந்த மொழியாக இருந்தாலும் அதிலுள்ள சொற்களின் தோற்ற மூலம் அல்லது தோற்றத்தைச் சொற்பிறப்பு சுட்டுகின்றது. இது பழங்காலச் சொற்களின் வரலாற்றுடன் மிகுதியாகத் தொடர்பு கொள்வதாக அமைகின்றது. ஆனாலும் மிக அண்மைக் காலச் சொற்களின் தோற்றங்கள் கூடச் சொற்பிறப்பியல் அகராதியின் ஒரு நியாயமான கருப்பொருளாகும் என்று சுகுஸ்தா (1971 : 210) குறிப்பிடுவார்.

சொற்பிறப்பு அகராதியை 1. சொற்பிறப்பியல் அகராதி 2. ஒப்பியல் அகராதி என இரண்டாக வகைப்படுத்துவர் (L. Zqusta, 1971 : 201).

பெரிய சொற்பிறப்பியல் அகராதிகள் இயற்கையாக ஒப்பியல் அகராதிகளாக வளர்ச்சியடையத் தொடங்கின. சொற்பிறப்பு அகராதியும் ஒப்பியல் அகராதியும் வழக்கமாகச் சொற்களின் பொருள்களைவிட அவற்றின் வடிவங்களை அதிகம் குறிப்பிடுகின்றன.

தேவநேயப் பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலிகளை இரு வகையாகச் சுட்டுவார். அவை

1. வேரும் வரலாறும் காட்டும் சொற்பிறப்பியல் அகரமுதலி (etymological dictionary of genealogical basis)
2. மூலச்சொல் காட்டும் இனச்சொல் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகரமுதலி (etymological dictionary on comparative and historical basis)

என்பனவாகும்.

தமிழில் 1985 இல் வெளிவந்த தேவநேயப் பாவாணரின் அகராதி ஒரு சிறந்த சொற்பிறப்பு அகராதியாகத் திகழ்கின்றது.

1. சொற்பிறப்பியல் அகரமுதலி ஏனை அகரமுதலிகளைப் போலன்றிச் சொல்லுக்கு மூலமும் கூறும்.
2. சொற்பிறப்பியல் அகரமுதலியில் இனச்சொற்கள் தவறாது காட்டப்படும்.
3. சொற்பிறப்பியல் நெறியீடுகளைத் தழுவிச் சொற்களின் மூலம் அமைந்திருக்கும்.
4. தெளிவான உறுதிப்படாதபோது ஓரளவுக்குச் சரியெனப் பட்ட மூலம் ஒருகால் என்னும் முன்னடையோடு குறிப்பிடப்படும்.
5. தெரியாத மூலமாயின் மூலம் தெரியவில்லை எனச் சுட்டப்படும்.
6. சொல்லின் இலக்கண வகை அல்லது பொருள் விளக்கம் வேறாக அல்லது மாறாகக் கூறப்பட வேண்டிவரின் அதுவும் மரபு தழுவியதாக இருக்கும்.
7. ஒருமொழிச் சொற்பிறப்பியல் அகரமுதலியாயின் அவ்வச்சொல்லுக்கு மூலம் அச்சொல் விளக்கத்

தொடக்கத்தில் அல்லது இறுதியில் குறிக்கப்படும். இனமொழிகளுள் பன்மொழிச் சொற்பிறப்பியல் அகரமுதலியாயின் ஒவ்வொர் அடிச்சொல்லையும் தலைப்புச் சொல்லாகக் கொண்டு அச்சொல்லுக்கு இனமான இனமொழிச் சொல்லும் பொருளும் குறிக்கப்படும்.

8. சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பாளர் அம்மொழியின் சொற்பிறப்பியல் நெறிமுறை. ஒலிப்பியல், நெறியீடு, பொருட்பாகுபாட்டு மாற்றம் ஆகியவற்றைத் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

மேற்காணும் விளக்கங்கள் சொற்பிறப்பு அகராதியின் உருவாக்க நிலைக்குரிய நெறிமுறைகளைச் சுட்டுவனவாய் உள்ளன.

தமிழ் இருமொழி அகராதிகளில் முழுநிலையான சொற்பிறப்பைத் தமிழ்ப் பேரகராதியில் காணமுடியும். இவ்வகராதியில் எல்லாச் சொற்களுக்கும் சொல்மூலம் தரப்பட்டுள்ளது. எனினும் சொற்பிறப்பு வரலாறு சுட்டப் பெறவில்லை. ஆரம்பநிலை அகராதிகளான பெப்ரிஷியஸ், இராட்லர், வின்சுலோ போன்ற அகராதிகளில் சொல் மூலங்கள் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

### தற்கால விளக்க அகராதிகள்

தற்கால விளக்க அகராதிகள் பொது, சிறப்பு என இரண்டாக வகைப்படுத்தப்பெறுகின்றன. பொது வகையினுள்,

1. தகுமொழி விளக்க அகராதி (standard descriptive dictionary)
2. மீவிளக்க அகராதி (overall descriptive dictionary)

எனும் இரண்டு வகை அகராதிகள் அடங்குகின்றன. பொது அகராதி என்பது குறிப்பிட்ட ஒரு மொழியின் எல்லாச் சொற்களையும் கொண்டிருப்பது சிறப்பகராதி என்பது வரையறுக்கப்பட்ட சொற்களுக்குரியது.

### 1. தகுமொழி விளக்க அகராதி

தரமாக்கப்பட்ட விரிவான பொருளைத் தரும் தலைச் சொற்களையுடைய அகராதி தருமொழி விளக்க அகராதியாகும். பேச்சு

வழக்குகள், வட்டார வழக்குகள் என்பன இவ்வகராதியில் தலைச்சொல்லாக இடம்பெறாது. சமூகத்தின் அனைத்து மக்களாலும் புரிந்து கொள்ளக்கூடிய பொதுச் சொற்களே தலைச்சொற்களாக இடம் பெற்றிருக்கும். எல்லோராலும் வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிற சொற்களைத் தலைச்சொற்களாகக் கொண்டு அச்சொற்களின் பொருளை விவரிக்க வேண்டும்.

தருமொழி விளக்க அகராதியில் இடம்பெறும் தலைச்சொற்கள் அவ்வகராதி உருவாக்கப்படுகிற காலத்தில் வாழும் ஆசிரியர் மற்றும் அறிஞர்கள் பயன்படுத்தப்படுகின்ற சொற்களாகவே இருக்கும். ஆசிரியர்கள் எப்போதாவது பயன்படுத்தும் வட்டார மொழிச் சொற்களையோ அந்தந்தப் பகுதியில் வழங்கும் சொற்களையோ தருதல் கூடாது.

தமிழ் ஒருமொழி அகராதிகளில் தமிழ்ச் சொல்லகராதியில் வழக்குச் சொற்கள் இடம்பெற்றிருப்பினும் தருமொழி அகராதிக்குரிய பண்புகள் பல இடம்பெற்றுள்ளன. ஆகையால் இவ்வகராதியைத் தருமொழி அகராதியாகக் கொள்ளலாம்.

2. மீவிளக்க அகராதி

ஒரு மொழியிலுள்ள எல்லாவகைச் சொற்களுடன் பல்வேறு வழக்குச் சொற்களையும் அடிப்படைத் தரவுகளாகக் கொண்டு உருவாக்கப்படும் அகராதி மீவிளக்க அகராதியாகும். தனித்தனி நூல் ஆசிரியர்களால் பயன்படுத்தப்படும் சொற்களும் பழஞ்சொற்களும், வழக்கற்ற சொற்களும், வட்டார வழக்குச் சொற்களும் இவ்வகராதியில் இடம்பெறும். வழக்கற்ற சொற்கள் தலைச்சொல்லாகத் தரப்படுவதன் மூலம் நூல்களில் பயன்படுத்தப்பெறும் சொற்களை அறிந்து கொள்ள இயலும்.

மீவிளக்க அகராதி தருமொழி அகராதியிலிருந்து இருவகையில் வேறுபடுவதாக சுகுஸ்தா (1971 : 211) குறிப்பிடுவார்.

மீவிளக்க அகராதி உருவாக்கப்பட்டு வெளிவந்த காலத்தில் நாட்டில் வழங்கும் தரமாக்கப்பட்ட தேசியமொழிச் சொற்கள் உணர்த்தும் பொருளிலிருந்து மிகவும் வேறுபட்ட பொருள்களை விவரிக்கும். மேலும் கூறப்பட்டிருக்கும் தலைச்சொற்கள் எதிர்காலத்துப் பயன்பாட்டிற்கு உதவும் என்று கூற முடியாது. அவ்வகராதியில் வரும் தலைச்சொற்களின் பொருளை அவற்றைப் பயன்படுத்துவோர் அத்தலைச் சொற்கள்

இடம்பெறும் நூல்களில் அவற்றைப் புரிந்து கொள்ள இயலாத நிலையில் அவ்வகராதியின் துணைகொண்டு புரிந்து கொள்ளமுடியும்.

தமிழ் அகராதிகளில் பெரும்பான்மையானவை மீவிளக்க அகராதிகளாக விளங்குகின்றன. தமிழ் ஒருமொழி அகராதிகளில் சதுரகராதி, மானிப்பாய் அகராதி, பிற்காலத்து அகராதிகளும் இருமொழி அகராதிகளில் பெரும்பாலும் அனைத்து அகராதிகளும் மீவிளக்க அகராதி வகையினைச் சார்ந்தவையாகும்.

## சிறப்பகராதிகள்

வரையறுக்கப்பட்ட சொற்களை உள்ளடக்கிய அகராதிகள் சிறப்பகராதிகள் ஆகும். சிறப்பகராதிகளை 1. மொழி வேறுபாடு, 2. நூல் தரவு, 3. சொல் வேறுபாடு, 4. பொருளுறவு, 5. குறிப்பிட்ட பயன்பாடு, 6. சொற்சேர்க்கை நிலை, 7. அளவு என்பனவற்றின் அடிப்படையில் சுகுஸ்தா பலவாறு வகைப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

தமிழ் அகராதிகளில் பெருஞ்சொல்லகராதி, தமிழ்ப்பேரகராதி என்பன மேற்கோள்கள், பொருள்கள் தரும் நிலையில் கால வரிசை முறையைப் பின்பற்றியுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி சிறந்த சொற்பிறப்பியல் அகராதியாகத் திகழ்கிறது.

தமிழ்ச்சொல்லகராதி தருமொழி அகராதிக்குரிய பண்புகளைப் பெற்றுள்ளது.

தமிழ் இருமொழி அகராதிகளில் பெரும்பாலானவை மீவிளக்க அகராதிகளாக விளங்குகின்றன.

## துணைநின்ற நூல்கள்


Katre, S.M., 1965 *Lexicography*, Annamalainagar.

Singh, R.A., 1985 *An Introduction to Lexicography*, Mysore.

Zqusta, L., 1971 *Manual of Lexicography*, U.S.A.



**கே. ஆர். சரளா**

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,

மைசூர்

# மொழிவழி உளவியல் தாக்கம்

- து. ஜானகி

உளவியல் என்பதற்கு வாழ்வியற்களஞ்சியம் (1991 : 444) மனித நடத்தை பற்றிய அறிவியல். உடலுக்குள்ளிருந்து எழும் வேட்கைகள், கிளர்ச்சிகள், மனிதர்களின் சமூக உறவினின்றும் எழும் தூண்டல்கள் போன்ற பல வகைப்பட்ட தூண்டல்களினால் மனிதனது நடத்தை தோற்றுவிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகிறது. இது இயங்குதன்மை கொண்டது. குறிப்பிட்ட சில இலக்குகளை அடையவே நடத்தை பயன்படுத்தப்படுகின்றது எனக் கூறுகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மனித சிந்தனையைத் தூண்டிச் சில செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. இதனால் மனிதன் உளவியல் ரீதியாகப் பாதிப்படைகிறான். தணிக்கை செய்யப்படாத தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மனிதனின் மனநிலையைப் பாதிக்கும்படியான காட்சிகள், அக்காட்சிக்கு ஒத்துவராத வசனங்கள் ஒலி–ஒளிபரப்பாகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியின் காட்சியில் விபத்து ஏற்பட்டு ஒருவர் (மாமனார்) இரத்த காயத்துடன் துடித்துக் கொண்டிருக்கிறார். அந்த இடத்திற்கு காரில் வந்த பெண் (மருமகள்) அக்காட்சியைப்ப பார்த்து இரசித்துக் கொண்டிருக்கிறாள். விபத்துக்குள்ளானவரின் மனைவி (மாமியார்) அப்பெண்ணிடம்

"அவர உன் மாமாவா நினைக்க வேண்டாம்மா
மனுசனா நினைச்சு காப்பாத்தும்மா" எனக் கூறி

கதறி அழுகிறாள். ஆனால் அப்பெண் உதவவில்லை. இறுதியில் அவர் இறந்து விடுகிறார். பெண் என்பவள் மென்மையானவள், இரக்க குணம் படைத்தவள், பொறுமையின் சின்னம் என ஒரு பக்கம் கூறிக்கொண்டே மறுபக்கம் அவளை இரக்கமற்றவளாகச் சித்திரிக்கின்றனர்.

நிகழ்ச்சிகளில் வரும் கதாபாத்திரங்களாகத் தங்களை அல்லது சுற்றியிருப்பவர்களை உருவகப்படுத்திக் கொள்கின்றனர். இதனால் சில கதாபாத்திரங்கள் சிலரின் மனங்களில் நீங்கா இடம்பிடித்துவிடுகின்றன. கதாபாத்திரங்களைச் சுற்றியிருப்பவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். இதனால் இயல்பான வாழ்வில் சில சிக்கல்கள் உருவாகின்றன.

எடுத்துக்காட்டாக, “போபால் நகரில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த கணவன் – மனைவியிடையே திடீரெனச் சண்டை வந்து டி.வி.த்தொடரில் வரும் பெண் குணம் போலவே உன் குணமும் இருக்கிறது என்று கணவன் சொன்னதால் தகராறு வந்தது. தகராறு முற்றவே ஆத்திரமடைந்த கணவன் மனைவியைக் குத்திக்கொன்று விட்டு தானும் ரெயில்முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டான்” என மங்கையர் மலர் (19.9.1992) கூறுகிறது. இருவர் உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு அக்கதாபாத்திரம் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பெண்கள் துறைகள் தோறும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாய் வளர்ந்து வருகின்றனர். இச்சூழலில் பெண்களை இழிவுபடுத்தும் கதாபாத்திரங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. பெண்களே பெண்களை இழிவாகப் பேசுவதாக ஏராளமான வசனங்கள் இடம்பெறுகின்றன.

‘பெண்புத்தி பின்புத்தி’

‘பொம்பள சிரிச்சாப் போச்சு’

‘சிரிக்கிற பெண்களை நம்பாதே’

‘பொம்பளைப் பிள்ளைகளை அதிகம் படிக்க வைக்கக் கூடாது’

‘பெண்ணா இது பெண் வடிவில் வந்த பிசாசு’

‘வேலைக்கு போற பொம்பளைங்கன்னா ரொம்ப திமிரா இருப்பாங்க’

போன்ற வசனங்கள் தொடர் நாடகங்களில் அதிகமாக இடம்பெறுகின்றன. இதனால் பெண்கள் சமுதாயத்தில் மதிப்பற்றவர்களாகின்றனர்.

கணவனை இழந்த பெண்ணை ‘விதவை’ என்று கூறி இழிவுபடுத்துகின்றனர். கணவன் இறந்தவுடன் அவர்களின் வளையல்களை உடைப்பது, பொட்டை அழிப்பது, பூவை எடுப்பது போன்ற காட்சிகள் தொடர்களில் இடம்பெறுகின்றன. இக்காட்சியைப் பார்க்கும் விதவைப் பெண்களின் மனநிலை பாதிக்கப்படும். இயல்பான வாழ்வில் இத்தகைய செயல்கள் குறைந்து கொண்டிருக்கின்றன. இது சமுதாயச் சீர்திருத்தம் ஆகும். சமுதாயத்தில் இச்சடங்குகள் குறைந்திருந்தாலும் நிகழ்ச்சிகள் இதை விடாது ஒளிபரப்புகின்றன. இவை சமுதாயச் சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகும்.

'புருஷன் இல்லாத பொம்பள வளர்த்த பிள்ளைதானே எப்படி அடங்கும்.'

'தாயைப் போல பிள்ளை'

எனக் கூறி விதவைப் பெண்ணை இழிவுபடுத்துகின்றனர்.

குழந்தை இல்லாத பெண்களை மலடி எனக் கூறி வேதனைக்கு உள்ளாக்குகின்றனர். பிறரின் குழந்தைகளை தூக்கவோ, தொடவோ விடுவதில்லை. சமூகத்தில் அவர்களை உதாசீனப்படுத்தும் விதமாகவே காட்சிகள் உள்ளன. இதைக்காணும் சம்பந்தப்பட்ட நேயர்களின் மனம் வேதனைக்கு உள்ளாகும் என்பதை அறிவதில்லை.

பெண்களின் பிரசவம் என்பது மறுபிறப்பு போன்றதாகும். இப்பிரசவக் காட்சிகளை உணர்ச்சி மிகுந்ததாகக் காட்டுவதாக நினைத்து மிகைப்படுத்திக் காட்டுகின்றனர். இக்காட்சியை அடிக்கடி காணும் பெண்கள் குழந்தைப் பேற்றை நினைத்து அச்சம் கொள்கின்றனர். குழந்தையை அறுவைச்சிகிச்சை முறையில் பெறுவதையே விரும்புகின்றனர். இத்தகைய காட்சிகள் பெண்களை மட்டுமின்றி குழந்தைகளையும் உளவியல் ரீதியாகப் பாதிப்படைய வைக்கின்றன.

தொலைக்காட்சியில் தோன்றும் பிம்பங்கள் குழந்தைகளின் மனதில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன என உளவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் என்பதை குமுறும் நெஞ்சம் என்னும் இதழ் (1987 : 9) கூறுகின்றது. இம்மாற்றங்கள் நான்கு வகைகளில் ஏற்படுகின்றன. அவை,

1. பார்த்துக் கற்றுக்கொள்ளல்
2. மனநிலை மாற்றம்
3. பழக்கப்படுத்திக் கொள்ளல்
4. நியாயப்படுத்துதல்

போன்றவை ஆகும்.

அண்மைக்காலத்தில் 'சக்திமான்' தொடர் சிறுவர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சக்திமான் ஸ்டிக்கர்கள், போஸ்டர்கள் சேர்ப்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். வீடுகளில் பல இடங்களில் இவற்றை ஒட்டிப் பாதுகாத்து வருகின்றனர். இவை தவிர சக்திமான் உடையை அனைவரும் விரும்பி அணிந்தனர். இந்நிகழ்ச்சி எந்தளவு

தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இச்செயல்களினால் அறியமுடிகின்றது. தொலைக்காட்சியில் பார்க்கும் வன்முறை, கொலை போன்றவற்றைப் பார்க்கும் குழந்தைகள் அதைக் கற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

வன்முறையையும் பயங்கரத்தையும் தொடர்ந்து காணும்போது அவற்றை வாழ்வின் இயற்கை என எடுத்துக் கொள்கின்றனர். குழந்தைகளின் மனநிலை அக்காட்சிகளை இயல்பாக ஏற்றுக் கொள்கின்றன. இயல்பான இரக்க குணம் தன்னையறியாமலேயே அரக்க குணமாக மாறிவிடுகின்றது.

நிகழ்ச்சிகளில் சர்வசாதாரணமாகச் சண்டை, வெடிகுண்டு வெடித்தல், வெட்டு குத்து, துப்பாக்கிச் சூடு போன்ற காட்சிகள் இடம்பெறுவதால் அவற்றைத் தொடர்ந்து காணும் குழந்தைகள் தங்கள் விளையாட்டுக்களில் இவை போன்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். விளையாட்டு சில நேரங்களில் விபரீதமாகி விடுகிறது. எடுத்துக்காட்டாக, "குஜராத் மாநிலம் நவ்சார் நகரில் சிறுவர்கள் இராமர்–இராவணன் போல் கற்பனை செய்து கொண்டு வில் – அம்பு போர் செய்ததில் பல மாணவர்களின் கண்களில் அம்பு பாய்ந்து ஆஸ்பத்திரியில் அனுமதி" என இந்தியன் எக்ஸ்பிரஸ் (9.5.1988) கூறுகிறது.

நிகழ்ச்சிகளில் வரும் கதாபாத்திரங்கள் கடத்தல், கார் துரத்தல், குழந்தைகளைக் கடத்திப் பணம் பறித்தல், கொள்ளை அடித்தல் போன்ற செயலுக்காகப் பாராட்டுக்களைப் பெறும் பொழுது அவற்றை நல்லவிதமாக ஏற்றுத் தானும் அவற்றைப் பின்பற்ற முயல்கின்றனர். கடத்தல்காரர்கள் 'பணமா அல்லது உன் குழந்தையின் உயிரா முடிவு பண்ணிக்க' என சூள் உரைப்பர். இவ்வாறு தொலைக்காட்சி சிறுவர்களைக் கற்பனை உலகில் வாழ வழிவகுக்கின்றது. சில குழந்தைகள் ஆபாசக்காட்சிகளை இரசிக்கின்றனர். இதனால் அவர்கள் குழந்தைப் பருவம் முதலே தீய எண்ணங்களுடன் வளர்கின்றனர். இதனால் கற்பழிப்புக்கள், வன்முறைகள் அதிகமாகின்றன. இதை நெல்லை சு. முத்து (தினமணி 2003:6) "அமெரிக்காவில் தொடர்ந்து தொலைக்காட்சி பார்த்துவரும் சிறுவர்கள் மூன்று ஆண்டுகளில் ஒருவித ஆக்ரோச குணம் கொண்டவராக மாறினார்களாம். அடுத்த 15 ஆண்டுகளில் 329 பேரிடம் நடத்திய ஆய்வும் முக்கியமாக தாம் எட்டாம் வயதில் வக்கிரக்காட்சிகளைக் கண்டு இரசித்த குழந்தைகள் இருபது ஆண்டுகள்

கழித்து தம் வாலிபத்தில் வன்முறையாளர் ஆனார்களாம்'' என நரம்பியல் நிபுணர்கள் கூறுவதாகக் கூறுகிறார். எனவே நேயர்கள், தொலைக்காட்சி ஆய்வறிஞர்கள் என அனைவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு தணிக்கை அவசியம் எனக் கூறுகின்றனர். தணிக்கை இல்லையெனில் நாட்டில் தீவிரவாதங்கள் அதிகரிக்கும். இதை அறிந்து தயாரிப்பாளர்கள் தொலைக்காட்சிப் பொறுப்பாளர்கள் செயல்பட வேண்டும்.

உடனுதவியவை


| | | |
|---|---|---|
| குமுறும் நெஞ்சம், | 1987 | புதிய மரியன்னை அச்சகம், திண்டுக்கல். |
| தினமணிக்கதிர், | 20.4.2003 | ஞாயிறு தினமணி இணைப்பு, மதுரை. |
| மங்கையர் மலர், | 19.9.1992 | தினமலர் தீபாவளி மலர் இணைப்பு, மதுரை. |
| தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், | 9.5.19 | மதுரை. |
| வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 5, | 1991 | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |



து. ஜானகி
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்.

# பாரதியின் பத்திரிகை மொழி நடை

- வ. ஜெயா

பாரதி காலத்திற்கேற்ற இலக்கியங்களைப் படைத்த இலக்கியவாதி. சொல்லவேண்டிய கருத்துக்களைச் சமுதாயத்தின் நிலையறிந்து அதன் முன்னேற்றத்திற்காகப் பல வகைகளிலும் எடுத்துரைத்த ஒப்பற்ற சமுதாயக் கவிஞன். தான் சொல்ல வந்த கருத்துக்கள் மக்களுக்குச் சென்று சேரவேண்டும் என்பதில் உறுதி கொண்டிருந்த பாரதி பத்திரிகைத் துறையினைத் தேர்ந்தெடுத்தார். அவர் காலத்தில் பரவல் செய்தித் தொடர்புச் சாதனமாக விளங்கியவை பத்திரிகைகளே. இன்றுள்ளது போல திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்றவை பரவாத நிலை. ஆகவே சமுதாய முன்னேற்றத்தினை மனதில் கொண்டு அவற்றிற்கேற்ப பத்திரிகைகளை வடிவமைத்து தான் சொல்ல வந்த கருத்துக்களை எளிமையாக எடுத்துச் சொல்ல பாரதி முனைந்தார். பத்திரிகைகள் என்பன செய்திகளைத் தருவன என்றாலும் எந்தச் சூழ்நிலையில் எதற்காக யாருக்காக அவை தருகின்றனவோ அவை தாம் பத்திரிகைகளின் ஆற்றலையும், சமுதாய முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவனவாக அமையும். இக்கருத்தினை மையமாகக் கொண்டு பாரதியின் பத்திரிகை மொழிநடையினை ஆய்வதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

## பாரதியாரின் பத்திரிகைப் பணி

பாரதியார் 1904ம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு பணியாற்றிய போது தமது சொந்தக் கருத்துக்களை வெளியிட அவருக்கு அதிக வாய்ப்பு இருக்கவில்லை. அப்போது சுதேசமித்திரன் அலுவலகத்திலிருந்து சக்கரவர்த்தினி என்ற மாத இதழும் வெளிவந்து கொண்டிருந்தது.

இவ்விதழ் தொடங்குவதற்கான காரணத்தைப் பாரதியார் மிக அழகாக எடுத்துக்கூறுகிறார். செந்தமிழ் நாட்டில் மாதர் அபிவிருத்தியின் பொருட்டு பிரத்தியேகமாகப் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் எத்தனையோ இருக்கின்றன. "புதுப்புது புத்தகங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் மற்றும் திருஷ்டி மூலமாகவும் நமது நாட்டு ஸ்திரிகளுக்கு

நல்லறிவு பிறப்பித்து அவர்களின் நிலைமையை உணர்த்த வேண்டுவதே நமது நாட்டின் முதல் கடமை (1982–3–4). பெண்களின் முன்னேற்றத்திற்காக இப்பத்திரிகை தொடங்கப்படவிருக்கிறது" என்று பாரதி கூறுகிறார். கி.பி. 1906ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்தியா வார இதழ் தொடங்கப்பட்டது. ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம் ஆகியவை அதனுடைய இலட்சியங்களாகும். இவ்விதழுக்கு பாரதியே ஆசிரியரானார். அந்தக் காலத்தில் பாரதியார் தீவிர தேச பக்தராயிருந்தார். இந்தியா பத்திரிகையில் பாரதி எழுதத் தொடங்கியதிலிருந்து பாரதியின் தமிழ்நடை புதுவழியில் மாறியது. அதற்குமுன் எவரும் அவ்வழியில் பத்திரிகை நடத்தவிலலை என்று சொல்லும்படியாக வெகு சிறப்புடனும் திறமையுடனும் எழுதிவரத் தொடங்கினார். சிறுசிறு பதங்களுடன் கூடிய நவீன கம்பீரநடை என்று இப்பத்திரிக்கை பற்றி விமர்சனம் செய்கிறார் இராமாநுஜலு நாயுடு (1986:68).

> இந்தியா பத்திரிகையுடன் பால பாரதம் என்ற ஆங்கில வாரப் பத்திரிகையும் பாரதியார் வெகு திறமையுடன் நடத்தலனார். கார்ட்டூன் சித்திரம் வரைந்து முக்கியக் கருத்துக்களை விளக்குதல் அல்லது யாரையாவது கேலி செய்தல் ஆகிய முறையைத் தமிழ்ப் பத்திரிகையில் அப்பொழுதே கையாண்டுள்ளார். அரவிந்தர் கர்மயோகி என்ற பத்திரிகையினைத் தொடங்கினார். அப்பத்திரிகையினைத் தழுவி பாரதி தமிழில் கர்மயோகி என்ற பத்திரிக்கையினைத் தொடங்கினார். மேலும் விஜயா என்ற நாளிதழையும் சூர்யோதயம் என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். இப்பதிரிகையெல்லாம் ஆங்கிலேயரின் அடக்குமுறையினால் நின்று போய்விட்டன.
>
> அதன்பின் சுப்பிரமணிய சிவாவின் ஞானபானு என்ற பத்திரிகைக்கும் பரலி.சு.நெல்லையப்பர் நடத்திவந்த லோகோபகாரி என்ற பத்திரிகைக்கும் அவ்வப்போது பல கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். மீண்டும் பாரதி சுதேசமித்திரனில் 1915ஆம் ஆண்டு முதல் இறக்கும் வரை அதிலேயே பணியாற்றினார்

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பரவல் செய்தித்தொடர்பிற்காகப் பத்திரிகைகளே பயன்படுத்தப்பட்டன. ஆகவே பாரதியார் அக்கருவியினைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார். தான் சொல்ல வந்த கருத்து மக்களிடம் சென்று சேரவேண்டும் என்றால் மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் எழுதவேண்டும் என்று நன்கு அறிந்து கொண்டார். படித்தவர்கள் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடிய இலக்கிய நடையைத் தவிர்த்து அனைவரும் புரிந்துகொள்ளக் கூடிய பேச்சுவழக்கு நடையைப் பயன்படுத்தியுள்ளார். மக்களிடம் காணப்படும் அன்றாட வழக்குச் சொற்கள் அவரின் எழுத்தில் முழுமையடைந்தன. தனது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பேச்சுவழக்குச் சொற்கள் மூலம் வெளியிடலானார். இதனையே பாரதியார் “வர்த்தமானப்பத்திரிகை நாமாக உண்டாக்கிய கருவியன்று. பிறரிடமிருந்து கற்றுக்கொண்ட தந்திரம் சென்ற முப்பது வருடங்களாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் சரியாக முதிர்ச்சியடையவில்லை. தவிரவும் தமிழ்ப்பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் உதவி கிடையாது. மேலும் தமிழ்நாட்டிலோ முழுவதும் தமிழ்நடையைவிட்டு ஆங்கில நடையில் தமிழை எழுதும் வினோத பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது. முதலாவது நீ எழுதப் போகிற விஷயத்தை ஆங்கிலம் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக் காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு பிறகு எழுது; அப்போது தான் நீ எழுதுகிற எழுத்து தமிழ்நாட்டிற்கு பயன்படும். இல்லாது போனால் நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் போகிறது. சில சமயங்களில் சில பத்திரிகைகளை வாசித்துவிட்டு ஐயோ எத்தனையோ ஆச்சரியங்களும் சந்தோஷங்களும் எழுதலாமே என்று எண்ணி வருத்தப்படுவதுண்டு (1981:208) என்று விளக்குகிறார். மேலும் ‘ஜனத்தலைவர்களும் ஆங்கிலப் பண்டித சிகாமணிகளும் தமிழ்ப் பத்திரிகைகளைச் சரியானபடி கவனிப்பதில்லை. அந்தந்த ஊரில் நடக்கும் பொதுக்காரியங்களையும் அவரவர் மனதில் படும் புதுயோசனைகளையும் தெளிந்த தமிழிலே எழுதி தமிழ் பத்திரிகைகளுக்கு அனுப்புதல் வேண்டும்” (1981:203) என்று பத்திரிகை மொழி பற்றி பாரதியார் விளக்கிச் சொல்கிறார். அதோடு பத்திரிகைகளில் புதியபுதிய செய்திகள், புதியபுதிய யோசனைகள் ஆகியவற்றைத் தமிழில் எழுதி அனுப்புதல் வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறார். பத்திரிகைகளின் பணி புதியபுதிய

கருத்துக்களை உடனுக்குடன் தருவதாகும். ஆகவே சமூகத்தில் பத்திரிகைகள் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக விளங்குகின்றன. பாரதியார் புதிய செய்திகளையும் யோசனைகளையும் தாம் எடுத்துச் சொல்வதோடு மக்களிடமிருந்து வரவேற்பதும் நன்கு தெரியவருகின்றது.

## பத்திரிகையின் பண்பு

பத்திரிகையில் எழுதும் உரைநடை அமையும் விதத்தினைப் பின்வருமாறு விளக்குகிறார் பாரதி.

“பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து அதாவது ஜனங்களுக்கு சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிக பழக்கமில்லாத விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும், சந்தேகமில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும் போது வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்து பார்த்துக் கொள்ளுதல் நல்லது. உள்ளத்திலே நேர்மையும் தைரியமுமிருந்தால் கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். வசனநடை கம்பர் கவிதைக்குச் சொன்னது போலவே தெளிவு ஒளி தன்மை ஒழுக்கம் நான்கும் உடையதாக இருக்கவேண்டும் (1940:390–391) என்று உரைநடைக்கு இலக்கணம் வகுக்கிறார் பாரதி.

## கவிதை நடை

பாரதியார் வாழ்ந்த காலத்தில் மரபுக்கவிதை வடிவமே அதிகம் காணப்பட்டது. அதில் பாமரர்களுக்குப் புதியாத சொற்களும் கவிதையமைப்புமே மலிந்து கிடந்தன. ஒரு கவிஞன் சொல்லுகிற கருத்து மக்களுக்குச் சென்று சேர வேண்டுமென்றால் மக்கள் மொழியில் எழுதினால் தான் மக்களிடம் எளிதில் சென்றடையும் என்று புரிந்து கொண்டார் பாரதி. இதனை அவரது கீழ்க்காணும் கூற்று தெளிவுபடுத்துகிறது. “நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று. ருசி குறைந்தது; கரடுமுரடான கல்லும் கள்ளிமுள்ளும் போன்ற பாதை நமது கவிஞர்களுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் “கண்” என்பதை “சக்கு” என்று சொல்லத் தொடங்கினார். ரஸம் குறைந்தது. சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது. பின்னர் திறமைகள் அதிகரிக்கப்பட்டன (1978:69) என்கிறார் பாரதி. மேலும் தமிழ்ப் புலவர்கள் பற்றியும் சாடுகிறார். “தமிழ்ப் புலவர்களிடம் போனால் நிகண்டுக்குக் கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகள் எழுதிக்

கொடுப்பார்கள். சாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது (1978:101) என்றும் எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரஸ்வதி கடாட்சத்தை இழந்து விடுவான். யமகம் திரிபு முதலிய சித்திரக் கட்டுக்களை விரும்பிச் சொல்லுக்குத்தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கிறான். உலகத்தாருக்குப் பொருள் விளாங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகிறான். இலக்கியத்திற்குத் தெளிவும் உண்மையும் உயிர் எனலாம் (1978 : 8). கவிதை நடையானது எளிமையாகவும் யாவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் இருத்தல் வேண்டும் என்பதை உணர்ந்த பாரதியார் "எளிய பதங்கள் எளிய நடை எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்புபம் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்துதருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லாம் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமல் நடத்துதல் வேண்டும்" (1984 : 312) என்று பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் மொழிக்குப் புத்துயிர் தரவேண்டிய நிலையை வற்புறுத்தும் போது எடுத்துக்கூறுகிறார். செயற்கையாகவன்றி என்ன இயற்கையான முறையில் அப்படியே எடுத்துரைக்க வேண்டும் என்பது பாரதியின் கொள்கையாகும்.

## மொழிபெயர்ப்பும் பத்திரிகைகளும்

பத்திரிகையில் மொழிபெயர்த்து எழுதும்போது ஓரளவிற்கு மக்கள் புரிந்துகொள்ளும் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது பாதியாரின் கொள்கை. (எ.கா.) "சென்னையில் இங்கிலீஷ் பத்திரிகையிலிருந்து வர்த்தமானங்கள் மொழியெர்த்தெழுதும்போது அர்த்தமாகாத தமிழெழுத்தில் எழுதிப் போட்டு விடுகிறார்கள். மேலும் அவர்களெழுதும் வியாக்கியானங்கள் கூட இங்கிலீஷ் தோரணையை அனுசரித்து பிழைதமிழில் எழுதப்பட்டிருப்பதால் நம்போன்ற ஸாமானிய ஜனங்கட்குப் பொருள் விளங்குவது வெகு கஷ்டமாயிருக்கிறது" (1984 : 70) என்று குறிப்பிடுகிறார். பிறமொழியிலிருந்து தமிழ்மொழியில் மொழிபெயர்த்து எழுதும்போது மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும். இதனை "கூடியவரை பேசுவது போலவே எழுதுவது

தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி எந்த விஷயம் எழுதினாலும் சரி வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது" (1978:28) என்று விளக்குகிறார் பாரதி.

பத்திரிகையில் எழுதுவோர்கள் இலக்ணப் பிழைகள் இல்லாமல் எழுதவேண்டும் என்று பாரதி கூறுகிறார். இதனையே "இந்தியாவிலுள்ள நேசபாஷை பத்திரிக்கைகளின் நிலைமை சில அம்சங்களால் மிகவும் பரிதாபத்துக்கிடமாக இருக்கிறது. கடிதங்கள் எழுதுவோரில் பலர் இலக்கணப் பயிற்சி கூட இல்லாமல் பத்திரிக்கை எழுதத் துணிகிறார்கள். அவற்றை பத்திராதிபர்கள் சில சமயங்களில் பிழைகளைக் களையாமலே பிரசுரம் செய்துவிடுகிறார்கள். நவீன நாகரிகத்தின் முக்கிய சின்னங்களிலொன்றாகிய பத்திரிகைத் தொழிலில் நாம் மேன்மை பெற வேண்டுமென்றால் மேற்கூறப்பட்ட பிழைகளைத் தீர்த்துக் கொள்ளக் கடவோம்" (1986:454–455) என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பத்திரிகைத் தொழிலில் ஈடுபடும் ஆசிரியர்கள் காலத்திற்கேற்ப மொழிநடையிலும் மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும் என்று விளக்குகிறார் பாரதி. பாதியாரே மொழிபெயர்ப்புச் செய்யும்போது சில சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளார். அதனை "இம்மொழிபெயர்ப்பைச் சகல ஜனங்களுக்கும் மிக எளியநடையிலே அமைக்கவேண்டும் என்று சிரமப்பட்டிருக்கிறேன். என்னையறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய சில 'கற்சற்' மொழிகள் விழுந்திருக்கின்றன. செய்யுள் அமைதி நாடி அம்மொழிகளுக்கு எளிய பிரதி பதங்கள் போடாமல் இருந்துவிட்டேன். இதன் பொருட்டு படிப்போர்கள் க்ஷேமிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன்" (1984:32) என்று அரவிந்தரின் கடல் எனும் பாடலை மொழிபெயர்க்கையில் கூறுகிறார்.

பாரதி தமது கட்டுரையில் தத்துவம், சமூகம், அரசியல், கலைகள் என்ற கருப்பொருட்களை மையமாக வைத்து விளக்கி ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கருத்துக்களுக்கு ஏற்ப வெவ்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளார்.

## உத்திகளும் திறனும்

ஒரு படைப்பாளி தான் எண்ணும் கருத்துக்களைப் படிக்கும் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கையாளும் நெறிமுறையே உத்தி என்று கூறப்படுகிறது. அவ்வுத்திகளின் வாயிலாகப்

படைப்பாளியின், ஆசிரியரின் தனித்திறன், சொற்களைக் கையாளும் திறன், ஆளுமைத்திறன், சொல்லாற்றல் திறன், எடுத்துச்சொல்லும் பாங்கு ஆகியவற்றை அறிய முடிகிறது. பாரதியார் அதனை நன்கு சிந்தித்துச் செயல்படுத்தியுள்ளார் என்பதை அவரது படைப்புக்களைக் காணும் போது அறிய முடிகிறது.

## அடுக்குச் சொற்கள்

ஆசிரியர் தாம் எண்ணும் எண்ணங்களை கருத்துக்களை அழுத்தமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் எடுத்துக் கூறுவதற்கு இவ்வுத்தியினைக் கையாளுகிறார்.

"காத்திருந்து காத்திருந்து மெல்ல மெல்ல மொழி பெயர்த்துப் பார்க்கின்றார்."

"திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஒரேமெட்டுபாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்"

என்ற சான்றுகள் வாயிலாகச் சொல்ல வந்த கருத்தினைப் புரிய வைக்கிறார் பாரதி.

## விளிச்சொற்களின் பயன்பாடு

அரசியல் மேடைகளில் மக்களைப் பார்த்து விளித்துக் கூறி உரையைத் தொடங்குவது ஒரு மரபாக வழங்கிவருகிறது. மக்களின் கவனத்தைக் கவர்வதற்காகவும் சொல்லப்போகின்ற கருத்தை மக்கள் புரிந்து கொள்வதற்காகவும் இவ்வுத்தியினைக் கையாளுகிறார் பாரதி.

தமிழ்நாட்டு மாதராகிய என் அன்பிற்குரிய சகோதரிகளே, அடிசகியே, என் நாட்டுமக்களே என்பன போன்ற விளிச்சொற்களைப் பயன்படுத்துகிறார். விளக்கக் கட்டுரையாக அமையும் போது படிப்போருக்குச் சுவையிருக்காது. ஆனால் இது போன்ற விளிச்சொற்கள் இடம்பெறும்போது, கட்டுரையில் சொல்லப்படும் கருத்து இன்னும் வலிமை பெறுகிறது. யாருக்குப் போய்ச் சேர வேண்டும் என்று பாரதி நினைத்தாரோ அவர்களிடம் சென்று சேரும் உத்தியாக இதனைப் பயன்படுத்துகிறார்.

## ஒலிக்குறிப்புச் சொற்கள்

தான் பெற்ற உணர்ச்சியினைப் படிக்கின்ற வாசகர்களும் அடைய வேண்டும் என்பதற்காக ஒலிக்குறிப்புச் சொற்களைக் கையாண்டுள்ளார். இச்சொற்கள் மூலம் பாரதியே நம் கண் முன் உரைநிகழ்த்துவது போன்ற உணர்வைப் பெறமுடிகிறது. கோபம், துக்கம், கெஞ்சல், நகை, எள்ளல், வீராவேசம் போன்ற உணர்ச்சிகளை ஒலிக்குறிப்புச் சொற்கள் மூலம் வெளிப்படுத்துகிறார் பாரதி.

| | |
|---|---|
| சீச்சீ | காகாகா |
| அடடா | கீக்கீக்கீ |
| அடீ | குக்கூகுக்கூ |

## வசைச் சொற்கள்

எங்கு குற்றம், தண்டனை பற்றிய உணர்வு இருக்கிறதோ அங்கு வசைச்செயல் இயல்பாகத் தோன்றும். பாரதியார் பல இடங்களில் வசைச் சொற்களைக் கையாண்டுள்ளார்.

| | |
|---|---|
| அடமூடர்களா | பாவி மகள் |
| மூடமகனே | நீசக் குயிலே |
| என் முகத்தின் எதிர் நின்றிடாதே | மடையா |
| நன்றி கெட்ட விதுரா | கெடுக நீ |
| தின்ற உப்பினுக்கே நாசம் | போ போ போ |
| தேடுகின்ற விதுரா | |

## எதிர்நிலைச் சொற்கள்

பாரதியார் பல இடங்களில் எதிர்நிலைச் சொற்களைக் கையாண்டுள்ளார். கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதற்கு இவ்வுத்தியினைக் கையாண்டுள்ளார்.

"ஓயுதல்செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் வண்மைகள் செய்யோம்"

என்ற வரிகளில் உட்பாடு மற்றும் எதிர்மறையாகக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ

## ஒருபொருட்பன் மொழி

ஒரு குறிப்பிட்ட பொருளைத் தரக்கூடிய பல சொற்களையும் தமது படைப்புக்களில் ஆங்காங்கே படைத்துள்ளார். இது அவரது சொல்லாற்றல் திறனை வெளிப்படுத்தும் உத்தியாக அமைந்துள்ளது எனலாம்.

"ஜனங்கள் அடக்க வேண்டும், அமுக்கிவிட வேண்டும் தேய்த்து விட வேண்டும்"

"இது பெரிய தொல்லை, உபத்திரவம், தொந்தரவு, கஸ்டம், ஸங்கடம், ஹிம்சை, தலைநோவு"

## அடைச் சொற்கள்

பாத்திரத்தின் குணநலன்களைப் பிரதிபலிக்கவும் புதுப் பொருள்களைத் தருவதற்கும் அடைச்சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

அருள் அற்ற சகுனி புலநடைச் சகுனி
கள்ளச் சகுனி பொறியிழந்த சகுனி
தீய சகுனி மோச சகுனி
நன்றியறியா சகுனி சின்ன சகுனி
திருகுநெஞ்ச சகுனி

போன்ற அடைச்சொற்கள் சகுனியின் பண்புநலனை விளக்குகின்றன.

அறத்தீ அறிவுத்தீ உயிர்த்தீ
விரதத்தீ வேள்வித்தீ சினத்தீ
பகைமைத்தீ கொடுமைத்தீ

தீ என்ற சொல்லானது எவ்வெவ் சமுதாயச் சூழல்களில் எவ்வாறெல்லாம் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை இவ்வடைச்சொற்கள் மூலம் அறிய முடிகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைத் தரும் வகையில் பயன்பாட்டில் இடம்பெற்றுள்ளன.

## பேச்சுவழக்குச் சொற்கள்

பாரதிபடைப்புக்கள் அனைத்தும் மக்களை வெகுவாகக் கவர்வதற்குக் காரணமாக அமைந்தவை அவரது எளிய அன்றாட வழக்குச் சொற்களின் பயன்பாடாகும். தான் சொல்லும் கருத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவர்களது மொழியில் கூறினால் தான் புரிந்து கொள்வார்கள் என்பதைப் புரிந்து கொண்ட பாரதி, அன்றாட வழக்கிலுள்ள சொற்களைத் தனது படைப்புக்களில் பயன்படுத்தியுள்ளார். ஆகவே தான் அவரது எழுத்து படித்தவர் முதல் பாமரர் வரை யாவரையும் கவரும் வண்ணம் அமைந்திருந்தது எனலாம்.

| | | |
|---|---|---|
| அப்பன் | சோம்பேறி | பிஸ்கோத்து |
| ஆக்கினை | ஜெமிந்தார் | பூச்சாண்டி |
| கச்சேரி | தம்படி | பெண்டாட்டி |

போன்ற பெயர்களும்,

| | | |
|---|---|---|
| துஷ்டப்பயல் | நல்லதடியன் | மூன்றாங்கட்டு |
| கட்டைவண்டி | பிச்சைச்சிறுக்கி | பெரிய பீடை |

போன்ற அடைச்சொற்களையும் கையாண்டுள்ளார்.

## புதுச் சொல்லாக்கம்

மொழிகள் பலவற்றுள்ட நவீன முன்னேற்றங்களுக்கேற்பவும் சமுதாயத்தின் மொழிப்பயன்பாட்டில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களைக் கொண்டும் ஒரு குறிப்பிட்ட மொழியை மற்ற மொழிகள் மொழிப்பயன்பாட்டில் பெற்றுள்ள ஆற்றலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆக்கும் முறையே புதுமையாக்கம் என்பார் பெர்குசன் (1971). புதுமையாக்கத்தின் ஒரு பிரிவே புதுச்சொல்லாக்கம் என்பதாகும். புதுச்சொல் என்பது இதுவரை மொழியில் இடம் பெறாத வழக்கில் பயிலாத சொல். புதுசொல் என்பது காலத்தின் தேவையையும் சமுதாயத்தின் தேவையையும் கருத்தில் கொண்டு ஒரு மொழியில் ஆக்கப்படும் சொல்வகையாகும். எனவே சமுதாய அமைப்பிற்கு ஏற்ப, பாரதியும் பல சொற்களை உருவாக்கியுள்ளார்.

| | |
|---|---|
| பொதுவுடைமை | செவ்விதழ்ச்சி |
| புரட்சி | தொண்டச்சி |
| புருஷ விதவை | பச்சைத் தமிழ் |

போன்ற சொற்களையும்

நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்

அக்கினிக் குஞ்சு

போன்ற புதுச் சொற்றொடர்களையும்

தர்க்கி

கர்ஜி

போன்ற புதிய வினைச்சொற்களையும் படைத்துள்ளார்.

## கலைச்சொல்லாக்கம்

ஒரு சமுதாயத்தில் ஏற்படும் அக மற்றும் புறத் தாக்குதல்களால் அந்தச் சமுதாயம் எய்திடும் வளர்ச்சிக்கேற்ப அச்சமுதாயத்தின் மொழியிலும் மாற்றம் ஏற்பட்டு வளர்ச்சி தோன்றும் என்பது வரலாறு உணர்த்தும் உண்மை. இந்த அடிப்படையில் புதிய எண்ணங்களும் கோட்பாடுகளும் கருவிகளும் சமுதாயத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் வந்து சேருகின்றன. கலைச்சொற்கள் என்பவை குறிப்பிட்ட துறையில் காணப்படும் பல்வேறு கோட்பாடுகள். கருத்துக்கள் போன்றவற்றை வெளிப்படுத்தப்பயன்படும் சொற்களேயாகும். அதாவது அச்சொற்கள் வெளிப்படுத்துகின்ற பொருள் மிகத் துல்லியமாகவும் ஒரு வரையறைக்குட்பட்டும் அமைந்திருக்கும். கலைச்சொற்கள் பல முறைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன. பாரதி தம் படைப்புகளில் கீழ்க்காணும் மூன்று முறைகளைப் பின்பற்றியுள்ளார்.

1. மொழி பெயர்ப்பு
2. மொழியாக்கம்
3. ஒலிபெயர்ப்பு

## மொழிபெயர்ப்பு

பிற மொழியிலுள்ள கலைச்சொற்களுக்கு இணையான சொற்களை மொழிபெயர்த்துத் தருதல் மொழிபெயர்ப்பாகும்.

| | |
|---|---|
| Beer | சுதேசிச் சாராயம் |
| District | ஜில்லா |
| Election | பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் |
| Fine Arts | மதுரக் கலைகள் |

போன்றவை.

## மொழியாக்கம்

மொழியாக்கக் கலைச்சொற்கள் யாவும் கடன் வாங்கப்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டவை.

| | |
|---|---|
| அச்சுக் கூடம் | பிரதம மந்திரி |
| ஆயுதப் பயிற்சி | சுதேசிய நிறுவனம் |
| ஐக்கிய மாகாண குடியரசு | தொழிற் பாடசாலை |

போன்ற மொழியாக்கச் சொற்களையும் பாரதி தமது பத்திரிகை மொழிநடையில் கையாண்டுள்ளார்.

## ஒலி பெயர்ப்பு

பிற மொழியிலுள்ள கலைச் சொற்களை அப்படியே குறிக்கோள் மொழியியல் மாற்றியமைக்கும் முறைக்கு ஒலி பெயர்ப்பு என்று பெயர்.

| | |
|---|---|
| ஆக்டிங் ஜட்ஜ் | பார்லிமெண்ட் |
| இன்சால்மெண்ட் | பிரஸிடென்ஸி |
| கவர்ண்மெண்ட் | பிராசிகியூட் |
| காலேஜ் பிரின்ஸ்பால் | பென்ஷன் |

போன்றவை.

## உரையாடல் உத்தி

தத்துவங்களைக் கூறுவதற்கு உரையாடல் ஓர் உத்தியாகப் பயன்படுகிறது. இதனைப் படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கும் சிந்திப்பதற்கும் துணைபுரிகின்ற வகையில் அமைந்துள்ளது.

சேஷயங்கார் : இந்தத் தேசத்து ஜாதிக்கட்டு அநியாயம் என்று உனக்குத் தோன்றவில்லையா? தெருவுக்குள் உங்களவர் வரக்கூடாதென்று மற்ற ஜாதிக்காரர் ஏற்பாடு செய்திருப்பது பற்றி உனக்கு வருத்தமுண்டாகவில்லையா? உன் மனம் நினைந்து நினைந்துக் கொதிக்கவில்லையா என்று கேட்டார்.

கிழச்சாம்பான் : இல்லை சாமி, என் மனம் அதிலே கொதிப்படையவில்லை. மனிதருடைய இஷ்டப்படி இந்த உலகம் நடப்பதாக மூடர் நினைக்கிறார்கள்.

நீங்கள் சொல்லிய அநியாயம் என் கண்ணுக்குத் தெரியத்தான் செய்கிறது. அதிலே வருத்தமில்லை. இக்கருத்தினை விளக்கக் கட்டுரையாகக் கொடுத்திருந்தால் இதில் இழையோடும் உணர்ச்சியினைக் காணமுடியாது. சொற்கள் அப்படியே படிப்பவரின் மனத்தினை ஈர்க்கக் கூடியதாக அமைந்துள்ளதை இதன்மூலம் உணர முடிகிறது.

## புராணக்கதை - கூறி விளக்கம் தருதல்

ஒரு கருத்தைப் பற்றிக் கூறும் போது அதற்குத் தொடர்புடைய வரலாற்றினைக் கதை மூலமாகவோ மேற்கோள் மூலமாகவோ விளக்கும் பொழுது அக்கருத்து மேலும் வலிமை பெறுகிறது எனலாம். மகாமகம் பற்றிக் கூறும் பொழுது புனித குளங்கள் எவ்வாறு தோன்றின, எதனால் அதற்கு இத்தகைய புகழ் கிடைத்தது என்பதற்குப் புராணக் கதையினைக் கூறி விளக்கம் தருகிறார் பாரதி.

முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று கடவுளே உலகத்தில் உள்ள பாவிகள் எல்லோரும் எங்களிடம் மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களிடம் கரைத்துவிட்டுப் புண்ணியாத்மாக்களாகிச் செல்கின்றனர். நாங்கள் விமோசனம் தர அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர். அவர்களிடம் அருள் பாவித்து எம் பெருமான் புண்ணிய தீர்த்தங்களே பாவங்களாலே தீண்டப்படாத அமிர்த வாவிகள் இரண்டு நான் கும்பகோணத்தில் சமைத்திருக்கிறேன். அவற்றில் சென்று ஸ்நானம் புரிந்தால் உங்களுடைய பாவங்கள் விலகிவிடும் எனக் கட்டளைபுரிந்தார் (1982:27–28).

## போலச் செய்தல்

பல உத்திகளைக் கையாண்டுள்ளது போலவே பாரதியார் போலச் செய்தல் (imitation) உத்தியினைக் கையாண்டுள்ளார்.

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக் கேட்டதாய்"

என்ற வள்ளுவரின் குறளைப் போல்,

> "மாயும் பொழுதிற் பெரிதழுங் குந்தன்
> மகனைக் கீழோன் எனக் கேட்டதாய்"

என்ற புதியதாகப் படைத்துள்ளார் பாரதி.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"

என்ற பழமொழிக்கேற்ப,

கூடி வினை செய்குவோர்
கோடி வினை செய்வார்

என்ற புதுப் பழமொழியினை உருவாக்கியுள்ளார்.

## முடிவுரை

அன்னியர் ஆட்சியால் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியினை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் பாரதி தனது நடையில் மாற்றத்தினைக் கொணர்ந்தார். புலவர்களும் படித்தவர்களும் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய இலக்கிய நடையினைக் கைவிட்டு படிக்காத பாமரர்களிடமும் தாம் சொல்கின்ற கருத்துக்கள் சென்று சேர வேண்டும் என்று விரும்பியவன் பாரதி.

ஆகவே மக்களுக்குப் புரிந்த மக்கள் மொழியிலே தமது கருத்தினைத் தந்துள்ளார். அரசியல் செய்திகளை எடுத்துக்கூறும் போது மக்களிடம் விழிப்புணர்வையும் நாட்டு ஒற்றுமையினையும் ஊட்டுகிறார். சமூகச் செய்திகளை விவரிக்கும் பொழுது நேரே நின்று கட்டளையிடுவது போலவும், நகைச்சுவையும் எள்ளலுமாகத் தந்து மக்களைச் சிந்திக்கத் தூண்டுகிறார். தத்துவக் கருத்துக்களைக் கூறும் போது எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய சொற்களைக் கையாண்டு புலப்படுத்துகிறர். இவ்வாறு தாம் கூறுகின்ற கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கின்ற வகையில் பல உத்திகளைக் கையாண்டு அவரது மொழியாற்றல் வெளிப்பட்டு நிற்பதை உணர முடிகிறது.

## துணைநூற்பட்டியல்


பாரதியார், 1940 *பாரதிநூல்கள் (வசனங்கள்)* பாரதி பிரசுராலயம் : சென்னை

பாரதியார், 1981 *பாரதியின் கட்டுரைகள்* வானதி பதிப்பகம், சென்னை

பாரதியார், 1984 *பாரதியார் கவிதைகள்* பூம்புகார் பிரசுரம், சென்னை

விசுவநாதன், சீனி, 1978 *மகாகவி பாரதியின் தமிழருக்கு*
ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்,
சென்னை

சுப்பிரமணியம், ஸி.எஸ். 1986 *பாரதி தரிசனம் - 1*
சென்னை

தூரன், பெ., 1980 *பாரதி தமிழ்*
வானதி பதிப்பம், சென்னை

மணி, டி.வி.எஸ்., 1982 *ஊருக்கு நல்லது*
ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பம், சென்னை

ஜெயா, வ., 1987 *பாரதி தமிழ்*
மணிவாசகர் பதிப்பகம் : சிதம்பரம்

ஜெயா, வ., 1988 *பாரதியின் நடையியல் சிந்தனைகள்*
ஆய்வுக்கோவை – 20
அனைத்திந்திய தமிழாசிரியர் மன்றம்:
தஞ்சாவூர்

ஜெயா, வ., 1988 *பாரதியின் பத்திரிகைப் பணிகள் இலக்கிய ஆய்வுக் கோவை*
அனைத்திந்திய தமிழ் இலக்கியக்
கழகம் : தஞ்சாவூர்

ஜெயா, வ., 1988 *பாரதியின் பத்திரிகைப் பணிகள்*
இலக்கிய ஆய்வுக் கோவை
அனைத்திந்திய தமிழ் இலக்கியக்
கழகம் : தஞ்சாவூர்

ஜெயா, வ., 1989 *பாரதி மொழிநடை*
ஜெயா பதிப்பகம், மதுரை.



வ. ஜெயா
பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

# இந்திய மொழிக்கல்விக் கொள்கை - ஒரு பார்வை

- எம். சிவசண்முகம்

இந்தியா பன்மொழிப் பயின்றுவரும் நாடாக இருப்பதால், மொழிக்கல்விக் கொள்கைகளை வகுப்பதிலும், வகுத்த கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதிலும் மிகுந்த சிக்கல் ஏற்படுவது இயல்பே. 1961ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நம் நாட்டில் 1652 மொழிகள் தாய்மொழிகளாக பேசப்படுகின்றன எனத் தெரிகின்றது. அதில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் மொழிகளாக 197 மொழிகள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. இவை நான்கு மொழிக் குடும்பங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | இந்தோ – ஆரியன் | 98 |
| 2. | ஆஸ்ட்ரோ – ஆசியாட்டிக் | 21 |
| 3. | திராவிடம் | 26 |
| 4. | திபெத்தோ – பர்மன் | 52 |

ஆனால், 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் பேசும் மொழிகள் 221 எனவும், 1981ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் இவை 104 மொழிகள் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கும்பொழுது மிகுந்த குழப்பம் மேலோங்குவதைக் காணலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற எட்டாவது அட்டவணையில் 15 மொழிகள் இடம் பெற்றன. இவற்றுள் 4 திராவிட மொழிகளும் 11 இந்தோ ஆரிய மொழிகளும் (சமஸ்கிருதம் உட்பட) அடங்கும். 1992ஆம் ஆண்டு 3 மொழிகளும் 2002–2006 வரையிலான காலகட்டங்களில் 4 மொழிகளும் அங்கீகரிக்கப்பட்டன. இதன்படி தற்பொழுது 22 மொழிகள் இந்த அட்டவணையில் இடம் பெற்றுள்ளன.

அவை பின்வருமாறு :

| | |
|---|---|
| அஸ்ஸாமி | மணிப்பூரி |
| பங்களா | மராத்தி |

| | |
|---|---|
| போடோ | நேபாளி |
| தோக்ரி | ஒரியா |
| குஜராத்தி | பஞ்சாபி |
| இந்தி | தமிழ் |
| காஷ்மீரி | தெலுங்கு |
| கன்னடம் | சந்தாளி |
| கொங்கணி | சிந்தி |
| மைதிலி | உருது |
| மலையாளம் | சமஸ்கிருதம் |

இவ்வாறான பன்மொழிச் சூழல் அமைந்து கிடக்கும் நம் நாட்டில் மொழிக்கல்விக் கொள்கை பற்றிய நிலைப்பாட்டினை இருவேறுகால அளவீட்டில் (சுதந்திரத்திற்கு முன், பின் எனக்) காணலாம்.

1835ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2ஆம் நாள் வெளியிடப்பட்ட தாமஸ்பேபிங்டன் மெக்காலேயின் அறிக்கை, ஆங்கிலத்தை பயன்பாட்டு மொழியாக நம் இந்தியக் கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தியது. அன்றிலிருந்து இன்றுவரை ஆங்கிலம் நம் கல்வித் துறையில் மிக முக்கிய மொழியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஆங்கிலேயர்கள் வகுத்த கல்விக் கொள்கை இந்தியர்கள் அனைவரும் கல்வியறிவு பெற வேண்டும் என்ற பரந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைந்தது அன்று என்ற கருத்தை, மேலே குறிப்பிடப்பட்ட மெக்காலே அறிக்கையின் மூலம் தெரிந்து கொள்ளலாம். அவ்வறிக்கையின் விபரம் பின்வருமாறு.

*"நாம் இத்தருணத்தில் செய்ய வேண்டியது யாதெனின் நமது அரசு செம்மையாகச் செயல்பட நமக்கும் நாம் ஆளுகின்ற கோடானகோடி இந்திய மக்களுக்கும் இடையே தகவல் தொடர்புக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற மொழிப் பிரச்சனையைத் தீர்க்கும் முகமாக நாம் பேசுகின்ற ஆங்கிலத்தை மக்களுக்கும், மக்கள் பேசுகின்ற வட்டார மொழிகளை நமக்கும் மொழிப்பெயர்த்துக் கூற ஆங்கில அறிவு கொண்ட வேலையாட்கள் தேவை. அவர்களுடைய இரத்தத்திலும், நிறத்திலும் இந்தியர்களாக இருக்கட்டும், ஆனால் குணத்திலும், கருத்திலும், நெறிமுறையிலும், அறிவாற்றலிலும் ஆங்கிலேயர்களாக மாறி இருக்க வேண்டும்.*

*அப்படிப்பட்ட ஒரு வகுப்பினரை நாம் உருவாக்க முனைப்பாகச் செயல்பட வேண்டும்.”*

இதன்படி ஆங்கிலம் தெரிந்த வேலையாட்களை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அப்போதைய மொழிக் கல்விக் கொள்கை அமைக்கப்பட்டு ஆங்கிலம் வேரூன்றிப் பரவ வழிவகைச் செய்யப்பட்டது.

இக்காலக் கட்டத்தில் கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து இந்திய ஆட்சிப் பொறுப்பை 1857 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசியார் தனது நேரடி ஆட்சியாக மாற்றிக் கொண்டார். அதன்பின் இந்திய மொழிக்கல்விக் கொள்கையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அதற்கு அப்போது நடைபெற்ற பல்வேறு மொழிப் போராட்டங்கள் அடிப்படைக் காரணங்களாயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மொழிக் கல்வி கொள்கையையொட்டி மூன்று வகையான நிலைப்பாடுகள் தோன்றின. 1. வடநாட்டு மொழி ஆர்வலர்கள் பயிற்று மொழியாக சமஸ்கிருதமும் பெர்சியனும் இருக்க வேண்டும் என்று போராடினர். 2. ஆங்கில மொழி ஆதரவாளர்கள் ஆங்கிலம் மட்டும்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மேலை நாட்டு அறிவியல் நுணுக்கங்களை நாம் அறிய முடியும் என்று வாதிட்டனர். 3. வட்டார மொழி ஆர்வலர்கள் அந்தந்த மாநிலம் அல்லது வட்டாரங்களில் பேசப்படும் பெரும்பான்மையினர் மொழியே பயிற்றுமொழியாக திகழ வேண்டும் என குரலெழுப்பினர்.

1947 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்ற பின்பு வட்டார மொழிகளே பயிற்று மொழிகளாக, உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புவரை அறிமுகப்படுத்தப்பட்டன. ஆங்கிலம் ஒரு பாடமாக, நான்காம் வகுப்பு அல்லது ஐந்தாம் வகுப்பு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அனைத்து பாடங்களும் ஆங்கிலத்தில்தான் பயிற்றுவிக்கப்பட்டன.

1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. பெரும்பான்மையான மாநிலங்கள் தத்தம் மாநில மொழிகளை ஆட்சி மொழிகளாக அங்கீகாரம் செய்தன. ஆனால், வடகிழக்கு மாநிலங்களில் காணப்பட்ட உட்போராட்டங்களின் விளைவாக, எந்த ஒரு மொழியும் ஆட்சி மொழியாக மாற முடியாமல் போயிற்று. அம்மாநிலங்களில் இன்றும்

ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. 1965ஆம் ஆண்டு இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாகவும் அங்கீகாரம் பெற்றன.

1949 இல் வெளியிடப்பட்ட பல்கலைக்கழக கல்விக்குழு அறிக்கையும் மற்றும் 1964, 1965, 1966களில் வெளியிடப்பட்ட மத்திய கல்விக்குழு அறிக்கைகளிலும் தாய்மொழியே உயர்கல்வி வரை பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தின. இவற்றின் அடிப்படையில் தான் 1963–65ஆம் ஆண்டுகளில் மும்மொழிக் கொள்கை, நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பை படித்து முடித்த ஒரு மாணவன் மூன்று மொழிகளில் கருத்துப் பரிமாற்றத்திறன் பெற்றவனாக இருக்க வேண்டும் என்பதுதான் இம்மும்மொழிக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். இதன்படி மாநில மொழியுடன் இந்தியையும் ஆங்கிலத்தையும் மாணவர்கள் கற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வகையில் மாநில மொழியை ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் இந்தி மொழியை ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும், ஆங்கில மொழியை எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் அல்லது அந்தந்த மாநில அரசின் விருப்பப்படி எந்தந்த வகுப்பு முதல் பயிற்றுவிக்கப்பட வேண்டுமோ அப்படி அம்மொழிகளைப் பயிற்றுவிக்கலாம் என்று மும்மொழிக் கொள்கை அறிவுறுத்துகிறது.

இந்தி பேசும் மாநிலங்களில் மாநில ஆட்சி மொழியாகவும் மத்திய ஆட்சி மொழியாகவும் இந்தி மொழியே இருப்பதால் ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை ஆங்கிலமும், எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை மற்றுமொரு நவீன இந்திய மொழியும் குறிப்பாக ஏதாவதொரு தென்னிந்திய மொழியும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று இம்மும்மொழிக் கொள்கை வலியுறுத்தியது. ஆனால், இத்தகைய மொழிக் கல்வித் திட்டம் பரவலாக பின்பற்றப்படாமல் தோல்வி அடைந்தது. தென்னிந்திய மொழிகளை தேர்ந்தெடுக்காமல் சமஸ்கிருதத்தை இரண்டாம் மொழியாகவும் ஆங்கிலத்தை மூன்றாம் மொழியாகவும் வடமாநிலங்கள் பயிற்றுவித்தன. இந்நிலையில் தமிழகம் மாபெரும் இந்தி

எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டது. இதனால், தமிழகத்தில் தமிழும் ஆங்கிலமும் கொண்ட இருமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப் பட்டது. தமிழ் ஆட்சி மொழியாக 1957ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நம்நாட்டில் 52 சதவீதம் மக்கள் படிப்பறிவு பெற்றவர்களாக உள்ளனர். இதில் 4 சதவீத மக்களே ஆங்கில அறிவு பெற்றவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் ஆங்கிலம் தான் இந்தியாவின் இணைப்பு மொழியாக செயல்பட்டு வருகிறது. நமக்குள் இருக்கும் மொழிப் பகைமையின் காரணமாக எந்தவொரு இந்திய மொழியும் ஆங்கிலத்திற்கு நிகரான ஒரு இடத்தைப் பெற முடியாமல் போயிற்று.

**உடனுதவியவை**

| | | |
|---|---|---|
| 1835 | – | தாமஸ் பேபிஸ்டன் மெக்காலே அறிக்கை |
| 1950 | – | இந்திய அரசமைப்புச் சட்டம் |
| 1952 | – | அரசமைப்புச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற மொழிகளுக்கான எட்டாவது அட்டவணை |
| 1956 | – | மொழி வாரி மாநிலங்கள் |
| 1957 | – | தமிழ் தமிழ்நாட்டின் ஆட்சி மொழி |
| 1965 | – | இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி. ஆங்கிலம் துணை ஆட்சி மொழி |
| 1963–65 | – | படிப்படியாக மும்மொழிக் கொள்கை அறிமுகம் |
| 1965 | – | தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு தீவிரம் |
| 1967 | – | அறிஞர் அண்ணா முதல்வர் |
| 1967 | – | மும்மொழிக் கொள்கையில் சட்டத்திருத்தம் இந்தியை ஏற்பதும் மறுப்பதும் மாநில அரசின் விருப்பமானது |
| 1968 | – | இருமொழிக் கொள்கை தமிழகத்தில் அறிமுகம் |
| 1978 | – | பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் தமிழகத்தில் அறிமுகம். |

**துணைநூல்கள்**


கல்வி பண்பாடு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம், 1999 *அரசு கரும மொழியாகத் தமிழ்,* இலங்கைத் தமிழ் நிலையம், திரிகோணமலை, இலங்கை.

Bernard Spolsky (Edr.), 1999 *Concise Encylopedia of Educational Linguistics,* Elsevier Science Ltd., Oxford, UK.



எம். சிவசண்முகம்
இணைப்பேராசிரியர்,
மொழியியல் உயராய்வு மையம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

# இலக்கணம் கற்பித்தலில் சில மாற்றங்கள்

- த. சுதந்திரமணி

மொழியின் தோற்றம் மனித சமுதாயத்தின் பல்வேறு தோற்ற நிலைகளோடு பிரிக்க முடியா வண்ணம் இணைந்துள்ளது. மொழியின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றிக் கற்பனைக் கண்கொண்டு உணர்ச்சி மேலிட்ட நிலையில் ஆராய்ந்த மனிதன் மொழியின் தோற்றத்திற்குப் புராணங்கள் பலவற்றை அமைத்துக் கூறத் தொடங்கினான். இவைகள் மொழி ஆய்விற்குச் சிறிதும் துணை செய்யாது. எனினும் கதைகள் படைப்பதோடு மட்டும் நின்று விடாமல் மொழியைப் படைத்த மனிதன் தன் சீரிய முயற்சியின் பயனாக அம்மொழியினைக் கூறுபடுத்தி ஆராய்வதிலும் விளக்கி உரைப்பதிலும் வேட்கை கொண்டதால் ஒவ்வொரு மொழியிலும் எண்ணற்ற இலக்கணக் கருவூலங்கள் தோன்றின. இலக்கண அறிஞர்களின் இம்முயற்சிகள் போற்றத்தக்கன எனினும், அவர்கள் வகுத்துச் சென்ற விதிமுறைகளும் விளக்கங்களும் அவர்கள் காலத்திலிருந்த மொழியின் விளக்கங்களாகவும் விதிமுறைகளாகவும் அமைந்தனவேயன்றி நாள்தோறும் வளர்ந்தும் குறைந்தும் பல சொற்களை இழந்தும் புதுக்கியும் புதுச்சொற்களை ஏற்றும் பழஞ்சொற்களுக்குப் புதுப் பொருட்களைக் கொடுத்தும் கால வெள்ளத்தை எதிர்த்து நின்று வாழும் உயிரோட்டமுள்ள ஒரு வாழும் மொழியின் முழு இயல்பினையும் விளக்கப் பயன்படாது என்பது உண்மை. மேலும் அவர்கள் வகுத்த விதிமுறைகள் ஒரு இலட்சிய மொழியின் விதிமுறைகள் ஆகுமேயன்றி மனித சமுதாயத்தோடு இணைந்து வளர்ந்து வரும் உண்மை மொழியின் விதிமுறைகள் ஆகா. எனவே இலட்சிய நோக்கோடு மொழியை அணுகிய பெரும்பாலான இலக்கண அறிஞர்கள் பேச்சுமொழி பற்றியோ, வாழ்வில் மொழியை விரும்பிய வண்ணம் பயன்படுத்தும் மனித சமுதாயத்தின் படைப்பாற்றலைப் பற்றியோ அதிகமாக எண்ணிப் பார்த்து ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. மொழியை அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆயும் மொழி நூல் அறிஞர்கள் இக்குறைகளை நிறைவு செய்யும் வகையில் புதுமையான ஆய்வு முறைகளை மேற்கொள்கின்றனர்.

## மொழி - விளக்கம்

மொழியின் புறவடிவம் செயல்முறை ஆகிய இரண்டையும் உள்ளத்தில் கொண்டு மொழியை விளக்கிய அறிஞர்கள் பொருளைக் குறிக்க மரபாக ஏற்பட்ட குறியீடுகளின் ஒழுங்குபட்ட அமைப்பே மொழி என்றனர் (". . . system of meaningful arbitary local symbols").

வேறு சிலர் "ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக் குழுவினர் புரிந்து கொள்ளும் வரையறுக்கப்பட்ட ஒலிகளின் இணைப்பே மொழி என்றனர்" (systematised combinations of sounds which have meaning for all persons in a given cultural community"). இம்மொழிகள் காலத்தால் மாற்றமடைவது இயல்பு. தமிழ் மொழியும் காலத்திற்கேற்ப பல மாறுதல்களைப் பெற்று வந்துள்ளது.

எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியர் சார்பெழுத்துக்கள் மூன்று எனச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் நன்னூலார் சார்பெழுத்துக்கள் பத்துவகை என வரையறுக்கிறார். இதிலிருந்து தொல்காப்பியர் காலத் தமிழிலிருந்து நன்னூலார் காலத்தமிழ் வளர்ந்துள்ளதை நன்கு அறியலாம். மொழி வளர்ச்சி போலவே கால மாற்றத்திற்கு ஏற்ப நாம் இலக்கணம் கற்பிக்கும் முறையிலும் ஒரு சில மாறுதல்களைக் கொண்டு வந்தால் தவறு இல்லை எனலாம்.

பள்ளிக்கூட மாணவர்களுக்கும் கல்லூரிகளில் பகுதி – 1, (Part - I - Tamil) தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் இலக்கணம் கற்பிப்பதில் ஒரு சில புதிய முறைகளைப் புகுத்துவது பற்றி சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## ஒலிப்புப் பயிற்சி

மொழியைப் பேசும்போது எவ்வாறு கையாளப்படல் வேண்டும் என்பதற்கு ஒலிப்புப் பயிற்சி அவசியம் தேவை. தகுந்த முறையில் ஒலிப்புப் பயிற்சிகள் கொடுக்கப் பெற்றால் 'குளம்' என்பது 'குலம்' என்றும் 'பழம்' என்பது 'பலம்' என்றோ 'பயம்' என்றும் உச்சரிக்கப்படாது. "தமிழ் வாழ்க" என்பதற்கு பதில் "தமில் வால்க" என்று உச்சரிக்கப் படாது. எனவே ஒவ்வொரு எழுத்தையும் அதன் பிறப்பு, இயங்கும் விதம் ஆகியவற்றோடு விளக்கிக் காட்டி நாவுக்கு ஒலிப்புப் பயிற்சி கொடுக்கும் போது எந்தவிதமான இடர்ப்பாடும் இன்றி அழகாக, எளிதாக, பிழையின்றி பேசவும் எழுதவும் முடியும்.

## மாற்றொலி பற்றி அறிவித்தல்

ஒரே ஒலி அது வழங்கும் சூழலுக்குத் தகுந்தவாறு இயங்கும் விதத்தில் மாறுபடும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(எ.கா) அக்கா – akka (kk)

மேற்கு – merku (k)

தங்கம் – tangam (g)

அகம் – akam (h)

இதுபோன்று அடிப்படை ஒலிகளையும் அவற்றின் மாற்றொலிகளையும் சேர்த்து மொழியியல் அடிப்படையில் விளக்கினால் மாணவர்களுக்கு எளிதில் புரியும்.

## புதிய எடுத்துக்காட்டுக்கள் தேவை

நாம் மாணவர்க்கு இலக்கணம் கற்பிக்கும் போது பெரும்பாலும் தொல்காப்பியர், நன்னூலார் என்ன என்ன எடுத்துக்காட்டுக்கள் கூறியிருக்கின்றனரோ அந்த எடுத்துக்காட்டுக்களையே கூறிக் கொண்டிருக்கிறோம். அப்படி கூறாமல் எளிதாகப் புரியும் வகையில் நடைமுறையில் உள்ள எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம்.

எடுத்துக்காட்டாக ஐயவினாவிற்கு "அதோ தோன்றுவது குற்றியோ மகனோ?" என்ற எடுத்துக்காட்டைக் கூறுவது மரபாகி விட்டது. இந்த எடுத்துக்காட்டுக்குப் பதில் "அதோ தோன்றுவது கணினியோ தொலைக்காட்சிப் பெட்டியோ?" அல்லது "அங்கே இருப்பது கணினியோ தொலைக்காட்சிப் பெட்டியோ?" என்பன போன்ற எடுத்துக்காட்டுக்களைக் கூறி விளங்க வைக்கலாம்.

## வழக்கில் இல்லாத புணர்ச்சி

கல் + தீது – கஃறீது

முள் + தீது – முஃடீது – இவைபோன்ற புணர்ச்சிகள் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே இவைபோன்ற வழக்கு ஒழிந்த புணர்ச்சிகளைக் கூறி படி படி என்று திணிப்பதை விட நடைமுறையில் உள்ள புணர்ச்சிகளைக் கூறி விளக்கினால் புணர்ச்சி விதிகள் எளிதில் புரியும்.

## வழக்கிழந்த உரிச் சொற்கள்

உரிச்சொற்களை நாம் அன்றாடம் பயன்படுத்துதல் இல்லை. "நனி தின்றான்" என்று யாரும் கூறுவது இல்லை. மிகுதியாகத் தின்றான் அல்லது அதிகமாகத் தின்றான் என்றே கூறுவர். நடைமுறையில் இல்லாத வழக்கிழந்த சொற்கைளப் படி படி என்பதை விட அதை விட்டு விடுவது நன்று. (சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்க்கு உரிச்சொற்கள் கற்றுத்தரல் வேண்டும்).

## தொடரமைப்பு

"வாரா நின்றான்", "காண்டல் இலர்" போன்ற பழைய தொடரமைப்புகளுக்குப் பதில் 'வரமாட்டார், காண்பதில்லை' போன்ற தொடரமைப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.

'வாரா நின்றான்' என்றால், வந்து நின்றானா? வராமல் நின்றானா? என்று பொருள் புரிந்து கொள்ளுதலில் மாணவர்க்குத் தடுமாற்றம் ஏற்படும். இத்தகைய தடுமாற்றம் நிகழாமல் இருக்க நவீன காலத்தில் பயன்படுத்தும் சொற்களையே பயன்படுத்திக் காட்டலாம்.

## மொழியியல் வழிக்கல்வி துல்லியக் கல்வி

பேச்சு வழக்கை அவ்வாறே எழுத்து வடிவில் எழுத நேரிடும் போது சிற்சில குறியீடுகளுடன் எழுதலாம். இக்குறியீட்டுடன் கூடிய எழுத்துக்களை மொழியியல் மூலமாக மட்டுமே எழுத முடியும்.

எடுத்துக்காட்டாக 'வந்தான்' என்பது எழுத்து வடிவம். இது பேச்சு மொழியில் வரும்போது 'வந்தான்' என்று அப்படியே உச்சரிக்கப்படுவதில்லை. இறுதியில் உள்ள 'ன்' கரம் மூக்கினச் சாயல் பெற்று 'த'கரத்தின் மேல் ஏறி நிற்கும். மொழியியல் அமைப்பில் எழுதும் போது,

vantan --------> vanta – என்று மூக்கின சாயல் பெறுவதையும் சேர்த்து எழுத்து வடிவில் காட்ட முடியும்.

தமிழில் உயிரெழுத்து வரிசையில் வரும் ஐ, ஔ என்ற ஒலிகள் மொழி முதல் இடை, கடை போன்ற இடங்களில் வரும்போது 'ஐ' என்ற வடிவம் வருமா அல்லது 'அய்' என்ற வடிவம் வருமா என்றும் 'ஔ' என்ற வடிவம் வருமா அல்லது 'அவ்' என்ற வடிவம் வருமா' என்ற சந்தேகம் மாணவர்க்கு எழுவது இயல்பு.

எடுத்துக்காட்டாக 'ஐயர்' என்று எழுத வேண்டுமா; 'அய்யர்' என்று எழுத வேண்டுமா என்றும் 'ஔவையார்' சரியான வடிவமா; 'அவ்வையார்' சரியான வடிவமா என்றும் தடுமாற்றம் தோன்றும். மொழியியலையும் சேர்த்துப் பயன்படுத்திக் கற்றால் இந்தத் தடுமாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

## யாப்பு அணி

மாணவர்களுக்கு யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் தனித்தனியே கற்றுத் தருவதைவிட திருக்குறள் கற்றுத் தரும்போது, இக்குறள் ஒவ்வொன்றும் குறள் வெண்பா என்று கூறி இது இரண்டு அடிகளை உடையது. ஈற்றடி மூன்று சீரும் முதலடி நான்கு சீரும் பயின்று வரும், என்று கூறி பாடலை நன்கு உற்று நோக்கி அறியச் செய்யலாம். இதுபோன்று நேரிசை, இன்னிசை வெண்பாக்களுக்கும் அகவற்பாவுக்கும் கூறலாம்.

ஒவ்வொரு பாடப்பகுதியிலுள்ள செய்யுளிலும் பயின்றுவரும் அணியினைச் சுட்டிக்காட்டி அப்பாடலில் உள்ள விளக்கத்தையே கூறி விளக்கினால் போதுமானது.

## முடிவுரை

கற்பிக்கும்போது குரல் ஒலியில் ஏற்றத்தாழ்வு, அழுத்தம் ஆகியவற்றுடன் சேர்த்துக் கற்றுக் கொடுத்து படித்தல், கேட்டல், எழுதுதல் போன்றவற்றில் தொடர் பயிற்சிகள் கொடுத்துக் கற்பித்தல் நலம் பயக்கும்.

"காரிகைக் கற்றுக் கவிபாடுவதிலும்
பேரிகைக் கொட்டி பிழைப்பது மேல்"

என்பது போல் இலக்கணம் கொண்டு மொழியை உணர்ந்து கொள்வதை விட மொழியியலின் துணையையும் சேர்த்துக் கற்றுக் கொண்டால் எளிதில் மொழியை உணரமுடியும்.

த. சுதந்திரமணி
தலைவர்,
தமிழ்த்துறை,
சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி,
மதுரை.

# 'வாய்க்கால் மீன்களில்' மொழிநடை

- க. பசும்பொன்

இந்திய ஆட்சிப்பணி அலுவலர் இறையன்பு 19 நூல்களை எழுதியுள்ளார். இதில் மூன்று கவிதை நூல்கள் ஆகும். இக்கட்டுரையில் 'வாய்க்கால் மீன்கள்' என்ற கவிதை நூல் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலில் மொழி நடையின் கூறுகளில் ஒன்றான உவமை எப்படி கையாளப்பட்டுள்ளது என்பதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

எழுத்து உலகில் முன்னணியில் இருக்கும் வெ. இறையன்பு சமுதாயத்தைப் பல கோணங்களில் துருவிப் பார்த்து, அனுபவித்து மக்களுக்குப் பயன்படக்கூடிய பல கவிதை வரிகளை வார்த்து தந்திருக்கிறார். நெருங்கிப் பழகியவர்களிடத்திலும் தூரத்தில் இருப்பவர்களிடத்தும் நேர்மையான இந்திய ஆட்சிப்பணி அலுவலர் என்ற பெயரை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் வெ. இறையன்பு அவர்களிடம் ஒரு நேர்மையான சமுதாயத்தை உருவாக்கும் துடிப்புணர்வு மேலோங்கி நிற்கிறது. மனத்திற்குள் எண்ணிக்காணும் சுகத்திற்கும் எதார்த்தமான நிலையில் ஏற்படும் காயங்களுக்கும் இடையே உள்ளவற்றைக் கவிஞர் குறிப்பிடுகிறார். காதல் கவிதைகள் சமுதாய நோக்கமாக இருப்பின் சிறப்பாகும். சமூக நோக்கம் இல்லாமல் இருப்பின் வெறும் உணர்ச்சிகளை மட்டும் கொடுத்து பயனில்லாமல் போய்விடக் கூடாது என்று எச்சரிக்கை உணர்வும் கவிதையில் மேலோங்கி இருக்கின்றது. இதில் அறிவும், உணர்வும் மேன்மை உணர்த்தப்படுகிறது.

"நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது; அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாகி இருக்கும் வெளிப்பாட்டு மொழிப்பாங்கே அது" என்பது முர்ரே (1966) என்பாரின் கருத்து.

மொழியில் காணப்படும் வேறுபாடுகளையே அவர்கள் நடை என்று கருதுகின்றனர். ஒரு வகையான ஒழுங்கு முறைக்குட்பட்ட மொழியியல் வேறுபாடே நடை என்ற கருத்தை வேறு சிலரும் கூறியுள்ளனர் (என்க்விஸ்ட் 1971 : 47).

ஒரு மொழியின் எல்லா வகை மொழிக்கும் உரிய பொதுக் கூறுகளில் இருந்து எட்டு அடிப்படையில் வேறுபாடுகள் நிகழ்கின்றன என டேவிட் கிறிஸ்டல் (1966:8) கூறுகின்றார். அவை தற்போக்கு, கிளைமொழி, காலம், மொழிச்சாதனம் (ஊடகம், (பேச்சு, எழுத்து) பங்கு பற்றுதல், தனிமொழி, உரையாடல்) துறை, சமூகப் படிநிலை, வடிவம், தனித்துவம் ஆகியவை ஆகும்.

பொதுமொழியினை இலக்கிய மொழியாக மாற்றும் போதும் ஏற்படும் மரபுப் பிறழ்ச்சிகளே நடையியல் சிறப்புக்கள் என்கிறார் ஹானடே (1966). ஒரு படைப்பின் தன்மையை அளவிடும் பல்வேறு உத்திகளுள் நடையை ஆய்வதும் ஒன்றாகக் கருதப்படுகிறது. எவ்வாறு ஒருவர் பேசுவதைப் போன்ற இன்னொருவர் பேச இயலாதோ அதே முறையில் ஒருவரது எழுத்தைப் போன்றே அடுத்தவரது எழுத்தும் அமைவதில்லை. இலக்கியப் படைப்பாளிகளை இனங்கண்டு கொள்வதற்கு, அவர்களது மொழி நடை பெரிதும் பயன்படுகிறதென்பதில் ஐயமில்லை. நடைக்கேற்றவாறு படைப்புகளின் தன்மைகளும் மாறுபடுகின்றன. நடையியலின் இன்றியமையாமை இன்று இலக்கியத்திறனாய்வு உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அறிவியல் மதிப்பீடாக நிகழ்த்தப்படும் நடையியல் ஆய்வு முடிவுகள் இலக்கியத்தைச் சுவைப்பதற்கு மட்டுமின்றி வேற்று மொழி கற்பித்தலுக்கும் பெரிதும் பயன்படும்.

ஒரு பொருளை அல்லது பல பொருள்களைப் பிறபொருள்களுக்கும் அப்பொருள்களின் ஒற்றுமைக்கூறு அல்லது கூறுகளின் அடிப்படையில் ஒப்புமைப்படுத்திக் கூறுவதே உவமையாகும். அறியாதவற்றை அறியச் செய்வதற்கும், அறிந்தவற்றைச் சிறப்பிப்பதற்கும் உவமைகள் பயன்படுத்தப்படுகின்றன. படைப்பாளிகளின் இலக்கியத் திறத்தைப் புலப்படுத்துவதோடு படைப்பிற்கு சுவையூட்டுவதாக உவமைகள் அமைவதால் பழங்காலம் தொட்டு இன்று வரை அவை சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

'வினையின் மெய்யுரு என்ற நான்கே வகை பெற வந்த உவமத் தோற்றம்' என்ற தொல்காப்பியம் அடிப்படையில் வினை, பயன், மெய், உரு ஆகிய நிலைகளில் காணமுடிகிறது.

உவமைப் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு இருக்காதவாறு ஒன்றாக உள்ளுணர்வு தோன்றக் கூறுவதே உருவகமாகும். இவ்வுருவகம் கருத்தாழமிக்க பொருட்களை எடுத்துக்காட்டுவதற்குப் பெரும்பாலும் பயன்படுகிறது. உருவகத்தில் உவமேயம் முன்னும் உவமானம் பின்னும் வருவதாக இருக்கும். ஆனால் உவமையில் உவமானம் முன்னும் உவமேயம் பின்னும் இருக்கும்.

'ஒரு பொருளின் அழகை கண்டு அதை மற்றொரு பொருளின் அழகோடு ஒப்பிடுதல் உவமை, அதே மனநிலையில் மேலும் சிறிது வளர்ந்து இரண்டு பொருட்களையும் வேறுவேறாகக் காணாமல் மற்றொன்றை கண்டால் அது உருவகம்' என்பார் மு. வரதராசன் (1959 : 300).

ஒப்புமையை அறிதற்குக் காரணமாய் நிற்கும் 'உவமை' என்றும் உவமிக்கப்படும் பொருள் என்றும் கூறுவார் தொல்காப்பியர். இதனைத் தண்டியார் உவமானம் எனவும் உவமேயம் எனவும் வழங்குவர்.

*'பண்பும் தொழிலும் பயனு மென்றிவற்றின்*
*ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து*
*ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை.'* (தண்டி – 31)

பண்பு, தொழில், பயன் எனும் மூன்று வகையினுள் அடக்கிக் கூறுவார் தண்டியர்.

வீரசோழியம் உவம வகையை 33 என்றும், சுவாமி நாதம் 22 என்றும் விரிவாக விளக்குகின்றனர். ஆனால் சந்திரலோகம், அணி இலக்கணம் ஆகிய நூல்கள் உவம வகையை விரியுவமை, தொகையுவமை என இரு வகையாக மட்டுமே பிரித்துள்ளன.

இவ்வாய்வுக்கட்டுரை வினை உவமை, பண்பு உவமை, அரசு பொருள் உவமை, உவம உருபு போல், போலவே, மாதிரி, போலிருந்து போன்றவற்றைப் பற்றி ஆராய்கிறது.

## வினை உவமை

*ஏன்*
*மற்றவர்களைத் தள்ளியது மாதிரி*
*அவளையும்*
*உடையைக் கழற்றியதுபோல்*
*கழற்ற முடியவில்லை* (பக். 68)

தள்ளி, கழற்றி போன்ற வினைப்பயன்பாடு உள்ளதால் இது வினை உவமை ஆகும்.

பண்பு உவமை

*கவிதையை நேசிக்கிறவர்கள்*
*நெஞ்சமும்*
*கடற் பஞ்சைப்போல்*
*மென்மையாகி விடுகின்றது* (பக். 11)

'மென்மை' பண்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். 'கவிதையை நேசிக்கிறவர்கள்' என்று குறிப்பிட்டுக் கவிஞர் பண்பு உவமையாக்கி உள்ளார்.

*காற்றை கூட*
*வடி கட்டுகிற*
*மாதிரி*
*கஞ்சத்தனமான சன்னல்கள்* (பக். 2)

சிறிய சன்னல் என்பதை உவமைப்படுத்த காற்றை கூட வடி கட்டுகிற மாதிரி என்று சன்னலை குறிப்பிடுகிறார்.

**உவமை உருபு போலிருந்து பயன்பாடு**

*அழுக்கடைந்த பனியனுக்குமேல்*
*சலவை செய்த*
*சட்டையைப் போட்டு*
*சரி செய்வதைப் போலிருந்தது*
*அந்த மொட்டை மாடி* (பக். 3)

அந்த மொட்டை மாடி மேலே நன்றாகவும் உள்ளே சரி இல்லை என்பதையும் உவமைப்படுத்தியுள்ளார். இங்கே 'போலிருந்து' உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதில் வினை உவமைக்குப் போலும் மற்றும் பண்பு உவமைக்கு 'மாதிரி' உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. உவம உருபுகளில் போல, போலவே, மாதிரி, போலிருந்து ஆகியவை ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. புதியதாக உள்ள அரசு பொருள் உவமையிலும் போல் பயன்படுத்தப்பட்டுள்ளது. போல உவம உருபு குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**'போல்' உவமை உருபு பயன்பாடு :** கவிஞர் மிக அதிகமாக போல் என்ற உவமை உருபைப் பயுன்படுத்தியுள்ளார். 'போல' என்பதற்குப் பதிலாகப் போல் பயன்பாட்டில் உள்ளது.

*நீளமான தாவணியில் கைக்குட்டையும்*
*தைத்தது போல்*
*மிச்சமிருந்த செங்கல்லையும்*
*வீணாக்காமல்*
*கட்டியிருந்த*
*அறையில்தான் அவன் குடிபுகுந்தான்* (பக். 4)

இங்கு 'மிச்சம்' என்ற பொருளில் இந்த உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது.

*கிணற்றுப் பாசனத்தால்*
*செழிப்பு சேகரிக்கப்பட்டு*
*கைநிறைய அள்ளவேண்டிய*
*சில்லறைகளை*
*ரூபாய் நோட்டில்*
*சிரமமில்லாமல்*
*பைக்குள் வைத்துக் கொள்வதுபோல்*
*ஒரு மாவட்டத்திற்கான*
*பசுமையையே*
*அந்தக் கிராமத்து வயல்களின்*
*முந்தானையால்*
*இயற்கை*
*முடிந்து வைத்துக் கொண்டது* (பக். 6)

இந்த உவமை 'வளம்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*இருவர் சாப்பிடும் அதை*
*சோறு*
*நகரப் பேருந்துக்குள்*
*பயணம் செய்பவர்களைப்போல்*
*பாத்திரத்தில்*
*அமுக்கி அமுக்கி*
*அவனுக்கு*
*அனுப்பப்படும்.* (பக். 50)

*நகரத்தின்*
*நெரிசலான சந்துகளிலும்,*
*திரைப்படக் கனவுக் காட்சிகளில்*

*வரும் -*
*சாம்பிராணிப் புகையைப் போல்*
*வாகனப் புகை மண்டலம்*
*பரவியிருக்கிற*
*சாலைகளிலும்*
*சிக்கி*
*வாலை மட்டுமே கதவிடுக்கில்*
*தந்து*
*தப்பித்துக்கொள்கிற*
*பல்லி போல*
*கொஞ்சத்தை மட்டுமே இழந்து*
*வந்து சேர்ந்தான்*

திரைப்படத்தில் கனவுக் காட்சிகளில் வரும் புகைக்கு வாகனப் புகையை ஒப்பிட்டு 'போல்' உருபை பயன்படுத்தி உள்ளார். பல்லி வாலை கதவிடுக்கில் பாதியைத் தொலைத்ததை நகரத்தில் அவர் பாதியை இழந்ததை ஒப்பிட்டு 'போல' உருபைப் பயன்படுத்தியுள்ளார்.

*அவன் கவிதைப் புத்தகம்*
*கறைபடாமல்*
*எப்போதும்*
*புதியதாகவே இருக்கும்.*

*அதைக் கைகளிலேந்தும்*
*போது*
*ஒரு குழந்தையை வெகுநாள் கழித்துப்*
*பெற்றெடுத்த தாயைப் போல்*
*பூவைப் பூவே*
*தாங்குவது போன்ற*
*மென்மையுடன்*
*தாங்குவாள்*

ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய் வெகுநாள் கழித்து தூக்குவதை பூவைப் பூவே தாங்குவது போன்று தூங்குகிறாள் என்று உவமை கூறுகிறார்.

*நெல் வயலிற்கு நெக்லஸைப் போல்*
*சுற்றிலுமிருக்கும்*
*தென்னஞ்சோலைகளின்*

*அசைவுகளால்*
*ஏற்படும் காற்றின் கைகளை*
*ஸ்பரிக்க முடியும்*

நெல்வயலிற்கு கழுத்து அணியாக தென்னஞ்சோலையை உவமைப்படுத்துகிறார்.

*திரைப்பட*
*இடைவேளையில்*
*ஒரு வினாடி மட்டும் வருகிற*
*விளம்பரம்*
*மனதில் ஆழமாய்*
*அஸ்திவாரம் போட்டுவிடுவதைப் போல்*
*அவன் உள்ளத்தில்*
*அந்த உருவம் கடைக்கால் போட்டுவிட்டது.*

அவளின் 'உருவத்தே' விளம்பரத்துடன் ஒப்பிட்டு உவமையாக்கி இருக்கிறார்.

*அந்த ஊரிலேயே*
*பெரிய அதிகாரி*
*அவன்தான் என்பதால்*
*உற்சவமூர்த்தியைக் கூட*
*சில முக்கியமானவர்கள்*
*வீடுகளுக்கெதிரில்*
*அதிகநேரம் நிறுத்தி வைப்பது போல்*
*அவன் அறை தேடி*
*உணவுத் தட்டுகள்*
*கால் முளைத்து வைத்தன.*

உற்சவமூர்த்தியை உணவுத்தட்டுக்களுடன் ஒப்பிட்டு உவமை கூறியுள்ளார்.

*அப்படி அவன்*
*சாப்பாட்டோடு*
*தீவிரவாதிகளுடன் போராடும்*
*காவல்துறையைப் போல்*
*கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது*
*அறையினுள்ளே வரலாமா என*
*சிரித்தவாறே*
*நுழைந்தார் அவர்*

சாப்பாட்டை காவல்துறைக்கு ஒப்பிட்டு உவமை கூறி இருக்கிறார்.

அரசு - பொருள் உவமை

இங்கு நிருவாகம் சார்ந்த செயல்கள் உவமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவர் இந்திய ஆட்சிப்பணி அலுவலர் என்பதால் உவமை சிறப்பாக அமைந்துள்ளது. அரசு மற்றும் நிருவாகம் சார்ந்த பொருட்கள் உவமையாக கூறப்பட்டுள்ளதால் இது அரசு பொருள் உவமையாகும்.

*அன்றைய பாடல்*
*சன்னலில் தெரிந்த*
*பிம்பத்தை கண்டதும்*
*காரணம் இல்லாமல்*
*சாலை மறியல் செய்தவர்களால்*
*நின்று போன பேருந்து போல்*
*நின்று விட்டது.* (பக். 23)

சாலை மறியல் செய்தவர்களைச் சீர்செய்வது அரசு நிருவாகத்தில் வரும். இது அரசு பொருள் உவமை ஆகும்.

*வறட்சி நிவாரணப்பணியை*
*ஏப்பம் விடுகின்ற*
*அலுவலரைப்போல்*
*கொழுத்து*
*குண்டு குண்டாய் இருந்தாலும்*
*அது வறட்சியின் கொடுமையாய்*
*அவனை ரணப்படுத்தியது.* (பக். 74)

இக்கவிதை காதலின் காதல் மறுப்பை சொல்லியும் வறட்சி நிவாரணப் பணியை ஏப்பம் விடுகின்ற அலுவலரையும் குறிப்பிட்டு மிகச் சிறப்பாக உவமை கையாளப்பட்டுள்ளது.

*கண்கள்*
*நலிவடைந்த நகராட்சி சாலை போல்*
*குழி விழுந்தன*

காதல் தோல்வியுள்ள காதலியின் கண்களை நகராட்சிக் குழிகளுக்குச் சிறப்பாக உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

உவமை உருபு

*போலவே பயன்பாடு* (பக். 10)

*நகரத்திலிருப்பவர் தம்*
*வாழ்க்கையும்*
*அவர்கள் தொற்றிகொள்ளும்*
*மின்சார ரயிலைப்போலவே*
*குறிப்பிட்ட பாதையிலேயே*
*குறுகி வருகின்றது.*

'போலவே' என்ற உருபைப் பயன்படுத்தி தொடர்வண்டியையும் நகர வாழ்க்கையையும் உவமைப்படுத்தியுள்ளார்.

*அவன் சிரிப்புக்காரணம்*
*என்ன என*
*அவன் மனம் பட்டிமன்றம் நடத்தினாலும்*
*வழக்கமாய் நடுவர்கள்*
*வழங்கும்*
*சாரமற்ற தீர்ப்பைப் போலவே*
*அவன் எண்ணக்*
*குழப்பத்தையே*
*கூட்டின.*

'போலவே' என்ற உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. பட்டிமன்ற சாரமற்ற தீர்ப்பை எண்ணக் குழப்பத்திற்கு உவமையாக்கி உள்ளார்.

*ஆனால் அது*
*உயிரியல் பூங்காக்களில்*
*புலி மட்டும் பகலில்*
*பார்வைக்கு தட்டுப்படாததைப் போலவே*
*கிடைக்காமலே போனது.*

பூங்காக்களில் 'புலி' தட்டுப்படாததைப் போல் அவளுக்கும் தட்டுப்படவில்லை என்று உவமைப்படுத்தியுள்ளார்.

பார்வை நூல்கள்


| | | |
|---|---|---|
| David Oryal D.P., Derek, | 1966 | *Investigating English Style*, London. |
| Mills E.RIK Enkvist, | 1971 | *'The place of Style in some Linguistic Henry*, Oxford. |
| Halliday, M.A.K., | 1966 | *General Linguistics and its Application to Language Teaching*, Patterns of Language, London. |
| Middieton, Murry, | 1949 | *Problems of Style*, Oxford. |
| இறையன்பு, வெ. | 2005 | *வாய்க்கால் மீன்கள்,* சென்னை நியூசெஞ்சுரி புத்தகக்கிளை. |



**க. பசும்பொன்**
தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியகம்,
மதுரை.

# மூன்றாம் வேற்றுமை

- அ. பரணி ராணி

மரபு இலக்கண நூல்கள் மூன்றாம் வேற்றுமைக்கு கூறிய பொருள் பாகுபாடுகளை ச. அகத்தியலிங்கனார் மொழியியல் நோக்கில் ஆய்வு செய்து தனித்தனி வேற்றுமைகளாகக் கூறியுள்ளார். மேலும் அவர் உடனிகழ்ச்சி வேற்றுமையைச் சிக்கல் நிறைந்த ஒன்றாகப் பார்த்து அதற்கான தீர்வினைத் தருகிறார்.

## பெயர்

தொல்காப்பியர் வரிசையெண் அடிப்படையில் மூன்றாம் வேற்றுமை என்றும், உருபு அடிப்படையில் 'ஒடு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' என்றும், பொருள் அடிப்படையில் கருவி வேற்றுமை என்றும் குறித்துள்ளார். ஆங்கிலத்தில் 'Instrumental case' என்பர்.

## உருபு

மரபு இலக்கணங்கள் மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாக ஆன், ஆல், ஒடு, ஓடு என்று நான்கு உருபுகளைக் கூறியுள்ளன.

ச. அகத்தியலிங்கனார் மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், இல், ஒடு, ஓடு என்பனவற்றையும் சொல்லுருபுகளாகப் பயன்படுத்தி, உபயோகித்து, கூட, கொண்டு, உடன் போன்றவற்றையும் கூறுகிறார்.

## பொருள்

மரபு இலக்கணங்கள் மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருளை கருவி, கருத்தா, உடனிகழ்வு என்று மூன்றாகப் பகுத்துள்ளன.

ச. அகத்தியலிங்கனார் மூன்றாம் வேற்றுமையை

1. கருவிப்பொருள் வேற்றுமை (பொருள்/ ஆயுதம்)

2. காரணப்பொருள் வேற்றுமை

3. உடனிகழ்வு வேற்றுமை

என்று மூன்றாகப் பகுத்துள்ளார்.

வினைமுதல் (கருத்தா)

வீரசோழியம் தவிர்த்த ஏனைய தமிழ் இலக்கண நூல்கள் கருத்தாவைப் பற்றிக் கூறியுள்ளன.

அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது.

வினை முதல் வாக்கியத்தில் புதை நிலையில் காணப்படும் ஒன்றாகும் என்பது ச. அகத்தியலிங்கனாரின் கருத்தாகும்.

மழையால் குளம் நிறைந்தது

என்ற புறநிலை வாக்கியம் 'மழை பெய்ததால் குளம் நிறைந்தது' என்ற புதை நிலையில் இருந்து உருவாகியது. முன்னர் எழுவாயாக நின்ற சொல்லுடன் 'பெய்தது' என்ற பெயர் கெட்ட நிலையில் அதனோடு ஒன்றிருந்த 'ஆல்' உருபு இணைய 'மழையால்' என்ற சொல் உருவாகியது. எனவே புறநிலையில் கருவியாகவும், புதைநிலையில் எழுவாயாகாவும் அமைவதை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குகிறார்.

## கருவி வேற்றுமை

கருத்தாவின் தொழிற் பயனைச் செயப்படுபொருளில் சேர்ப்பது கருவி எனப்படும். ச. அகத்தியலிங்கனார் கருவி வேற்றுமை பற்றிக் கூறும் போது,

'ஒரு தொழிலைச் செய்ய ஒருவர் பயன்படுத்தும் கருவி பற்றிக் கூறுவது கருவி வேற்றுமை' என்பார்.

மேலும் கருவிப்பொருளை இரண்டாக பகுத்துள்ளார்.

1. ஆயுத வேற்றுமை

2. பொருள் வேற்றுமை

## ஆயுத வேற்றுமை

'ஒரு செயலைச் செய்வதற்குப் பயன்படும் கருவி அல்லது ஆயுதத்தைக் குறிக்கும் வேற்றுமை ஆயுத வேற்றுமை' என்பார் ச. அகத்தியலிங்கனார்.[2]

இதனை ஆங்கிலத்தில் 'tool case' என்பர்.

## ஆயுத வேற்றுமை உருபுகள்

ஆயுதங்களை கீழே வைத்துப் பயன்படுத்தும் போது 'இல்' உருபும், ஆயுதங்களை எடுத்து பயன்படுத்தும் பொழுது 'ஆல்' உருபும் இடம் பெறுவதை கூறியுள்ளார்.[3]

தறியில் நெய்தான்

கத்தியால் குத்தினான்

மேலும் பல சொல்லுருபுகள் பற்றியும் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| | ஐக் கொண்டு | |
| | ஐப் பயன்படுத்தி | |
| கத்தி | ஐ உபயோகித்து | வெட்டினான் |
| | ஐ வைத்து | |

## மரபு இலக்கணம்

மரபு இலக்கணம் ஆயுத வேற்றுமையை துணைக் கருவி, துணைக் காரணம் என்று கூறுகின்றது.

*திரிகையால் இயன்ற குடம்*

குடம் உருவாகும் வரையில் முதற்கருவியாகிய மண்ணுக்குத் துணையாக இருப்பதால் திரிகை துணைக்கருவி ஆயிற்று.

மரபு இலக்கணம் துணைக்கருவி என்றதை ச. அகத்தியலிங்கனார் ஆயுத வேற்றுமை என்று குறிப்பிடுகிறார்.

## பொருள் வேற்றுமை

'ஒரு பொருள் பயன்படும் பொருளாக்கப்படும் போது அப்பொருளைக் குறித்து வரும் வேற்றுமையை பொருள் வேற்றுமை' என்பார். இதனை ஆங்கிலத்தில் 'material case' என்பர்.

## பொருள் வேற்றுமை உருபுகள்

இல், ஆல் என்ற உருபுகளும் சில சொல்லுருபுகளும் பொருள் வேற்றுமையின் உருபுகளாக உள்ளன என்பார்.[4]

| | | |
|---|---|---|
| மாவில் | பணியாரம் | செய்தான் |
| கல்லால் | சிலை | செய்தான் |

மேலும் சில சொல்லுருபுகள் பற்றியும் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| | ஐக் கொண்டு | |
| | ஐ வைத்து | |
| கல் | ஐ உபயோகித்து | சிலை செய்தான் |
| | ஐப் பயன்படுத்தி | |

## மரபு இலக்கணம்

மரபு இலக்கணங்கள் பொருள் வேற்றுமையை முதற்கருவி, முதற்காரணம் என்று கூறுகின்றன.

மண்ணால் இயன்ற குடம்

குடம் உருவாகுவதற்கு முதற்காரணமாகவும், கருவியாகவும் இருப்பது மண் என்ற பொருளே ஆகும்.

மரபு இலக்கணம் முதற்கருவி என்பதை ச. அகத்தியலிங்கனார் பொருள் வேற்றுமை என்று குறிப்பிடுகிறார்.

## ஆயுத வேற்றுமை x பொருள் வேற்றுமை

### ஆக்கவினை

பொருள் வேற்றுமை செய், உண்டு, பண்ணு, செதுக்கு, கட்டு போன்ற ஆக்கவினைகளைக் கொண்டு வரும்.

ஆயுத வேற்றுமை வெட்டு, திற போன்ற வினைகளைக் கொண்டு வரும்.

கல்லால் சிலை செய்தான் (பொருள் வேற்றுமை)

சாவியால் திறந்தான் (ஆயுத வேற்றுமை)

### ஆக்கப்பொருள்

ஆயுத வேற்றுமை வெட்டு, குத்து போன்ற ஆக்கப் பெயர்களை பெற்று வரும். பொருள் வேற்றுமை அவ்வாறு வருவதில்லை.

கத்திக் குத்து

கத்தி வெட்டு

### எழுவாயாக மாறும் தன்மை

ஆயுத வேற்றுமையில் வரும் ஆயுதச் சொல்லை எழுவாயாக மாற்றலாம். பொருள் வேற்றுமையில் அவ்வாறு மாற்ற முடியாது.

கத்தி வெட்டிற்று

சாவி திறந்தது

மேற்கூறிய மூன்று நிலைகளில் ஆயுத வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் வேறுபட்டு அமைவதை எடுத்துக்காட்டுகிறார் சு. அகத்தியலிங்கனார்.

### காரண வேற்றுமை

'ஒரு நிகழ்ச்சி அல்லது செயலுக்கு காரணமாக உள்ளதை குறிக்கும் வேற்றுமை காரண வேற்றுமை என்பர்'. இதனை ஆங்கிலத்தில் 'Casual case' என்பர்.[5]

### காரண வேற்றுமை உருபுகள்

ஆல், இல் ஆகியவற்றை காரண வேற்றுமை உருபுகளாக கூறுகிறார்.

– ஆல் உருபு

ஆல் உருபு எல்லாப் பெயர்களுக்குப் பின்னரும் வரும்.

ஏதோ செய்ததால் பிழைத்தான்.

மழை பெய்ததால் குளம் நிறைந்தது.

காய்ச்சலால் பலர் இறந்தனர்.

– இல் உருபு

பெரும்பாலும் நிகழ்ச்சியை குறிக்கும்போது – இல் உருபு இடம் பெறும்.

காய்ச்சலில் இறந்தான்

போரில் இறந்தனர்.

## கு உருபு

'The Language of Tamil Inscription' என்ற நூலில் 'கு' உருபு காரண வேற்றுமை பெற்று வரும் என்பார் ச. அகத்தியலிங்கனார்.

நிலத்துக்கு வந்த தடை

நிலம் காரணமாக வந்த தடை என காரணப் பொருளைப் பெற்று வருகிறது.

## மரபு இலக்கணம்

தொல்காப்பியர் காரண வேற்றுமையை மூன்றாம் வேற்றுமையின் பொருள் பாகுபாடுகளில் ஒன்றாகக் காட்டுகிறார்.

அ) அதற்கு கிளவி – அறிவான் அமைந்த சான்றோர்

> அறிவின் காரணமாக அமைந்த சான்றோர்

ஆ) அதனின் ஆதல் – வாணித்தான் ஆயினான்

> வாணிகம் செய்ததால் செல்வன் ஆயினான்

எனக் காரணப் பொருளைப் பெற்று வருகிறது. மேலும் வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து போன்ற இலக்கண நூல்களும் காரணப் பொருள் பற்றிக் கூறுகின்றன.

## கருவியும் x காரணமும்

கருவி வேற்றுமையும் காரண வேற்றுமையும் தொடரியல் அமைப்பில் வேறுபடுவதை எடுத்துக்காட்டுகிறார்.[8]

### கருவி

கத்தியால் வெட்டினான்

இவ்வாக்கியத்தில் 'கத்தி காரணமாக வெட்டினான்' என்று 'காரணமாக' என்ற சொல்லை இடைப் பெய்து கூற முடியாது.

### காரணம்

காய்ச்சலில் இறந்தான்

இவ்வாக்கியத்தில் 'காய்ச்சல் காரணமாக இறந்தான்' என்று 'காரணம்' என்ற சொல்லை இடைப்பெய்து கூற முடியும்.

இவ்வாறு தொடரியல் அடிப்படையில் கருவி, காரணம் வேறுபடுவதால் தனித்தனி வேற்றுமைகளாக கூறுகிறார்.

## உடனிகழ்ச்சி வேற்றுமை

ஒரு நிகழ்ச்சி நடைபெறும் போது இன்னொரு நிகழ்ச்சியும் நடைபெறுமானால் அந்நிகழ்ச்சியைக் குறிப்பதுவே உடனிகழ்ச்சி வேற்றுமை என்பார் ச. அகத்தியலிங்கனார்.[9]

இதனை ஆங்கிலத்தில் sociative case என்றும் comitative case என்றும் அழைப்பர்.

## உடனிகழ்ச்சி வேற்றுமை உருபுகள்

உடனிகழ்ச்சியைக் காட்டுவனவாக ஒடு, ஓடு உருபுகளையும், உடன், கூட போன்ற சொல்லுருபுகளையும் கூறியுள்ளார்.

இராமனொடு கண்ணன் வந்தான்

இராதாவோடு கலா பார்த்தாள்

ராஜாவுடன் குமார் சென்றான்

அவனொடுகூட வந்தேன்.

இதில் 'கூட' என்ற சொல் பேச்சுத் தமிழிலேயே மிகுதியும் வழங்குகிறது.

சில நேரங்களில் ஒடு என்பதுடன் சொல்லுருபு 'கூட' என்பதும் சேர்ந்து உடனிகழ்ச்சிப் பொருளை உணர்த்துவதுண்டு.

'வளவன் என்னோடு கூட வந்தான்'. இது பேச்சுத் தமிழில் இயலும் என்பார் மருதூர் அரங்கராசனார்.[10]

## உடனிகழ்வு பொருள் மட்டுமா?

உடனிகழ்வு உருபுகளை ஏற்றுவரும் சொற்கள் அனைத்தும் உடனிகழ்வுப் பொருளை மட்டும் காட்டுவதில்லை என்பது ச. அகத்தியலிங்கனார் கருத்து.[11]

இவை சார்ந்து போதல், சேர்தல், கலத்தல் போன்ற பொருளையும் தருவதை காட்டுகிறார்.

### சார்ந்து போதல்

ஒருவர் ஒரு வினையை செய்து கொண்டிருக்க இன்னொருவரும் அவரைச் சார்ந்து, அவ்வினையைச் செய்தால் அது சார்ந்து போதல் பொருளில், அமைகிறது எனலாம்.

இராமனுடன் சீதை சென்றாள்.

இராமன் செல்லும்போது அவனைச் சார்ந்து சீதையும் சென்றாள் என்று சார்ந்து போதல் பொருளைத் தருகிறது.

### சேர்தல்

ஒருவரை ஒருவர் சாராமல் இருவரும் சேர்ந்து ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் ஒரு வினையைச் செய்தால் அது சேர்தல் பொருளில் வருகிறது எனலாம்.

கண்ணன் இராமனுடன் விளையாடினாள்.

இங்கு இருவரும் ஒருவரை ஒருவர் சாராமல் சேர்ந்து விளையாடுவதால் சேர்தல் பொருளைத் தருகிறது.

### கலத்தல்

ஒன்றை ஒன்று சாராமல், இரண்டு பொருள்கள் ஒன்றுடன் ஒன்று கலப்பதால் கலத்தல் பொருளைத் தருகிறது.

பாலுடன் தண்ணீர் கலந்தது.

ச. அகத்தியலிங்கனார் 'ஒடு', 'உடன்' உருபினைப் பெற்ற சொற்கள் உடனிகழ்வு என்ற ஒரு பொருளை மட்டும் தரவில்லை. சார்ந்து போதல், சேர்த்தல், இணைதல் என்ற மூன்று பொருளிலும் வரும் என்பார்.

### காலமே முக்கியம்

உடனிகழ்ச்சி வேற்றுமை ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், ஒரே தொழிலைக் குறிப்பதாக இருப்பினும் இவற்றில் காலமே முக்கியம் என்கிறார் ச. அகத்தியலிங்கனார்.[12]

நான் அவனோடுதான் வேலைக்குச் சேர்ந்தேன்.

ஒருவன் கல்லூரியிலும் மற்றொருவர் பள்ளியிலும் வேலைக்குச் சேர்ந்தான் என்ற பொருள் கொண்டால் வேலைக்குச் சேர்ந்த நேரம் ஒன்றாக உள்ளது. ஆனால் இடமும், தொழிலும் மாறுபடுகிறது.

எனவே உடனிகழ்ச்சி வேற்றுமைக்குக், காலமே முக்கியம் என்பது ச. அகத்தியலிங்கனார் கருத்தாக உள்ளது.

## ஒடு வேற்றுமையும் x உம்மை விரி வாக்கியமும்

ஒடு வேற்றுமைக்கும், உம்மைவிரி வாக்கியங்களுக்கும் ஒற்றுமை உண்டு என்பார் ச. அகத்தியலிங்கனார்.[13]

அ. இராமனோடு கண்ணன் வந்தான்.

ஆ. இராமன் வரும்போது கண்ணன் இராமனோடு சேர்ந்து வந்தான்.

இ. இராமனும் கண்ணனும் சேர்ந்து வந்தார்கள்.

'ஆ' என்ற புதைநிலை வாக்கியத்தில் இருந்து 'அ' என்ற ஒடு வேற்றுமை வாக்கியம் புறநிலையில் உருவாகியுள்ளது. இது 'இ' என்ற உம்மைவிரி வாக்கியத்தோடு ஒத்துள்ளது.

இந்நிலையில் ஒடு வேற்றுமைக்கும், உம்மைவிரி வாக்கியங்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமையை எடுத்துக்காட்டு தந்து விளக்குகிறார்.

## ஒடு சொல் உயர்பின் வழித்தே

'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே'
(தொ. சொல். 575)

என்றார் தொல்காப்பியர். உடனிகழ்ச்சியில் வரும் இரு பெயர்களில் எதனோடு 'ஒடு' உருபைச் சேர்க்க வேண்டும் என்பது பற்றிக் கூறியுள்ளார்.

உயர்பு என்பது சமுதாயத்தில் காணப்படும் உயர்வு எனக் கொண்டு உரையாசிரியர்கள்.

அரசனோடு அமைச்சன் வந்தான்

என்ற காட்டினைத் தந்தார்.

ஒரு செயலைப் பொறுத்தமட்டில் முக்கியமானவர் எவரோ அவரையோ 'உயர்வு' என்ற சொல் குறித்து நிற்கிறது என்பது அகத்தியலிங்கனார் கருத்து.

மனைவியொடு சேர்ந்து கணவன் சமைக்கான்.

சமையல் செய்வதில் மனைவி முக்கிய பங்கு ஏற்கிற நிலையில் இங்கு மனைவிக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மேலும் வினையை முதலில் தொடங்குபவளும் அவ்வினைக்குப் பொறுப்பானவளும் மனைவி ஆதலின் அப்பெயரோடு 'ஒடு' சேர்ந்தது என்பார்.[14]

தொல்காப்பியர் கூறிய 'உயர்வு' என்ற சொல்லை மரபு இலக்கணங்கள் உயர்ந்த நிலை என்ற பொருளில் கூற ச. அகத்தியலிங்கனார் முக்கியத்துவம் என்ற பொருளில் கூறுகிறார்.

## மரபு இலக்கணம்

தொல்காப்பியர் உடனிகழ்ச்சியை பிற்கால இலக்கண ஆசிரியர்கள் போல மூன்றாம் வேற்றுமையில் ஒரு பொருளாகக் கூறாவிடினும் 558ஆம் நூற்பாவில் :

1. அதனொடு மயங்கல் – எள்ளோடு விராய அரிசி

2. அதனொடு இயைந்த ஒருவினை கிளவி – ஆசிரியனொடு வந்த மாணக்கன்.

3. அதனொடு இயைந்த வேறுவினை கிளவி – மலையொடு பொருத மால் யானை.

4. அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை – பொன்னோடு இரும்பு அனையர் நின்னொடு பிறரே.

போன்றவை உடனிகழ்ச்சி வேற்றுமையைக் கூறுவதாக உரையாசிரியர்கள் கூறுகிறார்கள்.

ச. அகத்தியலிங்கனார் அதனோடு இயைந்த ஒருவினை கிளவி என்பதனைச் சார்ந்து போதல் அல்லது சேர்தல் பொருளிலும், அதனோடு மயங்கல் என்பதை இணைதல் அல்லது கலத்தல் பொருளிலும் கூறியுள்ளார்.

## தொகுப்புரை

மரபு இலக்கணங்கள் மூன்றாம் வேற்றுமையின் பொருளாக கருவி, உடனிகழ்வு, காரணம், வினைமுதல் என்ற நான்கினைக் கூற, ச. அகத்தியலிங்கனார் மொழியியல் நோக்கில் ஆய்வு செய்து கருவி வேற்றுமை, காரண வேற்றுமை, உடனிகழ்வு வேற்றுமை எனத் தனித்தனி வேற்றுமைகளாகக் கூறியிருப்பது புதிய அணுகுமுறையாக அமைகிறது.

## குறிப்புக்கள்

1. மருதூர் அரங்கராசன், தமிழில் வேற்றுமைகள் பக், 179.
2. ச. அகத்தியலிங்கம், மொழியியல் சொல்லியல் 1 பெயரியல் பக். 2027.
3. மேலது, பக். 226.
4. மேலது, பக். 229.
5. மேலது, பக். 229.
6. மேலது, பக். 230–231.
7. S. Agasthialingam, The Language of Tamil Inscriptions 1250-1350 A.D., p. 123.
8. ச. அகத்தியலிங்கம் மொழியியல் சொல்லியல் 1 பெயரியல் பக். 229.
9. மேலது, பக். 231.
10. மருதூர் அரங்கராசன் வேற்றுமை மயக்கம் பக். 246–47.
11. ச. அகத்தியலிங்கம் உடனிகழ்ச்சி வேற்றுமை, பன்னிரண்டாவது கருத்தரங்க ஆய்வுக்கோவை தொகுதி–2, பக். 6.
12. மேலது, பக். 3.
13. S. Agasthialingam, The so-called sociative case in Tamil, Dravidian case system, p. 19.
14. மேலது, பக். 25.

அ. பரணிராணி
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
மதுரை.

# உருபொலியனியல்

- தே. பாக்கியம்

தமிழ்மொழியின் அமைப்பினை விவரிக்கின்ற மரபிலக்கண நூற்கள் அனைத்தும் புணரியல் என்று குறிக்கும் பகுதியை இக்கால மொழியியலார் உருபொலியனியல் என்று குறிப்பர். ஒரு மொழியியல் வந்து வழங்கக்கூடிய ஒலிகள், சொற்கள், தொடர்கள் அனைத்தையும் வகைப்படுத்தி அவற்றின் வரன்முறைகளை விளக்கிவிடுவதால் மொழியின் இலக்கணம் முழுமையடைந்துவிட்டது என்று யாரும் கருதுவதில்லை. மொழியின் ஒலியமைப்பு (phonetic system) பற்றி அறிந்து கொள்வதால் எழுத்துக்களின் இலக்கணம் நிறைவு பெறலாம். ஆனால் பொருளோடு அவற்றிற்குத் தொடர்பில்லை என்பதை மறந்து விடக்கூடாது. ஒலியன்களுக்கும் பொருளுக்கும் நேரடியான தொடர்பில்லை. பொருளோடு தொடர்புடையன உருபன்களே (morphemes) ஆகும். அவ்வாறு தொடர்பினை ஏற்படுத்தும் உருபன் புணர்ச்சியின்போது எவ்வகையான மாற்றங்களை பெறுகின்றது என்ற செய்தியினை மொழியியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## 1.2. உருபொலியனியல் விளக்கம்

உருபன் என்ற சொல்லை ஹாகட் என்னும் மொழிநூல் அறிஞர் பயன்படுத்துகிறார். ஒரு மொழியின் அமைப்பின்கண் காணப்படக்கூடிய இலக்கண கூறுகளை விவரிக்கும் மிகச் சிறிய பொருள் பொதிந்த ஒலியக்கூறு உருபன் என்று ராபின்ஸ் வரையறுக்கிறார். நைடா என்ற மொழியியல் அறிஞர் உருபன் என்ற சொல்லிற்குப் பொருள் சொல்லும் பொழுது ஒரு மொழியில் வந்து வழங்கப்படுகின்ற பொருள் தரக்கூடிய மேலும் பகுக்க முடியாத மிகச்சிறிய ஒலியக்கூறு என்கிறார்.

இதனைத் தொடர்ந்து கிளீசன் என்கின்ற மொழிநூல் அறிஞர் ஒரு மொழியின் தொடர்களில் பொருள் வேறுபாட்டினை ஏற்படுத்தும் கூறு எதுவோ அந்த அமைப்புக்குதான் உருபன் என்று பெயர் சூட்டுகிறார். இவ்வாறாகச் சொற்களைப் பகுக்குங்கால் கிடைக்கின்ற மிகச்சிறிய பொருள் கூறினை உருபு எனலாம். ஒவ்வொரு உருபும் ஒவ்வொரு உருபனைச் சார்ந்தே வரும். எடுத்துக்காட்டாகச் செய்தான் என்ற

சொல்லினை பகுக்கும் பொழுது செய் + த் + ஆன் என்ற மூன்று உருபன்கள் பெறப்படுகின்றன. இவற்றின் படிநிலைகளைப் பற்றி ஐயம் தெளிவதுதான் உருபொலியனியல் பகுதியாகும். மொழி நூலார் காட்டும் உருபொலியனியல் கருத்துக்களை முதலில் காண்போம்.

## 1.3. மொழியியலார் காட்டும் உருபொலியனியல்

ஒரு மொழியின்பால் வந்து வழங்கக்கூடிய உருபன்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பொருளுடைய தொடர்களை உருவாக்குகின்ற பொழுது ஏதாவது ஒரு மாற்றம் அங்கு நிகழ்கின்றது. அவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகும் ஒலியன் எதுவோ அதனை உருபொலியன் என்கின்றனர். இத்தகைய மாற்றங்களை கொடுக்கும் பகுதியை உருபொலியனியல் (morphophonemics) என்பர்.

தனிக்குறிலணைந்த லகர ஈற்றுப் பெயர்கள் 'கள்' விகுதியை ஏற்கும்போது அவற்றிலுள்ள லகரங்கள் றகர ஒற்றாக மாறியுள்ளன. ஆனால் இந்த அமைப்பு நிலையினை விளக்க மாற்று முறையினைக் கூடப் பயன்படுத்தலாம். தனிக்குறிலணைந்த லகர ஈற்றுப் பெயர்களுக்கு லகர ஈற்றையும் றகர ஈற்றையும் கொண்ட மாற்றுருபுகள் (allomorphos) உண்டு என்பதனையும் றகர ஈற்றுருபுகள் கள் விகுதியோடு வரும் என்றும் கூறலாம். இவ்வாறாக ஒரு மொழியில் ஒரு ஒலிக்குப் பதிலாக இரண்டு அல்லது மூன்று ஒலிகள் உண்டு என்பதனை மற்றொரு எடுத்துக்காட்டின் மூலம் பெறலாம்.

உருபொலியனியில் ஒரு மொழியின் வந்து வழங்கக் கூடிய மாற்று ஒலிகளை அறிவதற்கு உறுதுணையாக அமைகின்றது.

வேற்றுமை உருபுகள் சேருகின்றபொழுது ஏற்படும் மாற்றங்களை நோக்கி பார்க்கும் பொழுது, நான் என்னும் உருபன் வேற்றுமை உருபை ஏற்கும் பொழுது என் என்று மாற்றமடைகிறது. நீ ஏற்கும் பொழுது உன் என்று மாற்றமடைகிறது. இதனை மற்றொரு முறையில் கூறினோம் என்றால்



'நான்' என்ற உருபனுக்கு நான், என் என்கின்ற இரண்டு மாற்றுருபுகள் உண்டு. அவற்றுள் என் என்பது வேற்றுமை ஏற்கக்கூடிய இடங்களிலும் நான் என்பது ஏனைய இடங்களிலும் வரும் என்று கூறலாம்.

இம்மாற்றுருபுகளை மொழியியலார் உருபனியலில் விளக்குவர். என், உன் என்பவற்றை மாற்றுருபுகளாக உருபனியலில் குறிப்பிடத் தேவையில்லை. இங்கே பார்த்த முறைகளையும் விதிமுறை ஆய்வு (item and process), சேர்க்கை முறை ஆய்வு (item and arrangement) என்ற இரண்டு நிலைகளுக்குள் அடக்குவர்.

## 1.3.1. விதிமுறை ஆய்வு

ஒரு மொழியில் காணப்படுகின்ற மாற்றுருபுகள் விதிகளைப் பயன்படுத்தி பெறப்படும்போது அவை விதிமுறை ஆய்வு எனப்படும். நீ என்ற பெயரிலிருந்து நின் என்ற உருபு விதிகளின் துணைகொண்டு பெறப்படுகிறது. இப்படி மாற்று வடிவங்களை விதிகளின் மூலம் வருவித்துக் கொண்டால் உருபனியலில் மாற்றுருபுகளைக் குறிப்பிட அவற்றின் வருகை முறையினை எடுத்துக் கூறத் தேவையில்லை. ஆனால் விதிமுறை ஆய்வு உருபனியலில் வரும் மாற்றுருபுகளின் எண்ணிக்கையை ஓரளவுக்குக் குறைத்து ஆய்வின் தரத்தை உயர்த்தும். ஒரே உருபனுக்கு இரண்டு மூன்று மாற்று வடிவங்கள் இருந்தால் அவற்றுள் ஒன்றை அடிப்படை வடிவாகக் கொண்டு மற்ற வடிவங்களை விதிகளின் மூலம் வருவித்துக் கொள்ள வேண்டும்.

நீ என்ற சொல்லிற்கு இரண்டு மாற்றுருபுகள் உள்ளன. நீ என்பது விதிகளின் துணை கொண்டு பெறப்படுகிறது என்றால் நின், என் என்ற இரண்டு மாற்றுருபுகளை உருபனில் இருந்து வருவித்துக் கொள்ள வேண்டும். விதிமுறை ஆய்வு இலக்கணத்தைச் சுருக்கமானதாகவும் வலிமை மிக்கதாகவும் அமைக்க உதவி செய்யும்.

## 1.3.2. சேர்க்கை ஆய்வு முறை

ஒரு மொழியில் வந்து வழங்கக் கூடிய பொருள் தரக்கூடிய தொடர்களை இந்த ஆய்வு வழியாகப் பல நுண்கூறுகளாகப் பிரித்து அந்த நுண்கூறுகளின் மாற்று வடிவங்களைக் கண்டு அவற்றின் வருகை முறையினையும் விளக்கும். இந்த ஆய்வின் மூலமாக ஒரு மொழியின் இலக்கணம் அமையும் பொழுது மாற்றுருபுகளின் எண்ணிக்கை மிகுதியாகும். அதன் விளைவாகப் புணர்ச்சி விதிகளின் எண்ணிக்கை

குறையக் கூடும். நீ, நின் என்பன மாற்றுருபுகளாகக் கொள்ளப்பட்டு அவை எச்சூழ்நிலைகளில் வருகின்றன என்பதனையும் அவற்றின் வருகை முறையும் விளக்கப்படும். நின் என்பதை நீ என்பதிலிருந்து விதிகளின் மூலம் வருவிக்க இந்த ஆய்வு இடந்தராது. இவ்வாறாக புணர்ச்சி பற்றிய விளக்கங்களையும், ஆய்வு முறைகளையும் மொழியியலார் பயன்படுத்தியதைப் பார்த்தோம். இனி மரபிலக்கண நூல்கள் புணர்ச்சி பற்றி என்ன கருத்துக்களைக் கூற விளைகின்றன என்பதனை பார்ப்போம்.

## 1.4. இலக்கணங்கள் தரும் புணர்ச்சி

'புணர்ச்சி' என்ற சொல்லிற்கு இணையான வடமொழிச்சொல் சந்தி எனப்படும். புணர்ச்சி என்பது இரண்டு சொற்களின் கூடுதல் என்று பொருள் கொள்ளலாம். இரு சொற்கள் தொடராக இணையுங்கால் உருபனிலமைந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒலியன்கள் குறைதலோ, புதிதாகச் சேர்தலோ அல்லது ஒன்றனுக்குப் பதிலாக பிறிதொன்று வருதலோ சந்தி என்பர். நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது ஏற்படும் மாற்றத்தை இவ்வாறு குறிக்கின்றனர்.

1. அகப்புணர்ச்சி
2. புறப்புணர்ச்சி
3. இயல்பு விகாரப் புணர்ச்சிகள்

நேமிநாதம், வீரசோழியம் இயல்பு, விகாரப் புணர்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன.

### 1.4.1. அகப்புணர்ச்சி

ஒரு சொல்லின் உள்ளே ஏற்படும் மாற்றம், சொற்களோடு ஒட்டுக்கள் இணையும் பொழுது ஏற்படும் மாற்றத்தை அகப்புணர்ச்சி என்கிறோம். அதாவது ஒன்றோ இரண்டோ கட்டுருபுகள் அடிச்சொல்லோடு புணர்ந்து நிற்கும் புணர்ச்சியே அகப்புணர்ச்சியாகும்.

> "....... நீ ஆமாவின் பின்னறுத - ஒற்றனையும்
> ........................."

(நேமி. சூத். 23)

ஆ + தலை > ஆன்றலை

நீ + கை > நின்கை

நீ + செவி > நின்செவி என்பனவும் வீரசோழியம்

உயிர்க் குற்றெழுத்தின் பின்னர் வருமொழி முதல் ஞ, ந, ம, வ வந்து புணர்ந்தால் இடையே அவ்வவ் வந்த ஒற்று மிக்கு முடியும். பின்னும் அவ்வுயிர்க் குற்றெழுத்தின் பின்னம் வருமொழி முதல் யகரம் வந்து புணர்ந்தால் இடையே வகரம் என்பதனை

"ஆவிக் குறிற்பின் ஞநமவத் தோன்றில் லவ் வொற்றிடையாம்
மேவிய பின்னொன்று தோன்றில் வவ் வாம்; . . . . ."

(நேமி. சூத். 27)

ஆ + ஞாலம் > அஞ்ஞாலம்

அ + நூல் > அந்நூல்

அ + மலி > அம்மலி

இச்சான்றுகள் யாவும் ஒரு சுட்டுருபுடன் தனியுருபு சேர்ந்து வரும் போது ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுவதால் இதனை அகப்புணர்ச்சிக்கு சான்றுகளாக கூறலாம்.

### 1.4.2. புறப்புணர்ச்சி

இரண்டு சொற்கள் புணரும்போது நிலைமொழியின் இறுதியில் மாற்றம் ஏற்படும் என்றால் அதனை புறப்புணர்ச்சி என்கிறோம். தனி உருபுகளாகவே புணர்ந்து நிற்கும் புணர்ச்சியே புறப்புணர்ச்சி எனப்படும்.

மரம் + காடு > மரக்காடு

அகம் + புறம் > அகப்புறம்

நேமிநாதம், வீரசோழியம் ஆகிய இரு நூல்களிலும் புறப்புணர்ச்சி பற்றிய நூற்பாக்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மகரமெய் வல்லின மெய்களோடு புணரும் போது ஏற்படும் மாற்றம் புறப்புணர்ச்சியாகக் கொள்ளப்படுகிறது.

மரம் + குரங்கு > மரக்குரங்கு

மரம் + குறிது > மரங்குறிது

இதனை

மகரந்தான் வன்மைவரின் வர்க்கத்தொற்றாகும்
புகரிலா மென்மைவரிற் பொன்று – நிகரில்
வகரம்வந் தாற்குறுகும் வவ்வழிந்து மவ்வா
மகரந் தவயவாம் வந்து (நேமி. சூத். 18)

வன்மை வந் தாற்பின்பு பத்தா முடல்வன்மை யின்வருக்கத்
தன்மைபொற் றாகும்; ஹநமக்கள் பின்வரிற் சாற்றுமப்போம்;
முன்வயற் கால்வவ் வரின்; பதின் மூன்றா முடவழியும்
பின்வயின் தவ்விரின் தவ்விங் கடை வன்மைப் பயிலுமே

(வீர. சூத். 19

இவ்வாறாக நேமிநாதம், வீரசோழியம் புணர்ச்சி பற்றி கூறியுள்ள நூற்பாக்களில் ஒன்றிரண்டு நூற்பாக்கள் தவிர அனைத்தும் தனி உருபுகள் புணர்ந்து நிற்கும் புறப்புணர்ச்சி பற்றியதாகவே காணப்படுகின்றன.

### 1.4.3. இயல்பு விகாரப்புணர்ச்சிகள்

இயல்பு புணர்ச்சி என்பது நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது ஒரு மாற்றமும் இல்லாமல் இயல்பாய் முடிதல் இயல்பு புணர்ச்சியாகும்.

சான்று,

ஒளி + விளக்கு > ஒளிவிளக்கு

' . . . . . . . . . . . . . . . . பெயர்த்தியல்பு சந்தி

இணைந்தபடி யேமுடியு மேய்நது" (நேமி. சூத். 15)

நேமிநாதம் இயல்பு சந்தியாவன தத்தம், கிடப்பிலே கிடக்கும் என்றும் இயல்பு புணர்ச்சியைக் குறிப்பிடுகின்றது.

நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் ஒன்றோடொன்று புணரும்போது தோன்றல், திரிதல் கெடுதல் என்ற மூன்று விகாரங்கள் வரப்பெறும். இதனை விகாரப்புணர்ச்சி என்றும், நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் திரியாமல் இயல்பாய் முடிதல் இயல்பு புணர்ச்சி என்றும் வீரசோழியம், நேமிநாதம் ஆகியன குறிப்பிடுகின்றதை

நின்றசொல் லீறும் வருஞ்சொன் முதலும் நிரவித்தம்முள்
ஒன்றிடும் போதும் ஒரேமொழிக் கன்னு முககிற்கொப்பி
னன்றிய மும்மை விகாரம்வந் தெய்திடும்; நன்கியல்பிற்
குன்றுத லின்றி வருதலு முண்டென்று கூறுவரே

(வீர. சூத். 9)

குவளை + மலர் > குவளைமலர்
தவளை + வாய் > தவளைவாய் – இயல்பு புணர்ச்சி
பனை + காய் > பனங்காய் – கெடுதல்
முள் + குறை > முட்குறை – திரிதல்
விள + குறிது > விளக்குறிது – தோன்றல்

## 1.5. உருபொலிமாற்றங்கள்

உருபன்கள் ஒன்றோடொன்று புணரும்போது நேரும் உருபொலி மாற்றங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. முறைப்படுமாற்றம், முறையல்லா மாற்றம்
2. இயல்புமாற்றம், இயல்பல்லா மாற்றம்
3. முழுமாற்றம்
4. ஒலித்திரிபுகள்
5. ஒரினமாதல்

### 1.5.1. முறைப்படுமாற்றம், முறையல்லா மாற்றம்

ஒலி மாற்றம் பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வருமாயின் அதனை முறைமாற்றம் என்கிறோம். நேமிநாதம், வீரசோழியம் புணரியல் விதிகளை வகுக்கும் பொழுது பெரும்பான்மைச் சொற்களுக்குப் பொருந்தி வருபனவற்றையே வரையரைச் செய்கின்றது.

அ, ஆ, உ, ஊ, எ, ஏ என்னும் ஆறு உயிரும் நிலைமொழி ஈற்றில் நிற்க வருமொழி முதலில் ஏதேனும் ஒரு உயிர்வரின் நடுவே வகர ஒற்று தோன்றும் என்று நேமிநாதமும், வீரசோழியமும் குறிப்பிட்டுள்ளன. இவ்விதி பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வருவதால் இதனை முறைப்படு மாற்றமாகக் கொள்ளலாம்.

இவ்விதிக்கு மாறாக ஆ + இரு > ஆயிரு என யகர உடம்படுமெய் பெறுவது முறையல்லா மாற்றமாகும்.

### 1.5.2. இயல்பு மாற்றம், இயல்பல்லா மாற்றம்

ஒவ்வொரு மொழிக்கும் ஒலிகள் தொடர்வதில் தனித்தனி இயல்புண்டு. இவ்வியல்பிற்கு ஏற்ப உருபுகள் சேருங்கால் ஒலிமாற்றம் பெறுவது இயல்பு மாற்றமாகும்.

வகரமெய் வல்லினத்தோடு புணரும்போது ஏற்படும் மாற்றங்களை இயல்பு மாற்றத்திற்குக் கூறலாம். இதனைத் தொடர்ந்து ணகர ஈற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால் ளகரம் டகரமாகும்.

Øs + Ïû\ > முட்குறை
முள் + கரிது > முட்கரிது

தமிழில் உயிரின்முன் உயிர் வருதல் இல்லை. அவ்வாறு வரின் இ, ஈ, ஐ வழி யவ்வும், ஏனை உயிர்வழி வவ்வும் வருதல் வேண்டும். இதற்கு மாறாக கோ + இல் > கோயில் என யகரம் உடம்படுமெய் பெற்று வருவதனை இயல்பல்லா மாற்றமாகக் கொள்ளலாம். வீரசோழியத்தில் ஏகாரவீற்று நிலைமொழிக்குப் பின்னர் வருமொழி உயிர் முதலாகிய சொல் வந்து புணர்ந்தால் யகர, வகர ஒற்றுக்கள் இரண்டும் வரும் என்று கூறப்படுகிறது.

சே + அடி > சேயடி,
* சேவடி

### 1.5.3. முழுமாற்றம்

சில நேரங்களில் ஓர் உருபோடு, பிறிதோர் உருபு சேரும்போது முற்றிலுமே மாற்றமடைதலுண்டு. இதனை முழுமாற்றம் என்பர். நேமிநாதம், வீரசோழியம் குறிப்பிடும் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி விதிகளை முழுமாற்றத்திற்குச் சான்றாகக் கூறலாம்.

நான்கு + நூறு > நானூறு
ஐந்து + நூறு > ஐந்நூறு
ஆறு + நூறு > ஆறுநூறு

என்பது போல் ஒன்பது + நூறு > தொல்நூறு என்று வராமல் தொள்ளாயிரம் என்று வருவது முழுமாற்றமாகும். இதே போன்று ஒன்பது + பத்து > தொண்ணூறு என்பதும் முழுமாற்றமாகும்.

### 1.5.4. ஒலித்திரிபுகள்

நிலைமொழியும், வருமொழியும் சேர்ந்து புணரும் பொழுது சில மாறுதல்கள் நிகழ்கின்றன. இவ்வாறு நிகழும் மாறுதல்கள் 'ஒலித்திரிபுகள்' எனப்படும். இத்தகைய ஒலித்திரிபுகளை உருபொலி மாற்றங்களாகக் கொள்ளலாம்.

## 1.6. முடிவுரை

தமிழ்மொழியின் அமைப்பினை விவரிக்கின்ற மரபு நூல்கள் கூறும் புணர்ச்சி மாற்றத்தை மொழியியலார் உருபொலி மாற்றம் என்று வரையறுக்கிறார்கள். புணர்ச்சி என்ற தமிழ்ச்சொல் வடமொழியில் சந்தி என்று அழைக்கப்படுகின்றது. இதனை மொழிநூலார் 'இணைவு' என்கின்றனர். உருபுபொலியன் பற்றிய விளக்கங்களையும் அவற்றின் முறைகளையும் மொழியியல் நோக்கில் விதிமுறை ஆய்வு, சேர்க்கைமுறை ஆய்வு என்ற இரு நிலையில் ஆராயப்படுகிறது. மரபு இலக்கண நூலான நேமிநாதம் புணர்ச்சியின் பொது இலக்கணத்தை வரைகிறது. நேமிநாதம், வீரசோழியம் இயல்பு விகாரப் புணர்ச்சிகளை முன்வைக்கிறது. உருபொலி மாற்றங்களாக இயல்பு மாற்றம் தொடங்கி ஓரினமாதல் வரையிலான ஐந்து மாற்றங்கள் குறித்து இக்கட்டுரையில் நேமிநாதம், வீரசோழியம் நூற்பாக்கள் துணை கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

1. மரபு இலக்கண நூல் காட்டும் புணர்ச்சி என்ற அமைப்பினை மொழிநூலார் உருபொலியனியல் என்று வரையறுக்கிறார்கள்.

2. புணர்ச்சி என்ற சொல்லிற்கு இணையான சொல்லாகச் சந்தி என்ற சொல் வடமொழியில் கையாளப்படுகிறது. மற்றும் மொழியியலார் இணைவு என்று வரையறுக்கின்றனர்.

3. உருபொலியனியல் அடிப்படையில், உருபன்களை மொழியியல் நோக்கில் ஆய்வு நிகழ்த்தும் பொழுது இருவகையான ஆய்வு நிலைக்குள் உட்படுகின்றன. அவை முறையே 1. விதிமுறை ஆய்வு, 2. சேர்க்கை முறை ஆய்வு எனப்படும்.

4. விதிமுறை ஆய்வு ஒரு மொழிக்கு வலுவான இலக்கணத்தை அமைக்க உதவுகிறது. சேர்க்கை முறை ஆய்வு வேற்றுமொழி இலக்கணத்தை அறிய உறுதுணை புரிகின்றது.

5. சொற்களைப் பகுக்குங்கால் கிடைக்கின்ற மிகச்சிறிய பொருட் கூற்றினை உருபு எனலாம். உருபன்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது ஒலியன்கள் இணைந்த பொருள் தரும் அசைகளாக மாறும்போது அவை உருபன்களாகும்.

6. உருபொலி மாற்றங்களாகக் கொள்ளப்படும் உருபன் அமைப்பு முறைமையின் மரபுநூல் காட்டும் புணர்ச்சி பற்றிய செய்தியை நேமிநாதம், வீரசோழியம் நூற்பாக்கள் துணைகொண்டு ஆராயப்பட்டுள்ளது.

## துணைநூற்பட்டியல்


அகத்தியலிங்கம், ச., 2002 *தமிழ்மொழி அமைப்பியல்,* மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்.

இன்னாசி, சூ., 1993 *சொல்லியல்,* தமிழரசன் பதிப்பகம், பாளையங்கோட்டை.

ஜான்சாமுவேல், ஜி., 1978 *திராவிட மொழிகளின் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம்,* மாதவி பப்ளிகேஷன்ஸ், சென்னை.

கோதாண்டராமன், பொன்., 1994 *இலக்கண உலகில் புதிய பார்வை - தொகுதி - 2,* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் வெளியீடு, அம்பத்தூர், சென்னை.

முத்து சண்முகம் 1977 *இக்கால மொழியியல்,* மதுரை பப்ளிகேஷன்ஸ் ஹவுஸ், மதுரை.

Charles F. Hockett, 1958 *A Course in Modern Linguistics,* The Macmillan Company, New York.



தே. பாக்கியம்
ஆய்வு மாணவர்,
மொழியியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# மொழி நுண்தேர்வு ஆய்வு : ஒரு கண்ணோட்டம்

- மு. பாலகுமார்

கற்றல், கற்பித்தல், மதிப்பிடல் ஆகிய மூன்றும் மனித வாழ்வு தொடங்கிய போதே தோன்றிவிட்ட மாந்தர் பண்பியல்புகளாகும். ஒன்றைக் கற்பதும் கற்பிப்பதும் மதிப்பிடுவதும் மனித வாழ்வில் அன்றாடம் நிகழும் செயல்பாடுகள். இம்மூன்று செயல்பாடுகளும் இன்று கல்வித்துறையில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இன்றியமையாத கூறுகளாய்ப் பரிணாமம் பெற்றுவிட்டன. ஆயினும் கற்றலும் கற்பித்தலும் பெற்றுவிட்ட தகுதிநிலையை மதிப்பிடல் இன்னும் பெறவில்லை. ஒரு செம்மையான கல்விக்குத் தரமான கற்றல், கற்பித்தல் கொள்கைகள், நெறிமுறைகள் எப்படி இன்றயமையாதனவோ, அதைப் போலவே தரமான மதிப்பீட்டுக் கொள்கைகளும் நெறிமுறைகளும் இன்றியமையாதனவாகும். இவற்றில் ஏதேனும் ஒன்றை மறுதலித்து விட்டு முழுமையான பலனைப் பெற முடியாது. மதிப்பீட்டுக் கொள்கைகளும் அதன் நெறிமுறைகளும் அனைத்து அறிவுத்துறைகளுக்கும் பொதுவானவையாகும். பிற துறைகளைப் போலவே மொழித் துறைகளிலும் மதிப்பீட்டின் பயன்பாடுகள் பல்கிப் பெருகி விட்டன. இன்று மொழி நுண்தேர்வுகள் (language tests) பல நோக்கங்களுக்காக நடத்தப்படுகின்றன. குறிப்பாகப் பணியாளர் சேர்க்கைக்கும், உயர்கல்வியில் சேர்வதற்கும், பதவி உயர்வுக்கும் தேவையான மொழித் தேர்ச்சித்திறம் (language proficiency), மொழி அறிவு, மொழித்திறன் (language skill) தேர்வர்களுக்கு உள்ளதா என்றெல்லாம் அறிந்துகொள்ள மொழி நுண்தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்நிலையில் மொழிக் கல்வியில் மதிப்பீடும் நுண்தேர்வும் (evaluation & testing) எவ்வாறு அமைகின்றன என்பதை அறிந்து கொள்வது பெரிதும் அவசியமாகிறது. அந்த நோக்கில், இந்தக் கட்டுரை மதிப்பீடு பற்றியும் மொழி நுண்தேர்வு பற்றியும் மிகச் சுருக்கமாக விளக்க முற்படுகிது.

## மதிப்பீடும் நுண்தேர்வும் ஒரு விளக்கம்

மதிப்பீட்டுத் துறையின் நுண்மான் நுழைபுலம் அறிவுத் துறைகளின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக நிற்பதைப் பல ஆய்வு

முடிவுகள் தெள்ளத் தெளிவாக அறிவிக்கின்றன. மேலைநாடுகளில் பெரிதும் தேவையென்று கருதப்படும் மதிப்பீட்டுத் துறை தன் உன்னதத் தன்மையோடு இங்கு இன்னும் கால்கொள்ளவில்லையென்பது கவலைக்குரியதாகும். மதிப்பீடு செய்வதற்கும், அதற்குரிய தேர்வு / நுண்தேர்வுகளுக்குத் தேவையான வினா உருக்களைத் (question items) தயாரிப்பதற்கும், மதிப்பெண் அளிப்பதற்கான வழிமுறைகளை (scoring protocal) வகுப்பதற்கும் எந்தவிதப் பயிற்சியும் வரையறைகளும் தேவையில்லையென்ற மனப்பாங்குதான் நம்மிடையே நிலவுகிறது. இந்த மனநிலை நீடிப்பதால் மதிப்பாளர்களுக்குத் தக்கவாறு மதிப்பீடும் மதிப்பெண்களும் மாறுகின்றன. அதனால் தான் நமது நாட்டுக் கல்வித் துறையின் சீர்திருத்தங்களுக்காக அமைக்கப்பட்ட பல நிபுணர் குழுக்கள் தேர்வு முறையில் மாற்றங்கள் தேவையென்பதை ஒவ்வொரு முறையும் பரிந்துரைத்தன. சில மாற்றங்கள் அவ்வப்போது செய்யப்பட்டன என்றாலும் அவற்றால் நமது மதிப்பீட்டு முறை பெரும் மாற்றங்களைப் பெற்றுவிட்டது என்றோ, முழுவதும் நம்பத்தக்கதாக மாறிவிட்டது என்றோ அறுதியிட்டுக் கூற முடியவில்லை. அதற்குக் காரணம் மதிப்பீடு, நுண்தேர்வு பற்றிப் போதுமான விழிப்புணர்வு நம்மிடையே இல்லை என்பதுதான். ஒவ்வொரு ஆசிரியருக்கும் கல்வியாளருக்கும் கற்றல், கற்பித்தல் கொள்கைகள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்பதைப் போலவே மதிப்பீட்டுக் கொள்கைகளும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை இங்கு வேறுவிதமாக இருக்கிறது. இந்த நிலையை நாம் ஓரளவாவது மாற்றியாக வேண்டும்.

மதிப்பீடு பற்றி அறிந்து கொள்ளும் போது அதன் தொடர்புடைய சில கலைச்சொற்களையும் அவற்றின் விளக்கங்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது பெரிதும் இன்றியமையாததாகும். குறிப்பாக கணக்கீடு (measurement), அளவீடு (assessment), தேர்வு (examination), நுண்தேர்வு (test) போன்றன பற்றி நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். கணக்கீடு என்பது ஒரு குறிப்பிட்ட கல்வி பயிலலில் ஒருவருடைய செயல்திறனுக்கு அளிக்கப்படும் மதிப்பெண்ணைக் குறிப்பதாகும். அளவீடும் மதிப்பீடும் ஏறத்தாழ ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் இரண்டிற்கும் சில வேறுபாடுகள் உண்டு. அளவீடு என்பது மதிப்பிடுவதற்கு ஏற்றவாறு பல தகவல்களைக் கணக்கீட்டின் அடிப்படையில் திரட்டித் தரும் செயல்பாடு எனலாம். அதாவது மதிப்பீட்டிற்கு அடிப்படையாக அமைவது அளவீடு. மதிப்பீடு

என்பது அளவீடு திரட்டித் தரும் கூறுகளைக் கொண்டு ஒன்றைப் பற்றிய ஒரு தீர்மானப் புள்ளியை எட்டும் நிலைப்பாடு; அளவீடு மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டு ஒருவரின் / ஒன்றின் தரத்தை நிர்ணயிக்கும் செயல்முறை; ஒரு திட்டத்தின் முன் வரைவின் போது, முன்னரே நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியிலக்குகள் எந்த அளவிற்கு எட்டப்பட்டுள்ளன என்பதை முறையாகக் கண்டறியும் அணுகுமுறை எனச் சொல்லலாம். அளவீட்டிற்கு உரிய தகவல்களைத் தருவது தேர்வு மற்றும் நுண்தேர்வு என்ற அளவுகோல்களாகும். இவ்விரண்டும் ஒரே பொருளில் வழங்கப்பட்டு வந்தாலும் இவற்றிற்கிடையேயும் சில நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. தேர்வு என்பது பெரிய அளவிலானது; பல கூறுகளையும் பலதரப்பட்ட வினா உருக்களையும் கொண்டது. நுண்தேர்வு என்பது சிறிய அளவிலானது; குறிப்பிட்ட சில கூறுகளையும் ஒரே தன்மையைக் கொண்ட வினா உருக்களையும் கொண்டது. ஆனால் தேர்வும் நுண்தேர்வும் பல நேரங்களில் ஒன்றையே குறிக்கின்றன. கற்பித்தல் முடிந்த பின்பு மாணவர்களின் கற்றல் நிலையையும் அவர்கள் பெற்றிருக்கின்றன அடைவு நிலையையும் அறிய நுண்தேர்வுகள் வாரம்/ மாதம் ஒரு முறையும், தேர்வுகள் பருவ நிலைகளிலும் ஆண்டுக்கொரு முறையும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடத்தப்படுவதை நாம் அறிவோம்.

ஒவ்வொரு அறிவுத்துறைகளையும் போலவே மதிப்பீட்டுத் துறையும் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்திருக்கிறது. காலத்திற்கேற்ப மாற்றங்களைப் பெறாத துறை முன்னோக்கிச் செல்ல முடியாது என்பது நடைமுறை. ஒவ்வொரு நாடும் மனித சமுதாயமும் தங்களுக்கேற்ற கற்றல், கற்பித்தல் கொள்கைகளையும் நெறிமுறைகளையும் வரையறை செய்து கொண்டதைப் போலவே மதிப்பீட்டு முறைகளையும் வரையறை செய்துகொண்டுள்ளன. மதிப்பீட்டுக்கெனத் தேர்வுகளையும் நுண்தேர்வுகளையும் வடிவமைத்துக் கொண்டுள்ளன. மாணவர்கள் பெற்றுள்ள அறிவை, தேர்ச்சியை, வளர்ச்சியை, அடைவை அறிந்து கொள்வதற்குத் துணைசெய்யும் அளவுகோல்களாகத் தேர்வுகளும் நுண்தேர்வுகளும் பல காலங்களாகச் செயல்பட்டு வந்திருக்கின்றன. கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் முறையாக அமையும்போது எவ்வாறு பயனுள்ள வகையில் அமைகின்றனவோ அதைப் போலவே முறையாக அமையும். மதிப்பீடும் பயனுள்ள வகையில் அமைகிறது. மதிப்பீடு தரும் முடிவுகளைக் கொண்டு மாணவர்களின் வளர்ச்சி / அடைவு கண்டறியப்படுவதோடு கற்றலில், கற்பித்தலில் ஏதேனும் மாற்றங்கள்

தேவையா என அறியவும் முடிகிறது. மதிப்பீட்டின் நுட்பங்கள் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருவதோடு அத்துறைகளின் வளர்ச்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலையும் செய்கின்றன என உறுதியாகக் கூறமுடியும்.

மொழி கற்பித்தலின் பயிற்று முறைகள் மாற்றம் பெற்று வந்துள்ளதைப் போலவே மொழி மதிப்பீட்டு முறைகளும் மாற்றம் பெற்று வந்திருக்கின்றன. மொழி அறிவு, மொழி வளர்ச்சி, மொழித்திறன் போன்றவற்றின் நிலையைக் கண்டறிய உருவாக்கப்பட்ட மொழி நுண்தேர்வியல் (language testing) மொழி கற்றலை மதிப்பிடுவதில் இன்று பெரிய இடத்தைப் பிடித்து விட்டது. இன்று மொழி நுண்தேர்வியல் நுட்பங்கள் தாய்மொழி கற்றலை மதிப்பிடுவதிலும் இரண்டாம் மொழி கற்றலை மதிப்பிடுவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. மொழி கற்பித்தலின் நோக்கம் சரிவர நிறைவேறியுள்ளதா; மாணவர்கள் எதிர்பார்த்த வளர்ச்சி நிலையை எட்டிப்பிடித்து விட்டார்களா; அவர்கள் பெற்றுள்ள நிலையென்ன; எதில் பின்தங்கியுள்ளார்கள்; அதற்கான காரண காரியங்கள் என்னென்ன; அவற்றைச் சரிசெய்வதற்கான வழிமுறைகள் யாவை; கற்பித்தல் முறைகளில் மாற்றங்கள் தேவையா எனக் கண்டறிந்து அவற்றிற்கான திட்டங்களை உருவாக்கவும், மொழி நுண்தேர்வு பெரிதும் உறுதுணையாகச் செயல்படுகிறது. மொழியியல் துறை அறிமுகப்படுத்தப்பட்டு நிலைபெற்ற பின்னர் மொழியை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதும், கற்பிப்பதும், மதிப்பீடு செய்வதும் துரிதமாக நடைபெற்றன. மொழியியலின் பயன்பாடு மொழி கற்பித்தலில் ஏற்படுத்திய மாற்றங்களைப் போலவே மொழி நுண்தேர்வியலிலும் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. அம்மாற்றங்கள் என்னென்ன, அவற்றின் காரணமாய் மொழி நுண்தேர்வு ஆய்வுகள் எவ்வாறு அமைந்தன என்பதை இனிக் காண்போம்.

## மொழி நுண்தேர்வு : தொடக்கம் முதல் இன்று வரை

முதன் முதலில் மொழித் துறையில் மதிப்பிடல் என்பது மற்ற துறைகளைப் போலவே சிறிய அளவில் தொடங்கியது. மொழியைக் கற்பிப்பது முதன் முதலில் இலக்கியம் கற்பிப்பதாகத்தான் அமைந்தது. கற்பித்தல் கூறுகள் எதுவோ அதுவே தேர்வு நுண்தேர்வு செய்வதற்குரிய கூறுகளாகும் என்பது மதிப்பீட்டுக் கோட்பாடு. எனவே முதன் முதலில் மொழித்தேர்வு என்பது இலக்கியம் பற்றியதாகவே அமைந்திருந்தது

எனலாம். அதுவும் வாய்மொழித் தேர்வாக மட்டுமே இருந்தது. மாணவர்களை மதிப்பீடு செய்வது ஆசிரியர்களின் உள்ளுணர்வுகளின் (intuitive) அடிப்படையிலும் அகவய (subjective) நோக்கிலும் அமைந்திருந்தது. தேர்வுமுறைகள் ஏதும் வகுக்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்பத் தேர்வுகளை அமைத்துக் கொண்டனர். இந்நிலையில் மதிப்பிடுவதும் ஒரே மாதிரியாக அமையாமல் ஆசிரியரின் மனநிலைக்கேற்பவே அமைந்தது. அன்றைய காலத்தில் மொழிக்கல்வி என்பது இலக்கியக் கல்வியாக அமைந்ததால் கற்றுத் தரப்பட்ட இலக்கியங்களை மாணவர்கள் மனனம் செய்ய வேண்டியிருந்தது. கேட்கப்படும் செய்யுட்பாக்களை அப்படியே ஒப்பிக்க வேண்டிய நிலையிலும் மாணவர்கள் இருந்தனர். இப்படித்தான் மாணவர்களின் மொழி கற்றல் பற்றிய மதிப்பீடு முதன் முதலில் வாய்மொழி (oral) நுண்தேர்வாக அமைந்தது.

மொழி / மொழி கற்பித்தல் பற்றிய கருத்தியல்கள் மாற்றம் பெறத் தொடங்கின. மொழி கற்பது என்பது இலக்கியம் கற்பது மட்டுமல்ல, மொழிக் கூறுகளையும் இலக்கணக அமைப்புக்களையும் கற்பது என்ற நிலை ஏற்பட்டது. மொழிக்கல்வி, இலக்கியம் கற்பதோடு மட்டுமல்லாமல் மொழியின் இலக்கணத்தை அறிவது என்ற நிலையையும் சேர்த்துக் கொண்டது. ஆசிரியர்கள் மொழியின் அனைத்துக் கூறுகளையும் கற்பிப்பதில் ஆர்வம் காட்டினர். மொழி கற்பித்தல் முறையாக நடக்க வழிவகை செய்யப்பட்டது. ஆசிரியர்கள் கற்பித்தலில் காட்டிய கவனத்தைத் தேர்வு/ நுண்தேர்விலும் காட்டத் தலைப்பட்டனர். வாய்மொழி மதிப்பீடாக இருந்த நிலை காலப்போக்கில் எழுத்துத் தேர்வாக மாறத் தொடங்கியது. எனினும் தேர்வுகள், அகவய நோக்கிலேயே அமைந்தன. தேர்வு / நுண்தேர்வு தயாரிப்பதில் போதிய பயிற்சிகள் இல்லாத நிலையில் ஆசிரியர்கள் தங்கள் விருபத்திற்கேற்பவே தேர்வு முறைகளை அமைத்து வந்தனர். தேர்வுகள், மொழி பற்றிய உண்மைகளை அறியும் தேர்வுகளாகவே அமைந்தன. மாணவர்கள் மொழியின் இலக்கணக் கூறுகளையும், விதிகளையும், வாக்கிய அமைப்புக்களையும் மனனம் செய்ய வேண்டிருந்தது. தேர்வில் சிறு கேள்விகள், கட்டுரைகள் கேட்கப்பட்டன. கேட்டெழுதல் (dictation) முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் ஒரு பத்தியை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்ப்பதும் தேர்வின் ஓர் அங்கமாக இருந்தது. மாணர்வகள் மனனம் செய்யும் நிலையிலிருந்து விடுபடவில்லை.

அறிவியல் வளர்ச்சி மனித வாழ்வின் பல தளங்களில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றங்கள் மொழித் துறைகளையும் விட்டுவிடவில்லை. மொழி கற்றல், கற்பித்தலில் மாற்றங்கள் ஏற்பட்டதைப் போலவே மதிப்பீட்டுத் துறையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு அமையத் தொடங்கியது. நுண்தேர்வு செய்வதிலும், மதிப்பிடலிலும் கவனமான அணுகுமுறை ஏற்பட்டது. இதற்குப் பின்னர் அகவயத் தன்மை வினாக்களுடன் புறவயத்தன்மை (objective) வினாக்களும் கேட்கப்பட்டன. பலவுள்தெரிவு (multiplc choice) போன்ற புறவயத்தன்மை வினாக்கள் தேர்வுத்தாள்களில் பெரிதும் இடம் பெற்றன. மதிப்பீடு செய்வதும் எளிதாக இருந்தது. மொழி நுண்தேர்வை அறிவியல் நோக்கில் பார்க்க அறிஞர்கள் முற்பட்டனர். மொழியியல் துறை ஏற்படுத்திய தாக்கத்தால் மொழி நுண்தேர்வு செய்வதும் அறிவியல் அடிப்படையில் அமையத் தொடங்கியது. மொழியை நுண்தேர்வு செய்யவேண்டுமெனில் 'மொழியைச் சிறுசிறு கூறுகளாகப் பகுத்துக்கொள்ள வேண்டுமென்றார்' டேவிஸ் (Davies : 1978). இந்த நிலையில் மொழியின் சிறு கூறுகளை நுண்தேர்வு செய்யும் வினா உருக்கள் உருவாக்கப்பட்டன. அதனால் ஒவ்வொரு கூறுகளையும் நுண்தேர்வு செய்யும் வினா உருக்கள் உருவாக்கப்பட்டன. அதனால் ஒவ்வொரு கூறுகளையும் நுண்தேர்வு செய்யும் தனிநிலைக் கூறு அணுகுமுறை (discrete point approach) கையாளப்பட்டது. மொழியின் கூறுகளைத் தனித்தனியே நுண்தேர்வு செய்வது அதிக நேரத்தை எடுத்துக் கொள்கிறது; அனைத்துக் கூறுகளையும் நுண்தேர்வு செய்வது என்பது சாத்தியமற்றது என்ற நிலையில் மொழிக் கூறுகளை ஒருங்கிணைத்து நுண்தேர்வு செய்யும் ஒருங்கிணைப்பு அணுகுமுறை (integrated approach) அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் அடிப்படையிலும் நுண்தேர்வுக் கூறுகள் அமையத் தொடங்கின.

மொழி கற்பதன் நோக்கங்கள் மாறி வந்துள்ளதைப் போல் மொழி மதிப்பீட்டு நோக்கங்களும் மாறி வந்துள்ளன. இன்று மொழி கற்பது கருத்து பரிமாற்றத்திற்கு என்ற நிலையில் மொழி மதிப்பீடு செய்வதும் கருத்துப் பரிமாற்ற நிலையைக் கண்டறியும் மொழி நுண்தேர்வாக (communicative language testing) அமையத் தொடங்கியது. அதனால் மொழி நுண்தேர்வு செய்தவற்கான வினா உருக்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கான சூழல் கூறுகளைக் கொண்டு அமைந்தன. மொழி இலக்கணம் பற்றிய

வினா உருக்களுடன் மொழித் திறன்களை அறியும் வினா உருக்களையும் கொண்ட வினாத் தொகுப்புகளாக நுண்தேர்வுகள் அமைந்தன. ஒரு மொழியை ஒருவர் எப்படிப் பேசுகிறார், சூழல் நடப்புக் கேற்ற வண்ணம் ஒருவரின் வழக்காடல் எப்படி அமைகிறது என்ற நுணுக்கமான கூறுகள் மொழி நுண்தேர்வுகளின் கூறுகளாய் அமைந்து விட்டன. அகவய வினாக்கள் மற்றும் புறவய வினாக்கள் என்ற இரண்டையும் உள்ளடக்கிய வினா உருத் தொகுப்புகளும் நிலைபெற்று விட்டன. ஒரு மொழியை அறிந்திருப்பது அந்த மொழியின் நுண்கூறுகளையும் பெரும் கூறுகளையும் அறிந்திருப்பதோடு சூழலுக்கேற்ப மொழி வழக்காடும் நிலையைக் கொண்டது என்றும் உணரப்பட்டதால் அதற்கேற்ப நுண்தேர்வு முறைகள் அமைந்தன. இவ்வாறு மொழி நுண்தேர்வு முறை பல நிலைகளைக் கடந்து விட்டது. இன்று கணினி சார்ந்த நுண்தேர்வுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

## மொழி நுண்தேர்வு ஆய்வின் வளர்ச்சி நிலை

மொழியியலறிஞர்கள் மொழி கற்பிப்பதையும் அதற்கான பாடநூல்களை உருவாக்குவதையும் அறிவியல் கண்ணோட்டத்தில், 'எளிதிலிருந்து கடினத்திற்கு' என்ற நிலையில் அமைக்கத் தொடங்கினர். மொழியைப் பற்றிய நுணுக்கமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொழியியலின் தாக்கத்தால் மொழி கற்றல் எவ்வாறு முறைப்படி அமைந்ததோ அது போன்றே மொழி நுண்தேர்வு செய்வதும் முறைப்படி அமைந்தது. மொழியின் கூறுகளை நுண்தேர்வு செய்வதற்கான வரைமுறைகள் வகுக்கப்பட்டன. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மொழி நுண்தேர்வில் குறிப்பிடத்தக்க பல்வேறு ஆய்வு முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. இராபர்ட் லேடோ (Robert Lado : 1961 - Structuralist Views and Approaches) வெலேட்டா (Valettle : 1967 - Fluency Testing), ஆல்ட்ர்சன் மற்றும் ஹியூசிஸ் (Alderson & Hughes : 1981 - Factor Analysis), பேஸ்மன் (Bachman : 1980 : Multimethod Multitrait Procedure for Integrative Test & Structure Factor Analysis of Language Ability). ஹென்னிங் (Henning : 1987 - Statistical analysis & Item response theory) ஆகியோர் மொழி நுண்தேர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய தங்கள் கருதுகோள்களை அளித்துள்ளனர். இராபர்ட் லேடோ, வெலேட்டா, ஒல்லர், ஆல்டர்சன், ஹியூசிஸ், ஹென்னிங், பேஸ்மன், ஸ்பால்ஸ்கி, டேவிஸ், ஆலன் டேவிஸ், கரோல், மாட்சன்,

வீ, போர்ட்டல் போன்றோர் மொழி நுண்தேர்வின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க நூல்களை எழுதினர். இந்த நூல்கள் மொழியாசிரியர்களிடையேயும் மொழி நுண்தேர்வு ஆய்வாளர்களிடையேயும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. மொழியியலின் வளர்ச்சியும் பயன்பாட்டு மொழியியலின் தாக்கமும் மொழி கற்பித்தலில் பயன் தந்ததைப் போலவே மொழி நுண்தேர்விலும் பயன் தந்தன. அதன் விளைவாக மொழி நுண்தேர்வுகள் மேலும் முறைப்படுத்தப்பட்டன. இவை மட்டுமல்லாது மொழியின் ஒவ்வொரு திறன்களையும் நுண்தேர்வு செய்வதற்கான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இலக்கண அறிவைக் கண்டறிவதே முக்கியமான நுண்தேர்வுக் கூறாய் அமைந்திருந்த நிலையில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற திறன்களும் மொழி நுண்தேர்வுக்குரிய கூறுகளாக இடம்பெற்றன. மொழியை முதல் மொழியாக அல்லது இரண்டாம் மொழியாகப் பயில்வது என்பது மொழிக் கூறுகளை அறிந்து கொள்வதற்கு மட்டுமல்லாது மொழித் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்காக என்ற நிலை வலுப்பெற்றது. கற்றல்/ கற்பித்தல் நடவடிக்கைகள் அறிவியல் நோக்கோடு அமையும் போது மொழித்திறன்களை வளர்ப்பதும் தகுந்த மதிப்பீட்டு அளவுகோல்களை உருவாக்குவதும் எளிதானது எனவும் உணரப்பட்டது. மொழி நுண்தேர்வு ஆய்வுகள் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பெரிதும் நடைபெற்றன. அந்தந்த நாட்டு மொழி நுண்தேர்வு வல்லுநர்கள் ஒன்று கூடி மொழி நுண்தேர்வை எவ்வாறு அமைப்பது என்றெல்லாம் விவாதித்து முடிவு செய்தனர். மேலும் மொழி நுண்தேர்வு அமைப்புக்களையும் உருவாக்கினர். 1967–ஆம் ஆண்டு அமெரிக்காவில் மொழி நுண்தேர்வாய்வுக் கருத்தரங்கு (Language testing research colloquium) நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஜெர்மனியிலும் (1979), இஸ்ரேலிலும் (1983), சோவியத் யூனியினிலும் (1983) மொழி நுண்தேர்வுக் கருத்தரங்குகளும், மொழி நுண்தேர்வு அமைப்புக்களும் உருவாயின. மொழி நுண்தேர்வு வல்லுநர்கள் அவ்வப்போது கூடி தங்கள் ஆய்வுகள் பற்றி விவாதித்துக் கொண்டனர். 1990–ஆம் ஆண்டு மொழி நுண்தேர்வு ஆய்வில் முக்கியமான ஆண்டாகக் கருதப்படுகிறது. இந்த ஆண்டில் நடத்தப்பட்ட 12–ஆம் மொழி நுண்தேர்வு ஆய்வுக் கருத்தரங்கு மைக்கேல் கனாலேயின் நினைவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கு சர்வதேச மொழி நுண்தேர்வுக் கழகம் (International Language Testing Association - ILTA) என்ற அமைப்பு உருவாக அடித்தளமிட்டது எனலாம்.

மொழி நுண்தேர்வு முதன்முதலில் அமைப்பு மொழியியல் சார்ந்து அமைந்தது. இராபர்ட் லேடோ, சார்லஸ் சி. பிரைஸ் (Charles C. Fries), டேவிட் பி. ஹாரிஸ் (David. P. Harris) போன்றோர் மொழி நுண்தேர்வின், முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். இவர்களின் அணுகுமுறை தனிநிலைக் கூறு என்ற அடிப்படையில் மொழியின் கூறுகளைத் தனித்தனியே நுண்தேர்வு செய்வதாக இருந்தது. இவர்கள் ஒவ்வொரு மொழிக் கூறுகளையும் தனித்தனியாக நுண்தேர்வு செய்ய வலியுறுத்தினர். ஜான் கரோல் (John Carroll), பீட்டர் ஸ்டீவன்ஸ் (Peter Stevens), ஆலன் டேவிஸ் (Alan Davies) போன்றோர் இந்த அணுகுமுறையைக் குறை கூறினர். இவர்கள் இதற்குப் பதிலாக ஒருங்கிணைந்த அணுகுமுறையின் தேவையை வலியுறுத்தினர். ஒருங்கிணைந்த மொழி நுண்தேர்வுக் கூறுகள் மொழி நுண்தேர்வு எளிதாக நடைபெற ஏதுவாக அமைகின்றன என்பது இவர்களின் கொள்கையாக இருந்தது. மொழியின் தேர்ச்சித் திறம் பற்றி ஆராய்ந்த பல மொழியியலறிஞர்கள் மொழியின் கூறுகளை ஒருங்கிணைத்து நுண்தேர்வு செய்வதே எளிதானது என்றனர். ஒல்லர் (Oller : 1979), கரோல் (Carroll : 1980), பேஸ்மன் & பால்மர் (Bachman & Palmar : 1981), கனாலே & ஸ்வைன் (Canale & Swain : 1983), ஸ்பால்ஸ்கி (Spolsky : 1985) போன்றோர் மொழி நுண்தேர்வின் பல நிலைகளைப் பற்றி ஆய்வு செய்தனர். இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் தாக்கத்தால் மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் பற்றி ஆய்வு செய்யவும், மொழி நுண்தேர்வுருக்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளை வகுக்கவும் பல மொழியியலறிஞர்கள் முற்பட்டனர்.

கேட்டல் திறன் : மொழியைக் கற்றுக் கொள்வதில் கேட்டல் திறன் இன்றியமையாததாகும். கேட்டல் என்பது வெளிப்படுத்தும் செய்தியை செவி வழியில் ஏற்று / கேட்டுப் பொருள் உணர்தலைக் குறிக்கும். கேட்டலை நுண்தேர்வு செய்வது சொல்லப்பட்ட செய்தி கேட்கப்பட்ட பின்னர் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதைக் கொண்டு அமையும். ப்ரவுன் & யுலே (Brown & Yule : 1983), லாங்க் (Long : 1985), பாயெர்ஸ் & கேஸ்பர் (Faerch & Kasper : 1986), புக் (Buck : 1990), பிரிண்ட்லே & நூனன் (Brindley & Nunan 1992), ஹாலே & கார்டனி (Hale & Courtney : 1994), தாம்சன் (Thomson : 1995) போன்றோர் கேட்டல் திறனை நுண்தேர்வு செய்வதற்கான ஆய்வுகளைச் செய்து நுண்தேர்வு செய்வதற்கான நெறிமுறைகளை

வகுத்தனர். இதற்காகப் பதிவு செய்யப்பட்ட உரைகளையும் கேட்டெழுதுதல் பத்திகளையும் பயன்படுத்தினர்.

பேசுதல் திறன் : பேசுதல் என்பது கருத்து / தகவல் பரிமாற்றத்திற்காக வாய்மொழியாக மொழியைப் பயன்படுத்துவதாகும். பேசுதலை நுண்தேர்வு செய்வதென்பது சூழலுக்கேற்பக் கருத்தை வெளிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டமைவதாகும். வாய்மொழி (oral), நேர்முகம் (interview) அடிப்படையில் பேசுதல் திறன் நுண்தேர்வு செய்யப்பட்டது. ஷோஹெமி (Shohamy : 1983), டே & ஷாப்சன் (Day & Shapson : 1987), டண்டோனலி & ஹென்னிங் (Dandonali & Henning : 1990), கிளார்க் & கூர்ஸ்மண்ட் (Clark & Horshmand : 1992), ரீட் (Read : 1992), லிண்ட்பிளாட் (Lindblad : 1992), டக்ளஸ் & செலிங்கர் (Douglas & Selinkar : 1992), ஃபுல்செர் (Fulchar 1995), லும்லே & மக்னமாரா (Lumley & McNamara 1995), லசாராடன் (Lazaraton : 1996) போன்றோர் பேசுதல் திறனை நுண்தேர்வு செய்வதற்கான ஆய்வுகளைச் செய்தனர்.

வாசித்தல் திறன் : வாசித்தல் என்பது வரிவடிவத்தை ஒலிவடிவமாக உச்சரித்துப் பொருள் உணர்வதாகும். வாசித்தலை நுண்தேர்வு செய்வது என்பது ஒரு மொழியின் எழுத்துக்கள் மற்றும் அவற்றின் அமைப்புக்களைத் தேர்வர்கள் அறிந்திருப்பதை நுண்தேர்வு செய்வதாகும். க்ரான்பச் & ஃபார்பை (Cronbach & Furby : 1970), பெர்ஃபெல்டி (Perfelti : 1985), ஜஸ்ட் & கார்பண்டர் (Just & Carpenter : 1987), பேஸ்மன் (Bachman : 1990), ஆல்டர்சன் (Alderson : 1990), கிராபே (Grape : 1991), பியர்ஸ் (Pierce : 1992), பெர்கின்ஸ் (Perkins : 1992), ஹென்னிங் (Henning : 1993), ரோஸ்ட் (Rost : 1993), ஸ்வோயன் (Zwoan : 1994) போன்றோர் வாசித்தல் திறன் பற்றிய நுண்தேர்வு ஆய்வுகளை மேற்கொண்டனர்.

எழுதுதல் திறன் : எழுதுதல் என்பது மொழியின் எழுத்துக்களையும் / வரிவடிவங்களையும் எழுத்துச் சேர்க்கைகளையும் உணர்ந்து அவற்றின் வழி கருத்துக்களை வெளிப்படுத்துவதாகும். எழுதுதலை நுண்தேர்வு செய்வது என்பது தேர்வர் தன் கருத்துக்களை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதை அறிவதாகும். கோப்மென் (Coffman : 1966), பெர்கின்ஸ் (Perkins 1983), ப்ரேலேண்ட் (Breland : 1987), கார்ல்சன் (Carlson : 1985), ஹம்ப் – லயான்ஸ் (Hamp.

Lyons : 1991), ஹியூசிஸ் (Hughes : 1989), ஹென்னிங் (Henning : 1991), கிரின்பெர்க் (Greenberg : 1992), கேம்ப் (Camp : 1993), ஷெர்ரி & மேயர் (Cherrey & Meyar : 1993), ஆல்டர்சன் & கிளாபெம் (Alderson & Clapham : 1995), மெலிண்டா எரிக்சன் (Mellinda Erickson : 1997) போன்றோர் எழுதுதல் திறனை நுண்தேர்வு செய்வது பற்றி பல்வேறு ஆய்வுகளைச் செய்தனர்.

இவற்றைத் தவிர, இன்னும் பல நோக்கங்களைக் கொண்டும் பல அறிஞர்கள் மொழி நுண்தேர்வு ஆய்வுகளை மேற்கொண்டனர். குறிப்பாக, மொழி இயலுமை பற்றிய ஆய்வுகளை டக்ளஸ் (Douglas), செலிங்கர் (Selinkar : 1992), ஸமித் (Smith : 1992) போன்றோரும், கல்வியியல் நோக்கான ஆய்வுகளை (academic purposes) ஆல்டர்சன் (Alderson : 1993), ப்ரெவுன் (Brown : 1993), கிளாபெம் (Clapham : 1991), ஹட்சன் (Hudson : 1993), மக்னமாரா (McNamara : 1990) போன்றோரும், மொழியைத் தனிச்சிறப்பு நோக்கங்களுக்காகப் (language for specific purposes) பயன்படுத்தும் நிலையில் ஸ்வாலஸ் (Swales : 1985), பாஸ்மன் (Bachman), வுட்போர்ட் (Woodford : 1982), ஆல்டர்சன் கிளாப்பெம் வர்கிகர்ட் போன்றோரும், இலக்கணம் பற்றிய ஆய்வுகளை லேடோ (1961), கரோல் (1961) ஹாரிஸ் & பால்மர் (Harris & Palmar : 1970), பைக் (Pike : 1979), ஸ்டான்ஸ்பீல்ட் (Stansfield : 1986), ஏங்கிலிஸ் (Anglis : 1982) போன்றோரும் சொல்நிலையில் ஸ்பால்ஸ்கி (Spolsky : 1985), ஹாரிஸ் (1969), ஹியாடன் (Heaton : 1975), மாட்ஸன் (Madson : 1983), ரிச்சர்ட்ஸ் (Richards : 1986) போன்றோரும் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இன்று கணிப்பொறி சார்ந்த மொழி நுண்தேர்வு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரி & ஸ்டேன்ஸ்பீல்ட் (Parry & Stansfield : 1990), ஆல்டர்சன் & விண்டீயட் (Alderson & Windeath : 1991), யங் (Young), ஹில் (Hill : 1991), டன்கல் (Dunkal : 1992), பெர்கின்ஸ் & பூருடென் (Perkins & Brutten : 1993), போன்றோர் கணிப்பொறி சார்ந்த நுண்தேர்வு ஆய்வுகளை வடிவைமத்தவர்களில் முக்கியமான ஆய்வாளர்கள் ஆவர். இக்னோர் (Eignor), டைலர் (Taylar), கிரிஸ்ச் (Krish) என்ற மூவரும் டோபல் (TOEFL) நுண்தேர்வை கணினி வழி நுண்தேர்வாக உருமாற்றினர். ஒலி – ஒளி தொழில் நுட்பமும் மொழி நுண்தேர்வு ஆய்வில் பயன்படுத்தப்பட்டது. பிரிக்ஸ் (Briggs :

1993), ஸ்செல்ட்ஸர் & பூருக்கல் (Selttser & Broukal : 1990), சுஸ்கின் (1993) போன்றோர் இத்தொழில் நுட்பத்தை நுண்தேர்வில் பயன்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். மொழி நுண்தேர்வுகளின் ஏற்புமை (validity), நம்புமை (reliability) பற்றி ஆராயவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பேஸ்மன் & பால்மர் போன்றோர் தகவல் தொடர்பு சார் மொழி இயலுமை (communicative language ability) பற்றியும், மக்னமாரா நுண்தேர்வுக் கொள்கை மற்றும் சமுதாயக் கண்ணோட்டம் (policy & social consideration), பற்றியும் கும்னன் (Kumnan) நுண்தேர்வின் நேர்மைத் தன்மை (fairness) பற்றியும், ஷோகமி (Shohamy) நுண்ணிய மொழி நுண்தேர்வு (critical language testing) பற்றியும், ஆலன் டேவிஸ் நுண்தேர்வின் நன்னெறி & தொழில்நிலை (ethics & professionalism) பற்றியும் தங்கள் ஆய்வு நிலைகளைச் சமர்ப்பித்தனர்.

## மொழி நுண்தேர்வுக்கான அமைப்புகள்

உலக அளவில் மொழி நுண்தேர்வுக்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளில் குறிப்பிடத்தக்க சேவையாற்றி வரும் அமைப்புகளும் அவற்றின் நோக்கங்களையும் இனிக் காண்போம். 1947–ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூஜெர்ஸியில் (New Jersy) தொடங்கப்பட்ட கல்வியியல் நுண்தேர்வுச் சேவை (Educational Testing Service), அமெரிக்காவில் பயில விரும்பும் / பணியில் சேர விரும்பும் பிறநாட்டு / பிறமொழி மாணவர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சித்திறத்தை அறிவதற்காக அமைக்கப்பட்டது. இன்று உலகெங்கும் நடத்தப்படும் டோபல் என்ற நுண்தேர்வு (Test of English as a Foreign Language - TOEFL) இந்த அமைப்பின் மூலமே நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றரை மணிநேரம் நடக்கும் இந்தத் தேர்வு கேட்டுணர்தல் திறன், மொழிக் கட்டமைப்பு, எழுதும் திறன், படித்தல் திறன், சொல்வளம் பற்றிய தேர்ச்சியை கண்டறியும் வினா உருக்களை உள்ளடக்கிய தேர்வாகும். 1975–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கவுன்சிலால் தொடங்கப்பட்ட ஆங்கில மொழி நுண்தேர்வுச் சேவை (English Language Testing Service - ELTS) பிறமொழி மாணர்வகளின் ஆங்கிலமொழித் தேர்ச்சித்திறத்தை அளவிடும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் கல்வி–ஆஸ்திரேலியா (Britesh Council & Education Australia) என்ற அமைப்புகள் சர்வதேச ஆங்கில மொழி நுண்தேர்வு முறைமை (International English Language Testing System - IELTS) என்ற ஒன்றை 1980ஆம் ஆண்டு உருவாக்கின. பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியாவிலுள்ள கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியில் சேர விரும்பும் பிறநாட்டு மாணவர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சித் திறத்தைக் கண்டறிய இந்த முறைமை அமைக்கப்பட்டது. இந்த முறைமை, மொழித் திறன்கள் நான்கிலும் தேர்வர்களுக்கு உள்ள தேர்ச்சியை அறிவதற்கான நுண்தேர்வுகளை உள்ளடக்கியதாகும். சர்வதேச மொழி நுண்தேர்வுக் கழகம் (International Language Testing Association - ILTA) 1992–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவில் தொடங்கப்பட்டது. உலக அளவில் மொழி நுண்தேர்வு மேம்பாடு அடையப் பாடுபடுவதே இதன் நோக்கமாகும். இந்த அமைப்பு மொழி நுண்தேர்வுகளை உருவாக்குவதற்கான நெறிகளையும் வழிமுறைகளையும் வகுத்தது. இந்த அமைப்பின் மூலம் மொழி நுண்தேர்வுக்கென மொழி நுண்தேர்வு '(language testing)' என்ற ஆய்விதழ் 1984ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்டது. 1984லிருந்து 1992 வரை ஆண்டுக்கு இருமுறை வெளியிடப்பட்டு வந்த இந்த இதழ் 1993லிருந்து ஆண்டுக்கு மூன்று முறை வெளியிடப்பட்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஜெர்மன், கிரீக், இத்தாலி, பிரிட்டன், டச்சு, டேனிஷ், ஸ்வீடன் போன்ற நாடுகளைச் சார்ந்த மொழி நுண்தேர்வாளர்கள் ஒருங்கிணைந்து 1990–ஆம் ஆண்டு ஐரோப்பிய நாட்டு மொழி நுண்தேர்வாளர்கள் கழகம் (Association of Language Testers in Europe - AELT) என்ற அமைப்பை உருவாக்கினர். இந்தக் கூட்டமைப்பைச் சார்ந்த நாடுகளில் ஒரு நிகரான மொழித்தேர்ச்சி திறத்தைப் பெறுவதற்கும் எல்லாக் கல்வி நிலைகளிலும் நிகரான நுண்தேர்வு முறையை உருவாக்குவதற்கும் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஜெர்மனி, இஸ்ரேல், எஸ்டோனியா, ஹாலந்து போன்ற நாடுகளிலும் மொழி நுண்தேர்வு அமைப்புகள் உருவாக்கப் பட்டன. தரமான கல்வி முறையை உருவாக்கவும், ஒரு நம்பகமான, துல்லியமான மதிப்பீட்டு முறையை உருவாக்கவும் பாகிஸ்தானில் தேசிய நுண்தேர்வுச் சேவை (National Testing Service) தொடங்கப்பட்டுள்ளது.

நமது நாட்டிலும் மதிப்பீடு மற்றும் நுண்தேர்வுக்கான நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. மருத்துவக் கல்வியின் மதிப்பீட்டு நிலையை அறிய

தேசிய நுண்தேர்வு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மொழி நுண்தேர்வு ஆய்வுகள் ஆங்காங்கே நடத்தப்பட்டாலும் மொழி நுண்தேர்வு பெரிய கவனத்தைப் பெறவில்லை என்றே சொல்லலாம். அரசுப் பணியாளர்களைத் தேர்வு செய்யும் நமது தேர்வாணையங்கள் ஆங்கில மொழித் தேர்ச்சித்திறத்தைக் கண்டறிவதை நோக்கமாக கொண்டுள்ளன. சமீப காலங்களில் தான் இந்திய மொழிகளின் தேர்ச்சித்திறத்தை அறிவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் (Central Institute of Indian Languages - CIIL), மொழி பயிற்று மையங்களில் இரண்டாம் மொழி கற்பித்தலில் மொழி நுண்தேர்வுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய மொழி பயிலும் பயிற்சி மாணவர்களின், கற்றல் அடைவைக் கண்டறியும் நோக்கில் இந்த மொழி நுண்தேர்வுகள் அமைகின்றன. இந்த நுண்தேர்வுகளில் அகவய வினாக்களும் புறவய வினாக்களும் வினாத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. மொழிப் பயிற்சியின் போது மொழி நுண்தேர்வுகள் பயன்படுத்தப்பட்டாலும் மொழி நுண்தேர்வு ஆய்வு முயற்சிகள் பெருமளவில் நடைபெறவில்லை. ஒரு சில ஆய்வாளர்கள் மொழி நுண்தேர்வு பற்றி பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் மேற்கொண்டாலும் அவை வெளியே அறியப்படாமல் இருக்கின்றன. முயற்சிகள் பெருமளவில் நடைபெறவில்லை.

ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஆங்கிலம் மற்றும் அயல் நாட்டு மொழிகளின் நடுவண் நிறுவனம் (Central Institute of English and Foreign Languages - CIEFL) இந்திய மாணவர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சித்திறத்தை அறிய ஒரு தகுதிநிலை நுண்தேர்வை வடிவமைத்து இந்திய அளவில் நடத்தி வருகிறது. இதன் மூலம் கண்டறியப்படும் தேர்வர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சித்திறத்தை பணியாளர் சேர்க்கையின் போது அரசு தேர்வாணையங்கள் ஒரு தகுதியாக எடுத்துக் கொள்ளலாம் எனப் பரிந்துரைத்துள்ளது. தரமான மொழி நுண்தேர்வு முறை இந்திய மொழிகளிலும் கொண்டுவர வேண்டும் என்ற இடைவிடா முயற்சியின் விளைவாக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் மதிப்பீடு மற்றும் நுண்தேர்வு மையம் (Centre for Testing and Evaluation), இந்திய மொழிகளின் பன்னோக்கு மதிப்பீட்டு முறைமை (Multipurpose Indian Languages Evaluation System - MILES) ஒன்றை உருவாக்கி வருகிறது. மொழிக் கூறுகள், இலக்கியக் கூறுகள் மற்றும் கல்விக் கூறுகள் உள்ளடக்கிய கூட்டுக் கலப்பாக இந்த, மதிப்பீடு முறை

செயல் வடிவம் பெறுகிறது. இதன் வாயிலாக மொழி, இலக்கியக் கூறுகளை நுண்தேர்வு செய்வதோடு மாந்தர் பண்பியல்பு (personality) வளர்ச்சியினையும் மதிப்பீடு செய்ய முடியும். அகவயம் மற்றும் புறவயம் சார்ந்த வினாத் தொகுப்புக்களைக் கொண்டதாக இந்த முறைமை அமையும் என்பது ஒரு சிறப்பாகும். தற்போது இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் நுண்தேர்வு மற்றும் மதிப்பீட்டு மையம் அளித்துள்ள மொழிகளுக்கான தேசிய நுண்தேர்வுச் சேவைத் திட்டத்திற்கு (National Testing Service, India (NTS)) இந்திய நடுவண் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் 2006–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இந்திய மொழிகள் பற்றிய மதிப்பீடும் நுண்தேர்வும் முறையாக அமையும் என நம்பலாம்.

## மொழி நுண்தேர்வுகள்

மொழி நுண்தேர்வுகள் பெரிதும் பயன்படும் தேர்வுகள் அடைவு நுண்தேர்வு, தேர்ச்சித்திற நுண்தேர்வு, நாட்ட நுண்தேர்வு மற்றும் குறைஉணர் நுண்தேர்வு ஆகும்.

(1) அடைவு நுண்தேர்வு (achievement test) : ஒரு மொழிப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் பெற்றுள்ள அடைவு நிலை என்ன என்பதைக் கண்டறியும் தேர்வு.

(2) தேர்ச்சித்திற நுண்தேர்வு (proficiency test) : பாடத்திட்டத்தின் அடிப்படையில் இல்லாமல், ஒருவர் மொழித்திறன்களில் அடைந்துள்ள தேர்ச்சி பற்றி அறிய உதவும் தேர்வு. இது ஒருவர் பேசுவது, எழுதுவது, படிப்பது மற்றும் புரிந்து கொள்வதில் பெற்றுள்ள ஆற்றலை மதிப்பிடும் தேர்வாக அமைகிறது.

(3) நாட்ட நுண்தேர்வு (aptitute test) : மொழி கற்றலில் மாணவர்களின் நாட்டம் எப்படியுள்ளது என அறிய உதவும் தேர்வு. மொழி கற்றலைச் செம்மைப்படுத்த நடத்தப்படும் இந்தத் தேர்வு எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டதாகும்.

(4) குறை உணர் நுண்தேர்வு (diagnostic test) : கற்றலில் ஏற்படும் தொய்வு / சிக்கலுக்கான காரணங்களைக் கண்டறிந்து அதனைச் சீராக்கும் வழிமுறைகளை ஆராயப் பயன்படும் தேர்வு. இதன் மூலம் மாணவர்களின் குறைபாடுகளை அறிந்து அவற்றைக் களையும் முறையை வகுக்கலாம்.

இந்த நான்கு நுண்தேர்வுகளும் இன்று மொழி நுண்தேர்வுகளில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் இவற்றின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அமைந்துள்ளது. நமது நாட்டிலும் இந்த மொழி நுண்தேர்வுகள் நடைபெற்று வந்தாலும் பெரிய அளவில் இன்னும் நடைபெறவில்லை. இந்த நுண்தேர்வு முறைகளைப் பெரிய அளவில் பயன்படுத்துவது மொழி கற்றலிலும்/ கற்பித்தலிலும் மொழி மதிப்பிடலிலும் ஒரு புதிய விடியலை ஏற்படுத்தும் முயற்சியாக அமையும். இவற்றின் மூலம் நமது கல்வி முறை மேம்படுவதோடு மாணவர்களின் மொழியறிவும் மொழித்திறனும் நாம் எதிர்பார்க்கும் வண்ணம் செம்மையுறும் என உறுதிபட நம்பலாம்.

முடிவுரை

நுண்தேர்வும், மதிப்பீடும் தொடங்கிய நாள்முதல் இன்றுவரை பலவித மாற்றங்களைப் பெற்றுவிட்டது. மொழி நுண்தேர்வும் மதிப்பீடும் முறைப்படி அமைய வேண்டுமென்பதற்காக மொழியியலறிஞர்கள் பலர் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். தேர்வின் முக்கிய நோக்கமே மாணவர்கள் பெற்றுள்ள அடைவு நிலையைக் கண்டறிவதோடு கற்றலில் கற்பித்தலில் உள்ள நிறைகுறைகளை அறிந்து குறை தீர்க்கும் வழிகளைக் கூறுவதாகும். அறிவியல் சார்ந்தும் திட்டமிட்டபடி அமையும் மதிப்பீட்டு முறைகளைக் கையாள்வதன் மூலம் மொழி நுண்தேர்வும் மதிப்பீடும் மேம்படுவதோடு மொழி கற்பித்தலும், மொழிகற்றலும் மேலும் செம்மையுறும், சமீப காலங்களில் மொழி நுண்தேர்வின் தேவைகள் நமது நாட்டிலும் மிகுந்து விட்டன. பல நோக்கங்களுக்காக மொழி நுண்தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. நமது நுண்தேர்வுத் தேவைகளை நிறைவேற்ற நல்ல மதிப்பீட்டு முறையும் வினா உருக்களைத் தயாரிப்பதில் போதிய பயிற்சிகளும் தேவைப்படுகின்றன. தேர்வுகளுக்கு முன்னரே வெளியாகி விடும் தேர்வுத் தாள்களும், வினாக்கள் தயாரிப்பதில் ஏற்படும் குறைபாடுகளும் ஒரு கவனமான மதிப்பீட்டு முறைக்கு வழி வகுக்கின்றன. நாம் கற்றலில், கற்பித்தலில் காட்டும் கவனத்தைப் போன்றே மதிப்பீட்டு முறையிலும் போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதைத்தான் இந்தக் குளறுபடிகள் காட்டுகின்றன. இவற்றைத் தவிர்க்க நாம் முனைப்போடும் கவனத்தோடும் செயல்பட வேண்டியிருக்கிறது. ஒரு தரமான மதிப்பீட்டு முறையை உருவாக்குவதற்கான சூழல் இன்று உருவாகி வருவது நல்ல தருணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

## References :

Davies, Alan, 1990 *Principles of Language Testing* : United Kingdom : Basil Blackwel.

Henning, Grant, 1987 *A Guide to Language Testing* : Development, Evaluation, Research, Cambridge : Newbury House.

Lado, Robert, 1961 *Language Testing* : The Construction and Use of Foreign Language Tests : New York : Longman.

Subbiah, Pon., 1990 *Evaluation & Testing* : An Introduction to Terminology; Mysore : Central Institute of Indian Languages.

மு. பாலகுமார்
இணைப் பேராசிரியர்,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்.

# உரையாடலில் உடல்மொழி காட்டும் சமுதாய அந்தஸ்து*

- பெரு. பெருமாள்சாமி

## உரையாடலில் உடல்மொழி

இரு நபர்கள் உரையாடும் பொழுது அவர்களது எண்ணப் பரிமாற்றங்கள் கோர்வையான வார்த்தைகளின் உபயோகிப்பால் சீராக நடந்தேறுகிறது. இவ்வாறான உரையாடலில் மொழிக் கூறான வார்த்தைகள் தவிர்த்து மொழி சாரா குறியீடுகளான முகபாவனை, கண் அசைவு, கை சமிக்ஞை, அமர்வு விதம், உடலின் பல்வேறு அங்கங்களான தலை, உடல், கால், பாதம் போன்றவற்றின் அசைவுகள் மற்றும் உரையாடலில் பங்கு பெறும் நபர்களுக்கிடையே காணப்படும் இடைவெளி போன்றவையும் மொழி சார்ந்த கூறுகளோடு இணைந்து அத்தகவல் பரிமாற்றத்தை முழுமையாக்குகின்றன. மொழி சாரா குறியீடுகள் உடலின் பல்வேறு அங்கங்களின் துணையோடு உருவாக்கப்பட்டுக் கருத்தாக்கப்படுவதால் இவ்வகை தகவல் பரிமாற்றத்தை அறிஞர்கள் "உடல்மொழி" என்றும் கூறுகின்றனர்.

ஒருவரைப் பார்த்தவுடன் 'வணக்கம்' என்று வாய்மொழியில் சொல்லும் பொழுதே உடல்மொழியில் (குறியீட்டு மொழி) கைகள் இரண்டும் மடிக்கப்பட்டு, பத்து விரல்களும் ஒன்று சேர்ந்து, நெஞ்சின் மையப் பகுதியில் குவிக்கப்பட்ட வேளையில்தான் அவ்வார்த்தை வெளிவந்து அத்தகவல் பரிமாற்றத்தை நிறைவு செய்கின்றது என்ற செயல்பாட்டை இங்கு நினைவுகூர்வது நன்று.

## சமுதாய அந்தஸ்து - பல்வேறு அளவீடுகள்

உரையாடலில் ஈடுபடுவோர் தான் சார்ந்திருக்கும் சமுதாய அமைப்பிலே, அந்தஸ்தில் ஒரே அளவில் உள்ளவர்களாகவும் இருக்கலாம்; மாறுபாடு உள்ளவர்களாகவும் இருக்கலாம். உதாரணமாகப் பேசுபவர் சமுதாய நிலையில் உயர்வானவராகவும், கேட்பவர் தாழ்வானவராகவும் அல்லது பேசுபவர் சமுதாய நிலையில் தாழ்வானவராகவும், கேட்பவர் உயர்வானவராகவும் இருக்கலாம். பேசுபவர் – கேட்பவரின் சமுதாய நிலைக்குத் தகுந்து அவர்கள் பயன்படுத்தும் மொழிக் கூறுகளும்

வேறுபடும். இரு வேறு நபர்களுக்கிடையே நிலவும் சமுதாய இடைவெளியை அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலே ஆய்வு செய்திருக்கிறார்கள்.

அ. ஒருவர் மற்றவருக்கு தனது வீட்டுத் திண்ணையில் அமர இடமளிக்கும் முறையில் தோன்றும் வேறுபாட்டின் அடிப்படையில் அல்லது இரு குடும்பங்களுக்கிடையே நிலவும் உணவுப் பண்டமாற்ற முறையில் ஒருவருடைய சமுதாய அந்தஸ்தை அளவிட முடியும் என மானிடவியலார்கள் (பெக், 1972) குறிப்பிடுகின்றனர்.

ஆ. உரையாடலில் ஒருவர் மற்றவருக்கு வழங்கும் நீ/ நீங்கள் முன்னிலைப் பெயர் அடிப்படையில் ஒருவருடைய அந்தஸ்து வெளிப்படுவதாக மொழியியலார்கள் (லெவின்சன், 1982; பெருமாள்சாமி, 1991) குறிப்பிட்டுள்ளனர்.

இ. உரையாடலில் பங்கு பெறும் இருவரிடையே தோன்றும் உடல் அசைவுகள், முக பாவனை, கண் அசைவு, சமிக்ஞை, மொழி மற்றும் மௌனம் போன்றவை அவர்களுக்குள் நிலவும் அந்தஸ்து வேற்றுமையை வெளிப்படுத்துவதாக உடல் மொழியாளர்கள் (திருமலை, 1987) கூறுகின்றனர்.

இக்கட்டுரை சமுதாய அந்தஸ்தில் வேறுபட்டிருக்கும் இருவேறு நபர்கள் உரையாடும் பொழுது மொழியியற் புலம் எங்ஙனம் மொழிசாரா குறியீடுகளின் உதவியைப் பெற்று அவ்வேறுபாட்டினை வெளிக் கொணர்கிறது என்பது பற்றி விரிவாக ஆய்வு செய்கிறது.

## ஆய்வுக்களம்

இவ்வாய்வு மேற்கொள்வதற்கான களமாக தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்திலுள்ள இரு கிராமங்களான நஞ்சை கொளாநல்லி மற்றும் புஞ்சை கொளாநல்லி தேர்வு செய்யப்பட்டன. ஆய்வுக் களத்திலேயே தங்கி, தகவலாளிகளுடனே உடன் பங்கெடுத்து, அவர்களுடைய நடத்தைகளை உற்று நோக்கித் தகவல் பெறும் முறை அடிப்படையிலே தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## இடைவெளி

ஒருவர் தனக்கும் மற்றவருக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளும் இடைவெளி அடிப்படையில் அவர்கள் இருவருக்குமிடையேயான உறவு தூரமா அல்லது நெருக்கமா என்று கண்டுகொள்ள முடியும். இந்த இடைவெளி தோன்றுமிடம் அலுவலகமாகவும் இருக்கலாம்; அல்லது குடியிருக்குமிடமாகவும் இருக்கலாம்.

## குடியிருப்புக்களில் காணப்படும் இடைவெளி

கிராமங்களிலே வீடுகள் அமையப் பெற்றிருக்கும் அமைப்பின் அடிப்படையில் ஒரு வகுப்பினரிலிருந்து மற்றொரு வகுப்பினரை அடையாளங்கண்டு கொள்ள முடியும். ஓடால் வேயப்பட்ட வீடுகளிலும், தனி வீடுகளிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கவுண்டர் இன மக்கள் வசிக்கிறார்கள். அதே வேளையில் நெருக்கமான ஓலையால் வேயப்பட்ட குடிசை வீடுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்து வருகிறார்கள். எனினும் இதிலும் கூட ஒரு மாற்றத்தைக் காணமுடிகிறது. பறையர் மற்றும் சக்கிலியர் இன மக்கள் வேயப்பட்ட குடிசை வீடுகளிலும், பள்ளர் இன மக்கள் ஒட்டு வீடுகளிலும் வசித்து வருகிறார்கள்.

ஒரு வகுப்பைச் சேர்ந்த இனமக்கள் ஒன்று கூடி ஒரு இருப்பிடத்தில் வாழ்கின்றனர். மற்றொரு வகுப்பினர் பிறிதொரு இருப்பிடத்தில் வசிக்கின்றனர். ஆக, வாழும் இருப்பிடத்திலே ஒரு வகுப்பிற்கும் மற்றொரு வகுப்பிற்கும் இடைவெளி தென்படுகிறது. ஊர்க் கோவிலை ஒரு மையமாக எடுத்து அங்கிருந்து எந்தெந்த வகுப்பினர் எவ்வளவு தூரத்தில் வசிக்கிறார்கள் என்று கணக்கிட்டால் ஒவ்வொரு வகுப்பின் சமுதாய நிலையும் சமுதாய ஏணியின் படியில் எந்த இடத்தில் இருக்கிறது என்பது புலப்படும். கோவிலுக்கு வெகு அருகாமையில் படித்துறையை ஒட்டி பிராமணர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு அடுத்த சுற்றிலே கவுண்டர்களை உள்ளடக்கிய பிராமணரல்லாத பின்தங்கிய வகுப்பினர் ஒரு கூட்டமாக குடியிருந்து வருகிறார்கள். அதற்கு அடுத்த சுற்றிலே ஊரின் வெளிவட்ட எல்லையிலே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒரு குழுவாக வசித்து வருகின்றனர்.

## தொடு உணர்வு

இரத்த சம்பந்தமான நெருக்கமும், சம அந்தஸ்துமே தொடக்கூடிய உரிமையை வழங்குகின்றன. தீண்டாமை வழக்கம் சட்டத்தால் தடுக்கப்பட்டுள்ளது. எனினும் சில வகைப்பட்ட சமுதாயச் சலுகைகள் சில நபர்களுக்கு மரியாதை நிமித்தமாக இன்றும் தரப்பட்டு வருகின்றது.

சாலை ஓரக் கடைகளிலும், தேநீர் அங்காடிகளிலும் காபி/ தேநீர் விற்கப்படுகின்றது. அனைத்துத் தரப்பட்ட மக்களும் இக்கடைகளில் தேநீர் அருந்தி வருகிறார்கள். எனினும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தம்ளர்களிலே இருவகைகள் உள்ளதை உற்றுநோக்கினால் அறியலாம்.

சமுதாயத்தின் மேன்நிலையைச் சார்ந்தவர்களுக்கு எவர்சில்வர் தம்ளர்களிலும், ஏனையோருக்குக் கண்ணாடி தம்ளர்களிலும் தேநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒரே இனத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி, தன்னுடைய பண்ணையாரின் உள் அறை வரையிலும் செல்வதற்கான அனுமதியும், மற்ற இனமக்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், தங்கள் முதலாளியின் வீட்டு முகப்பு வரையிலும் செல்வதற்கான அனுமதியும் என வீட்டிற்குள் நுழைவதற்கான விதிமுறையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மேலும் முதலாளிகளின் வீட்டில் தம்ளர்களில் வழங்கப்படும் பானங்களை உறிஞ்சிக் குடிக்காமல் அப்படியே தூக்கிக் குடிக்கும் வழக்கமும் தாழ்த்தப்பட்ட மக்களின் மத்தியில் காணப்படுகிறது.

## அமர்வு முறை

ஒருவருடைய சமுதாய அந்தஸ்து, அவர் அமரவிருக்கின்ற இடத்தைத் தேர்வு செய்வதில் ஒரு முக்கிய காரணியாக பங்காற்றுகிறது. ஒவ்வொரு வீட்டின் முன் பகுதியில் திண்ணையோ அல்லது கட்டிலோ போடப்பட்டுள்ளது. அத்திண்ணையில் அல்லது கட்டிலில் பண்ணையாருக்கு இணையாக அமர்வதற்கு அவர் சமுதாயத்தைச் சார்ந்த மற்றொரு பண்ணையாருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ தாராளமாக இடம் வழங்கப்படுகிறது. ஆனால் விவசாயத் தொழிலாளர்கள் பண்ணையார்களின் முன்பு தரையில் அமர்ந்து அவர்களுடன் உரையாடுகிறார்கள். சில வேளைகளில் விதி விலக்காக, பண்ணையாரின் சமுதாயத்தைச் சேர்ந்த வயதானவர்கள் சிலர் கட்டில் அல்லது திண்ணையில் அமர அனுமதிக்கப்படுகிறார்கள்.

## உரையாடலில் இடைவெளி

ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையில் ஒரு உரையாடல் நடைபெறும் பொழுது அவர்களுக்கிடையே காணப்படும் இடைவெளி முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நிலக்கிழார்கள் நிற்குமிடத்திலிருந்து சிறிது தூரத்திலே நின்று தான் தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் அவர்களுடன் உரையாடுகிறார்கள். பண்ணையார்களுக்கு மிக அருகில் சென்று பேசுவது தவிர்க்கப்படுகின்றது. வயதான மற்றும் நடுத்தர வயதினர் மத்தியில் இவ்வழக்கம் தென்படுகிறது.

## விளிச் சொற்களில் காணப்படும் இடைவெளி

ஒரு சமுதாயத்தில் இயங்கும் இரு வகுப்பினரிடையே தென்படும் இடைவெளி, அவர்கள் பேசுகின்ற மொழியிலும் பிரதிபலிக்கும். இவ்வாறாக, ஒரு கலாச்சாரத்தின் ஆணிவேராகக் கருதப்படும் கிராமக் கோவிலின் அருகாமையில் வசிக்கும் முற்பட்ட மற்றும் பிற்பட்ட வகுப்பு மக்களை, அக்கலாச்சாரப் புள்ளியின் தொலைவில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிக்க மரியாதையுடன் விளித்து உரையாடி வருவது பின்வரும் மொழிக் கூறுகளின் உபயோகத்தில் தெரிய வருகிறது.

சாமி – கடவுளை விளிப்பதற்கு பயன்படும் சொல்; இங்கு சமுதாயத்தின் மேன்நிலை மக்களையும் விளிக்கப்பயன்படுகிறது.

எஜமான் – முதலாளி என்பதற்கு ஈடான சொல்; வேலை வாய்ப்பளிக்கும் பண்ணையாருக்கு வழங்கப்படுகிறது.

நீங்கள் – முன்னிலைப் பன்மை; இங்கு தனி ஒருவருக்கு மரியாதை காரணமாக பயன்படுத்தப்படுகிறது.

–ங்கள் – மரியாதைக்குரிய விகுதி; சமுதாயத்தின் மேன்நிலை மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மேற்குறிப்பிடப்பட்ட **விளிச் சொற்கள், அழைப்புச் சொற்கள், குறிப்பிடும் சொற்கள், விகுதிகள்** போன்றவை சில சமுதாயச் சூழல்களில் ஒருவழிப் பாதையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. உயர்நிலையை வெளிப்படுத்தும் இம்மொழியியற் கூறுகள் சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருக்கும் நபர்களுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிற வகுப்பு மக்கள் இக்கூறுகளை எப்பொழுதும் பயன்படுத்துவதில்லை. மாறாக, நீ என்னும் முன்னிலைப் பெயர், –ஆன் என்ற விகுதி போன்றவற்றை உபயோகிக்கிறார்கள். இவை சமுதாயத்தின் உயர்வுத் தன்மையை வெளிப்படுத்தும் மொழிக் கூறுகள் அல்ல. இவை, தாழ்வு நிலையைத் தோற்றுவிக்கும் கூறுகள். திண்ணையில் அமரும் மக்கள், தரையில் அமரும் மக்களுக்கு வழங்கும் சொற்கள் இவை. ஆனால் தரையில் அமரும் நபர்கள் திண்ணையில் அமரும் நபர்களுக்கு வழங்கும் சொற்கள் சமுதாயத்தின் மேன்நிலையை வெளிப்படுத்தும் சொற்கள் மட்டுமே என்பதை இங்குக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## மொழியில் பிரதிபலிக்கும் சமுதாய மாற்றங்கள்

தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் இன்று அரசாங்கத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையில் மேன்மையடைந்து வருகிறார்கள். பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி பயில அவர்கள் ஊக்குவிக்கப் படுகிறார்கள். அரசாங்கத்தில் பணிபுரிய அவர்களுக்கு குறிப்பிட்ட சதவீத பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணியில் அமர்த்தப்படுகிறார்கள். இச் சலுகைகளைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் இளம் மற்றும் நடுத்தர வயது மக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு சமுதாய ஏணியில் ஏறி மேல் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். இதை முற்பட்ட மற்றும் பிற்பட்ட வகுப்புக்களின் இள வயதினர் நன்கு புரிந்து கொண்டு அவர்களை மரியாதையுடன் நடத்தி வருவது கீழ்வரும் மொழிப் பயன்பாட்டின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

முற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இளம் வயதினர், தாழ்த்தப்பட்ட வகுப்பின் இளம் வயதினரை நீங்கள், என்னங்க போன்ற மரியாதை வெளிப்படுத்தும் மொழிக் கூறுகளால் விளிக்கத் தொடங்கியுள்ளனர். திண்ணையிலே அவர்களும் சமமாக அமர்வதற்கு வாய்ப்பளிக்கிறார்கள். கிராமப் பொதுவிடங்களை குறிப்பாக விளையாட்டுத் திடலை பயன்படுத்த அனுமதிக்கிறார்கள். தேநீர் கடைகளில் இன்று படித்த தாழ்த்தப்பட்ட மக்களும் எவர்சில்வர் தம்ளர்களிலேயே தேநீர் அருந்துவது அவர்கள் சமுதாய ஏணியில் மேலேறிச் செல்வதை மற்ற வகுப்பினரும் குறிப்பாக இளைஞர்களும் அங்கீகரிப்பதாக எடுத்துக்கொள்ள முடிகிறது.

## சந்திப்பு

### அ. கண்பார்வை

உரையாடலில் ஒருவருடைய கண் பார்வை மற்றொருவருடைய கண் பார்வையை சந்தித்துக் கொள்வது அல்லது தவிர்ப்பது என்பது அவருடைய சமுதாய நிலையைப் பொறுத்தே அமைகிறது. இருவருடைய கண் பார்வையும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டால், அந்தஸ்தில் சம நிலையில் உள்ளார்கள் எனக் கொள்ளப்படும். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர், மேன்நிலையில் இருப்பவரின் பார்வையை பேசும்பொழுது சந்திப்பதில்லை. மாறாக, நிலத்தையோ அல்லது வேறு திசையோ பார்க்கிறார். நிலமில்லாத கூலி விவசாயி, நில உடைமையாளரை

சந்தித்துப் பேசுகையில் அவருடைய கண்களை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதை தவிர்க்கிறார். ஆனால் அந்தஸ்தில் சமநிலையில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் உரையாடுகையில் பிறர் கண்பார்வை சந்திப்பதைத் தவிர்ப்பதில்லை.

கண் சந்திப்பு மட்டுமல்லாது சில வேளைகளில் உணவு வகைகளைப் பார்ப்பதும் தடை செய்யப்பட்ட ஒரு வழக்காக பின்பற்றப்படுகிறது. உணவு உட்கொள்ளும் பொழுது தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் மற்ற வகுப்பு மக்களின் உணவுப் பொருட்களைப் பொதுவாக பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. தான் சார்ந்த வகுப்பு மக்கள் உணவருந்தும் வேளையில் வர நேரிட்டால் அவர்களை உணவருந்த அழைக்கும் வழக்கம் அனைத்து வகுப்பு மக்களிடமும் காணப்படுகிறது.

## ஆ. முகம்

உரையாடலில் இடம்பெறும் நபர்களின் அந்தஸ்தைப் பொறுத்து அவர்களின் முகங்கள் சந்தித்துக் கொள்வதோ அல்லது விலகிக் கொள்வதோ உண்டு. ஒரு பண்ணையாரும், மற்றொரு பண்ணையாரும் சந்தித்துக் கொள்கையில் அவர்கள் முகம் மலர்ச்சி பெறுவதுண்டு; ஒருவர் மற்றொருவரைப் பற்றி நலன் விசாரித்துக் கொள்வதுண்டு. மகிழ்ச்சிகளும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இதேபோன்றே இரு படித்தவர்கள் சந்தித்துக் கொண்டால் அல்லது இரு விவசாயத் தொழிலாளர்கள் சந்தித்துக் கொண்டால் நடைபெறுவதுண்டு.

ஆனால் ஒரு பண்ணையாரும் ஒரு விவசாயத் தொழிலாளரும் சந்திக்கையில் அவர்களுடைய உரையாடலில் முக மலர்ந்த சிரிப்புக்கள் குறைவாகக் காணப்படும். கேட்கின்ற கேள்விகளுக்கான பதில்கள் மிகச் சுருக்கமாக இருக்கும். பொதுவாகவே தமிழ்க் கலாச்சாரத்தில் உயர்ந்தவர்கள் முன்னிலையில் நன்கு சிரித்துப் பேசுவதென்பது ஒரு விரும்பத்தகாத வழக்காகவே கருதப்பட்டு வருவது இங்கு நினைவுகூரத்தக்கது.

## சமிக்ஞைகள்

சமிக்ஞைகள் உடல் உறுப்புக்களின் உதவியோடு ஏற்படுத்தப்படுகிறன. இவைகள், பேசும் வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுக்கப் பயன்படுவதுண்டு. சமிக்ஞைகள் ஒருவரின் எண்ண ஓட்டத்தை வெளிப்படுத்த உதவுகின்றன. விவசாயத் தொழிலாளர்கள்

நிலக்கிழார்களிடம் பேசும் பொழுது கைகளைத் தூக்கியோ, ஆட்டியோ அல்லது கால்களை அசைத்தோ பேசுவதில்லை. அதே வேளையில் நிலக்கிழார்கள் சொல்லும் கருத்துக்களுக்கு அடிக்கடி 'ஆம்' என்று சொல்லி ஒத்துப் போவதுண்டு. இந்த 'ஒத்துச் செல்லல்' வெறுமனே 'ஆம்' என்ற வார்த்தையாக வெளிவராமல், தலை மேலிருந்து கீழாக அசைந்து அதே வேளையில் 'ஆம்' என்ற சொல்லோடு இணைந்து அச் செய்கையை முழுமைப்படுத்துகிறது.

## அந்தஸ்தும் குறை வாக்கியமும்

சார் நிலையிலுள்ளவர்கள் தங்கள் முதலாளியுடனோ அல்லது நிர்வாகியுடனோ உரையாடுகையில் அவர்களுக்கு மரியாதை செலுத்து முகமாக தாங்கள் பேசும் வாக்கியங்களை முழுமை பெறச் செய்யாமலோ அல்லது வார்த்தைகளுக்கு வார்த்தை நீண்ட இடைவெளி விட்டோ பேசுவதுண்டு.

1. கொஞ்சம் . . . சுண்ணாம்பு . . . இருந்தா . . . குடுங்க
2. சார் ! நூறு ருபாய்க்கு . . . . . . . . . .

இரண்டாவது உதாரணத்தில், நூறு ரூபாய்க்கு சில்லறை கொடுங்கள் என்ற வாக்கியம் நிறைவு பெறாததை இங்கு கவனிக்க வேண்டும்.

## மௌன மொழி

விளிச் சொற்கள் இருப்பினும் சில வேளைகளில் அவைகள் அழைப்பிற்கு பயன்படாமலேயே போய்விடுகின்ற சூழ்நிலைகளும் உண்டு. சில உறவுகள் தவிர்க்கும் உறவுகளாக தமிழ்க் கலாச்சாரத்திலே கடைப்பிடிக்கப்படுகிறது. மாமியார்–மருமகன் உறவு அத்தகைய உறவுகளில் ஒன்று. இருவரும் சந்திக்கையில் பேச்சும் அங்கு மறைந்து காணப்படும். விளிச்சொல் விளியற்ற நிலையைப் பெறும். விளி மற்றும் குறிப்பிடும் சொற்கள் முறையே அத்தை, அக்காள், மாமியார் போன்றவை. இருப்பினும் அச்சொற்களைப் பயன்படுத்தி மாமியாரை அழைக்க அல்லது குறிப்பிட மருமகன் தயங்குகிறார். அதே போன்றே மாமியாரும் மருமகன், மாப்பிள்ளை போன்ற சொற்களைப் பயன்படுத்தி மருமகனை விளிக்கத் தயக்கம் காட்டுகிறார்.

தமிழ்க் கலாச்சாரத்தில் கணவர் பெயரை மனைவி உச்சரிப்பதென்பது இன்றும் ஒரு ஏற்புடைய வழக்காகக் கருதப்படுவதில்லை. எனவே பெண்கள் இவ்வழக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர். இதேபோன்றே தாய்மாமன் அல்லது அத்தையினுடைய மகனின் பெயரையும் பெண்கள் உச்சரிக்கத் தயக்கம் காட்டுகின்றனர்.

## மொழிப் பயன்பாடற்ற நிலை

தகவலாளிகளிடம் அவர்களது முதலாளிகளை தங்கள் வீட்டிற்கு முன் சைக்கிள்களை நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அப்பொழுது அவர்களில் சிலர் தங்கள் முதலாளிகளிடம் சைக்கிளைத் தடைசெய்யும் வேண்டுகோளை இழைக்க தாங்கள் மறுப்பதாகக் கூறியதுடன், அதற்குப் பதிலாக தாங்களே சென்று சைக்கிளை எடுத்து ஓரமாக நிறுத்தி வைத்து விடுவதாகத் தெரிவித்தார்கள். ஆக சில நேரங்களில், சில சமுதாய காரணங்களுக்காக மொழிப் பிரயோகம் தவிர்க்க வேண்டிய ஒன்றாகக் கருதப்படுவதையே இந்நிகழ்வு நிரூபணம் செய்கிறது.

## மாறுபாடான விளிப்பயன்பாடு

நாற்பது வயதான கிராமத் துப்புரவுப் பணியாளரை 'ஏய் தோட்டி, இங்கே வாடா' என்றழைத்த ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரின் அழைப்பிற்கு அவர் பொருட்சாய்க்கவில்லை. மாறாக, 'அவன் தோட்டி என்றா கூப்பிட்டான், கூப்பிட்டுக் கொண்டே இருக்கட்டும்' என்று மூன்றாம் நபரிடம் கூறிவிட்டு, தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்து விட்டார். ஆக சில தவறான அழைப்புச் சொற்களின் உபயோகம், அழைக்கும் நோக்கத்தையே நிறைவு செய்யாது, உரையாடலில் ஈடுபடும் இருவரின் உறவுகளையும் சிதைத்து விடவும் கூடும் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு நல் அத்தாட்சி.

## முடிவுரை

வகுப்பு, பொருளாதாரம், கல்வி, வயது போன்ற பல்வேறு காரணிகளால் சமுதாயத்தில் முரண்பட்ட அடுக்கு நிலைகள் தோன்றுகின்றன. சமுதாயத்தில் காணப்படும் இம்முரண்பட்ட அடுக்கு நிலைகளை மொழிசாராக் குறியீடுகளை இருப்பிடத்தில் தோன்றும் இடைவெளி, தொடு உணர்வு, அமர்வு விதம், சந்திப்பு, சமிக்ஞை,

மொழி உபயோகிப்பின்மை போன்றவற்றை எங்ஙனம் வெளிப்படுத்துகின்றன என்பது பற்றி இக்கட்டுரை விரிவாக ஆய்வு செய்தது. மேலும் சில உறவுகளின் முன்னால் மொழிக்கூறுகளின் உபயோகம் பயனற்றுப் போவதையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டியது.

சமுதாயத்தில் நடைபெற்று வரும் சமூக மாற்றங்களையும், அதன் விளைவாக இரு வகுப்பினரின் மொழிப் பயன்பாட்டில் ஏற்படும் மொழி மற்றும் மொழி சாரா கூறுகளின் மாற்றத்தையும் இக்கட்டுரை எடுத்தியம்பியது. ஆக இவ்வாய்வு, கிராமியச் சூழ்நிலையில் இரு வேறு நபர்களுக்கிடையேயான தகவல் தொடர்புப் பரிமாற்றத்தில் மொழிக் கூறுகளுக்கு எங்ஙனம் மொழி சாரா கூறுகள் ஒத்துழைக்கின்றன என்பதையும், இவற்றை சமுதாய நிலையில் காணப்படும் பல்வேறு அடுக்கு நிலைகள் எங்ஙனம் கட்டுப்படுத்துகின்றன என்பதையும் மிகத் தெளிவாக வெளிக் கொணர்ந்துள்ளது.

## References


Beck, B.E.F. 1972 *Peasant Society in Konku* Vancouver : University of British Columbia Press.

Karunakaran, K. 1981 *Study of Social Dialects in Tamil,* Annamalainagar, AITLA.

Sivashanmugam, C. & Levinson, S.C. 1982 *"Caste Rank and Verbal Interaction in Western Tamilnadu"* in D.B. Mc Gilvray (Ed.) **Caste Ideology and Interaction** Cambridge : Cambridge University Press.

Pattanayak, D.P. 1975 *"Caste and Language"* **IJDL,** 4.1 : 94-104.

Perumalsamy, P. 1991 *Status Marking in Tamil : A Sociolinguistic Study,* Unpublished Ph.D., Thesis, Coimbatore : Bharathiar University.

Thirumalai, M.S. 1987 *Silent Talk : Non Verbal Communication,* Mysore : CIIL.

* இந்திய சமுதாய விஞ்ஞான ஆய்வுக் கழகத்தின் (I.C.S.S.R.) குறுகிய கால முனைவர் பட்ட ஆய்வுத் தொகை உதவிக்காக அகில இந்திய அளவிலே தேர்வு செய்யப்பட்டு எழுதப்பட்ட முனைவர் பட்டத்தின் ஒரு அத்தியாயத்தின் சுருக்கம் தான் இக்கட்டுரை. ஆய்வு உதவித் தொகை வழங்கிய அந்நிறுவனத்திற்கும், கொளாநல்லி கிராமத்தில் ஆய்வாளருக்குத் தங்க இடமளித்து ஆய்வுகள் சேகரிக்க உதவிய திரு. ஓ. சாந்தகுமார், திரு. கு. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. ஓ. சத்திய நாராயணன் ஆகியோர்களின் குடும்பத்தாருக்கும், இவ்வாய்வு நிறைவடைய ஒத்துழைப்பு நல்கிய எண்ணற்ற தகவலாளிகளுக்கும், உதவிபுரிந்த ஏனையோருக்கும் ஆய்வாளரின் மனமார்ந்த நன்றிகள்!.

பெரு. பெருமாள்சாமி
ஆய்வு அதிகாரி (மொழி), மொழிப்பிரிவு,
இந்திய தலைமைப் பதிவாளர் அலுவலகம்,
கொல்கத்தா.

# இலக்கணம் கற்பித்தலில் மொழியியலின் பங்கு

- பா. மல்லிகா

முன்னுரை

"ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் ஒருவரால் அவர் எவ்வளவு சிறந்த புலவராயினும் விடாமல் பயன்படுத்த முடியாது. ஷேக்ஸ்பியர் என்ற பெரும்புலவரும் தம் நூல்களில் பயன்படுத்திய சொற்கள் ஏறக்குறைய பதினையாயிரமாம். ஆங்கில மொழியிலுள்ள சொற்களில் ஆறில் ஒரு பங்கையே அவ்வளவு சிறந்த புலவரும் எடுத்தாள முடிந்தது" என்று மொழி வரலாறு என்னும் நூலில் மு. வரதராசன் கூறுகிறார் (ப. 21). எனவே மொழி என்பது அளவற்ற சொற்களை உடையது என்று தெளியலாம்.

## மொழியின் கருவியே இலக்கணம்

"பிறர் தவறின்றிப் புரிந்து கொள்வதற்கும் தவறின்றிக் கருத்தை வெளியிடுவதற்கும் கருவியாக உதவுவது இலக்கணம்" என்று நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என்னும் நூலில் அ.கி. பரந்தாமனார் குறிப்பிடுகிறார் (ப. 219).

## மொழியியலின் அவசியம்

மனத்தில் நிகழ்வனவற்றை உணர்த்தவே மொழி கருவியாகப் பயன்படுகிறது. ஆகவே மொழியியல் என்பது எடுத்துக்காட்டுடன் இயைந்த உணநூல் என்று கருதுவாருமுளர் என்று பில்ஸ்பெரி, மீடர் கூறும் கருத்து இங்கு கருதத்தக்கது (ப. 21).

மொழியியல் என்பது எந்த ஒரு மொழியையும் கற்கும் சில வாய்ப்பாடுகளைத் தருவது ஆகும். "இலக்கணப் பகுதியோடு நில்லாமல் பல்வேறு வகையிலும் மொழியைப் பற்றிய உண்மைகளைக் காண வழிவகுப்பதுதான் மொழியியல்" என்று பொற்கோ கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## புணர்ச்சியின் இன்றியமையாமை

தமிழில் பிழையற எழுதுவதற்கும் அருந்தமிழ்ப் பாடல்களை வருந்தாமல் படித்து இன்புறுதற்கும் சில சந்தி முறைகளை நன்கறிந்து கொள்வது இன்றியமையாதது என்று நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என்ற நூலில் அ.கி. பரந்தாமனார் குறிப்பிடுகிறார் (ப. 254).

## புணர்ச்சி என்றால் என்ன?

இரண்டு சொற்கள் சேருவது "புணர்ச்சி" அல்லது "புணர்ப்பு" எனப்படும். பொன் + அணி > பொன்னணி, பொன் நிலைமொழி. அணி வருமொழி. புணர்ச்சி என்பது நிலைமொழி வருமொழி என்ற இரு மொழிகளும் புணரும் விதமே ஆகும். அதாவது புணர்ச்சி என்பது நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் பொறுத்து அமைகிறது.

இலக்கணம் கற்பிக்க உறுதுணையாய் இருப்பது மொழியியல். எந்த ஒரு செயலையும் காரணங்கருதி செய்வது நன்று. இரண்டு சொற்கள் புணரும்போது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் தம்முள் திரிந்து வரும் புணர்ச்சி விகாரப் புணர்ச்சி எனப்படும்.

## விகாரப் புணர்ச்சி வகைகள்

நிலைமொழி ஈற்றெழுத்து வருமொழி முதல் காரணமாகத் திரியலாம். அல்லது வருமொழி முதல் நிலைமொழி ஈற்றெழுத்துக் காரணமாகத் திரியலாம். அல்லது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் இரண்டுமே திரிந்தும் வரலாம் என இலக்கண நூலார் கூறுகின்றனர்.

> "குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
> மிகலுமாம் ணளனல வழி நத் திரியும்" – (ந.சூ. 158.)

என்ற நூற்பாவில் தனிக்குற்றெழுத்தின் பின் வரும் ய், ஐ, நொ, து என்னும் நான்கும் நிலைமொழியில் இருக்க வருமொழியில் ஞ, ந, ம முதலான எழுத்துக்கள் கொண்ட சொற்கள் வரின் மெலி மிகும் என உரைக்கிறார். மேலும் ண, ள, ன, ல மெய்களின் பின்வரும் நகரம் திரியும் என்றும் நன்னூலார் சுட்டுகிறார். ஆனால் ஏன் மெல்லினம் மிகுகிறது என்றும், நகரம் ஏன் ண, ள, முன்னும் ன, ல முன்னும் திரிகிறது என்றும் காரணம் கூறவில்லை.

மொழியியலார் இவ்வாறு மாறிவருதலுக்கான காரணத்தைக் கூறுகின்றனர். எனவே மாறிவரும் காரண விதியைத் தெரிந்து கொண்டு

இலக்கணம் படிக்கும்போது நமக்கும், மற்றவர்களுக்கும் எளிதில் புரிய ஏதுவாகிறது.

1. மெய் + ஞான்றது > மெய்ஞ்ஞான்றது

மெய் + நீண்டது > மெய்ந்நீண்டது

மெய் + மாண்டது > மெய்ம்மாண்டது

2. கை + ஞான்றது > கைஞ்ஞான்றது

கை + நீண்டது > கைந்நீண்டது

கை + மாண்டது > கைம்மாண்டது

3. நொ + ஞெள்ளா > நொஞ்ஞெள்ளா

நொ + நாகா > நொந்நாகா

நொ + மாடா > நொம்மாடா

4. து. + ஞெள்ளா > துஞ்ஞெள்ளா

து + நாகா > துந்நாகா

து + மாடா > தும்மாடா

து என உச்சரித்து ஞெள்ளா என்று உச்சரிக்கும்போது நாக்கு மிகவும் சிரமப்படும். நாம் சிரமமின்றி உச்சரிப்பதற்கு நாக்கு வருமெழுத்தின் மிக்கு ஒலிக்கிறது. எனவே ஞ் என்பதை இணைத்து துஞ்ஞெள்ளா என்று கூறும்போது எளிமை ஆகிறது எனலாம்.

அதுபோல் நிலைமொழியில் ண், ள் ஈறு இருந்து வருமொழியில் நகரம் வரின் திரியும் என்று நன்னூல் கூற, உரைகாரர் வழி ண், ள் என்பவை "ந" வர "ண" கரமாகத் திரியும் என உணரலாம்.

மண் + நீண்டது > மண்ணீண்டது

முள் + நீண்டது > முண்ணீண்டது

அதுபோல நிலைமொழி ஈறாக ன், ல் வந்து வருமொழி முதலில் நகரம் வரின் 'ன'கரமாகத்தான் திரியும் என உரைகாரர் வழி அறியமுடிகிறது.

பொன் + நீண்டது > பொன்னீண்டது

கல் + நீண்டது > கன்னீண்டது

இவ்வாறு ஏன் மாறுகிறது என்றால் ல, ன இரண்டும் நுனிநா நுனியண்ண ஒலிகள். எனவே இவ்வாறு மாறுகின்றன என்று அறிந்து விளக்க முடிகிறது.

மேலும் எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரையும் யகரத்தையும் முதலாக உடைய சொல் வரின் வகரம் தோன்றும். பிறவரின் வந்த மெய்யே வருமென்றும் நன்னூல் கூறுகிறது.

"எகரவினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையும் . . . . . . . . . .
. . . . . . . . . தோன்றுதல் நெறியே" – (ந.சூ. 163)

உரையாசிரியர்கள்

எ + அணி > எவ்வணி

எ + யானை > எவ்யானை

என்றும்

எ + குதிரை > எக்குதிரை

எ + மனை > எம்மனை

எ + படை > எப்படை

எ + ஙனம் > எங்ஙனம்

என்றும் சான்று தருகின்றனர்.

எ என்று கூறி நிறுத்தி மனை என்று கூறும்போது உச்சரிப்பது கடினம். ஆனால் ம் சேர்த்து எம்மனை என்பது எளிதாக உருவாகும். எனவே வந்த மெய் மிகுகிறது என மொழிநூல்வழி காரணம் கூறி விளக்க முடியும்.

மேலும்,

"மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்த
வரப் பெறுனவுமுள வேற்றுமை வழியே" – (ந.சூ. 166)

என நன்னூல் கூறுகிறது. அதாவது வேற்றுமைப் புணர்ச்சியில் உயிரீற்று மரப்பெயர்கட்கு முன் வல்லினம் வரின் வல்லெழுத்து மிகலாம் அல்லது இனமான மெல்லெழுத்து தோன்றும் என உரை ஆசிரியர்கள்வழி அறியமுடிகிறது.

பலா + காய் > பலாக்காய்

வாழை + பழம் > வாழைப்பழம்

எனவும்,

மா + பழம் > மாம்பழம்

விள + காய் > விளங்காய்

எனவும் வரும்.

வருமொழிக்கேற்ப நிலைமொழியில் எழுத்து மிகும். சில இடங்களில் மெல்லினம் வரக் காரணம் என்ன என்று பார்த்தோமானால் வல்லினம் வரின் வேறு பொருள் வருவதைக் காணமுடிகிறது.

மா + பழம் > மாம்பழம்

விள + காய் > விளக்காய்

பெரியபழம், விளக்குவாய் என்னும் பொருள் வருவதால் வேறுபடுத்த மாம்பழம் எனவும், விளங்காய் என்றும் ஆனது என்றும் விளக்கம் நல்கலாம்.

மேலும்,

"ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே" – ந.சூ. 185.

என்னும் நூற்பாவிற்கு,

ஐகாரச் சாரியையை இறுதியில் பெற்று வரும் குற்றியலுகர மொழிகளும் உண்டு என்று உரைகாரர் கூறி சான்றாக

பண்டு + காலம் > பண்டைக்காலம்

முந்து + வளம் > முந்தைவளம்

அன்று + திங்கள் > அற்றைத்திங்கள்

நேற்று + கூலி > நேற்றைக்கூலி

என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

எனவே பண்டு என்பது புணரும்போது 'ஐ' சாரியை பெற்று புணரும் என விளக்க முடியும்.

மேலும் வருமொழி முதல் நிலைமொழி ஈறு இரண்டு மெய்களும் திரியும் புணர்ச்சி உண்டு என்று கூறி அல் + திணை அஃறிணை

என்றாகுமென உரையாசிரியர் கூறுகிறார். இதனை மொழியியலார் இருபுறம் நோக்கிய ஓரினமாதல் என்று கூறுவர் என விளக்கி

கல் + தூண் > கற்றூண்

முள் + தாள் > முட்டாள்

பொன் + தாலி > பொற்றாலி

எனப் பல சான்றுகளை எடுத்துரைக்கலாம்.

சில இடங்களில் நிலைமொழி ஈறு காரணமாக வருமொழி முதலெழுத்து திரிவதுண்டு. இதை 'முன்னோக்கிய ஓரினமாதல்' என மொழி நூலார் கூறுவர் என்று கூறி

பொன் + நாள் > பொன்னாள்

தண் + நீர் > தண்ணீர்

விண் + நாடு > விண்ணாடு

கண் + நோய் > கண்ணோய்

என நிலைமொழி ஈற்றுணகரம் காரணமாக வருமொழி நகரம் திரிந்து நிற்கிறது என விளக்கிக் கூறலாம். ஒரே எழுத்தாக மாறுவதை ஓரினமாதல் என்று விளக்கம் கூறமுடியும்.

வேறு சில இடங்களில் வருமொழி காரணமாக நிலைமொழி ஈற்றெழுத்து திரிதலுமுண்டு. இதைப் "பின்னோக்கிய ஓரினமாதல்" என்று மொழிநூலார் கூறுவர் என்று கூறி

முள் + செடி > முட்செடி

மண் + குடம் > மட்குடம்

மண் + சட்டி > மட்சட்டி

பொன் + குடம் > பொற்குடம்

பொன் + சங்கி > பொற்சங்கிலி

கல் + கண்டு > கற்கண்டு

கல் + சட்டி > கற்சட்டி

என எடுத்துக்காட்டுகள் தரமுடியும்.

ள், ண் இரண்டையும் தொடர்ந்து வல்லினம் வர 'ட'கரமாக மாறும் எனவும், ன், ல் இரண்டையும் தொடர்ந்து வல்லினம் வரில் 'ற'கரமாக மாறும் என்றும் கூறி விளக்கலாம்.

## முடிவுரை

மேற்கண்ட முறைகளில் புணர்ச்சி இலக்கணம் கூற முற்படும்போது அது காரணத்துடன் கூறப்படுவதால் எளிதில் புரிந்து கொண்டு தவறில்லாமல் எழுதா வாய்ப்பாகும். எனவே இலக்கணம் கற்பிக்க மொழியியல் பெரிதும் துணைபுரிகிறது எனலாம்.

பா. மல்லிகா
தமிழ் இணைப்பேராசிரியர்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி,
பெரியகுளம்.

# இலக்கணப்பாடத்தை எளிமையாக்குவது எப்படி

- இரா. சு. முருகன்

இலக்கணம் கற்பிப்பதன் நோக்கங்களை மொழியாசிரியர்கள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ அறிந்துள்ளனர். இந்நோக்கங்களை அடைய ஆசிரியர் முயல்வதை பொதுவாகக் காணமுடிகிறது. ஆயினும் பல நேரங்களில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் தாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி கிட்டவில்லை என்று உணர்கிறார்கள். இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இதில் முக்கியமானது மாணவர் நோக்கில் இலக்கணம் சுவைபடக் கற்கப்படுவதில்லை. ஆசிரியர் கண்ணோட்டத்தில், மொழிக்கற்றலில் இலக்கணப்பாடம் கற்கும் மாணவர்கள் வெறுக்கிறார்கள் என்பதற்கான காரணத்தை அறிந்தால் இலக்கணம் பயிற்றும் முறையை எளிதாக்கி மாணவர் விரும்பிப் படிக்கும் வகையில் இலக்கணப் பாடத்தை நடத்தமுடியுமென்பதாகும். பொதுவாக எதையெல்லாம் புரிந்து கொள்ள முடியவில்லையோ எது கற்பதற்குக் கடினமாக உள்ளதோ அதை வெறுப்பது மனித இயற்கை. ஒரு மாணவனுடைய இலக்கண அறிவு மற்ற மாணவர்களிடமிருந்து மாறுபடலாம். இந்த தனியாள் வேற்றுமையைக் கருதாது எல்லா மாணவர்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாகவோ அல்லது கற்பனையில் உள்ள ஒரு சராசரி மாணவனுக்கோ கற்பிக்கப்படும் இலக்கணம் எவருக்கும் பயன்படுவதில்லை. இதனால் மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் குன்றும் இலக்கணத்தைச் சுமையாகவும் எண்ண முற்படுகிறார்கள். இந்நிலையினை மாற்றவும் இலக்கணப் பாடத்தை மாணவர்களுக்கு எளிமைப்படுத்துவது எப்படி என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1.0. இலக்கணம் பயிற்றும் முறை

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தைப் பள்ளி மாணவர்களுக்கு இருமுறையில் கற்பிக்கலாம்.

1. விதி விளக்கமுறை
2. விதிவருமுறை

## 1.1. விதி விளக்கமுறை

இயற்றமிழ் இலக்கணம் பயிற்று விதிக்கப்பட்டு வரும் முறை விதி விளக்கமுறையாகும். எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை போன்றவற்றைத் திருத்திப் பயிலும் மொழியைச் செம்மையாகப் பயில்வதற்கு ஏற்றமுறை விதி விளக்கமுறையாகும். முதலில் விதியைக் கூறி அதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள் பலவற்றை இலக்கியத்தின்று கொடுத்து கூறப்பட்ட விதியை விளக்கும் முறை விதி விளக்கமுறை என்று சொல்லப்படும். இம்முறையை மேற்கொண்டு மாணவர்க்கு இலக்கணம் கற்பிக்கும்போது மொழித்திறன் பெறும் மாணவனின் பங்கு வகுப்பில் குறைவாகவே இருக்கும்.

"கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
இயலும் இடம் பால எங்கும் என்ப" (நன்னூல் : 338)

என்ற நூற்பா வியங்கோள் வினைமுற்று பற்றிக் கூறுவது ஆகும். வியங்கோள் வினைமுற்று உயர்திணை, அஃறிணை என்னுமிரு திணையிலும் அமையும். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற ஐந்து பாலிலும் இடம்பெறும். இதுவே அன்றி தன்மையிடம் முன்னிலையிடம், படர்க்கையிடம் என்னும் மூவிடத்தும் அமையும்.

வியங்கோள் வினைமுற்று எங்ஙனம் மொழியில் இடம்பெறும் என்பதற்கு நன்னூல் தரும் நூற்பாவை முதலில் கூறி, பின்னர் ஏற்ற சான்றுகள் தந்து விளக்குவது விதி விளக்கமுறையாகும். வியங்கோள் வினைமுற்றின் விகுதி க, இய, இயர் என்னும் மூன்றனுள் ஒன்று கொண்டு அமையும். இந்த விகுதிகளை உடைய சொற்களுக்குச் சான்று இலக்கியத்தினின்று தந்து விளக்கும் போக்கு விதி விளக்க முறையில் அமையும்.

"வாழ்க எங்கோ வாழிய"

"அமுதம் உண்க அடிகளீங்கென"

"வாழிய செந்தமிழ் வாழியர் தமிழர்"

இத்தகைய இலக்கியச் சான்றுகளைக் கரும்பலகையில் எழுதி வியங்கோள் வினைமுற்று எங்ஙனம் மொழியில் அமைந்துள்ளது என்பதை விளக்கிக்

கற்பிப்பது விதி விளக்க முறையாகும். வாழ்தல், வைதல், வேண்டல், விதித்தல் என்னும் நான்கு பொருளிலும் இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வியங்கோள் வினைமுற்று வரும் என்பதனை விதிவிளக்க முறையில் இங்ஙனம் கற்பிக்கலாம்.

- விதிவிளக்க முறையில் பாடம் நடத்தினால் பாடத்தை விரைவாக நடத்தி முடிக்கலாம்.
- குறைந்த கால அளவில் பாடங்களை நடத்த இம்முறை வழி செய்கிறது.
- இலக்கண் நூற்பாக்களை மனப்பாடம் செய்வது மாணவரிடையே மனப்பாடத் திறமையை வளர்க்கும்.
- குறிப்பிட்ட பாடப்புத்தகத்தினின்று இலக்கணத்தை நடத்துவதால் ஆசிரியரின் பணி எளிதாகிறது.
- பொதுவிதியினின்று சான்றுகளுக்குப் போகின்ற முறையால் எதிர்பார்க்கும் கற்றலின் விரைவு தடைபடுகிறது.
- முன்னோர் கூறிச் சென்ற விதிகளை இலக்கியச் சான்றுடன் மட்டுமே பொருத்திக் கற்கவழி செய்கிறது. இதனால் மாணவர் கற்றலில் புதிய அறிவு பெற வாய்ப்பில்லை.
- மொழியின் இலக்கணக் கூறுகளை மாணவன் தெளிவாகக் கற்றுக் கொள்ள முடிவதில்லை.
- இலக்கணக் கூறுகளைத் தெரிந்துகொள்ள மாணவன் பிறர் உதவியை நாடவேண்டியுள்ளது.

## 1.2. விதிவருமுறை

மாணவர்கள் பட்டறிவிற்கு எட்டிய எடுத்துக்காட்டுகள் பலவற்றை ஆசிரியரே முதலில் கூறிப் பின்னர் மாணவரையும், ஒத்த சான்றுகள் கூறச் செய்தல் வேண்டும். அங்ஙனம் கூறிய சான்றுகளின்று ஒரு பொதுவான விதியை மாணவரே கூறும்படிச் செய்யவேண்டும். பின்னர் இலக்கண நூல் கூறும் இலக்கண விதியைப் பொருத்திக் கற்பிக்க

வேண்டும். இவ்வகையில் இலக்கணம் கற்பித்தல் விதி வருமுறையில் கற்பித்தல் என்று கூறப்படும்.

இம்முறையை மேற்கொண்டு இலக்கணப்பாடம் பயிற்றும்போது மாணவனின் சிந்தனை தூண்டப்படுகிறது. வகுப்புச் செயல்களில் ஆர்வமுடன் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். பிழையற்ற மொழியமைப்பை மாணவர் பேசவும் எழுதவும் இயலும். உயிர் எழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்ச்சொற்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழி வல்லின எழுத்தாக அமையும்போதும் என்ன மாற்றம் ஏற்படும் என்பதை மாணவருக்கு விளக்க விதிவருமுறை சிறந்த முறையாகும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது முதலில் மாணவர் பட்டறிவிற்கு எட்டிய சான்றுகளை விவரிக்க வேண்டும்.

மா + செடி = மாஞ்செடி

மா + கனி = மாங்கனி

மா + பழம் = மாம்பழம்

மா + தளிர் = மாந்தளிர்

மா + சோலை = மாஞ்சோலை

மா + பூ = மாம்பூ

மா + காய் = மாங்காய்

மாணவரிடத்து இருந்து இதுபோன்ற சான்றுகளை வரவழைக்க அவர்களுக்குத் தெரிந்த மரப்பெயர் சொற்களைக் கூறச்செய்ய வேண்டும். அவர்கள் கூறிய மரப்பெயர்ச் சொற்களின் இறுதி உயிரீறாக அமையின் அவற்றையும் வருமொழி முதல் க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு வல்லின எழுத்துள் மொழி முதலில் அமையும் சொற்களை மாணவரைக் கூறும்படிச் செய்து அவற்றையும் கரும்பலகையில் குறித்திட வேண்டும்.

கடினமான இலக்கணப் பகுதியைக் கற்பிக்கும்போது மொழி பயிற்றலின் புதிய முறையான விளையாட்டு முறையை மேற்கொண்டு கற்பித்தல் பயன் விளைவிக்கும்.

விளையாட்டு முறையை மேற்கொண்டு பாடம் கற்பிக்கும்போது சூழலட்டை, மின்னட்டை, தொடர் அட்டை, சொல்லேணி, பொருத்துக

அட்டை, விளக்கத்தாள்கள் போன்ற துணைக் கருவிகளை பயன்படுத்த வேண்டும்.

## 2.0. பாடத்தோடு இலக்கணத்தைக் கற்பித்தல்

### 2.1. உரைநடைப்பாடம்

உரைநடைக்குத் தேவையான உறுப்புகளாகிய சொற்கள், அவற்றை விளக்கும் பண்பு, உவமை போன்ற நயங்களையும் சொல்லாக்கம் பகுப்பு முதலியவற்றையும் உரைநடை அமைப்பின் சிறப்பு, முறை, பயன் மரபு முதலியவற்றையும் மாணவர்கள் தெளிந்து தேறும் வண்ணம் இலக்கணத்தை உரைநடைப் பாடத்துடன் இணைத்து நடத்துவது சிறப்புடையது.

### 2.2. கட்டுரைப்பாடம்

கட்டுரைப்பாடம் நடத்துவதன் நோக்கம் பிழையின்றி எழுதவும் கருத்தைக் கூறவும் பயிற்சி அளிப்பதாகும், இலக்கணப் பாடம் பயிற்றலின் நோக்கம் கட்டுரைப்பாடம் பயிற்றும்போது வல்லினம் மிகும் இடங்கள், மிகா அமைப்பு, எழுத்துப்பிழை போன்றவற்றை விளக்குவதாகும். இலக்கணப் பாடம் பயிலுகிறோம் என்ற உணர்வு தோன்றாவண்ணம் பயிற்றுவிக்க வேண்டும்.

கட்டுரை எழுதும்போது இலக்கண அறிவை தொடர்ந்து வற்புறுத்தாமல் மறைமுகமாக கட்டுரைப் பகுதியாகிய சொற்றொடர்களின் தொடர்ச்சி, அழுத்தம், சொற்களின் வைப்பு முறை போன்றன பற்றிய விதிகளோடு பொருத்திக் காட்டமுடியும்.

### 2.3. செய்யுட்பாடம்

செய்யுட்பாடம் நடத்தும்போது இலக்கணப் பகுதியை இணைத்துக் கற்பித்தல் சிறப்புடையது. இன்றியமையா இலக்கணக் குறிப்புகளை மட்டுமே கூறி ஏற்ற இலக்கண நூற்பாக்களை மட்டுமே மனப்பாடம் செய்யச் சொல்லுதல் வேண்டும். ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை செய்யுளில் இடம்பெறும் விகாரம், முற்று, எச்சம், அணி, யாப்பு, இன்ன பிறவற்றையும் ஆங்காங்குப் பாடத்தில் இணைத்துக் கற்பித்தால், பயனுடைய வகையில் கற்பித்தல் – கற்றல் செயல் இடம்பெறும்.

## 3.0. கல்வி கற்பிக்கும் முறை

கல்வியைக் கற்பிக்கும் முறைகளில் ஒன்றான நிரல் வழிக்கற்றல் வழி பாடத்தின் ஒரு பகுதியான இலக்கணம் பயிற்றும் முறை சிறப்புடையது.

இந்நிரல்வழிக் கற்றலைச் செயல்படுத்த பின்வரும் திறன்களை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்.

- இலக்கணம் கற்பிப்பதன் நோக்கங்களை விவரித்தல்.
- பள்ளி மாணவர்களுக்கு இலக்கணப் பாடத்தை வெறுப்பதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டுதல்.
- இலக்கண வகைகளை வகைப்படுத்துதல்
- விதிவருமுறை, விதிவிளக்கு முறைகளை வேறுபடுத்துதல்
- பள்ளி மாணவர்க்கு இலக்கணம் கற்பிக்க எம்முறை ஏற்றது என்பதை நிறுவுதல்
- ஐந்திலக்கணத்துள் எழுத்து, சொல் தொடரிலக்கணத்தை எம்முறையில் நடத்தினால் பயனுடையதாக இருக்கும் என்பதற்கான காரணங்களைத் தருதல்

## 4.0. மொழியாசிரியரின் கடமை

மொழியைப் பயிற்றும் ஆசிரியர், மொழியைக் கற்பிக்கும் போது பிழையற மொழியைப் பேசவும், எழுதவும் இலக்கணம் கற்பிக்க வேண்டும். மொழியின் சட்டமான இலக்கணம் மொழிக் கல்வியில் சிறந்த இடம் பெறுகிறது. மாணாக்கனுக்கு மொழியின் அடிப்படையினை ஓரளவு புரிந்து கொண்டோம் என்ற நிறைவினை ஏற்படுத்துதல் மொழியாசிரியரின் கடமை. இலக்கியப்புலமை, இலக்கணப்புலமை என்னுமிரண்டு புலமையையும் உள்ளடக்கிய மொழிப் புலமையை மொழியாசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

இலக்கியங்களுள் சிறுகதை இலக்கிய வகையை மாணவன் படித்து அதன் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றான் என்றால் அது அவன் பெற்ற இலக்கியப் புலமையைக் காட்டுகிறது. அம்மாணவன் கவிதைகளை எழுதுகிறான் என்றால் அவன் படைப்பிலக்கிய வன்மை பெற்றுள்ளான்

என்பதை அறிய முடிகின்றது. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மொழியமைப்புகளையும் இடைக்கால இலக்கியம் காட்டும் மொழியமைப்புகளையும், ஒப்பிடும் நிலையில் அம்மாணவன் இலக்கிய ஆராய்ச்சி செய்யும் ஆற்றலைப் பெறுகிறான்.

மாணவர்கள் மொழியில் ஒலி வடிவத்திற்கு எங்ஙனம் வரிவடிவம் தரப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளும் வகையிலும் எச்சொல்லிற்கு எப்பொருள் அமையப் பெற்றுள்ளது என்பதனை அறிந்துகொள்ளும் வகையிலும் பாடம் புகட்ட வேண்டும். இங்ஙனம் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி தொடர்பான மொழி இயக்கங்கள் எவ்வகையில் எவ்வாறு இயங்குகின்றன என்பதை வகை தொகைப்படுத்திக் கூறவேண்டும். வினாக்களை எழுப்பி இலக்கண கொள்கையின் அடைப்படைகளைக் கண்டறியத் துணை செய்ய வேண்டும்.

## 4.1. சொற்பிழை

நாம் பயன்படுத்தும் சொற்களில் எழுத்து மாறுபட்டால் பொருளும் மாறுபட்டு விடும். பொருள் வேறுபாடறிந்து எழுதல் வேண்டும்.

### 4.1.1. ல - ள வேறுபாடு

காலை (நாளின் முற்பகுதி) – காளை (எருது)
குலம் (குடி) – குளம் (நீர்நிலை)
கொல் (கொலை செய்) – கொள் (பெற்றுக் கொள்)
வலி வலிமை – வளி (காற்று)
வெல்லம் இனிப்புக்கட்டு – வெள்ளம் (நீர்ப்பெருக்கு)
வேலை (பணி) – வேளை (பொழுது)

### 4.1.2. ழ - ள வேறுபாடு

வழி (பாதை) – வளி (காற்று)
வாழை (தாவர வகை) – வாளை (மீன் வகை)
வாழ் (வாழ்தல்) – வாள் (கருவி)
எரி (தீ) – (எறி) வீசு
திரை (அலை) – திறை (கப்பம்)
பரவை (கடல்) – பறவை (பறக்கும் பறவை)

### 4.1.3. ண - ன வேறுபாடு

| | | |
|---|---|---|
| அண்ணம் (மேல்வாய்) | – | அன்னம் (பறவை, சோறு) |
| ஆணை (கட்டளை) | – | ஆனை (யானை) |
| பணி (தொழில்) | – | பனி (குளிர்) |
| மணம் (வாசனை) | – | மனம் (உள்ளம்) |

## 4.2. பிறமொழிச் சொற்கள்

நம் அன்றாட வாழ்க்கையில் பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் எண்ணற்ற சொற்களைப் பயன்படுத்துகிறோம். சில பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பிறமொழிச் சொற்கள் | | தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|
| ஹேர்கட்டிங் சலூன் | – | முடிதிருத்தகம் |
| ஹோட்டல் | – | உணவகம் |
| மெடிக்கல் ஷாப் | – | மருந்தகம் |
| கம்பெனி | – | குழுமம் |
| இண்டஸ்ட்ரி | – | தொழிலகம் |
| டீ ஸ்டால் | – | தேநீர் அங்காடி |
| ஆஸ்பிடல் | – | மருத்துவமனை |

## 4.3. பிழை நீக்கி எழுதுதல்

பேச்சு வழக்கில் பல பிழையான சொற்களையும், கொச்சைச் சொற்களையும் பயன்படுத்தி வருகிறோம். நாம் எழுதும்போது பிறமொழிச் சொற்கள் கலப்பின்றியும், கொச்சைச் சொற்களையும், வழூஉ சொற்களையும் நீக்கி எழுதுதல் வேண்டும். சொற்பிழை, இலக்கணப் பிழை, தொடர்ப்பிழை ஆகியவற்றையும் நீக்கி எழுதுதல் வேண்டும்.

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| அவரக்கா | – | அவரைக்காய் |
| அடமலை | – | அடைமழை |
| அண்ணாக்கயிறு | – | அரைஞாண்கயிறு |
| ஆச்சி | – | ஆட்சி |

| | | |
|---|---|---|
| ஆம்பளை | – | ஆண்பிள்ளை |
| இடதுகை | – | இடக்கை |
| கயறு | – | கயிறு |
| கட்டிடம் | – | கட்டடம் |
| கெடிகாரம் | – | கடிகாரம் |
| சிகப்பு | – | சிவப்பு |
| சீயக்காய் | – | சிகைக்காய் |
| சுவற்றில் | – | சுவரில் |
| தாப்பாள் | – | தாழ்ப்பாள் |
| துவக்கம் | – | தொடக்கம் |
| நாத்தம் | – | நாற்றம் |
| பதட்டம் | – | பதற்றம் |
| பயிறு | – | பயறு |
| முத்தான் | – | விழித்தான் |
| ரொம்ப | – | நிரம்ப |
| வவுத்துவலி | – | வயிற்றுவலி |
| வெங்கலம் | – | வெண்கலம் |

### 4.3.1. இலக்கணப்பிழை

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| அது அல்ல | – | அது அன்று |
| அவை அன்று | – | அவை அல்ல |
| ஓர் வீடு | – | ஒரு வீடு |
| அவள் வந்தது | – | அவள் வந்தாள் |
| செல்வி சென்றான் | – | செல்வி சென்றாள் |

### 4.3.2. வாக்கியப்பிழை

நாளை நான் வருகிறேன்

இவன் நேற்று வந்தவனல்ல

கருப்பனும் வசந்தாவும் வந்தான்

இவ்வாக்கியங்கள் பிழையானவை – இவற்றில் எழுவாய்க்கு ஏற்ற பயனிலை அமைந்திருக்கவில்லை. இதனால் வாக்கியங்கள் பிழைகளாயின

திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றையும் அதற்கேற்ற பயனிலைகளையும் அறிந்து, பிழையற்ற வாக்கியங்களை எழுதிப் பழக வேண்டும்.

(எ.டு) நாளை நான் வருவேன்

இவன் நேற்று வந்தவனல்லன்

கருப்பனும் வசந்தாவும் வந்தனர்

இவ்வாறு எழுவாயும் பயனிலையும் பொருத்தமுற அமைந்தால் வாக்கியம் பிழையில்லாதிருக்கும். மேலும், திணைப்பொருத்தம், பால் பொருத்தம், காலப்பொருத்தம், எண் பொருத்தம், இடப்பொருத்தம், மரபு வழு, சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதல், மேற்கண்ட பிழை நீக்கி எழுதுதல், சொற்பிழை, ழ – ள வேறுபாடு, ண – ன வேறுபாடு, பிறமொழிச்சொற்கள், இலக்கணப்பிழை, வாக்கியப்பிழை மற்றும் செய்யுள், உரைநடை, கட்டுரை ஆகிய பகுதிகளோடு இணைத்து நடத்தினால் மாணவர்களுக்கு கடினமாக இல்லாமல் மிகவும் எளிமையான முறையில் மாணவர்கள் இலக்கணத்தை விரும்பி கற்க ஏற்ற உத்தி முறையாக அமையும்.

## 5.0. மாணவன் பிழையற மொழியைப் பேச பயிற்சி

போலச் செய்தல் வாயிலாகக் குழந்தை மொழியைக் கற்றுக் கொள்கிறது. பள்ளிக்கு வருமுன்பே குழந்தை பேசும் திறனை இயல்பாகப் பெற்றுக் கொண்டே வருகிறது. பள்ளியில் நுழையும் மாணவரின் பேச்சில் தேவையற்ற ஒலிகள், கொச்சைச் சொற்கள், தவறான சொற்றொடர் அமைப்புகள் போன்றவை மிகுதியாகக் காணப்படும். பள்ளி வரும் மாணவர் தம் பேச்சில் உள்ள குறைகளை நீக்கி மொழியைத் திருத்தமாகப் பேச மொழியாசிரியர்கள் பயிற்சி தருதல் வேண்டும். மாணவன் பிழையற மொழியை பேசப் பயிற்சி அளிப்பதே இலக்கணம் கற்பித்தலின் நோக்கமாகும்.

மொழியைத் தொடக்கத்தில் பேசக் கற்றுக் கொள்ளும் குழந்தை வீட்டில் பேசப்படும் மொழி வழக்காறுகளை, மொழிக்கூறுகளை உள்ளத்தில் அமைத்துக் கொள்கிறது. பேச்சு வழக்கிலுள்ள பிழையைப் பள்ளியில் மாணவர்கள் செய்யும்போது பிழைகளைத் தவிர்க்கப் பயிற்சி தரவேண்டியது மொழியாசிரியரின் கடமையாகும்.

பள்ளியில் மொழியைக் கற்கும் மாணவன் இலக்கண அறிவைத் தெளிவாகப் பெற மொழியாசிரியர் உதவ வேண்டும். இலக்கியங்களைச் செம்மையாக உணர்ந்து இன்புற மொழிப் பயிற்றும் ஆசிரியர் யாப்பிலக்கண அறிவை மாணவர்க்கு உணர்த்துதல் வேண்டும். செய்யுளைச் சீர்பிரித்துப் பொருள் காணவும், சிலேடைப் பொருள் கண்டு மகிழவும், செய்யுளில் வரும் அரிய சொல்லாட்சிகள், இலக்கணக் கூறுகள் முதலியவற்றை அறியவும் அவற்றில் இடம்பெறும் உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் போன்ற நயங்களைக் கருத்தில் கொள்ளவும் இலக்கண அறிவைத் தருவது மொழியாசிரியரின் கடமையாகும்.

மொழிப்பாடத்தில் இலக்கணத்தைக் கற்பிக்கும் நோக்கம் அறிவியலை ஒட்டியது எனலாம். இலக்கண அறிவைக் கற்பிக்கும் நிலையில் கற்பிக்கும் துறையில் புதிதான கருத்தோட்டங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மாணவரே பயனை அடிப்படையாகக் கொண்டு கற்கிறார்கள். மொழிக் கற்றலில் இலக்கணப் பாடத்தில் மொழியமைப்பைக் கற்பிக்கும் நிலையில் கற்கும் மாணவ மொழியைப் பழுதற அறிந்து பயனைப் பெறுகின்றனர்.

இலக்கணம் கற்பிப்பதின் நோக்கம் மொழியைக் கற்கும் மாணவர்கள் மொழியின் இலக்கணத்தைப் பாகுபடுத்திக் கூறும் இலக்கண விதிகளை முழுமையாக அறிவதுடன் செய்யுள், உரைநடை, கட்டுரை போன்ற பாடங்களுடன் இணைத்துப் படிக்கும்போது மொழிமரபு, மொழிப்போக்கு, மொழியின் வழக்கு போன்றவற்றைத் தெளிவாகக் கற்றுக் கொள்ளச் செய்வதே இலக்கணம், மொழியின் பல்வேறு கூறுகளைக் கூறும் பகுதி ஆதலின் அவற்றை முழுமையாக மாணவர்க்குக் கற்றுத் தருவதே அடிப்படை நோக்கமாகும். மாணவர்கள் இலக்கணத்தைப் பிறர்க்கு எடுத்துக் கூறும் வகையில் இலக்கணப் பாடத்தை மொழிப் பாடத்தின் பிறப்பகுதிகளுடன் இயைபுபடுத்திக் கற்பிக்க வேண்டும். பேச்சுத்திறன், கேட்டுணருத்திறன், வாசிக்குந்திறன், எழுதுந்திறன்

என்னும் நான்கு திறன்களிலும் மாணவனைத் திறமை பெறச் செய்வது மொழியாசிரியர் பணியாகும். அங்ஙனம் மொழியின் இலக்கணத்தை கற்பிக்கும் போது அதை பின்வரும் வகைகளில் கற்பிக்கலாம்.

அவையாவன :

1. ஒழுங்குமுறை இலக்கணம்
2. நடைமுறை இலக்கணம்
3. வரலாற்றுமுறை இலக்கணம்

இவற்றுள் ஏதேனும் ஒரு வகையைக் கொண்டு இயற்றமிழ் இலக்கணத்தை மாணவருக்குக் கற்பிக்கலாம்.

## முடிவுரை

பள்ளிகளில் மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் இலக்கணப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இலக்கணம் மாணவர்கள் விரும்பும் வண்ணம் கற்பிக்க வேண்டும். ஆனால் விரும்பும் வண்ணம் கற்பிக்கப்படுவதில்லை.

ஆசிரியர் வகுப்பின் தரம், பாட உள்ளடக்கம், மாணவரின் திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கற்பிப்பதில்லை என்பதால் மாணவர்கள் இலக்கணத்தை வெறுக்கின்றனர்.

எடுத்துக்காட்டுக்கள் அனைத்தும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்பெறும் மொழியிலிருந்து கொடுக்கப் பெறாமையால் மாணவர்கள் மொழியமைப்பினைப் புரிந்துகொள்வதில் இடற்பாடுகள் ஏற்படுகின்றன. மேலும்,

- இலக்கணத்தைப் பாடப்பகுதியோடு இணைத்து நடத்தாததால் மாணவர்கள் இலக்கணப்பகுதியினைப் புறக்கணிக்கின்றனர்.
- நிரல் வழிக்கற்றல் முறையில் இலக்கணத்தைக் கற்பித்தல் சிறந்தது.
- எழுத்து, சொல், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கணத்தையும் ஒழுங்குமுறை இலக்கண வகையில் கற்பிக்கலாம்.

- ஒலிப்பு பிழை, எழுத்துப்பிழை, சொற்பிழை போன்ற பிழைகளைத் திருத்துவதற்கு விதிவிளக்கு முறையினை பயன்படுத்த வேண்டும்.
- மொழிப்பாடத்துள் வரும் இலக்கணங்களை ஆதியோடந்தமாகக் கோட்பாட்டின்படிக் கூறாமல் மாணவர்கள் பட்டறிவோடு தொடர்புடையதாக இருக்கும் இலக்கணக் கூறுகளைக் கற்பிக்க வேண்டும்.
- பள்ளி நிலையில் விதி வருமுறையில் இலக்கணம் பயிற்றுவிப்பதே சிறப்புடையதாகும்.
- இலக்கணத்தை மொழியியல் அணுகுமுறையில் கற்பித்தால் மட்டுமே மாணவர்கள் சிரமமின்றிக் கற்க இயலும்.

## துணைநின்ற நூல்கள்


அழகப்பன், ஆறு., 1985 *இலக்கணக் கருவூலம்,* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

அறவாணன், க.ப., *மொழிப்பாடம்,* ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

ஆறுமுக நாவலர்., 1997 *தமிழ் இலக்கணம்,* முல்லை நிலையம், சென்னை.

எழில்வளவன், செ., 2002 *தொடக்க வகுப்புகளில் செயல்திட்ட முறையில் தமிழ் பயிற்றுவித்தல்,* ஆய்வுக்கோவை, முதல் தொகுதி, பக். 268–272.

சண்முகம், செ.வை., 1994 *இலக்கண உருவாக்கம்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணியபிள்ளை, கா., 1939 *மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்,* தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம், சேலம்.

இரா.சு. முருகன்
துணைநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தியாகராசர் கல்லூரி (தன்னாட்சி),
மதுரை.

# தொடக்கப்பள்ளி மாணவர்கள் மொழி கற்பதில் ஏற்படும் எழுத்துத் தவறுகள்

- ஆ. முனியன்

## 1.0. முன்னுரை

அன்றாட வாழ்வில் நாம் மொழியை எவ்விதத் தடங்கலும் இன்றி எளிதாகப் பயன்படுத்துகிறோம். மொழி ஆற்றல் வாய்ந்த தலையாய கருவியாக, மனிதனின் எண்ணங்களை, சிந்தனைகளைப் பல்வேறு நிலைகளில் வெளிக்கொணரும் சாதனமாகவும் இயந்திரமாகவும் விளங்கி வருகிறது. மொழி பள்ளிகளில், கல்லூரிகளில் காலங்காலமாக ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டும் மாணவர்களினால் கற்கப்பட்டும் வருகிறது.

## 1.1. மொழித் திறன்கள்

மொழி கற்பித்தல் அல்லது கற்றலில் முக்கியமான இடத்தைப் பெறுவன கீழ்க்கண்ட நான்கு மொழித்திறன்களாகும். அவை:

1. கேட்டல் திறன் (listening skill)
2. பேசுதல் திறன் (speaking skill)
3. படித்தல் திறன் (reading skill)
4. எழுதுதல் திறன் (writing skill)

மேற்கண்ட நான்கு மொழித்திறன்களில் கேட்டல் மற்றும் வாசித்தல் திறன்கள் உட்கொள்ளும் திறன்களாகவும் (receptive skills), பேசுதல் மற்றும் எழுதுதல் திறன்கள் வெளியிடும் திறன்களாகவும் (productive skills) மொழியியல் அறிஞர்களால் பகுக்கப்படுகின்றன. மொழித்திறன்களில் எழுதுதலும், படித்தலும் நெருங்கிய தொடர்புடையதாக ஒரு திறன் வளர்ச்சிக்கு மற்றொரு திறன் தேவையாக மொழி கற்றலில் / கற்பித்தலில் கொள்ளப்படுகின்றன. மேலும் ஒரு மனிதன் முழு கல்வியறிவு பெற்றவரா அல்லது கல்வியறிவு பெறாதவரென்பதை அறியும் திறன்களாக படித்தல் திறனும் எழுதுதல் திறனும் கருதப்படுகின்றன.

ஒருவர் இவ்விரு திறன்களிலும் செம்மைபெறாதவரெனில் அவர் கல்வியறிவுபெறாதவராகக் கருதப்படுகிறார். எனவே மொழித்திறன்கள், எந்த ஒரு மொழி கற்றல் அல்லது கற்பித்தல் சூழலிலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகத் திகழ்கின்றன.

மொழித்திறன்களில் ஒன்றான எழுத்துதிறன் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறிப்பாக பேச்சுச் சூழலிலிருந்து வரும் குழந்தைக்கு தொடக்கப் பள்ளியில் எழுத்து வழக்கு கற்பிக்கப்படுகிறது. இவ்வாறு பேச்சு வழக்கிலிருந்து வரும் குழந்தை எழுத்து வழக்கை கற்றுக் கொள்ளும்போது மொழித்திறன்களில் ஒன்றான எழுத்துத் திறனைக் கற்பதில் எண்ணற்ற தவறுகளைச் செய்ய நேரிடுகிறது.

## 2. ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் தமிழ் மொழியை எழுதும்போது செய்யும் தவறுகளை விளக்க முற்படுகிறது.

மொழிக் கற்கும் ஒருவரின் பேச்சிலோ எழுத்திலோ சில வழுக்கள் ஒழுங்கற்று காணப்படும். ஒரு சொல்லோ அல்லது அமைப்போ சில இடங்களில் சரியாகவும் வேறு சில இடங்களில் தவறாகவும் வந்தமையலாம். அவ்வாறு ஒழுங்கற்றவற்றைத் தவறுகளெனவும், ஒழுங்கான வழுக்களைப் பிழைகள் எனவும் கொள்ளலாம் (நடராசபிள்ளை மற்றும் விமலா, ச. 1981).

## 3. ஆய்வு எல்லை

தமிழ் மொழி பயிலும் தொடக்கப்பள்ளி குழந்தைகள் எழுதும்போது ஏற்படும் தவறுகள் அவர்களுடைய நோட்டுகளிலிருந்து தொகுக்கப்பட்டு மூன்று நிலைகளில் பகுக்கப்பட்டு ஆயப்பட்டுள்ளன. மற்ற நிலைகளான சொற்கள் மற்றும் வாக்கிய நிலைகளை ஒப்பிடுகையில் தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் எழுதும்போது அதிகமான தவறுகளை எழுத்து நிலையிலேயே செய்கின்றனர். எனவே இவ்வாய்வின் எல்லையாக தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் செய்யும் எழுத்துத் தவறுகளே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## 4. ஆய்வு முறை

பள்ளிக்கல்வி நிலையைப் பொறுத்தவரையில் தொடக்கக் கல்வியென்பது மாணவர்களுக்கு முதல்நிலையாக அமைகிறது. தொடக்கநிலையில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் அடங்கும். தொடக்கப்

பள்ளிகளில் படிக்கும் 16 மாணவர்களின் 1339 எழுத்துத் தவறுகள் இயைபிலா மாதிரிமுறை (Random sampling) வகையில் தொகுக்கப்பட்டன. 16 மாணவர்களில் 4 மாணவர்கள் முதல் வகுப்பைச் சார்ந்தவராவர்; 3 மாணவர்கள் இரண்டாம் வகுப்பு படிப்பவர்கள், 3 மாணவர்கள் மூன்றாம் வகுப்பும், 3 மாணவர்கள் நான்காம் வகுப்பும், 4 மாணவர்கள் ஐந்தாம் வகுப்பும் படிப்பவர்கள். மாணவர்கள் செய்த 1339 தவறுகளில் முதல் வகுப்பு மாணவர்கள் 369 (27.56%) தவறுகளையும், இரண்டாம் வகுப்பு மாணவர்கள் 250 (18.67%) தவறுகளையும், மூன்றாம் வகுப்பு மாணவர்கள் 241 (17.99%) தவறுகளையும், நான்காம் வகுப்பு மாணவர்கள் 237 (17.70%) தவறுகளையும், ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் 242 (18.07%) தவறுகளையும் ஏற்படுத்துகின்றனர். தொடக்கப்பள்ளி வகுப்புகளான இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் செய்யும் எழுத்துத் தவறுகளை ஒப்பிடுகையில் முதல் வகுப்பு மாணவர்கள் ஏற்படுத்தும் எழுத்து தவறுகளே அதிகமாகக் காணப்படுகிறது.

## 5. தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஏற்படுத்தும் தவறுகள்

தொடக்கப்பள்ளி மாணவர்கள் தமிழ்மொழி கற்பதில் ஏற்படும் எழுத்துத் தவறுகளில் அதிகமாக பயின்று வருபவை இவண் கொடுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

1. ற > ர
2. ர > ற
3. ல > ள
4. ல > ழ
5. ள > ல
6. ள > ழ
7. ழ > ல
8. ழ > ள

### 5.1. ற > ர

தமிழ் மொழியின் ஒலியமைப்பைப் பொறுத்தவரையில், வருடொலியும் 'ர' ஆடொலியும் 'ற' வெவ்வேறு ஒலியன்களாகும். ஆயினும் வருடொலியும் ஆடொலியும் எவ்வித வேறுபாடுமின்றி மாணவர்களால்

ஒலிக்கப்படுகின்றது. எனவே ஒலிப்புமுறை அடிப்படையில் இவை இரண்டும் ஒரே மாதிரி மாணவர்களால் ஒலிக்கப்படுகின்றன. 'ர' என்கிற வருடொலி 'ற' என்கிற ஆடொலியாகவும், 'ற' என்கிற ஆடொலி 'ர' என்கிற வருடொலியாகவும் மாணவர்களால் எழுதப்படுகின்றன.

தொடக்கப்பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரையில் வருடொலியை ஆடொலியாகவும், ஆடொலியை வருடொலியாகவும் எழுதுகின்ற நிலையில் 119 தவறுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 67% தவறுகள் ஆடொலிக்குப் பதிலாக வருடொலியாக எழுதப்படுகின்றன. அதாவது 56% தவறுகள் மேற்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றன. எஞ்சியுள்ள 52 தவறுகள் வருடொலிக்கு (ர)ப் பதிலாக ஆடொலி (ற) யாக மாணவர்களால் எழுதப்படுகின்றன.

**5.1.1.** ற > ர

முயற்சி > முயர்சி

உறக்கம் > உரக்கம்

மேற்கு > மேர்கு

நம் தேசிய பறவை > நம் தேசிய பரவை

**5.1.2** ர > ற

உருவாகும் > உறுவாகும்

பிரித்துக் கொடுத்தான் > பிறித்துக் கொடுத்தான்

இரவு > இறவு

கரியைப்பூசி > கறியைப்பூசி

மேலும் ஆடொலி வருடொலியாகவும் வருடொலி ஆடொலியாகவும் தொடக்கப்பள்ளி மாணவர்களால் ஏற்படுத்தும் தவறுகள் ஏற்கனவே கூறியதுபோன்று மூன்று நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை : i) மாணவர்களால் தொடக்க நிலையில் பாடம் எழுதுகையில் ஏற்படும் தவறுகள் ii) மாணவர்களால் பள்ளி இடைநிலையில் எழுதும்போது ஏற்படும் தவறுகள் iii) மாணவர்களால் பள்ளி இறுதிநிலையில் பாடம் எழுதுகையில் ஏற்படும் தவறுகள்.

மாணவர்கள் தொடக்க நிலையில் பாடம் எழுதும்போது 'ர' என்கிற வருடொலிக்குப் பதிலாக 'ற' என்கிற ஆடொலியாக

எழுதுகின்றனர். வருடொலி ஆடொலியாக மாறும் நிலையில் 52 தவறுகளைச் செய்கின்றனர். அவற்றில் 15 தவறுகள் ஆரம்ப நிலையிலும் அதாவது 15% தவறுகள் ஆரம்ப நிலையிலும் 17 தவறுகள் (32.69%) தவறுகள் இடைநிலையிலும் 20 தவறுகள் (38.46%) தவறுகள் இறுதிநிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

'ற' என்கிற ஆடொலிக்குப் பதிலாக 'ர' என்கிற வருடொலியை எழுதி தொடக்கப்பள்ளி மாணவர்கள் 67 தவறுகளைச் செய்கின்றனர். மொத்தமுள்ள 67 தவறுகளில் 24 தவறுகள் (35.82%) தவறுகள் ஆரம்ப நிலையிலும், 20 தவறுகள் (29.85%) தவறுகள் இடைநிலையிலும் 23 தவறுகள் (34.33%) தவறுகள் இறுதிநிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

பாலினம்

5.2. ர > ற

பாலினம் என்னும் மாறியின் அடிப்படையில் வருடொலி 'ர' ஆடொலியாக எழுதப்படும் தவறுகள் ஆண் மாணவர்கள் செய்யும் தவறுகள், பெண் மாணவிகள் செய்யும் தவறுகள் என பகுக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 19 தவறுகளில் (31.52%) தவறுகள் ஆரம்பநிலையிலும், (42.11%) தவறுகள் இடைநிலையிலும் 5(26.31%) தவறுகள் இறுதிநிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்விதத் தவறுகளைக் கீழ்க்கண்டவாறு காட்டலாம்.




மாணவிகளைப் பொறுத்தவரையில் மொத்தமுள்ள 16 தவறுகளில் 7 (43.75%) தவறுகள் ஆரம்பநிலையிலும் 5 (31.25%) தவறுகள் இடைநிலையிலும் 4 (25%) தவறுகள் இறுதிநிலையிலும் மாணவிகளால் ஏற்படுத்தப்படுகின்றன.

43.75% (ஆரம்பநிலை)

31.25% (இடைநிலை)

25% (இறுதிநிலை)

5.2.1. ற > ர

ஆடொலி (ற) வருடொலி (ர) யாக மாணவர்களால் எழுதப்படும் தவறுகள் மாணவிகளை ஒப்பிடுகையில் ஒவ்வொரு நிலையிலும் ஏறக்குறைய குறைவானதாகக் காணப்படுகின்றன. மொத்தமுள்ள 11 தவறுகளில் 45.45% தவறுகள் ஆரம்பநிலையிலும் 9.09% தவறுகள் இடைநிலையிலும் 45.05% தவறுகள் இறுதி நிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

மாணவிகளைப் பொறுத்தவரையில், மொத்தமுள்ள 17 தவறுகளில் 23.53% தவறுகள் ஆரம்ப நிலையிலும் 25.29% தவறுகள் இடைநிலையிலும் 41.18% தவறுகள் இறுதி நிலையிலும் மாணவிகளால் ஏற்படுத்தப்படுகின்றன. இவற்றை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| மாணவரின் இனம் | தவறுகளின் எண்ணிக்கை | சதவிகிதம் | நிலை |
|---|---|---|---|
| ஆண்கள் | 5/ 11 | 45.45 | ஆரம்பநிலை |
| | 1/ 11 | 9.09 | இடைநிலை |
| | 5/ 11 | 45.45 | இறுதிநிலை |
| பெண்கள் | 4/ 17 | 23.53 | ஆரம்பநிலை |
| | 6/ 17 | 35.29 | இடைநிலை |
| | 7/ 17 | 41.18 | இறுதிநிலை |

மேற்கண்ட தவறுகள் பெரும்பாலும் தமிழ் ஒலியன்களை சரியாக மாணவர்களால் ஒலிக்க பழகாமையால் ஏற்படுகின்றன. மேலும் மாணவர்கள் எழுதுகையில் ஆடொலியின் வடிவத்திற்கும் வருடொலியின்

வடிவத்திற்கும் வேறுபாடு சரியாகப் புரியாமையாலும் இவ்வகையான தவறுகளைச் செய்கின்றனர். ஆசிரியர்கள் ஒலிகளை ஒலிப்பதற்கும் ஒலிகளின் எழுத்து வடிவத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை எடுத்தியம்பாதலும் மாணவர்கள் எழுத்துத் தவறுகளை செய்யக் காரணமாக அமைகின்றன.

பாலினத்தை பொருத்தவரையில், மாணவர்களே வருடொலியை ஆடொலியாக எழுதித் தவறுகள் புரிகின்றனர். மேலும் ஆண் மாணவர்கள் இவ்வகையான தவறுகளை ஆரம்ப நிலையிலும் இறுதி நிலையிலும் அதிகமாக ஏற்படுத்துகின்றனர்.

மாணவிகள் வருடொலியை ஆடொலியாக எழுதுகின்றனர். மேலும் மாணவிகள் ஆரம்பநிலையில் செய்யும் தவறுகளை விட இறுதி நிலையில் அதிகமாக ஏற்படுத்துகின்றனர்.

## 5.3. மருங்கொலிகளைப் பயன்படுத்துவதில் ஏற்படும் தவறுகள்

தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஏற்படுத்தும் மற்றொரு வகையான எழுத்துத் தவறுகள் மருங்கொலிகளை எழுதும்போது ஏற்படுகின்றன. மருங்கொலிகளை தொடக்கப்பள்ளி மாணவர்கள் எழுதுகையில் ஏற்படும் தவறுகளைப் பின்வருமாறு மூன்று வகையாகப் பகுக்கலாம்.

அ. முதல்வகை

**i) ல > ள**

| | | |
|---|---|---|
| பாலும் | > | பாளும் |
| கல்வி கற்க வேண்டும் | > | கள்வி கற்க வேண்டும் |
| இரும்புக்கால மனிதன் | > | இரும்புக்காள மனிதன் |
| தொலைக்காட்சி | > | தொளைக்காட்சி |

**ii) ல > ழ**

| | | |
|---|---|---|
| கேலிச்சித்திரம் | > | கேழிச்சித்திரம் |
| ஒலியைக் கேட்டு | > | ஒழியைக் கேட்டு |
| சீர்குலைய | > | சீர்குழைய |
| இரசாயன அமிலங்களில் | > | இரசாயன அமிழங்களில் |

ஆ. இரண்டாம் வகை

ள > ல

திருக்குறள் > திருக்குறல்

மரக்கிளையில் > மரக்கிலையில்

கேள்விச் செல்வம் > கேல்விச் செல்வம்

விளக்கு ஏற்றி விடுவர் > விலக்கு ஏற்றிவிடுவர்

ள > ழ

விளைவிக்கும் > விழைவிக்கும்

வெளிப்படுத்தியது > வெழிப்படுத்தியது

அளிப்பதைக் காணலாம் > அழிப்பதைக் காணலாம்

இ. மூன்றாம் வகை

ழ > ல

மகிழ்ச்சி > மகில்ச்சி

மழை பெய்தது > மலை பெய்தது

பயிர்த்தொழில் > பயிர்த்தொலில்

கீழ்க்கண்ட > கீல்க்கண்ட

ழ > ள

விழித்திருக்கிறது > விளித்திருக்கிறது

குழந்தையின் > குளந்தையின்

நீர்மூழ்கிக் கப்பல் > நீர்மூள்கிக் கப்பல்

வாழ வேண்டும் > வாள வேண்டும்

அ. முதல் வகை

இவ்வகையில் மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள எழுத்துத் தவறுகளாக 165 இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில் 63 (38.18%) தவறுகள் நுனிநா நுனியண்ண (ல) மருங்கொலி இடையண்ண மருங்கொலி (ள) யாக மாணவர்களால் எழுதப்படுகின்றன. அதேவேளையில் 19 (11.52%) தவறுகள் இடையண்ண மருங்கொலியான 'ள' வை நுனிநா நுனியண்ண மருங்கொலியாக எழுதுகின்றனர்.

### ஆ. இரண்டாம் வகை

மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள எழுத்துத் தவறுகளான 44 தவறுகள் இவ்வகையிலடங்கும். இடையண்ண மருங்கொலி 'ள' நுனிநா நுனியண்ண ஒலியாக 26.67% தவறுகள் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன. அதேவேளையில் 7.27% தவறுகள் இடையண்ண (ள) மருங்கொலியை நாவளை (ழ) மருங்கொலியாக எழுதும்போது தவறுகள் ஏற்படுகின்றன.

### இ. மூன்றாம் வகை

இவ்வகையில் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற 27 தவறுகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 (4.24%) தவறுகள் நாவளை மருங்கொலி (ழ) யை மாற்றி நுனிநா நுனியண்ண மருங்கொலி (ல) யாக எழுதும்போது ஏற்படுகின்றன. அதேவேளையில் 20 (12.12%) தவறுகள் மாணவர்கள் நாவளை மருங்கொலி (ழ), இடையண்ண மருங்கொலி (ள) யாக மாற்றி எழுதப்படும்போது ஏற்படுகின்றன.

மேற்கண்ட மூன்று வகையான தவறுகளையும் ஏற்கனவே முன்பகுதியில் ஆய்வு செய்யப்பட்டது போன்று தொடக்கப்பள்ளி தமிழ் பாடங்களை நோட்டில் எழுதும்போது மூன்று நிலைகளில் பின்வருமாறு ஆயலாம்.

### அ. 1 முதல் வகை

இவ்வகையில் 82 தவறுகள் மூன்று நிலைகளிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன. மொத்தமுள்ள 82 தவறுகளில், 63 தவறுகள் நுனிநா மருங்கொலி (ல) இடையண்ண மருங்கொலியாக (ள) எழுதும்போது தவறுகள் ஏற்படுகின்றன. எஞ்சியுள்ள 19 தவறுகள் 'ல' 'ழ' வாக மாற்றி எழுதப்படுவதால் தவறுகள் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

முதல் வகையிலுள்ள இரண்டு வகைகளில் முதலாவதான நுனிநா மருங்கொலி (ல) இடையண்ண (ள) ஒலியாக எழுதப்படும்போது மொத்தமுள்ள 67 தவறுகளில், 17 (26.98%) தவறுகள் ஆரம்பநிலையிலும், 27 (42.86%) தவறுகள் இடைநிலையிலும், 19 தவறுகள் (30.16%) இறுதிநிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

### ஆ. 1 இரண்டாம் வகை

இவ்வகையில் இடையண்ண மருங்கொலி (ள), நுனியண்ண ஒலியாகவும் நாவளை ஒலியாகவும் எழுதுகையில் 44 தவறுகள் தொகுக்கப்பட்டு, அவற்றில் 20 (45.45%) தவறுகள் ஆரம்ப நிலையிலும் 9 (20.45%) தவறுகள் இடைநிலையிலும், 15 (34.09%) இறுதிநிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றனவென்பதை அறிய முடிகிறது.

### இ. 1 மூன்றாம் வகை

இவ்வகையில், நுனிநா நுனியண்ண ஒலி (ல) நாவளை (ழ) மருங்கொலியாக மாற்றி எழுதுவதன் மூலம் 19 தவறுகள் ஏற்படுகின்றன. அவற்றில் 31.58% தவறுகள் ஆரம்பநிலையிலும், 36.84% தவறுகள் இடைநிலையிலும், 31.58% தவறுகள் இறுதிநிலையிலும் மாணவர்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

மாணவர்களைப் பொருத்தவரையில், 37.5% தவறுகள் ஆரம்ப நிலையிலும், 62.5% தவறுகள் இறுதி நிலையிலும் ஏற்படுகின்றன.

மாணவிகளைப் பொருத்தவரையில் 50% தவறுகள் ஆரம்ப நிலையிலும், 16.67% தவறுகள் இறுதி நிலையிலும் ஏற்படுகின்றன.

இவ்வகையில், பாலினத்தைப் பொறுத்தவரை, மாணவிகளை விட மாணவர்களே அதிக சதவிகிதத் தவறுகளை எழுத்துத் தவறுகளாக ஏற்படுத்துகின்றனர்.

### 6. முடிவுரை

தொடக்கப்பள்ளி மாணவர்கள் தமிழ்மொழி கற்பதில், குறிப்பாக எழுதுதல் திறனை வளர்ப்பதில் இயலாத நிலையிலுள்ளனர். தமிழ்மொழியில் காணப்படுகின்ற வருடொலி மற்றும் ஆடொலிகளை எழுதுவதில் மாணவரிடையே பெரும் குழப்பம் நிலவுகிறது. இக்குழப்பத்தின் விளைவாக ஆடொலிக்குப் பதிலாக வருடொலியையும் வருடொலிக்குப் பதிலாக ஆடொலியையும் எழுதித் தவறுகளை இழைக்கின்றனர். மேலும் இவ்விரு ஒலியன்களின் வரிவடிவங்கள் ஏறக்குறைய ஒரே மாதிரி தோன்றுவதால் குழப்பம் நிலவுகிறது. ஆசிரியர்கள், ஒலிகளை மாணவர்கள் சரியாக ஒலிப்பதற்கும் ஒலிகளின் எழுத்து வடிவத்திற்கிடையே உள்ள தொடர்பை விளக்கியும் மாணவர்களிடத்தில் இவ்வகையான எழுத்துத் தவறுகளை நீக்க வலியுறுத்த வேண்டிய நிலையுள்ளது.

ஆடொலி மற்றும் வருடொலிகளை எழுதுங்கால் மாணவர்களும் மாணவிகளும் ஆரம்பநிலை, இடைநிலை மற்றும் இறுதிநிலைகளில் அதிகமான வேறுபாடின்றி எழுத்துத் தவறுகளை புரிகின்றனர்.

தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஏற்படுத்தும் மற்றொரு வகையான எழுத்துத் தவறுகள் மருங்கொலிகளை எழுதுங்கால் ஏற்படுகின்றன. மருங்கொலிகளை (ல, ள, ழ) ஆசிரியர்கள் சரியான ஒலிப்புடன் கூடிய பயிற்சியை மாணவர்களுக்கு அளிக்கும் வேளையில், மாணவர்களும் உரிய பயிற்சியை மேற்கொண்டு எழுதுவார்களேயானால் இவ்வகையான தவறுகளை சரிசெய்து எழுதும்நிலை உருவாகும்.

**உடனுதவிய நூல்கள்**


நடராச பிள்ளை, ந., 1981 *பிழை ஆய்வு,* தென்னிந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

Lado, Robert. 1983 *Language Teaching : A Scientific Approach,* Tata Mcgraw Hill Co. Ltd., Bombay

Verghese, C. Paul. 1990 *Teaching English as a Second Language,* Sterling Publisher Private Ltd., New Delhi.



**ஆ. முனியன்**
சிறப்பு விரிவுரையாளர்,
மொழியியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# இணையவழி இலக்கணம் கற்பித்தல்

- பெ. ராஜேந்திரன்

இணையம் ஒரு பல் ஊடகத்தன்மை (ஒலி, உருவம், நகருவம்) கொண்ட தகவல் தொழில் நுட்பமுடைய ஊடகமாக விளங்குவதால், அது மொழி கற்பித்தலுக்கு ஒரு சிறந்த கருவியாகக் கருதப்படுகிறது. இணையம் மூலம் பரந்துபட்ட நிலையில் வெகு தொலைவில் உள்ளவர்களுக்கும், வகுப்பறைச் சூழலில் உள்ளவர்களுக்கும் ஒரு மொழியின் இலக்கணத்தைக் கற்றுக் கொடுக்க முடியும். ஒரு மொழியை இரண்டாம் மொழியாக கற்பித்தலுக்கு மொழியியல் முறைதான் (linguistic approach) மற்ற வகையான அதாவது இலக்கண மொழிபெயர்ப்பு முறைகள் (grammar - translation methods), நேரடி முறை (direct approach) ஆகியவற்றை விடச் சிறந்தது என்று ராபர்ட் லேடோ (1979:5–6) கூறுகிறார். மொழியியல் முறை என்பது இலக்கணப் பிழை இல்லாது ஒரு மொழியைத் தாய்மொழி பேசுபவர்கள் போலப் பேச மற்றும் எழுதக் கற்றல் என்று பொருள்படும்.

இணைய வழியாக இலக்கணத்தைக் கற்பித்தல் என்பது மாணவர்களுக்கு ஓர் அனுபவம் சார்ந்த ஈடுபாட்டோடு கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்தித் தரக்கூடியதாக விளங்குகிறது. அத்துடன் இது சிக்கலான இலக்கணக் கூறுகளை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கும் மற்றும் அதற்கான பயிற்சிக்கும் அவர்களுக்கு உதவக்கூடியதாக விளங்குகிறது. இணையம் மூலம் மாணவர்கள் தனக்கு ஏற்ற கற்றல்முறையைத் தேர்ந்தெடுத்து ஒரு மொழியின் இலக்கணத்தைக் கற்றுக் கொள்ளவும் முடியும். இக்கற்றல் முறை எழுதுதல் பயிற்சி, அடிப்படை வாக்கியப் பயிற்சி, ஒலி அமைப்பு முறைகள், இலக்கணச் சிக்கல்களைக் கண்டறிதல், படிநிலைப் பயிற்சி, மொழியைப் பயன்படுத்தும் நிலையிலான பயிற்சி என்று பல நிலைகளில் அமையப்பெறுகிறது.

இணையவழியில் மொழியியல் முறை மூலம் இலக்கணம் கற்றல் என்பது ஐந்து நிலைகளைக் கொண்டு விளங்குகிறது. 1. கற்பிக்கக் கூடிய மொழியின் அடிப்படை வாக்கியங்களை மாணவர்களின் மனதில்

பத்தியச் செய்து, அவற்றில் இலக்கணக் கூறுகள் எவ்வாறு இடம்பெற்று இருக்கின்றன என்பதைக் குரல் மூலம் பேசிக் காட்சிவழி எடுத்துக் கூறலாம். இது ஒரு வகுப்புச் சூழலை ஏற்படுத்தக்கூடியதாகவும், முதல் மொழி மற்றும் இரண்டாம் மொழி ஆகியவற்றிற்குப் பொருந்தக்கூடியதாகவும் விளங்குகிறது. 2. மாணவர்கள் தாங்கள் இலக்கணம் கற்கிறோம் என்பதை அவர்கள் உணராதவாறு அவர்ளுக்குக் கற்பிக்க, இணையம் உதவக்கூடியதாக விளங்குகிறது. இதற்கு உறுதுணைபுரியக் கூடியன அம்மொழியின் அடிப்படை வாக்கியங்களாகும். இத்தகைய முறையில் மாணவர்களுக்கு ஒரு வாக்கியத்தைக் கொடுத்து, அவர்களை, அதுபோன்ற இலக்கணக் கூறுகள் உள்ள வாக்கியத்தை உருவாக்கச் செய்ய வேண்டும். இதற்குப் பல பயிற்சிகளை இணையம் மூலம் கொடுக்க முடியும். மாணவர்கள் அதுபோன்ற வாக்கியங்களை உருவாக்கும்போது, அதில் மொழியின் அந்தந்த இலக்கணக் கூறுகளின் செயல்பாடுகளை விளக்கமாக எடுத்துக் கூறலாம். 3. மாணவர்களுக்கு வரைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சிகள் கொடுத்து, அதன் பயனாக, அவர்களுக்கு ஒரு பத்தியைக் கொடுத்து அதிலுள்ள இலக்கணக் கூறுகளின் செயல்பாட்டை எடுத்து விளக்க இணையம் மூலம் பயிற்சி கொடுக்கலாம் அல்லது அந்த பத்தியிலுள்ள சில இலக்கணக் கூறுகளைச் சொல்லி அவற்றை அடையாளப்படுத்தச் சொல்லலாம். 4. பேச்சு முறையில் சூழலுக்கு ஏற்ற சரியான இலக்கண கூறுகள் கொண்ட வாக்கியங்களை உருவாக்க இணையம் மூலம் பயிற்சி வழங்கலாம்.[1] அதாவது இணையத்தில் காட்சி (video) உருவங்களைக் காட்டி, உரிய இலக்கணக் கூறுகளுக்கு ஏற்ற வாக்கியங்களை உருவாக்கச் செய்யலாம். இதற்கேற்ற பயிற்சியைக் கொடுக்க இணையம் மிகவும் பயனுடையதாக அமையும். 5. இறுதியாகக் கற்போர் உரிய இலக்கணக் கூறுகள் கொண்ட வாக்கியங்களை உருவாக்கி, அவற்றை அவர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பை இணையம் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கலாம். அவர்கள் சரியாக வாக்கியங்களை உரிய இலக்கணக் கூறுகளுடன் உருவாக்குகிறார்களா என்பதைக் கண்காணித்து அவர்களுக்கு இணையம் மூலம் உரிய பயிற்சி அளிக்கலாம்.

ஒரு மொழியின் இலக்கண அறிவு 1. கேட்கும் திறன் 2. பேசும் திறன் 3. படிக்கும் திறன் 4. எழுதும் திறன் 5. மொழியைப் பகுத்து அறியும் திறன் 6. அம்மொழி பேசும் மக்களின் கலாச்சாரத்தை மொழிமூலம் அறியும் திறன் 7. அம்மொழிக்கே உரித்தான சிறப்புக் கூறுகளைக்

கண்டறியும் திறன் ஆகிய இதுபோன்ற பல நிலைகளில் அமையப் பெற்றிருக்கிறது. ஒரு மொழியின் இத்தகைய இலக்கண அறிவை வளர்த்துக் கொள்வதற்கு இணையம் மிகவும் பயனுடையதாக விளங்கும். ஒரு மொழியின் கட்டமைப்பு 1. வெளிப்பாடு (expression), 2. உள்ளடக்கம் (content) என்ற இரு நிலைகளில் இணைந்து அமையப்பெற்றதாக இருக்கும். இந்த இருநிலைகளிலுமே, மொழியைக் கற்பிக்க இணையம் உதவக்கூடியதாக விளங்கும். அதுபோல இணையம், இலக்கணக் கூறுகளின் உள்ளடக்க நிலையில், ஒரு மொழியை முதல் மொழியாக அல்லது இரண்டாவது மொழியாக குழந்தைகள் அல்லது வயது வந்தோருக்குப் பல நிலைகளில் கற்பிப்பதற்கு உதவக்கூடியதாகவும் விளங்குகிறது.

இணையம் மூலம் இலக்கணம் கற்பித்தலை இரண்டு நிலைகளில் அணுகலாம் : 1. பொதுவான அல்லது பாடநூல் வழி அல்லாத இலக்கணம் (general or non-textual grammar) 2. பாடநூல் வழி இலக்கணம் (கோ. சுப்பையா, 1999:52). இணையம் மூலம் பொதுத்தன்மை அடிப்படையில் இலக்கணம் கற்பித்தல் என்பது ஒலியின் கட்டமைப்பு, சந்திக் கட்டமைப்பு, உருபன் கட்டமைப்பு, வாக்கியக் கட்டமைப்பு என்று பல நிலைகளில் அமையப் பெற்றிருக்கும். இவற்றை இணையவழி கற்பிக்கும்போது, அதற்கான பாடத்திட்டத்தை முறையாக உருவாக்கி, அதில் பயிற்சி அளிக்க வேண்டும். இதில் ஒலியின் பயிற்சி என்பது அந்த மொழியின் அனைத்து பேச்சொலிகள், அவற்றின் வரிவடிவம், அவற்றை உச்சரிக்கும் விதம், எழுதும் விதம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். சந்தி பயிற்சி என்பது ஒலி மாற்றங்கள், அவற்றின் மாற்றொலிகள், வரிவடிவ மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். உருபன் பயிற்சி சொல் அடிப்படையிலான இலக்கண வகைகள், தனிச்சொல், கூட்டுச்சொல், சொல்லின் பொருள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். வாக்கியப் பயிற்சி என்பது வாக்கியங்களின் கட்டமைப்பு, அவற்றின் இலக்கணத் தன்மைகள், பொருள் அறியும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இத்தகைய இணைய வழி மொழிப்பயிற்சி ஆரம்ப நிலையில் ஒரு மொழியைத் தாய்மொழியாக கொண்டவர்களுக்கு, அம்மொழியின் இலக்கணத்தில் பயிற்சி கொள்ள மிகவும் பேருதவி புரியும். ஆனால் ஆழ்ந்த நிலை இலக்கணப் பயிற்சியே மிகவும் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. இணையம் மூலம் பாடநூல்வழியில் இலக்கணத்தைக் கற்பித்தல் என்பது, அது அம்மொழியின் பலவகையான இலக்கணம்,

மற்றும் அவற்றின் இலக்கணக் கூறுகள் ஆகியவற்றைக் கற்பித்தலைக் குறிக்கும். இது கவிதை, உரைநடை என்ற இருநிலைகளில் அமையப் பெற்றிருக்கும். கவிதையில் இலக்கணப் பயிற்சி என்பது அதனது நடையியல் உத்திகள், கவிதை நயம், சொல் மற்றும் வாக்கிய அமைப்புக்கள் ஆகிய இவை போன்ற பல நிலைகளில் அமையப்பெற்றிருக்கும். உரைநடையில் இலக்கணப் பயிற்சி என்பது பாடக் (text) கூறுகளின் சொற்களின் பொருளைப் புரிதல், அவற்றின் இலக்கணப் பொருள்கள், சொல் பயன்பாடு, சொற்களுக்கு இடையேயான உறவுநிலை, வாக்கிய அமைப்புக்களின் பல்வேறு பொருள்கள், கவிதைக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடுகள் என்று இவை போன்று பலநிலைகளில் அமையப் பெற்றிருக்கும். கவிதைக்கும் உரைநடைக்கும் உரிய வேறுபாட்டிற்கான சொற்றொடர் பயிற்சியையும் இணையம் மூலம் வழங்கலாம்.

ஒரு மொழியின் இலக்கணத்தை இணையவழி கற்பிக்கும்போது, அது அந்த மொழியின் பயன்பாட்டுச் சூழலை விவரிக்கக்கூடியதாக அமையப் பெற்றிருக்க வேண்டும். இதனை ஓ'குன்னூர் (O'Connor, 1973:113) "இலக்கணம் கற்றல் என்பது பேச்சு நிலையில் ஒலி, ஒலி வேறுபாடு, ஒலி வேறுபாட்டின் காரணமான பொருள் வேறுபாடு என்ற தன்மையில் அமையப் பெற்றிருக்கும்" என்று கூறுகிறார். மேலும் அவர் கூறும்போது "ஒவ்வொரு மொழிக்கும் அதற்கெனச் சில இலக்கணக் கூறுகளும், சிறப்புக் கூறுகளும் உண்டு; அவற்றைக் கற்றுக் கொள்ளும் விதமாகவே இலக்கணம் கற்பித்தல் அமையப்பெற வேண்டும்" என்றும் விளக்குகிறார். இவற்றின் அடிப்படையிலேயே இணைய பாடத்திட்டங்களும் அமையப்பெற வேண்டும். பொதுவாக இணைய வழியாக இலக்கணம் கற்பித்தல் என்பது 'மொழியின் பேச்சாற்றலுக்கான திறனை வளர்த்தல்' எனப் பொருள்படும்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது இணையவழி, இலக்கணம் கற்பித்தல் என்பது மூன்று நிலைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. முதலில் 1. மொழியின் இலக்கணக் கட்டமைப்பு பற்றியும் 2. அதற்கான இலக்கண கூறுகள் பாடநூலில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பது பற்றியும் 3. அம்மொழியின் சமூகப் பயன்பாட்டு நிலை, நடையியல் கூறுகள் போன்றன அந்த மொழியில் எவ்வாறு இடம் பெற்றிருக்கின்றன என்பது பற்றியும் கற்பிக்க இணையம் உதவக் கூடியதாக விளங்குகின்றது.

இறுதியாகக் கூறின், இணைய பல் ஊடகத்தன்மை இலக்கணப் பயிற்சிக்கு மிகவும் பயனுடையதாக அமைய அதற்கு மிகவும் உறுதுணை புரியக்கூடியன சிறப்பான இலக்கண பாடத்திட்டமும், முறையான பயிற்சியும் ஆகும்.

## References


| | | |
|---|---|---|
| Beena Shah, | 2000 | *Web-based Instruction On Line Learning,* University News 38 (51), pp. 10-14. |
| Jayanthi Ranjan & Sanjeevi Arul, | 2001 | *Online Teaching,* University News, 39(3) |
| Neethivanan J., (Editor) | 1999 | *Applied Linguistics Forum,* Madurai, pp. 51-56. |
| O'Connor, J.D., | 1973 | *Phonetics,* Penguin Publications, U.K. |
| Rivers, M. Wilga, | 1968 | *Teaching Foreign Language Skills,* University of Chicago Press, Chicago. |
| Robert Lado, | 1979 | *Language Teaching - A Scientific Approach,* Tata Mcgrew - Hill Publishing Co., Ltd., New Delhi. |
| Subbiah, G., | 1999 | Teaching Tamil Grammar at the Higher Secondary School Level, in Language Teaching and Learning (Collected Papers). |



பெ. ராஜேந்திரன்
இதழியல் துறை,
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# தற்காலத் தமிழ் சொற்றொடர்களும் ஆங்கிலத் தாக்கமும்

- வீ. ரேணுகாதேவி

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தவல்லது மொழியே ஆகும். ஆற்றல் வாய்ந்த கருத்துப் பரிமாற்றத்திற்கு இன்றியமையாத கருவியாக விளங்குவதும் மொழியே ஆகும். தன் சமுதாய மக்களோடும் பிற சமுதாய மக்களோடும் தொடர்பு கொள்வதற்குப் பெரிதும் உறுதுணையாக விளங்குவதும் மொழியே.

திராவிட மொழிகளில் பழமை வாய்ந்ததும் இலக்கிய வளம் செறிந்ததும், செம்மொழிகளின் வரிசையில் வைத்து போற்றத் தக்கதுமான ஒரு மொழி தமிழ் மொழி ஆகும். இத்தமிழ்மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரு வழக்குகளைக் கொண்ட ஒரு இரட்டை வழக்கு (diglossic) மொழி. இவ்விரு வழக்குகளும் சமுதாயத்தின் பல்வேறு பணிகளை நிறைவேற்றிட பங்காற்றுகின்றன எனினும், எழுத்து வழக்கு என்பது கல்விக்குரிய மொழியாக (educational language) மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. ஏனைய அனைத்துச் சூழல்களிலும் பேச்சு வழக்கே பயன்பாட்டில் உள்ளது. பேச்சு வழக்கு அனைத்துத் தரப்பு மக்களாலும் பயன்படுத்தப்பட்டாலும் ஆங்கிலம் பேச்சு மொழியின் கட்டமைப்பில் ஒரு பகுதி அன்று.

இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சியின் பரிணாமத்தைப் பல்வேறு துறைகளிலும் காண்கிறோம். வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப மொழியும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்கின்றது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நாள்தோறும் வெளிவரும் கண்டுபிடிப்புகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஊடகங்கள் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் ஆகும். இன்று இவ்வூடகங்களில் பெரும்பாலும் பேச்சுமொழி பயன்படுத்தப்படும் நிலை உருவாகி வருகின்றது. ஊடகங்கள் மக்கள் மொழியைப் பயன்படுத்துவதாக எண்ணிக் கொண்டு நான்கில் மூன்று ஆங்கிலச் சொற்களையும், ஒட்டுகளையும் கலந்து பயன்படுத்துகின்றன.

ஒவ்வொரு மொழிக்கென்று தனியான பண்பாட்டுக்கூறுகளும், கட்டமைப்பும் உண்டு. அவ்வாறு இருந்தால்தான் அது தன்னை ஒரு தனிப்பட்ட மொழி என்று நிலைநாட்டிக் கொள்ளமுடியும். ஆனால் இன்று ஊடகங்களில் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி மெல்ல தன் தனித்தன்மையை இழந்து கொண்டிருக்கிறது.

என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று மடியும் இந்த அடிமையின் மோகம்

என்று பாடிச் சென்றான் முண்டாசுக் கவிஞன் பாரதி. அந்நியர் ஆட்சியிலிருந்து அரை நூற்றாண்டுக்கு முன்னரே விடுதலை பெற்றோம். ஆனால் அந்நிய மொழியிலிருந்து விடுதலை பெற்றோமா எனில் இல்லையென்றே சொல்லலாம். இன்று ஊடகங்கள் பயன்படுத்தும் மொழியைப் பார்த்தாலே இன்னும் நம் அடிமையின் மோகம் குறையவில்லை என்பது விளங்கும்.

ஆங்கிலேயர் இந்திய நாட்டை விட்டுப்போய் ஆண்டுகள் பலவானபோதிலும் இன்றும் இந்தியாவில் தொடர்புமொழி (lingua franca) ஆங்கிலமே. தமிழ்நாட்டில் ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை பயிற்று மொழியாக விளங்குவதும் ஆங்கிலமே. இதன் விளைவாகப் பேச்சு மொழியில் ஆங்கிலக் கலப்பு அதிகமாக காணப்படுகின்றது. இதனால் பெரும்பாலான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் இருந்தபோதும் அவை தெரியாத நிலை உருவாகி உள்ளது. தமிழ் முதுகலை படித்து முடித்த மாணவர்களிடம் 'Reader' என்னும் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் யாது எனக் கேட்டபொழுது அனைத்து மாணவர்களும் அமைதி காத்தனர். இந்நிலையே ஊடக மொழியிலும் உருவாகி வருகின்றது.

இன்று தமிழ் மொழி மட்டுமே பேசுவோர்கள் சமுதாயத்தில் மதிப்பு இல்லாதவர்களாக எண்ணப்படுகிறார்கள். தமிழ்த்துறையில் ஆங்கிலத்தில் மட்டுமே கையொப்பம் இட வேண்டும் என்னும் அளவிற்கு சூழல் உருவாகி உள்ளது. எனவே, கல்வி அறிவு இல்லாத மக்களும் தமக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் தம்முடைய கருத்துக்களைப் பரிமாற முயற்சி செய்கின்றனர். இன்றைய சமுதாயத்தில் ஆங்கிலத்தில் பேசுவதும் எழுதுவதும் மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதன் தாக்கம் அனைத்து நிலைகளிலும் காணப்படுகின்றது.

பிரஷர் குக்கர் கேஷ்கட் அனைத்துவகை
குக்கர்களுக்கும் ஏற்புடைய அனைத்து சைஸ்களில்

இத்தொடரில் மொத்தம் ஒன்பது சொற்கள் இருக்கின்றன. அவற்றில் ஐந்து சொற்கள் ஆங்கிலச் சொற்கள். சைஸ் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு அளவு என்னும் தமிழ்ச்சொல் பயன்பாட்டில் இருந்தபோதிலும் அந்த சொல் இங்குப் பயன்படுத்தப்படவில்லை.

டி.வி. சீரியல் ஆஃபர் கவிதாலயாவிலிருந்து வந்தது

ஒய் நாட்னு தோணிச்சு

என்னும் சொற்றொடரில் பயன்படுத்தப்பட்டிருக்கும் டி.வி., சீரியல், ஆஃபர், ஒய், நாட் என்னும் சொற்களுக்கு முறையே தமிழில் தொலைக்காட்சி, தொடர் வாய்ப்பு, ஏன் கூடாது என்னும் நல்ல தமிழ்ச் சொற்கள் இருந்த போதிலும் அவை பயன்படுத்தப்படவில்லை.

தொலைக்காட்சி தொடர் வாய்ப்பு
கவிதாலயாவிலிருந்து வந்தது
ஏன் கூடாதுனு தோணிச்சு

என்று சொன்னால் மக்களுக்குப் புரியாமலா போய்விடும். ஏனிந்த ஆங்கில மோகம். ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தி தொடரை உருவாக்கிய காரணத்தால் அத்தொடர் சரியாக அமையவிலலை. அத்தொடர்

கவிதாலயாவிலிருந்து தொலைக்காட்சி தொடரில்
நடிக்க வாய்ப்பு வந்தது. ஏன் செய்யக் கூடாது
என்று தோன்றியது

என்று இருந்திருக்க வேண்டும். ஆங்கில மொழியின் கட்டமைப்பில் இயைபு அவ்வளவாக கிடையாது. ஆனால் தமிழ்மொழியில் இயைபு கட்டாயம் இருக்க வேண்டும். ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடர்களை உருவாக்கிப் பயன்படுத்தி பழகிய காரணத்தால் இன்று தமிழ்மொழியில் முதுகலை முடித்த மாணவர்கள் எழுதும் தமிழில் ஒருமை பன்மை மயக்கம் அதிகமாக காணப்படுகின்றது. இயைபு பற்றிய சிந்தனை மாணவர்களுக்கு அருகியே காணப்படுகின்றது.

நீரை அடிப்படையாகக் கொண்ட மாய்ஸ்சரைசர்
அல்லது ஆயில் ப்ரீ மாய்சரைசரை உபயோகப்படுத்தினால்
முகம் ஃபிரஷ்ஷாக இருக்கும்

என்னும் சொற்றொடரில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மாய்ஸ்சரைசர், ஆயில் ப்ரீ மாய்ச்ரைசர் போன்ற சொற்கள் சாதாரண மக்களைச் சென்று சேருமா என்பது கேள்விக்குறியே! இவையெல்லாம் சாதாரண மக்களுக்கு தேவையில்லாதவை என எண்ணிவிட்டார்கள் போலும். இங்கு மொழி மக்களை இனம் பிரிந்து காட்டப் பயன்படுகின்றதோ!

எங்க ஃபேமிலியில் அவ்வளவா எஜுகேசன் கிடையாது

என்று சொல்வதற்குப் பதிலாக குடும்பம், படிப்பு என்னும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி

எங்கள் குடும்பத்தில் அவ்வளவாக படித்தவர்கள் இல்லை

என்று சொன்னால் பாமரனுக்கும் புரியும் அல்லவா?

சொற்களஞ்சியம் என்பது மொழியின் செல்வாக்கைக் குறிப்பதாக அமையும். தமிழ்மொழி மிகப் பழமையான மொழி. எனவே அதன் சொற்களஞ்சியம் செறிவானது. இருந்தபோதிலும் மக்களின் ஆங்கில மோகத்தின் காரணமாக ஆங்கிலப் பெயர்களையும், கருத்துக்களையும் கடன் வாங்கும்போது அவற்றிற்கு ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்துகின்றனர். உலகமயமாக்கலின் காரணமாக மேலை நாடுகளிலிருந்து நாம் பொருட்களை மட்டும் கடன் வாங்கவில்லை பொருளோடு சேர்த்து மொழியையும் கடன் வாங்குகிறோம். இன்று சாலைகளில் செல்லும் சிற்றுந்துகளையும் இரு சக்கர வாகனங்களையும் கவனியுங்கள். கடன் வாங்கும் தாராள மனப்பான்மைக்கு வாகனங்களும் வாகனங்களின் பெயர்களும் சான்றாதரங்களாக இருக்கும்.

எந்தவொரு சொற்களஞ்சியமும் விரிவடைய வேண்டுமென்றால் புதுபுது சொற்கள் உருவாக்கப்பட்டுச் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் சொற்கள் நம்மொழியின் கட்டமைப்புக்கேற்ப மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இன்றைய நிலையோ வேறு. ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்தினால் தான் சமுதாயத்தில் ஒரு தனி மதிப்பை ஏற்படுத்தும் என்ற கருத்து மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே ஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழியிலும் ஆங்கிலக் கலப்பு பெரிதும் காணப்படுகின்றது.

சலவைத்தூள், முடிச்சாயம், ஒப்பனை, தொழில்நுட்பம், இயக்குநர், பயிற்சி, குடும்பம், கூட்டம் போன்ற நல்ல பல தமிழ்ச் சொற்கள் வழக்கில்

இருந்த போதிலும் அவை வாஷிங் பவுடர், ஹேர்டை, மேக்கப், டெக்னாலஜி, டைரக்டர், ட்ரெயினிங், ஃபேமிலி, கிரவுடு என ஆங்கிலச் சொற்களாலேயே அறியப்படுகின்றன. இதனால் இச்சொற்கள் பயன்பாட்டை இழந்து தமிழ் சொற்களஞ்சியத்தில் இடம்பெறாமல் போவதற்கு வாய்ப்புகள் உண்டு.

இவ்வாறு ஒரு மொழியிலிருந்து வேறு ஒரு மொழிக்கு கடன் வாங்கும்போது அம்மொழியிலுள்ள சொற்களை நேரடியாகக் கடன் வாங்கியும், கலப்புச் சொற்களையும், கலப்புத் தொடர்களையும் உருவாக்கிப் பயன்படுத்துவதால் மொழித்தாவலும், மொழிக்கலத்தலும் ஏற்படுவதற்குப் காரணமாக அமைகின்றது. ஒரு மொழியில் மொழித்தாவலும், மொழிக்கலத்தலும் அதிகமாகும் பொழுது இது ஒரு தனிமொழி அல்ல. பிட்ஜின் என்று கூறப்படும் வணிக மொழியே ஆகும்.

மொழி கலத்தல் என்பது சொற்றொடர்களில் ஆங்காங்கே வேற்றுமொழிச் சொற்களைக் கலந்து பயன்படுத்துவது.

முகத்தை க்ளென்சிங் மில்க் போட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

ட்ரெய்னிங் இல்லாமல் பாடறதுல உள்ள ட்ராபேக்ஸ் புரிய ஆரம்பிச்சது.

தியேட்டர்களில் நல்ல கலெக்ஷனாம்

எல்லா ஒயின்ஷாப்களிலும் பார்கள் அமோகமாக நடக்கின்றனவே

என்னும் இச்சொற்றொடர்களில் ஆங்காங்கே ஆங்கிலச் சொற்கள் தமிழ் ஒட்டுகளுடன் சேர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுவே மொழி கலத்தல் ஆகும்.

மொழித்தாவல் என்பது வெவ்வேறு மொழி சொற்றொடர்களை மாற்றி மாற்றிப் பயன்படுத்துவதாகும்.

டிபன் ரெடி
எங்கம்மா கைப் பட்டாலே தனி மணம், தனி ருசி

அன்றாட சமையலின் ஆனந்தத்தை அனுபவியுங்கள்
ஸேம்ஸங் பயோசெராமிக் மைக்ரோவேவ்
ஹெல்புடன்

இவ்வாறு ஆங்கிலச் சொற்றொடர்களையும், தமிழ் சொற்றொடர்களையும் மாற்றி மாற்றிப் பயன்படுத்துவது மொழித்தாவல் ஆகும்.

தமிழ்மொழியின் பயன்பாட்டில் மொழித்தாவலைக் காட்டிலும் மொழிக் கலத்தலே அதிகமாகக் காணப்படுகின்றது.

> ப்ரெஷர்ஸ்டே அப்படின்னு கேள்விப்பட்டிருக்கியா?
> நாம வெளிலே என்ன பண்றோமோ கிட்டத்தட்ட
> அதைத்தான் அவங்களும் கிளாஸ்ரூம்லே செய்றாங்க
> சீனியர் ஸ்டூடண்ட்ஸ் ஜுனியர் பசங்களை
> பாபா ப்ளாக்ஷுப் பாடச் சொல்றதும் . . . மற்ற
> எல்கேஜி லெவல் தனமாக லெக்சர்ஸ்
> முன்னாலேயே கிளாஸ் ரூமுக்குள்ளேயே
> நடக்கற கூத்து, ராக்கிங் ஆகாதா?

இது ஆங்கில மொழியா? தமிழ் மொழியா? அல்லது இரண்டும் கலந்த வணிக மொழியா? இவ்வாறு ஆங்கிலமும் தமிழும் கலந்து 'ஆங்கிலே தமிழில்' அல்லது 'தமிழாங்கிலத்தில்' பேசுவது இரண்டு மொழிகளுமே கட்டமைப்பு சிதைந்து வளத்தை இழப்பதற்குக் காரணமாகி விடுகின்றது.

மேலை மொழி பெயர்களை, நுகர்வோர் மனதை சுண்டியிழுக்கும் என்னும் நோக்கத்தில் பெரும்பான்மையான நுகர்பொருள்களுக்கு ஆங்கிலப் பெயர்களே சூட்டப்படுகின்ற காரணத்தால் வினைச்சொற்களைக் காட்டிலும் அதிகமாக பெயர்ச்சொற்களும் பெயரடைகளும் கடன் வாங்கப்பட்டு சொற்றொட்களில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பெரும்பான்மையான பொருட்கள் மேலை நாடுகளிலோ அல்லது இந்தியாவிலுள்ள மேலைநாட்டு நிறுவனங்களின் உதவியுடனோ தயாரிக்கப்படுவதால் பொருட்களுக்கு சூட்டப்படும் பெயர்கள் பஜாஜ், பாராசூட், மாங்கோ பைட், மில்கா வொண்டர் கேக், கோத்ரெஜ், வேர்ல்பூல், சாம்சங், பாண்ட்ஸ், ஹார்லிக்ஸ், பூஸ்ட், சன்ரைஸ், ரெக்ஸோனா, லக்ஸ், பிரிட்டானியா என்று ஆங்கில பெயர்களாகவே அமைகின்றன. இவை சொற்றொடர்களில் பயன்படுத்தப்படும் பொழுது ஒட்டுக்களை எடுப்பதிலும் பலவகையான கலப்புகள் காணப்படுகின்றன.

ஆங்கில அடிச்சொற்களுடன் தமிழ் ஒட்டுகளை இணைத்தும், தமிழ் அடிச்சொற்களுடன் ஆங்கில ஒட்டுக்களை இணைத்தும் கலப்புச் சொற்கள் உருவாக்கப்பட்டு சொற்றொடர்களில் பயன்படுத்தப்படுகின்றன.

ஆங்கில மொழியின் கட்டமைப்பில் வேற்றுமை உருபுகளின் பயன்பாடு குறைவு. வேற்றுமை உருபுகளுக்குப் பதிலாக முன்னிடைச் சொற்களே (prepositions) அதிகம் பயன்படுத்தப்படும். ஆனால் தமிழ் மொழியின் கட்டமைப்பில் வேற்றுமை உருபுகளின் பயன்பாடு அதிகம். எனவே வேற்றுமை உருபுகளும், 'கள்' என்னும் பன்மை விகுதியும், 'ஆன' என்னும் பெயரடை ஆக்க உருபும் ஆங்கில அடிச் சொற்களுடன் இணைத்து கலப்புச் சொற்கள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படும் நிலை பெரிதும் காணப்படுகின்றது.

| | |
|---|---|
| மிக்ஸி + ஐ | = மிக்ஸியை |
| டீ + இல் | = டீயில் |
| பேக்கு + உடன் | = பேக்குடன் |
| குக்கர் + இன் | = குக்கரின் |
| ஸ்கின்னு + கு | = ஸ்கின்னுக்கு |
| ஜக்கு + கள் | = ஜக்குகள் |
| ஸ்கூட்டர் + ஆன | = ஸ்கூட்டருக்கான |

இவைத் தவிர,

மாமீ ஸ்

வேலன் ஸ்

என்று தமிழ் அடிச் சொற்களுடன் ஆங்கிலப் பன்மை உருபு இணைந்தும் சொற்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் தமிழ்ச்சொற்களுக்கு ஆங்கிலச் சொற்கள் அடைகளாகவும், ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ்ச்சொற்கள் அடைகளாகவும், பயன்படுத்தப்பட்டுக் கலப்புத் தொடர்கள் உருவாக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஸ்பெஷல் + ஊட்டச்சத்து | = ஸ்பெஷல் ஊட்டச்சத்து |
| நேச்சுரல் + பொருட்கள் | = நேச்சுரல் பொருட்கள் |
| புதிய + ஜூனியர் | = புதிய ஜூனியர் |
| பழைய + மிக்ஸியை | = பழைய மிக்ஸியை |

ராஜா அச்சகம், மதுரை-19. போன்:2458185